# சமூக அறிவு நூல்

(நான்காம் பாரத்திற்குரியது)

ஆசிரியர்
V. சுப்புரத்தினம் B. A., L. T.
இஸ்லாமியா உயர்நிலைப்பள்ளி, மேல்விஷாரம்

வெளியிட்டவர்
டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ்
சென்னை—1.

உரிமை பதிவு] 1955 [விலை ரு. 1—4—0

First Edition October 1955

T. V. C. Press, Madras—1.

# முகவுரை

"சமூக அறிவு" என்பது மனிதன் மக்கள் கூட்டத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைத் தெரிவிக்கிறது. இந்திய சமூகம் இன்று சுதந்திரமடைந்து முன்னேற்றமென்னும் பாதையில் துரிதமாகச் சென்று கொண்டிருக்கிறது. நமது முன்னேற்றத்திற்கான வழிகள், நாம் முக்கியமாகக் கவனித்து தீர்க்கவேண்டிய சிக்கல்கள், நீக்கவேண்டிய குறைகள், இவைகளை எல்லாம் நாம் நன்கு உணரவேண்டும். கல்வித்திட்டமே இந்த நோக்கத்தோடு புதிதாக திருத்தியமைக்கப் பட்டிருக்கிறது.

நமது சிறுவர் தேசபக்தி, பரந்தநோக்கம், விடா முயற்சி, குன்ரு ஊக்கம், நல்ல தேர்ச்சி முதலிய சீரிய குணங்களைப் பெறுவதற்கு அநுகூலமாகவே, 'சமூக அறிவு' பாடதிட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த உயரிய நோக்கம் கைகூடுதற்கேற்ற முறையில் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. நமது ஆசிரியர்களும் இக் கருத்தையே நமது லட்சியமாக வைத்துக்கொண்டு பாடங்களைக் கற்பிக்க வேண்டும். புத்தகத்திலுள்ள விஷயங்களைப் படிப்பதோடு நிற்காமல், பல விஷயங்களைச் செய்தும், பத்திரிகைகளின் வாயிலாக அறிந்தும் தெளிவுபடுத்திக் கொள்வது மிக்க அவசியம்.

நாம் நாட்டின் நலனையே கருதி நமது கடமையைச் செய்வோமாக.

**ஜெய் ஹிந்த் !**

ஆசிரியர்.

# SYLLABUS

*Objective*—To help pupils understand the story of modern civilization and how the World to-day is the result of development through ages.

| *Social activity* | *Social training* | *Social studies* |
|---|---|---|
| 1. Making maps, charts and pictures. Geographic survey of locality. Preparing question blanks. Dramatization of scenes from stories of exploration. Characterization such as Columbus at the court of Ferdinand and Isabella. Special readings and reports on the items by pupils. | 1. Planning and executing trips. Instilling enthusiasm for exploration of the environment; increasing pupils capacity for enjoyment of explorative activities. Experiences in making observations and in making valid deductions from what is observed. Forming a committee to work with teacher to prepare question blanks. Conduct and behaviour during trips. Safety attitudes. Developing imagination. | 1. Introductory. The Dawn of modern Times. Opening up of the world—Great Discoverers—MarcoPolo, Colombus, Vasco Da Gama, Megellan, Captain cook, Mungo Park and Captain Scott, and their discoveries. The geographic conspectus of the continent. The Old World and tho New. |
| 2. Learning through pictures. Seeing educational films. Special readings and re- | 2. Enlarging and deepening pupils sympathies with peoples of other lands; appre- | 2. World Geography with particular reference to the life and work of the people |

| | | |
|---|---|---|
| ports by pupils. Inviting speakers, who have visited foreign countries, to class-room. Imaginative letters from boys and girls from various parts of the World to individual or groups of pupils in class. Pageant of special activities of various regions. Tableaux. Making of relevent maps. | ciating what is good and great in them; increasing tolerance; and refining sense of justice. | in different regions as conditioned by geographical environment: (*a*) Monsoon lands (*b*) Equatorial forests and Trophical grass lands. (*c*) Desert lands, (*d*) Mediterranian lands, (*e*) Temperate grass lands, (*f*) Lands of broad-leaved forests, (*g*) Lands of cold forests and (*h*) Lands of snow and ice. |
| 3. Group study and interpretation of statistical diagrams of economic products. Study of world's market news. visits to local shops, markets and export and import centres. Discussions on such topics as "Can India Be Self-Sufficient?" "Can U.S.A. be Self-Sufficient?". Making maps, charts and graphs. Special readings and reports by speakers before the class. Collection and study of catalogues of foreign firms. | 3. Realizing the necessity of interdependence of nations. | 3. Man's wants; where and how things are produced to satisfy them:— (*a*) World's food and drink-Rice, wheat, barley, rye and oats, millets and maize, sugar-cane sugar and beet sugar, tea and coffee, fruits—tropical, sub-tropical and deciduous, of seeds, spices, tobacco. (*b*) Meat, dairy produce and fish—Livestock, cattle and sheep, poultry fishing. (*c*) Clothing and shelter—Cotton, Wool, jute, silk and |

| Social activity | Social training | Social studies |
| --- | --- | --- |
| | | rubber, timber, cement, steel.<br>(*d*) Mining—Coal and iorn, manganese, tin, oil, precious metels.<br>(*e*) The important manufactures of the world. World interdependence for food, clothing and raw materials. |
| 4. Travel enquiries from travel agencies. Visits to aerodromes, harbours, railway stations wherever possible. Contrast of travelling round the world in the 19th century with one of to-day. Plan for imaginary trips by sea or by air or by land, e.g., a world trip. A study of advantages of such trips. Mapping of routes. | 4. Training pupils for making plans for travelling. | 4. World communications and transport—Railways, ocean routes and airways. |
| 5. The class assembly or the school assembly, as a model parliament of pupils. Election of leaders. Training in self-government to improve general welfare in the student- | 5. Developing skill in oral expression. Training in simple Parliamentary Procedure. Making rules, changing rules. Leading without dominating Working co-operetively for | 5. The growth of democracy in Britain. The British Parliament; its struggles with the king. The Revolution of 1688. Bill of rights. Partv System and Cabinet Govern- |

| | | |
|---|---|---|
| community. Work towards maximum possible equality of opportunity for every student in the group. | the common good. Using freedom intelligently with due regard for rights and feelings of others. Developing freedom of belief, speech, assembly and press. | ment. Prime Minister. Reform of Parliament. Adult sufrage. Transfer of power to the people. The Commonwealth idea in the Empire of Britain. |
| 6. Activities under item 5 above may be repeated. Imaginative activities such as a Round Table discussion among Washington, Lincoln, Wilson and Roosevelt, a letter from one of them to the class characterization of personalities in the list of dramatization of scenes from the lives of these men. | 6. Training as under item 5 above. Building an appreciation for the manner in which peoples of different countries in the world are welded into a united people as in the U. S. A. Appreciating the influence of culture of various peoples upon one another Developing attitudes of good neighbourliness with countries near by. | 6. The struggle for independence in America. American colonies and their revolt ; George Washington ; emergence of the U S.A. Munroe Doctrine. The Rise of the South American Republics. Simon Bolivar. Abraham Lincoln and the abolition of slavery. Woodrow Wilson. America, a World power. Roosevelt and Truman. The Pan-Americansim. |
| 7. Dramatization from the lives of great men. Pageant of political revolutions Collection of flags for studying their significance. Discussions on the nature of revolutions. Round table conferences | 7. Training in right kind of patriotism. Thinking critically about the effects of revolutions. Understanding better present day world affairs through a study of the recent past. Discovering and | 7. A panorama of political revolutions—<br>(*a*) The French Revolution Ideas of liberty, equality and fraternity; rise of Nepoleon; modern France.<br>(*b*) Unification of Italy— |

| *Social activity* | *Social training* | *Social Studies* |
| --- | --- | --- |
| (imaginative) among some of the revolutionists. | developing dramatic talents. Practising Parliamentary Procedure whenever there is an opportunity. Developing skill in oral expression. | Mazzini. Garibaldi and Cavour, modern Italy. (*c*) consolidation of Germany — Bismark and Kaiser Wilhelm II. The New Germany of Hitler. (*d*) The Russian Revolution — Lenin and Stalin. U.S.S.R. (*e*) Rise of young Turkey-Mustapha Kemal Pasha. (*f*) Developments in the Orient — Awakening in China-Sun Yat Sen and Chiang Kei Sheik. Rise of Japan—Muitsi Hiti and Hiro Hito. India's sturuggle for freedom—Mahatma Gandhi - Independent India. |
| 8. A mock U.N.O. in session hearing a dispute between two nations. | 8. Training for world citizenship. Developing a sense of justice to all nations, a critical judgment, defence against propaganda. Friendly attitute to-wards all nations. | 8. Efforts towards world peace (in story from). The League of Nations, its failure The U.N.O. for a New World Order. International justice. |

| | | |
|---|---|---|
| | | The ideal of a New World State. The World to-day. |
| 9. Pupils to find reference materials on a given topic, taking notes according to a specific method, organising them and reporting to class. Keeping records of reading. Makin*g* progress (in ways of lving) charts. | 9. Habit of reading newspapers. Experience in looking up references, taking notes according to a specific method and using them in oral or written composition. | 9. A study of the Industrial Revolution in England. The changing character of ways of living in India, of the ways of living in some of the important aspects in countries out side India. Service of science to human welfare and happiness. |

# பொருளடக்கம்


| அத்யா | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | நவீனகாலத் தொடக்கம் | 1 |
| 2. | புதிய நாடுகளைக் கண்டறிதல் | 3 |
| 3. | கண்டங்களைப் பற்றி பூகோளக் குறிப்புகள் | 14 |
| 4. | பழைய உலகமும், புதிய உலகமும் | 32 |
| 5. | உலகின் இயற்கைப் பிரதேசங்களும், மக்களின் வாழ்க்கையும் | 34 |
| 6. | உலக மக்களின் தேவைகள் | 53 |
| 7. | உலகப் போக்குவரவு சாதனங்களும் மார்க்கங்களும் | 88 |
| 8. | பிரிட்டனில் ஜனநாயக ஆட்சியின் வளர்ச்சி | 98 |
| 9. | பார்லிமெண்டு சீர்திருத்தம் | 110 |
| 10. | பிரிட்டிஷ் பொதுநலக் கூட்டுறவு | 115 |
| 11. | அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தோற்றமும் வளர்ச்சியும் | 117 |
| 12. | தென் அமெரிக்கக் குடியரசுகள் | 125 |
| 13. | ஐக்கிய நாடுகளின் சில ஜனாதிபதிகளும் அவர்களது சேவையும் | 127 |
| 14. | பிரான்ஸில் அரசியல் புரட்சி | 134 |
| 15. | இத்தாலி ஒற்றுமைப்படுதல் | 145 |
| 16. | ஜர்மனி ஒற்றுமையடைதல் | 150 |
| 17. | ரஷ்யப் புரட்சி | 157 |
| 18. | துருக்கியின் எழுச்சி | 162 |
| 19. | ஆசிய நாடுகள் ஏற்றம் பெறுதல் | 165 |
| 20. | உலக சமாதானத்துக்கான முயற்சிகள் | 179 |
| 21. | தொழிற் புரட்சி | 186 |
| 22. | விஞ்ஞானத்தின் சமூக நலத் தொண்டு | 193 |

# 1. நவீன காலத்தொடக்கம்

உலகம் தோன்றிய நாள் முதல், பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக, மக்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் வசித்து வருகின்றனர். ஆதியில் வெகு அநாகரிகமாக வாழ்ந்து வந்த அவர்கள், காலப்போக்கில், நாகரிக மேம்பாடு அடைய ஆரம்பித்தனர். சமூக வாழ்வு, கல்வி, வாணிபம், அரசியல், பொருளாதாரம் ஆகிய பல துறைகளிலும் மக்கள் ஏற்றம் பெற்றனர். இவ்வாறு ஏற்றம் பெற்ற காலத்தைச் சரித்திர ஆசிரியர்கள் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். சுமார் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டுக்கு முற்பட்ட காலத்தைப் **புராதன காலம்** என்றும், பதினைந்தாம் நூற்றுண்டுக்கு முற்பட்ட காலத்தை **மத்திய காலம்** என்றும், அதற்குப் பிற்பட்ட காலத்தை **நவீனகாலம்** என்றும் கூறுகின்றனர்.

புராதன கால மக்கள் வாழ்ந்து வந்த வகைகளைப் பற்றி அறியத் தேவையான சான்றுகள் கிடையா. மத்திய காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் அரசர்கள் ஆட்சிபுரிந்தனர். அவர்களுக்கு ஆலோசனைகூற, ஆங்காங்கு சபைகளும் இருந்தன. பெருநிலக்காரர்களான பிரபுக்களின் ஆதிக்கம், மதஸ்தாபனங்களின் ஆதிக்கம் இவை அதிகமாகக் காணப்பட்டன.

அக்காலத்தில் ஓர் வகையான நிலமானிய முறை அமுலில் இருந்து வந்தது. நாட்டின் நிலம் அனைத்தும் மன்னருக்கே சொந்தமெனக் கருதப்பட்டது. அந்நிலத்தை அவர் தமது பிரபுக்களுக்குப் பங்கிட்டளித்தார். அவ்வாறு நிலம் பெற்றோர் அனைவரும், தம் நிலத்தின் அளவுவிகிதத்

திற்குத் தக்கபடி, போர்க்காலங்களில் மன்னருக்குப் படை தந்து உதவ வேண்டும். இதர காலங்களில், மன்னர் தனக்காக வைத்துள்ள நிலங்களைப் பயிர்செய்ய, இப்பிரபுக்கள் உதவி புரிய வேண்டும். பிரபுக்கள் தாம் பெற்றுள்ள நிலங்களை ஏனையோருக்குப் பிரித்தளித்து, அவர்களிடமும் மேற்கண்ட சேவைகளைப் பெற்றனர்.

மத்திய காலத்திலும், மக்களிடையே கல்வியறிவு மிகக் குறைவாக இருந்தது. மதத்தலைவர்களே பெரும்பாலும் கல்வி அறிவு பெற்றிருந்தனர். ஐரோப்பாக்கண்டம், ஆசியா, ஆப்பிரிக்காக் கண்டங்களின் சில பகுதிகள் இவற்றைத் தவிர, உலகின் இதர பகுதிகளைப் பற்றி ஐரோப்பியர்கள் அறிந்திலர். மத்திய தரைக்கடலே உலகின் மத்திய பாகமென அவர்கள் கருதினர்கள். கடலில் நெடுந்தூரம் செல்லத் தேவையான வசதிகளை அவர்கள் பெறவில்லை.

பதினைந்தாம் நூற்றுண்டின் மத்தியில், அதாவது கி. பி. 1453ம் ஆண்டில், ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள **கான்ஸ்டாண்டிநோபில்** என்னும் நகரை, கிறிஸ்தவர்களிடமிருந்து, முஸ்லீம்களின் ஒரு வகுப்பினராகிய **துருக்கியர்கள்** கைப்பற்றிக் கொண்டனர். இதன் விளைவாக, அங்கிருந்த அறிஞர்கள் தங்களது நூல்களுடன் ஐரோப்பாவின் பல பகுதிகளுக்கும் சென்று, ஆங்காங்குள்ள மக்களுக்கிடையே கல்வியைப் பெருக்க ஆரம்பித்தனர். இதற்குக் **கல்வியின் மறுமலர்ச்சி** எனப்பெயர். இதன் காரணமாக மக்களின் அறிவு விசாலித்ததுடன், அவர்களிடையே ஆராய்ச்சி, தீரம் முதலிய உணர்ச்சிகள் உண்டாயின. அதே சமயத்தில் அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டதால், குறைந்த செலவில் நூல்கள் அச்சிட முடிந்தது. கல்வி பரவ இது பெரிதும் துணையா



படம் 1. திசைகாட்டும் கருவி

யிற்று. திசை காட்டும் கருவியும் அப்பொழுது பெரிதும் உப யோகத்துக்கு வந்தது. இதனால் பல தீர, ஐரோப்பியமாலு மிகள் கடல் கடந்து, வெகுதூரம் சென்று பல புதிய நாடு களையும், பழைய நாடுகளுக்குப் புதிய கடல் மார்க்கங்களை யும் கண்டறிய ஆரம்பித்தனர். இதன் விளைவாக, மக்கள் அறிவு வளர்ச்சி பெற்றதுடன், வாணிபமும் பெருகிற்று.

### பயிற்சி

1. உலகின் காலத்தை எப்பெயர்கள் கொண்ட பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர்? அவை ஒவ்வொன்றும் எந்த நூற்றாண்டுகளுக் கிடையே யானது?
2. மத்திய காலத்திய நிலமானிய முறையைப் பற்றிக் கூறு.
3. கான்ஸ்டாண்டிநோபிலை துருக்கியர்கள் எப்பொழுது கைப்பற்றினார்கள்? அதன் முக்கிய விளைவு யாது?
4. கல்வியின் மறுமலர்ச்சி, அதன் பயன்கள் ஆகியவற் றைப் பற்றிக் கூறு.

# 2. புதிய நாடுகளைக் கண்டறிதல்

மத்திய காலத்தில், ஐரோப்பியர்கள், மத்திய தரைக் கடலை மையமாகக் கொண்ட ஐரோப்பாக் கண்டம், ஆசியா, ஆப்பிரிக்காக் கண்டங்களின் பகுதிகள் இவற்றைப் பற்றி மட்டும் அறிந்திருந்தார்கள் எனக் கூறப் பட்டது. ஆசியா வின் தென் கிழக்கிலுள்ள இந்தியா, சீனா முதலிய நாடு களைப் பற்றி அவர்கள் கேள்வியுற்றிருந்தார்கள். இதற்கு முக்கியக் காரணமாயிருந்தவர் மார்க்கோ போலோ என்ற இத்தாலியர்.

**மார்க்கோ போலோ** :—முற்காலத்தில் ஐரோப்பாவில் வாணிபத்தில் மிகச் சிறந்து விளங்கிய நகரங்களுள், இத் தாலி தேசத்திலுள்ள வெனிஸ் ஒன்றாகும். அங்கு கி. பி. 1254-ம் ஆண்டில் மார்க்கோ போலோ பிறந்தார். அவரது தந்தை கீழ்நாடுகளுடன் வாணிபம் செய்து வந்தார்.



புதிய நாடு கண்டவர்கள்
சென்ற மார்க்கங்கள்
அட்லாண்டிக் சமுத்திரம்
இங்கிலாந்து
போர்ச்சுகல்
வெனிஸ்
ஸ்பெயின்
பீகிங்
(கோழிக்கோடு)
கள்ளிக்கோட்டை
பிலிப்பைன் தீவுகள்
இந்திய சமுத்திரம்
பாட்டனிகுடா
நியூஸிலாந்து
அண்டார்க்டிகா
பஸிபிக் சமுத்திரம்
ஹவாய் தீவுகள்
மார்க்கோபோலோ
கொலம்பஸ்
வாஸ்கோடகாமா
மெகல்லன்
காப்டன் குக்
மங்கூ பார்க்
காப்டன் ஸ்காட்

1271 ம் ஆண்டில் மார்க்கோ போலோ தனது தந்தையுடன் தரை மார்க்கமாக சீனுவுக்குச் சென்ருர். அப்பொழுது அதன் தலைநகர் பீகிங். அங்கு **குப்ளாய்கான்** என்பவர் ஆட்சி புரிந்து வந்தார். மார்க்கோ போலோவின் முகவசீகரத்தாலும், நுண்ணறிவாலும் கவரப்பட்ட குப்ளாய்கான் அவரை நன்குவரவேற்று, அவருக்கு அரசாங்கத்தில் ஓர் பதவியையும் அளித்தார். மார்க்கோ போலோ தன் கடமைகளைத் திறம்பட நிறைவேற்றி, மன்னரின் நன்மதிப்பைப் பெற்ருர். சுமார் பதினேழு ஆண்டுகள் சீனுவில் தங்கிய பின், மார்க்கோ போலோ கடல் மார்க்கமாகப் புறப்பட்டு, **சுமத்திரா, ஜாவா, இலங்கை, தென் இந்தியா** முதலிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்ட பின், பாரசீக வளைகுடாவிலுள்ள **ஓர்மஸ** நகரையடைந்தார். பின்னர் அங்கிருந்து வெனிஸுக்கு 1295-ம் ஆண்டில் திரும்பி வந்தார்.



படம்3. மார்க்கோ போலோ

இதன் பின்னர் மார்க்கோ போலோ, தான் சென்றிருந்த நாடுகளைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் பற்றி ஓர் புத்தகம் எழுதினுர். இப்புத்தகமே, பிற்காலத்தில் மற்றும் பலருக்கு, புதிய நாடுகளைக் கண்டு பிடிக்க ஊக்கம் உண்டாக்கியது. மேலும் ஐரோப்பியர்கள் இந்நாடுகளுடன் தரை மார்க்கமாக வாணிபம் செய்ய ஆரம்பித்தனர்.

வெனிஸுக்குத் திரும்பி, இருபத்தொன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் மார்க்கோ போலோ மரணமடைந்தார்.

1453-ம் ஆண்டில் கான்ஸ்டாண்டி நோபிலைக் கைப்பற்றிய துருக்கியர்கள் ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்

கிடையே நடைபெற்று வந்து வாணிபத்தைத் தடை செய்தனர். இதனுல் இந்நாடுகளுக்கிடையே கடல் மார்க்கம் கண்டு பிடிக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டனர். இவர்களுள் முதல் முக்கியமானவர் **கிரிஸ்டோபர் கொலம்பஸ்** என்பவர்.

கிரிஸ்டோபர் கொலம்பஸ் :—இவர் கி. பி. 1451-ம் ஆண்டில் இத்தாலி தேசத்திலுள்ள ஜினேவா நகரில் ஒரு நெசவுத் தொழிலாளியின் மகனுகப் பிறந்தார். சிறு வயது முதல் இவர் கடல் பிரயாணத்தில் ஆர்வம் கொண்டிருந்தார். பல நூல்களையும் நன்கு ஆராய்ந்தார். அக்காலத்திய மக்களுள் மிகப் பெரும்பாலோர் பூமி தட்டை வடிவமான தென்றே நம்பினுர்கள். ஆனுல் கொலம்பஸ், பூமி உருண்டை வடிவமான தென்றும், ஆகவே மேற்கு நோக்கியே பிரயாணம் செய்தால், இறுதியில் ஐரோப்பாவின் கிழக்கிலுள்ள இந்தியா, சீனு முதலிய நாடுகளை அடையக் கூடு மென்றும் நம்பினுர். பலர் இவரது நம்பிக்கையைப் பரிகசித்தனர். தனது பிரயாணத்துக்குத் தேவையான உதவிகளைப்பெற இவர் பல நாட்டு மன்னர்களை அணுகியும், வெற்றி பெறவில்லை. இறுதியில், ஸ்பெயின் நாட்டில் அரசு புரிந்த பெர்டினண்ட் மன்னரும் இஸ்பெல்லா அரசியும் கொலம்பஸின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து, அவருக்கு மூன்று கப்பல்களையும், வேறு பல உதவிகளையும் அளித்தனர்.


படம் 4. கொலம்பஸ்

1492-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் கொலம்பஸ் ஸ்பெயின் நாட்டினின்றும் மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்தார். பல இன்னல்களுக்கிடையே மிகப்பொறுமை

யுடனும், தீரத்துடனும் பிரயாணம் செய்த கொலம்பஸ் சுமார் மூன்று மாதங்களுக்குப் பின், நிலப்பகுதியைக் கண் டார். அதுவே இந்தியா என நம்பினர். ஆனல் அது தற்காலத்தில் **மேற்கிந்தியத் தீவுகள்** என வழங்கும் தீவுக் கூட்டங்களுள் ஒன்ருகும். அங்கிருந்து சில அடையாளப் பொருள்களுடன் அவர் ஸ்பெயினுக்குத் திரும்பியபொழுது, அரசர், அரசி, பொதுமக்கள் ஆகியோர் அவருக்கு மிகச் சிறந்த வரவேற்பு அளித்து, அவரை கவுரவித்தார்கள். இவ்வாறு கொலம்பஸ் நான்கு முறை பிரயாணம் செய்து, மேலும் பல தீவுகளைக் கண்டறிந்தார். ஆனல் கடைசி வரை அவர் இந்தியாவையே அடைந்து விட்டதாக எண்ணி, அங்குள்ள மக்களையும் இந்தியர்கள் என அழைத் தார். பிற்காலத்தில் இவர்கள் **செவ்விந்தியர்கள்** என அழைக்கப்பட்டு வருகின்றனர். இவர் 1506-ம் ஆண்டில் மரணமடைந்தார்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், கொலம்பஸ் சென்ற மார்க்கத்தைப் பின் பற்றிச் சென்ற **அமெரிகோ வெஸ்புசி** என்பவர் கொலம்பஸ் கண்டறிந்த தீவுக்கூட்டங்களுக்குச் சமீபத்தில் ஒருபெரிய நிலப்பகுதியைக் கண்டார். அதுவே அவரது பெயரை யொட்டி **அமெரிக்காக் கண்டம்** என்று பெயர் பெறலாயிற்று. இதன் வடபகுதி **வடஅமெரிக்கா** என்றும், தென் பகுதி **தென் அமெரிக்கா** என்றும் வழங்கு கிறது.

**வாஸ்கோடகாமா** :—இந்தியாவிற்குக் கடல் மார்க்கம் கண்டறிய முயன்ற ஐரோப்பிய நாட்டவர்களுள் முதன்மை யானவர்கள் **போர்ச்சுக்கல்** தேசத்தினர் ஆவார்கள். **வாஸ் கோடகாமா** என்பவர் அந்நாட்டில் 1460-ம் ஆண்டில் பிறந் தார். 1486-ம் ஆண்டில் **பார்தலோமியோ டயஸ்** என் னும் போர்ச்சுக்கீசிய மாலுமி, ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரை யோரமாகப் பிரயாணம் செய்து, அதன் தென் கோடியை யடைந்தார். அவ்வமயம் அங்கு பெரும் புயல் வீசியதால், அவர் அவ்விடத்திற்குப் **புயல்முனை** எனப்பெயர் அளித்தார். இம்முனையைக் கண்டுபிடித்ததன் விளைவாக

மேலும் பல தைரியமுள்ள மாலுமிகள் அவ்வழியே சென்று இந்தியாவிற்குக் கடல் மார்க்கம் கண்டுபிடிக்க ஊக்கமும், நம்பிக்கையும் ஏற்பட்டதால், போர்ச்சுக்கீசிய மன்னர், அம்முனையை **நன்னம்பிக்கைமுனை** என அழைத்தார்.



படம் 5. வாஸ்கோட காமா

1497-ம் ஆண்டில் வாஸ்கோடகாமா, போர்ச்சுகலின் தலைநகரான **லிஸ்பன்** துறைமுகத்தினின்றும் நான்கு கப்பல்களுடன் புறப்பட்டார். நன்னம்பிக்கை முனையைச் சுற்றி, ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையில் சில நாட்கள் தங்கினர். பிறகு இந்திய சமுத்திரத்தைக் கடந்து, இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலுள்ள **கள்ளிக்கோட்டை (கோழிக்கோடு)** என்னும் இடத்தை அடைந்தார். அப்பொழுது அங்கு அரசுபுரிந்த **ஜாமொரின்** மன்னர் வாஸ்கோடகாமாவை வரவேற்று, நன்கு உபசரித்தார். பிறகு அவரது வேண்டுகோள்படி, அம்மன்னர், போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவுடன் வாணிபம் செய்ய உரிமைகளை வழங்கினர். மன்னரிடம் பல வசதிகளையும் பெற்ற வாஸ்கோடகாமா சில போர்ச்சுக்கீசியரை அங்கேயே குடியேறச் செய்து, தம் நாட்டு வாணிபத்தை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்து விட்டுத் தாய்நாடு திரும்பினர். மீண்டும் இருமுறை அவர் இந்தியாவிற்கு வந்து, பல பண்டகசாலைகளை அமைத்து, வாணிபத்தைப் பெருக்கினர். இறுதியாக அவர் இந்நாட்டிலேயே சுமார் 1525-ம் ஆண்டில் இறந்தார்.

**பர்டினெண்டு மெகல்லன் :**—பர்டினெண்டு மெகல்லன் என்னும் மாலுமியும் போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்தவர். அந்நாட்டின் இதர மாலுமிகளைப் போல, இவருக்கும் பல

புதிய நாடுகளைக் கண்டறிய வேண்டுமென்ற அவா அதிக மாயிருந்தது. ஆகவே, இவர் 1519-ம் ஆண்டில் ஸ்பெயின் மன்னரின் உதவியைப் பெற்று, அமெரிக்காவைச் சுற்றி, இந்தியாவிற்கு ஓர் கடல் மார்க்கம் கண்டறியும் நோக்கத்துடன் ஐந்து கப்பல்களுடன் புறப்பட்டார். இவர் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து, தென் அமெரிக்காவின் தென்கோடியிலுள்ள ஜலசந்தியைக் கடந்தார். இந்த ஜலசந்திவழியே சென்ற முதல் ஐரோப்பியர் இவரே யாதலால் இதற்கு இவர் பெயரே அளிக்கப்பட்டது. இன்றும் இது **மெகல்லன் ஜலசந்தி** என அழைக்கப்படுகின்றது.



படம 6.மெகல்லன்

இந்த ஜலசந்தியின் மறுபுறத்திலுள்ள சமுத்திரத்தைக் கண்டதும், அது அலையின்றி அமைதியாயிருந்ததன் காரணமாக அதற்குப் **பஸிபிக் சமுத்திரம்** எனப்பெயரிட்டார். பரந்த இந்த சமுத்திரத்தைக் கடக்கையில்,மெகல்லனும், அவரது மாலுமிகளும் மிகுந்த இன்னல்களுக்குள்ளானுர்கள். பலர் உயிரையும் இழந்தனர். பிறகு ஓர் புதிய தீவுக்கூட்டங்களைக் கண்டு, அவற்றிற்கு **பிலிப்பைன் தீவுகள்** எனப் பெயரிட்டார். அங்கு தங்கியிருந்த காலத்தில், மெகல்லனுக்கும், அங்குள்ள மக்களுக்கும் ஏற்பட்ட போர் ஒன்றில் மெகல்லனும், அவரது நண்பர்களில் சிலரும் உயிரிழந்தனர். எஞ்சியவர்ககள் மூன்று கப்பகளில் தப்பிப் பிரயாணத்தைத் தொடகினுர்கள். வழியில் மேலும் இரண்டு கப்பல்கள் காணுமங் போயின. முதல் முதலாக மெகல்லனுடன் ஐந்து கப்பல்களில் 280 காலுகுகள் புறப்பட்டனர். இறுதியில் சுமார் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் **விக்டோரியா** என்ற ஒரே கப்பல் பதினெட்டுப் பெயர்களுடன் ஸ்பெயினுக்குத் திரும்பியது.

மெகல்லனின் பிரயாணத்தால் பல புதிய இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. பூமி உருண்டை வடிவமானது என்றும் நிரூபிக்கப் பட்டது.

காப்டன் குக் :—பஸிபிக் சமுத்திரத்தில் பெரிதும், சிறிதுமாக உள்ள தீவுகளில் பலவற்றைக் கண்டுபிடித்த பெருமை காப்டன் குக்கைச்சேர்ந்ததே. இவர் 1728-ம் வருஷம் இங்கிலாந்தின் வடபகுதியிலுள்ள ஓர்ஊரில்பிறந்தார். சிறுவயதில் ஒரு கடையில் வேலைக் கமர்ந்தார். ஆனால் இவரது மனம் எப்பொழுதும் கடற்பிரயாணத்தையே நாடிற்று. ஆகையால் இவர் கடையினின்றும் ஓடி, ஒரு கப்பலில் சேர்ந்தார். தனது திறமையால் படிப்படியாக முன்னேறி, சீக்கிரத்தில் ஒரு உயர்ந்த பதவியை அடைந்தார். அப்பொழுது இங்கிலாந்துக்கும், பிரான்ஸுக்கும் இடையே ஏற்பட்ட கடற்போரிலும் பங்கெடுத்துக்கொண்டு, இவர் பேரும், புகழும் பெற்றார்.



படம் 7. காப்டன் குக்

1768-ம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் பஸிபிக் சமுத்திரத்திலுள்ள டாகிட்டி தீவில் வானசாஸ்திர ஆராய்ச்சி செய்ய விரும்பினார்கள். அப்பணியை ஆற்ற அவர்கள் காப்டன் குக்கையே தேர்ந்தெடுத்தார்கள். தேவையான உதவியுடன் காப்டன் குக் அங்கு சென்று, தன் அலுவலை முடித்துக் கொண்டு திரும்பி வருகையில், வழியில் நியூஸிலந்து என்னும் பெயருடைய தீவுகளைக் கண்டார். அவற்றின் இடையேயுள்ள ஜலசந்திக்கும் தன் பெயரையே இட்டார். அது இன்றும் குக் ஜலசந்தி என வழங்குகிறது. பிறகு அங்கிருந்து புறப்பட்டு மேலும் செல்லுகையில் இவர் ஆஸ்த்ரேலியாவின் கிழக்குக் கடற்கரையை அடைந்தார். அங்கு பல வகையான தாவர வகைகளைக் கண்டு, அவ்விடத்திற்குப் பாட்டனி குடா எனப்பெயரிட்டார்.

இவ்வாறு ஆஸ்திரேலியாவைக் கண்டு பிடித்த பெருமை காப்டன் குக்கைச் சாரும். பிறகு 1771-ம் ஆண்டில் இங்கிலாந்துக்குத் திரும்பினர்.

இதன் பிறகு, மேலும் மூன்று முறை காப்டன் குக் பஸிபிக் சமுத்திரத்தில் பிரயாணம் செய்து, பல தீவுகளைக் கண்டறிந்தார். தென் துருவத்துக் கருகிலுள்ள **அண்டார்டிகா** என்னுமிடத்தை ஆராய முயன்று, அதில் அவர் வெற்றிகாணவில்லை. கடைசி முறையில் வட அமெரிக்காவின் வட பக்கமாகச் சுற்றி, இந்தியாவிற்கு ஒரு கடல் மார்க்கம் கண்டு பிடிக்க முயற்சித்து, இம்முயற்சியிலும் வெற்றிகாணவில்லை. அங்கிருந்து, பஸிபிக் சமுத்திரத்தின் வட பகுதியிலுள்ள **ஹவாய்** தீவுகளை அடைந்தார். 1779-ம் ஆண்டில், அங்குள்ள மக்களுடன் ஏற்பட்ட போரில் இவர் உயிரிழந்தார்.

**மங்கோ பார்க்** :—ஆப்பிரிக்காவின் வட பகுதிகளைப் பற்றி ஐரோப்பியர்கள் நெடுங்காலமாக அறிந்திருந்தனர். பாலைவனங்கள், நீர்வீழ்ச்சிகள், அடர்ந்த காடுகள், கடுமையான நோய்களைத் தரக்கூடிய விஷக்கிருமிகள் இவை காரணமாக ஐரோப்பியர்கள் ஆப்பிரிக்காவின் உட்பகுதிகளைப் பற்றி அறிய முடியாமலிருந்தது. ஆகவே, வெகு காலம் வரை ஆப்பிரிக்காவிற்கு **இருண்ட கண்டம்** எனப் பெயர் வழங்கி வந்தது. இப்பெயரைப் போக்கி, ஆப்பிரிக்காவின் உட்பகுதிகளைப் பற்றி முதலில் அறிந்தவர் **மங்கோ பார்க்** என்பவர்.

இவர் 1771-ம் ஆண்டில் இங்கிலாந்துக்கு வடக்கிலுள்ள **ஸ்காத்லாந்து** நாட்டில் பிறந்து, வைத்தியப் பயிற்சி பெற்றார். 1795-ம் ஆண்டில், மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள **நைஜர்** நதிப் பிரதேசத்தைக் கண்டறியும் பொருட்டு, அங்கு சென்றார். பலவகையான இன்னல்களுக்கிடையே அங்கு சுமார் இரண்டு ஆண்டுகள் பிரயாணம் செய்து, நைஜர் நதியின் ஒரு பகுதியையும், அதை யடுத்துள்ள பிரதேசங்களையும் ஆராய்ந்தார். பிறகு தாய்நாடு திரும்பி, தான்

கண்டவற்றைப் பற்றிய குறிப்புகளை வெளியிட்டார். பிறகு 1805-ம் ஆண்டில் இரண்டாம்முறையாக,இவர்மேற்குஆப்பிரிக்காவுக்குச் சென்று, நைஜர் நதியின் போக்கை மேலும் ஆராய்ந்தார். அப்பொழுது அங்குள்ள மக்களுடன் ஏற்பட்ட போரில், இவர் நீரில் மூழ்கி இறந்தார்.

இவருக்குப்பின், **டேவிட் லிவிங்ஸ்டன், ஸ்டான்லி** முதலியோர் ஆப்பிரிக்காவின் இதர பகுதிகளையும் ஆராய்ந்தனர்.

**காப்டன் ஸ்காட்:**—பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியி லிருந்து துருவங்களை ஆராய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றன. தென் துருவத்தை அடைய முயற்சித்தவர்களு ள் முக்கியமானவர்கள் நார்வே நாட்டைச்சேர்ந்த **அமண்ட்ஸன்** என்பவரும், இங்கிலாந்தைச் சேர்ந்த **காப்டன் ஸ்காட்** என்பவரும் ஆவார்கள். ஸ்காட் 1868-ம் ஆண்டில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே இவர் ஊக்கமும் நுண்ணறிவும் படைத்திருந்தார். கப்பற் படையில் சேர்ந்து, சிறந்த பயிற்சி பெற்று, பெரும்பதவியை அடைந்தார். இங்கிலாந்து அரசாங்கத்தின் ஆதரவுடன் இவர் 1901-ம் ஆண்டில் தென்துருவத்தைஆராயப் புறப்பட்டார். மிகுந்த இன்னல்களுக்கிடையே இவர் 82° தெற்கு அக்ஷரேகை வரை சென்று, சுமார் ஆயிரம் மைல் தூரம் ஆராய்ந்தறிந்து, மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இங்கிலாந்துக்குத் திரும்பினர்.


படம் 8. காப்டன் ஸ்காட்

மறுமுறை ஸ்காட் தனது துருவ ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்த 1910-ம் ஆண்டில் தென் துருவத்தை நோக்கிப் பிரயாணம் செய்தார். சொல்லொணுத் துன்பங்களுக்கிடையே தளரா உறுதியுடனிருந்து, 1912-ம் ஆண்டு

ஜனவரி மாதம் 18-ம் தேதி தென் துருவத்தை அடைந்தார். ஆனல் அதற்கு சுமார் ஐந்து வாரங்களுக்கு முன்பே அமண்ட்ஸன் தென் துருவத்தை அடைந்து இதன் இடையாளமாகத் தன் நாட்டுக் கொடியை அங்கு நாட்டியிருப்பதைக் கண்டு, ஏமாற்றம் அடைந்தார். பிறகு இவரும் இவரது துணையாளர்களும் திரும்புகையில் வழியில் கடுங்குளிரினல் தமது கூடாரத்துக்குள்ளேயே இறந்தனர். பிறகு இவர்களைத் தேடிச் சென்ற கூட்டத்தினர் இவர்களது சடலங்களையும், பிரயாணக் குறிப்புகளையும் கண்டனர்.

இவ்வாறு தம் உயிரையும் பொருட்படுத்தாது, உலகின் பல பாகங்களையும் கண்டறிந்தவர்களுக்கு நாம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிருே மன்ருே ?

## பயிற்சி

1. மார்க்கோ போலோவின் பிரயாணக் குறிப்புகள் எவ்வாறு முக்கியமா யிருந்தன ?
2. ஐரோப்பியர்கள் இந்தியாவிற்குக் கடல் மார்க்கம் கண்டு பிடிக்க வேண்டிய அவசியம் எவ்வாறு ஏற்பட்டது ?
3. வாஸ்கோடகாமா, மெகல்லன், காப்டன் குக் இவர்களின் பிரயாண வரலாறுகளைப் பற்றிக் கூறுக.
4. மங்கோ பார்க் ஆற்றிய பணி யாது?
5. காப்டன் ஸ்காட் எப்பிரதேசங்களைக் கண்டார் ?
6. உங்கள் ஊருக்கு அருகிலுள்ள பிரதேசங்களுக்கு உல்லாசப் பிரயாணம் செய்து, குறிப்புகள் வரைக.
7. ‘பர்டினண்டு மன்னர் சபையில் ‘கொலம்பஸ்’ என்ற தலைப்பின் கீழ் ஒரு கற்பனை சம்பாஷணை வரைக.
8. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க :-
   i. மார்க்கோபோலோவை ஆதரித்த சீன மன்னர்——
   ii. காப்டன் குக் கொல்லப்பட்ட இடம் ——
   iii. வாஸ்கோடகாமாவை வரவேற்ற கோழிக்கோடு மன்னர்——

iv. தென் துருவத்தை முதல் முதலாக அடைந்தவர்—அவர் பிறந்த நாடு——

v. மேற்கு ஆப்பிரிக்காவை முதல் முதலாக ஆராய்ந்தவர்——

9. உலகப்படம் ஒன்றில் வாஸ்கோடகாமா, காப்டன் குக், மெகல்லன், காப்டன் ஸ்காட் இவர்களின் பிரயாண மார்க்கங்களைக் குறிப்பிடுக.

# 3. கண்டங்களைப் பற்றிய பூகோளக் குறிப்புகள்

பூமியின் மீது தோன்றும் நிலப்பரப்பு $\frac{2}{5}$ பங்கு என்றும், நீர்ப்பரப்பு $\frac{3}{5}$ பங்கும் எனக் கணக்கிடப் பட்டிருக்கின்றது. நிலப்பரப்பு ஆறு பெருங் **கண்ட**ங்களாகவும்; நீர்ப்பரப்பு ஐந்து சமுத்திரங்களாகவும் பிரிக்கப் பட்டிருக்கின்றன. கண்டங்கள் **ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா,** வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, **ஆஸ்த்ரேலியா** ஆகியவை. சமுத்திரங்கள் **பஸிபிக் சமுத்திரம், அட்லாண்டிக் சமுத்திரம். இந்திய சமுத்திரம், ஆர்க்டிக் சமுத்திரம், அண்டார்க்டிக் சமுத்திரம்** ஆகியவை.

இனி, ஒவ்வொரு கண்டங்களைப் பற்றியும் ஆராய்வோம்.

**ஆசியா** :— பூமியின் நிலப்பரப்பில் சுமார் மூன்றில் ஒரு பங்கு கொண்ட ஆசியாவே, கண்டங்களுள் மிகப் பெரியது. இது பூமத்திய ரேகையிலிருந்து, வடதுருவக் கோட்டைத் தாண்டியும் பரவியுள்ளது. இதன் வடக்கில் **ஆர்க்டிக் சமுத்திரமும்,** கிழக்கில், **பஸிபிக் சமுத்திரமும்** தெற்கில் **இந்திய சமுத்திரமும்,** மேற்கில் **யூரல்மலை, காஸ்பியன் கடல், காகஸஸ்மலை, கருங்கடல், மத்திய தரைக் கடல், செங்கடல்** இவையும் எல்லைகளாக அமைந்துள்ளன.




படம் 9. ஆசியா-இயற்கையமைப்பும் நதிகளும்

ஆசியாப் படத்தைப் பார்த்து, இந்த எல்லைகளையும், இக்கண்டத்திலுள்ள தீபகற்பங்கள், இதையடுத்த தீவுகள், கடல்கள் முதலியவைகளையும் கவனியுங்கள்.

இயற்கையமைப்பையொட்டி, ஆசியாவை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை வட சமவெளி, மத்திய மலைப்பிரதேசங்கள், தெற்கு, கிழக்கு சமவெளிகள், தெற்குப் பீடபூமிகள் ஆகியவை.

வட சமவெளி முக்கோண வடிவம் கொண்டது. இச் சமவெளியின் தொடர்ச்சி, ஐரோப்பாவிலும் பரவியுள்ளது. இவ்விரண்டு சமவெளிகளுக்கும் நடு எல்லையாக உள்ளது யூரல் மலை. இச்சமவெளியை, சைபீரிய சமவெளி எனவும் கூறுவதுண்டு. இது தெற்கிலிருந்து வடக்காகச் சரிந் திருக்கிறது. ஓபி, எனிஸி, லீனு என்ற மூன்று நதிகள் இச் சமவெளியின் வழியேயோடி, ஆர்க்டிக் சமுத்திரத்தில் கலக்கின்றன. குளிர் காலத்தில் இவற்றின் தண்ணீர் உறைந்து விடுவதால் இவை படகுப் போக்கு வரவுக்கு ஏற்றதல்ல. இச்சமவெளியின் தென் மேற்குப் பாகத்தில் காஸ்பியன் கடல், ஏரல் கடல், பால்கஷ் ஏரி ஆகியவை இருக்கின்றன. பல நதிகள் இவற்றிற்குள் வந்து பாய் கின்றன.

மத்திய மலைப்பிரதேசம் மிகவும் உயரமானது. இந்தியா விற்கு வடக்கிலுள்ள பாமீர் பீடபூமி என்பது மிக உயரமா யிருப்பதால், அதை உலகின் கூரை எனக் கூறுவது வழக்கம். அங்கிருந்து மலைத் தொடர்கள் எல்லாத் திசை களிலும் செல்கின்றன. வட கிழக்காகச் செல்லும் மலைத் தொடர்கள் தியான்ஷான், ஆல்டாய், யாப்ளனுய், ஸ்டானே வாய் ஆகியவை. கிழக்காகச் செல்பவை குவென்லன் மலைகள் என்பவை. தென் கிழக்காகச்செல்பவைஇமயமலைத் தொடர்கள். இவை இரண்டிற்கும் இடையேயுள்ளது திபேத் பீடபூமி. இமயமலைத்தொடர்கள் அவற்றின் கிழக்குக் கோடி யில் தெற்காகத் திரும்பி, அரக்கான் யோமா, பெகு யோமா, டெனுசரிம் யோமா என்ற பெயர்களுடன் பர்மாவில் அமைந்துள்ளன.

பாமீர் பீட்பூமிக்குத் தெற்கில் சுலைமான் மலையும், அதன் தொடர்ச்சியான கிருதார் மலையும் உள்ளன. மேற்கு நோக்கிச் செல்வது, இந்துகுஷ் மலை. அதன் தொடர்ச்சியானவை எல்பர்ஸ, காகஸஸ மலைகள் ஆகியவை. காகஸஸ் மலை, கருங்கடல், இவற்றிற்குத் தெற்கிலுள்ள பீடபூமி அனடோலியா எனப்படும். அதையே ஆசியா மைனர் எனவும் கூறுவர். பொதுவாக இம்மலைப்பிரதேசங்கள் வறண்டும், குளிர் மிகுந்தும் இருக்கின்றன. இம்மலைத் தொடர்கள் பெரும்பாலும், மடிப்பு மலைகளே.

தெற்கு, கிழக்கு சமவெளிகள் நதிகள் பாயும் பிரதேசங்களாகவும், மிக செழிப்புள்ளவைகளாகவும் இருக்கின்றன. தெற்கே பாரசீக வளைகுடாவை யடுத்துள்ள சமவெளி வழியே, டைக்ரிஸ், யூப்ரட்டீஸ் என்ற இரு நதிகளும் ஒன்று கூடி, ஷாட்டல் ஆரப் என்ற பெயருடன் பாரசீக வளை குடாவில் கலக்கின்றன. இமயமலைக்குத் தெற்கிலுள்ள வட இந்தியா சமவெளியில் கங்கை, சிந்து, பிரம்மபுத்ரா ஆகிய நதிகள் பாய்கின்றன. இவற்றுள் சிந்து நதி, அரபிக் கடலிலும், கங்கை, பிரம்மபுத்ரா நதிகள் வங்காள விரிகுடாவிலும் கலக்கின்றன.

பர்மாவில் உள்ள சமவெளிகளின் வழியே ஐராவதி, சால்வின் முதலிய நதிகளும், அவற்றிற்குக் கிழக்கே தாய்லாந்து சமவெளி வழியே மீனும் நதி, கம்போடியா வழியே மீக்காங் நதி ஆகியவையும் பாய்கின்றன.

கிழக்கிலுள்ள சீனச் சமவெளிகள் வழியே சீக்கியாங், யாங்ட்ஸிகியாங், ஹோயாங்ஹோ ஆகிய நதிகள் பாய்கின்றன. இந்நதிகளே சீனாவை மிகவும் வளம்பெறச் செய்திருக்கின்றன. இவற்றிற்கு வடக்கேயுள்ள சமவெளி வழியே பாயும் ஆமூர் நதி ஸைபீரியா, மஞ்சூரியா இவற்றின் எல்லையாக, ஓரளவு அமைந்துள்ளது.

தெற்கிலுள்ள பீடபூமிகள் முறையே இந்தோ சீனா, இந்தியாவின் தென் பகுதியான தட்சிணப் பீடபூமி, ஈரான்,

அரேபியா ஆனவை. இவை பழம் பாறைகளாலானவை. இவற்றுள் ஈரான், அரேபியா ஆகியவை மிக வறண்டவை.

ஐரோப்பா :— இக்கண்டம் ஆசியாவின் வடமேற்கில், அதன் ஓர் பகுதியாகவே காண்கின்றது. ஆகவே இந்த இரண்டு கண்டங்களும் அடங்கிய பூபாகத்தை பொதுவாக, யூரேஷ்யா எனக் கூறுவதுண்டு. ஐரோப்பாவின் ஒரு சிறு பகுதியும் வட துருவ வட்டத்துக்கு வடக்கிலும் வியாபித்துள்ளது. இக்கண்டத்தின் வடக்கெல்லை ஆர்க்டிக் சமுத்திரம், கிழக்கெல்லை ஆசியாவின் மேற்கு எல்லைகளாக இருப்பவைகளே. தெற்கில் மத்தியதரைக்கடலும், மேற்கில் அட்லாண்டிக் சமுத்திரமும் எல்லைகளாக அமைந்துள்ளன.

இயற்கையமைப்பை யொட்டி, ஐரோப்பாவை, வட மேற்கு பீடபூமி, வடக்கு சமவெளி, மத்திய தெற்கு மலைப் பிரதேசங்கள், தெற்கு பீடபூமிகள் எனப் பிரிக்கலாம்.

வட மேற்கு பீடபூமி பழைய பாறைகளாலானது. அதன் மேற்குக் கடற்கரையில், செங்குத்தான மலைத் தொடர்களுக்கிடையே கடல் வெகு தூரம் உட்சென்று, குடாக்களாக அமைந்துள்ளது. இவற்றிற்குப் பியர்டுகள் எனப் பெயர். இவை மீன் பிடிக்கும் தொழிலுக்கு ஏற்றவையா யிருக்கின்றன. இப்பீடபூமியில் அடங்கியுள்ள நாடுகள் ஸ்வீடன், நார்வே ஆகியவை.

வடக்குச் சமவெளி சைபீரிய சமவெளியின் தொடர்ச்சியேயாகும். இதற்கு ரஷ்யச் சமவெளி எனப்பெயர். இவ்விரு சமவெளிகளை யூரல் மலை பிரிக்கின்றது. இச்சமவெளியின் மத்தியிலுள்ள வால்டாய் குன்றுகளினின்றும் எல்லாத் திசைகளிலும் நதிகள் பாய்கின்றன. இவற்றுள் முக்கியமானது வால்கா. இதுவே ஐரோப்பாவில் மிக நீளமான நதி. இது காஸ்பியன் கடலில் கலக்கின்றது. இது உள் நாட்டுக் கடலில் விழுவதாலும், குளிர் காலத்தில் உறைந்து விடுவதாலும், படகுப் போக்கு வரவுக்கு அதிகமாக உபயோகப் படுவதில்லை.




படம் 10. ஐரோப்பா இயற்கை அமைப்பும், நதிகளும்.

மத்திய, தெற்கு மலைப்பிரதேசங்களிலுள்ள மலைகள் பெரும்பாலும் மடிப்பு மலைத் தொடர்கள். இவற்றில் முக்கியமானவைகளை ஆராய்வோம்.

ஸ்பெயின் தேசத்திற்கு வடக்கில் காண்டாபிரியன், பிரனீஸ் மலைகள் இருக்கின்றன. பிரனீஸ் மலை பிரான்ஸ், ஸ்பெயின் நாடுகளுக்கு இயற்கை எல்லையாக அமைந்துள்ளது. இதற்குக் கிழக்கிலுள்ள ஆல்ப்ஸ் மலை இத்தாலி தேசத்தின் வடக்கு எல்லையாக உள்ளது இதில் ஆங்காங்கு பல கணவாய்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை மௌண்ட் ஸெனிஸ், ஸிம்ப்ளன், பிரென்னர் ஆகியவை. இத்தாலியிலிருந்து மத்திய, மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குச்செல்ல இவை பெரிதும் உபயோகமாக இருக்கின்றன. ஆல்ப்ஸ் மலையை யடுத்துள்ள வட பகுதியில் காணும், பீடபூமி, மலைகள், ஏரிகள் நிறைந்தவிடமே வனப்பு மிகுந்த ஸ்விட்ஸர்லாந்து நாடு ஆகும். ஆல்ப்ஸ் மலையின் மேற்குக் கோடியினின்றும் தென் கிழக்காக இத்தாலி நாட்டின் முதுகெலும்பு போலச் செல்லும் மலை அப்பினைன் மலையாகும். ஆல்ப்ஸ் மலையின் கிழக்குக் கோடியிலிருந்து, தென் கிழக்காக, ஏட்ரியாடிக் கடலின் கிழக்குக் கரையோரமாகச் செல்வது டினரிக் ஆல்ப்ஸ் என்னும் மலை. மேலும், ஆல்ப்ஸ் மலையின் கிழக்குக் கோடியிலிருந்து, வட கிழக்காக ஒரு அரைவட்டம் போலச் செல்லும் மலையே கார்பேதியன் மலை எனப்படும். இதிலிருந்து, கருங்கடலை நோக்கிச் செல்வது பால்கன் மலை.

தெற்குப் பீடபூமிகளுள் முக்கியமானவை : ஸ்பெயினிலுள்ள மெஸிடா பீடபூமியும், ஐரோப்பாவின் தென் கிழக்கிலுள்ள பால்கன் பீடபூமியும் ஆகும்.

இனி ஐரோப்பாவில் பாயும் நதிகளைப்பற்றிச் சிறிது அறிந்து கொள்வோம். வால்கா நதியைப்பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. ஐரோப்பிய நதிகள் நீளத்தில் குறைவாக இருப்பினும், அவை பெரும்பாலும் படகுப் போக்கு வரவுக்கு அநுகூலமாக அமைந்துள்ளன.

டான், நீப்பர், நீஸ்டர் நதிகள் ரஷ்ய சமவெளியின் தென் பகுதியினின்றும், கருங்கடலில் விழுகின்றன. டான்யூப் மத்திய ஐரோப்பாவில் ஒரு முக்கிய நதியாகும். அது ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா நாடுகள் வழியே பாய்ந்து, கருங்கடலில் கலக்கின்றது. வட இத்தாலிய சமவெளிக்கு லம்பார்டி எனப் பெயர். அதை வளம்பெறச் செய்வது போ நதி. பிரான்ஸ் நாட்டில் தெற்கு நோக்கிப்பாயும் ரோன் நதி மத்யதரைக் கடலில் விழுகின்றது. ஸ்பெயின் தேசத்தின் முக்கிய நதிகளாகிய எப்ரோ கிழக்கு நோக்கியும், டேகஸ் மேற்கு நோக்கியும் பாய்கின்றன. டேகஸ் நதி கடலில் கலக்குமுன் போர்ச்சுகல் தேசத்தின் வழியே பாய்கின்றது.

பிரான்ஸ் நாட்டில் காரோன், லூவர் நதிகள் மேற்கு நோக்கியும், ஸேன் நதி வடக்கு நோக்கியும் பாய்கின்றன. இந்நாட்டின் தலைநகரான பாரிஸ் ஸேன் நதிக் கரையில் அமைந்துள்ளது.

ரைன் நதி ஸ்விட்ஸர்லாந்து, ஜெர்மனி, ஹாலந்து நாடுகள் வழியே பாய்ந்து வட கடலில் கலக்கின்றது. இது படகுப் போக்கு வரவுக்கு மிகவும் உபயோகமானது. இதன் பள்ளத்தாக்கில் பல பிரசித்தி பெற்ற நிலக்கரிக் களங்கள் இருக்கின்றன. மத்திய மலைப் பிரதேசங்களிலிருந்து வடக்கு நோக்கிப் பாயும் இதர நதிகள் எல்ப், ஓடர், விஸ்டுலா ஆகியவை.

ஆப்பிரிக்கா :— விஸ்தீரணத்தில் ஆசியாவுக்கு அடுத்தபடியான பெரிய கண்டம் ஆப்பிரிக்கா. இதன் வழியே பூமத்யரேகை, கடகரேகை, மகரரேகை இவை மூன்றும் செல்கின்றன. இக்கண்டம் வடக்கே 37° வடக்கு அக்ஷரேகையிலிருந்து, தெற்கே 35° தெற்கு அக்ஷரேகை வரை பரவியுள்ளது. இதன் வடக்கு எல்லை மத்திய தரைக் கடல், கிழக்கில் செங்கடல், இந்திய சமுத்திரம் இவையும், தெற்கிலும் மேற்கிலும் அட்லாண்டிக் சமுத்திரமும் இதர எல்லைகளாக அமைந்துள்ளன. இதர கண்டங்களைப்




படம் 11. ஆப்பிரிக்கா இயற்கை யமைப்பும், நதிகளும்.

போலல்லாமல், இது பெரும்பாலும், பீடபூமியாகவே இருக்கின்றது. ஆயினும் இப்பீடபூமி, தெற்கிலும், கிழக்கிலும் சற்று உயர்ந்தும், மேற்கிலும், வடக்கிலும் சற்று தாழ்ந்தும் காணப்படுகின்றது. இங்கு **அபிஸீனியா** பீடபூமி மிக உயரமானது. அதிலிருந்து வடக்காக, செங்கடலை ஒட்டியும், வட மேற்காக, ஸஹாரா பாலைவனத்துக்கு மத்தியிலும், மேற்கே, மேற்குக் கடற்கரையோரம் வரையிலும் மலைத் தொடர்கள் செல்கின்றன. ஸஹாரா பாலைவனத்துக்கு மத்தியில் செல்வது **டிபெஸ்டி** மலைகள் எனப்படுவது. மேற்கில் செல்லும் தொடரின் மத்திய பகுதி **காமரூன்** மலைகள் எனவும், மேற்குக் கடற்கரை யோரமாக அத் தொடர் முடியும் இடத்தில் உள்ளது **பியூடா ஜலான்** பீடபூமிகள் எனவும் பெயர் உள்ளது.

ஆப்பிரிக்காவின் வட மேற்குக் கோடியில் சில மடிப்பு மலைகள் இருக்கின்றன. அவற்றிற்குப் பொதுவாக **அட்லாஸ் மலைகள்** எனப் பெயர். அவற்றின் இடையேயுள்ள செழிப்பான சமவெளிகளுக்கு **டெல் சமவெளிகள்** எனப்பெயர். பீடபூமிப் பிரதேசங்களில் உள்ள ஏரிகளுக்கு **ஷாட்ஸ்** எனப் பெயர். அவை உப்பு நீரையுடையவை.

ஆப்பிரிக்காவின் தென் பகுதியிலுள்ள பீடபூமி படிப் படியாகக் கடலை நோக்கி இறங்குகின்றது. இப்படிகளுக்கு **கார்ருக்கள்** எனப் பெயர். இவற்றின் விளிம்புகள் மலைத் தொடர்கள் போலத் தோற்றமளிக்கின்றன. தென் கிழக்கிலுள்ளது **டிரேகன்ஸ்பர்க் மலை** என்றும், தெற்கிலுள்ளது **நியூவெல்ட் மலை** என்றும் கூறப்படுகின்றன.

ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதி பீடபூமியில் இரண்டு நீண்ட வெடிப்புகள் ஏற்பட்டு, அவற்றினிடையேயுள்ள பாறைப் பகுதி பூமியில் அழுந்தி, ஓர் நீண்ட பள்ளத்தாக்காகத் தோற்றமளிக்கின்றது. இதற்குப் **பிளவு பள்ளத்தாக்கு** எனப்பெயர். இதில் பல ஏரிகள் உள. அவற்றுள் முக்கியமானவை, **விக்டோரியா நியான்ஸா, ஆல்பர்ட் நியான்ஸா, டங்கனிகா, நியாஸா** ஆகியவை. இப்பள்ளத்தாக்குகளுக்குக் கிழக்கில் சில பழைய எரிமலைச் சிகரங்கள் இருக்கின்றன

இவற்றுள் முக்கியமானவை **கிலிமாஞ்சரோ, கெனியா** ஆகியவை.

ஆப்பிரிக்காவில் நான்கு பெரிய நதிகளும், நான்கு சிறு நதிகளும் இருக்கின்றன. இந் நான்கு பெரிய நதிகளும், பூமத்ய ரேகைக்குச் சமீபத்திலேயே உற்பத்தி யாகின்றன. அங்கு ஆண்டு முழுவதும் கனத்த மழை பெய்வதால், இந் நதிகள் எப்பொழுதும் நீர் நிரம்பியே இருக்கின்றன **நைல்நதி** விக்டோரியா ஏரியினின்றும் கிளம்பி, பல உபநதிகளுடன் சேர்ந்து சூடான், எகிப்து, நாடுகள் வழியே பாய்ந்து மத்ய தரைக்கடலில் கலக்கின்றது. **நைஜர் நதி**, பியூடா ஜலான் பீடபூமிகளினின்றும் உற்பத்தியாகி, அரை வட்டமாகப் பாய்ந்து, **கினி வளைகுடா**வில் கலக்கின்றது. **காங்கோ நதி** டங்கனைகா ஏரிக்குச் சமீபத்தில் உற்பத்தியாகி, பூமத்ய ரேகையை இரண்டு முறை கடந்து, அரை வட்டமாகப் பாய்ந்து, அட்லாண்டிக் சமுத்திரத்தில் கலக்கின்றது. **ஸாம்பஸி நதியும்**, காங்கோ நதியின் உற்பத்தி ஸ்தானத்துக்குச் சமீபத்திலேயே உற்பத்தியாகி, தெற்காகப் பாய்ந்து, கிழக்காகத் திரும்பி, **மொஸாம்பிக் கால்வாயில்** கலக்கின்றது. இந் நதியின் போக்கில்தான், மிகவும் பிரசித்தி பெற்ற **விக்டோரியா நீர்வீழ்ச்சி** இருக்கின்றது. ஆப்பிரிக்கா நதிகள் கடலுக்குச் சமீபத்தில் பல படிகளாக இறங்கி, கடலில் கலப்பதால் அவை முழுவதும் படகுப் போக்கு வரவுக்கு ஏற்றவையல்ல. மத்திய பாகங்களில் சில விடங்களில் மட்டும் படகுகள் செல்லக் கூடும்.

ஆப்பிரிக்காவிலுள்ள நான்கு சிறு நதிகளில் **செனிகல், காம்பியா** ஆகியவை மேற்கு ஆப்பிரிக்காவிலும், **ஆரஞ்சு நதி** தென் ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையை நோக்கியும், **லிம்போபோ நதி** ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையை நோக்கியும் பாய்கின்றன.

வட ஆப்பிரிக்காவில் மிகப் பெரிய பாலைவனம் ஒன்று உள்ளது. இதுவே **ஸஹாரா பாலைவனம்**. இது பீடபூமிகளும், மணற் குன்றுகளும், மணல் வெளிகளும் உடை

யது. தென் ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையோரமாக கலஹாரி பாலைவனம் இருக்கின்றது.

வட அமெரிக்கா :—உலகில் மூன்ருவது பெரிய கண்டம் வட அமெரிக்கா ஆகும். இதன் தென் பகுதியில் கடக ரேகையும், வட பகுதியில் ஆர்க்டிக் வட்டக் கோடும் செல்கின்றன. இதன் வட கோடியின் ஓர் பகுதி மிகக் குளிர் பிரதேசத்தில் உள்ளது. இயற்கை யமைப்பை யொட்டி, வட அமெரிக்காவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை மேற்கு மலைகள், மத்திய சமவெளி, கிழக்குப் பீடபூமிகள் ஆகியவை.

மேற்கு மலைகள்:--இவை வட கோடியிலுள்ள அலாஸ்கா மாகாணத்திலிருந்து, மத்திய அமெரிக்கா வரை பரவி, அங்கிருந்து தொடர்ந்து, தென் அமெரிக்காவின் தென் கோடிவரையிலும் செல்கின்றன. வட அமெரிக்காவில் இவற்றிற்குப் பொதுவாக, இராக்கி மலைத் தொடர்கள் எனப் பெயர். இவற்றின் சில பகுதிகளுக்கு ஆங்காங்கு வேறு பெயர்களும் உண்டு. அவைகளில் முக்கியமானவை, அலாஸ்கா மலை, காஸ்கேட் மலை, சிராவிவாடா, சிராமாட்ரி ஆகியவை. இடையே பல பீடபூமிகளும் உண்டு. அவற்றுள் முக்கியமானவை யூகான் பீடபூமி, பிரிட்டிஷ் கொலம்பியா பீடபூமி, கிரேட்பேஸின் பீடபூமி, கொலராடோ பீடபூமி மெக்ஸிகோ பீடபூமி ஆகியவை இம்மலைத் தொடர்களும், பீடபூமிகளும் சேர்ந்து. அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் வெகு அகலமாக இருக்கின்றன. இப் பீடபூமிகளில் பல வகை உலோகப் பொருள்கள் கிடைக்கின்றன.

மத்திய சமவெளி :— இது ஆர்க்டிக் கரையிலிருந்து தெற்கே மெக்ஸிகோ வளைகுடா வரை வியாபித்துள்ளது. இதன் மத்திய பாகத்தில் ஐந்து பெரிய ஏரிகள் இருக்கின்றன. அவை முறையே சுபீரியர், மிச்சிகன், ஹியூரான், ஈரி, ஒண்டேரியோ ஆகியவை. இந்த ஏரிகள் செயிண்ட் லாரென்ஸ் நதியினுல் அட்லாண்டிக் சமுத்திரத்துடன் சேர்க்கப்படுவதால், இவையும், இந் நதியும் படகுப் போக்கு வரவுக்கு ஏற்றதாக இருக்கின்றன. இச் சமவெளியின்



MADRAS

படம் 12. வட அமெரிக்கா இயற்கை யமைப்பும், நதிகளும்.

தென் பகுதியில் **மிஸௌரி, மிஸிஸிபி** நதியும், அதன் உப நதிகளும் பாய்கின்றன. இந் நதியே உலகில் மிக நீள மான நதி. இந்நதியும், அதன் உபநதிகளும் சுமார் 10,000 மைல் நீளத்துக்கு படகுப் போக்குவரவுக்கு அநுகூலமாக அமைந்துள்ளன.

**கிழக்குப் பீடபூமிகள்:—** இவை இரண்டாக உள்ளன. இவற்றைப் பிரிப்பது ஸெயிண்ட் லாரென்ஸ் நதியே. வடக்கிலுள்ளது **லாப்ரடார் பீடபூமி**; தெற்கிலுள்ளது **அப்பலேச்சியன் பீடபூமி.** இதன் ஓர் பகுதி **அலிகனி மலைத் தொடர்** எனப்படும். அப்பலேச்சியன் பீடபூமியில் பல ஆறுகள் உற்பத்தியாகி, சமவெளியில் பிரவேசிக்கையில் நீர் வீழ்ச்சிகளை ஏற்படுத்தி யுள்ளன. இவை மின்சார உற்பத்திக்குப் பெரிதும் உதவுவதால், இவற்றை அடுத்த பிரதேசம் ஆக்கத் தொழில்களில் ஏற்றம் பெற்றுள்ளது. அப்பலேச்சியன் பீடபூமிக்கும், அட்லாண்டிக் சமுத்திரத்திற்கும் இடையே மற்றொரு சிறு சமவெளி இருக்கிறது. இது ஜன நெருக்கமுள்ளது.

**தென் அமெரிக்கா :—**இக் கண்டமும், வட அமெரிக்காவைப் போன்று, முக்கோண வடிவமுள்ளது. இது 5° வடக்கு அக்ஷ ரேகையிலிருந்து 55° தெற்கு அக்ஷ ரேகை வரை வியாபித்திருக்கின்றது. பூமத்ய ரேகைக்குத் தெற்கே யுள்ள கண்டங்களுள் வெகு தூரம் தெற்கே பரவி யுள்ள கண்டம் இதுவே. இக் கண்டத்தின் வழியே பூமத்ய ரேகை, மகரரேகை இவை செல்கின்றன.

இயற்கையமைப்புப்படி, இக் கண்டத்தையும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை **மேற்கு மலைத் தொடர், மத்திய சமவெளி, கிழக்குப் பீடபூமிகள்** ஆகியவை.

**மேற்கு மலைத்தொடருக்கு,** ஆண்டிஸ் மலை எனப் பெயர். இது இராக்கி மலையின் தொடர்ச்சி என்று முன்பே கூறப் பட்டதல்லவா ? இது வட பகுதியில் மூன்று பிரிவுகளாவும், பிறகு இரண்டு பிரிவுகளாவும் வியாபித்து, தெற்கில் ஒரே தொடராக இருக்கின்றது. மத்திய பகுதியில் பீடபூமிகளும்




படம் 13. தென் அமெரிக்கா இயற்கை அமைப்பும், நதிகளும்.

இருக்கின்றன. இம் மலையில் பல எரிமலைச் சிகரங்கள் இருக்கின்றன. இம் மலைத் தொடரின் தென் பகுதியில் உஸ்பலாட்டா என்னும் கணவாய் உண்டு. இதன் வழி யாகவே இக் கண்டத்தின் கிழக்குக் கடற்கரையிலிருந்து மேற்குக் கடற்கரைக்குச் செல்லும் இருப்புப்பாதை போகின்றது.

**மத்திய சமவெளி:**—இது மூன்றுப குதிகளாக உள்ளது. இவ்வாறு இதைப் பிரிப்பது, கிழக்குப் பகுதியிலுள்ள இரண்டு பீடபூமிகளாகும். வடக்குச் சமவெளி வழியே ஓரினுகோ நதி பாய்ந்து, **கரிபியன்** கடலில் விழுகின்றது. மத்திய சமவெளியின் மத்திய பாகத்தின் வழியே அமெ ஸான் நதி பாய்ந்து, அட்லாண்டிக் சமுத்திரத்தில் கலக்கின்றது. இதுவே உலகிலுள்ள நதிகளுள் மிக அகலமானது. சமவெளியின் தென் பகுதியில் **பரானு-பரா**குவே நதிகள் பாய்கின்றன. இவை இரண்டும் கூடிப் பாய்ந்து, பிறகு கடலில் கலக்கின்றன. கூட்டு நதிக்கு **பிளேட் நதி** எனப் பெயர். கிழக்குப் பீடபூமிகளை இரண்டா கப் பிரிப்பது அமெஸான் நதியே யாகும். வட பகுதியி லுள்ளது **கயானு பீடபூமி**; தெற்கிலுள்ளது **பிரேஸில் பீடபூமி**. இவற்றில் புல் அடர்ந்திருப்பதால், மாடு மேய்த்தல் முக்கியத் தொழிலாகும். மேலும், இங்கு பலவகை உலோ கங்களும் கிடைக்கின்றன.

**ஆஸ்திரேலியா** :—கண்டங்களுள் மிகச் சிறியது ஆஸ் திரேலியா. இது இதர கண்டங்களுக்குச் சற்று தூரத்தி லேயே இருப்பதால், பதினெட்டாம் நூற்றுண்டில்தான் **காப்டன்** குக் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. இதன் குறுக்கே மகரரேகை செல்கின்றது. இக் கண்டம் முழு வதும் பூமத்ய ரேகைக்குத் தெற்கிலேயே அமைந்துள்ளது.

இக் கண்டத்தையும், இயற்கையமைப்புப்படி மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை கிழக்கு **மலைத் தொடர், மத்திய சமவெளி, மேற்குப் பீடபூமி** ஆகியவை.




படம் 14. ஆஸ்திரேலியா இயற்கை அமைப்பும் நதிகளும்

**கிழக்கு மலைத் தொடர்**:—இது வடக்கே **யார்க் முனை** யிலிருந்து, தெற்கே **பாஸ் ஜலசந்தி** வரை பரவியுள்ளது. இதற்குப் பொதுவாக, **கிரேட் டிவைடிங் ரேஞ்ச்** எனப் பெயர். ஆங்காங்கு இதற்கு வெவ்வேறு பெயர்களும் உண்டு. இவை **நியூ இங்கிலாந்து ரேஞ்ச், லிவர்பூல் ரேஞ்ச், ஆஸ்தி ரேலியன் ஆல்ப்ஸ்** ஆகியவை.

**மத்திய சமவெளி**:--இது இரண்டு குன்றுவரிசைகளால், மூன்று பிரிவுகளாக்ப் பிரிக்கப்பட்டுள்ளது. வட பகுதியில் பல நதிகள் உற்பத்தியாகி, **கார்பெண்டேரியா வளைகுடா** வில் கலக்கின்றன. மத்திய பகுதியில் **ஏயர்** என்ற ஏரி உள்ளது. இதில் பல நதிகள் வந்து கலக்கின்றன. தென் பகுதியில் **முர்ரே, டார்லிங், முர்ரம் பிட்ஜி** நதிகள் ஒன்று சேர்ந்து பாய்கின்றன. இக்கூட்டு நதியே ஆஸ்திரேலியா வில் முக்கிய நதி. இதன் முகத்துவாரத்தினருகில் மணல் மேடுகள் இருப்பதால், இது படகுப் போக்கு வரவுக்கு அவ் வளவாக ஏற்றதல்ல.

**மேற்குப் பீடபூமி**:— இது பழம் பாறைகளாலானது. இது ஒர் பெரிய பாலைவனமாகும். ஆனால் இதன் தென் மேற்குப் பகுதியில் தங்கம் அகப்படுவதால், பலர் அதை வெட்டியெடுக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

## பயிற்சி

1. ஆசியாவின் இயற்கை யமைப்புப் பிரிவுகளைக் கூறுக.
2. சைபீரிய நதிகள் ஏன் போக்கு வரவுக்கு அனுகூலமாக இல்லை ?
3. ஐரோப்பாவில் படகுப் போக்குவரவுக்கு மிகவும் ஏற்ற இரண்டு நதிகள் எவை ?
4. ஆப்பிரிக்காவின் நதிகள் பெரும்பாலும் படகுப் போக்கு வரவுக்கு ஏற்றவை அல்ல. ஏன் ?
5. வட அமெரிக்கா, தென் அமெரிக்கா இவற்றிற்கிடையே, இயற்கை யமைப்பில் காணும் ஒற்றுமைகள் எவை?
6. ஆஸ்திரேலியப் பாலைவனம் எவ்வகையில் முக்கிய மானது ?

7. உலகப் படமொன்றில் முக்கிய மலைகள், நதிகள் இவற்றைக் குறிப்பிடு.

8. கீழ்க்கண்ட வாக்கியங்கள் சரியா, தப்பா ?

i. ஆசியாக் கண்டத்தின் வடக்கு எல்லை ஆர்க்டிக் சமுத்திரம்.

ii. வால்கா நதி கருங்கடலில் கலக்கின்றது.

iii. நைல் நதி உலகிலேயே மிக நீளமான நதி.

iv. ஒரினுகோ நதி கரிபியன் கடலில் கலக்கின்றது.

v. அமெஸான் நதிக்கு வட கிழக்கிலுள்ளது கயானு பீடபூமி.

# 4. பழைய உலகமும், புதிய உலகமும்

ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்காக் கண்டங்கள் பொதுவாகப் **பழைய உலகம்** என்றும், அமெரிக்காக் கண்டங்கள் **புதிய உலகம்** என்றும் அழைக்கப்படுகின்றன. பழைய கண்டங்களைப் பற்றி ஐரோப்பியர்கள் வெகு காலமாக அறிந்திருந்தனர். ஆனுல், கொலம்பஸ், அமெரிகோ, வெஸ்புகி ஆகியோரின் பிரயாணங்களுக்குப் பிறகு தான் அவர்கள் அமெரிக்காக் கண்டங்களைப் பற்றி அறிந்தனர். அதனுல் தான் இவ்வாறு பெயர்கள் அவற்றிற்கு ஏற்பட்டன.

அமெரிக்கா கண்டங்கள் கண்டு பிடிக்கப்பட்ட பின், அங்கு பொன், வெள்ளி முதலிய உலோக வகைகள் ஏராளமாக இருப்பதை யறிந்த ஸ்பெயின், போர்ச்சுகல் நாட்டவர்கள் அங்கு சென்று, குடியேறி, இவற்றைச் சேகரிக்க ஆரம்பித்தனர். அவர்கள் மெக்ஸிகோ, மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்காவில் பெரும் பகுதிகள் இவற்றில் குடியேறி, அப் பகுதிகளைத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வந்ததுமன்றி, அங்கு ஏற்கனவேயே வசித்து வந்த பூர்வீக மக்களைத் துன்புறுத்தி, அவர்களது நாகரிகத்தையும் குலைத்தனர்.

பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் பிரஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் கூட வட அமெரிக்காவில் கிழக்குக் கரையோரமாகக் குடியேறலாயினர். ஆங்கிலேயர்கள் இங்கு வந்ததற்கு முக்கியக் காரணம் தங்கள் நாட்டில் அவர்களுக்கு இறைவழிபாட்டில் சுதந்திரம் இல்லாததே யாகும். இவ்வாறு குடியேறிய ஆங்கிலேயர்களை, பிரஞ்சுக்காரர்களும், அமெரிக்காவின் பூர்வீகக் குடிகளாகிய செவ்விந்தியர்களும், அடிக்கடி தாக்கினார்கள். இதனால் அவர்களுக்குத் தாய்நாடாகிய இங்கிலாந்தின் உதவி தேவையாக இருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஏற்பட்ட போரில் பிரெஞ்சுக்காரர்கள் தோல்வியுற்றனர். வட அமெரிக்காவில் அவர்கள் குடியேறி இருந்த பகுதிகள் ஆங்கிலேயர் வசம் வந்தன. வட அமெரிக்காவில் குடியேறி இருந்த ஆங்கிலேயர்கள் அரசியல், வாணிபம் முதலிய துறைகளில் தாய் நாட்டால் சரியாக நடத்தப் படாமையால், அவர்கள் சுதந்திரம் பெற விரும்பினார்கள். பிரெஞ்சுக் குடியேறிகளால் ஏற்படக்கூடிய பயம் நீங்கியவுடன், அவர்கள் தம் சுதந்திரத்திற்காகத் தாய் நாட்டுடன் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் போர் தொடுத்தனர். இறுதியாக அவர்கள் வெற்றி பெற்று, சுதந்திர மடைந்து, அமெரிக்கா ஐக்கிய நாடுகளை ஸ்தாபித்தனர். காலப் போக்கில் அந்நாடு பல துறைகளிலும் ஏற்றம் பெற்று, இப்பொழுது உலகிலேயே மிக உயர்ந்த பதவியை வகிக்கின்றது.

தென் அமெரிக்காவில் போர்ச்சுக்கீசியரும், ஸ்பெயின் தேசத்தவர்களும் கொடுங்கோலாட்சி புரிந்தனர் எனக் கூறப் பட்டதல்லவா ? அமெரிக்க ஐக்கியா நாடுகள் சுதந்திரம் பெற்றவுடன், தென் அமெரிக்க நாடுகளும் தமது சுதந்திரப் போரைத் துவக்கி, இறுதியில் வெற்றி பெற்றன. தற்போது கயானா என்ற சிறு தேசம் தவிர, இதர தென் அமெரிக்க நாடுகள் சுதந்திர நாடுகளாகவே திகழ்கின்றன.

பழைய உலகக் கண்டங்கள், புதிய உலகக் கண்டங்கள் இவற்றிற் கிடையே வாணிபம், அரசியல் முதலிய

எல்லாத் துறைகளிலும் நெருங்கிய தொடர்பு இருந்து வருகின்றது.

### பயிற்சி

1. பழைய உலகம், புதிய உலகம் இவை எந்தெந்தக் கண்டங்களைக் கொண்டவை ?
2. இவற்றிற்கு ஏன் இப் பெயர்கள் வந்தன ?
3. தென் அமெரிக்காவில் ஸ்பெயின், போர்ச்சுகல் நாட்டினரும், வட அமெரிக்காவில் ஆங்கிலேயர்களும் குடியேறியதற்கு ஆன காரணம் எவ்வகையில் வேறு பட்டது ?
4. அமெரிக்கா ஐக்கிய நாடுகள் எவ்வாறு ஸ்தாபிக்கப் பெற்றன ?
5. தென் அமெரிக்க நாடுகள் எவ்வாறு சுதந்திரம் பெற்றன ?

# 5. உலகின் இயற்கைப் பிரதேசங்களும், மக்களின் வாழ்க்கையும்

முன்னொரு பாடத்தில், ஒவ்வொரு கண்டத்தையும் அதன் இயற்கை அமைப்புப்படி, பல பிரிவுகளாகப் பிரித்தோம் அல்லவா ? அவ்வாறே, ஒரே வகையான இயற்கையமைப்பு, சீதோஷ்ணம், மழை, தாவரம், மக்கள் வாழ்க்கை இவற்றைக் கொண்ட நிலப் பகுதியை ஒரு **இயற்கைப் பிரதேசம்** எனக் கூறுவதுண்டு. இவ்வாறு உலகத்தைக் கீழ்க் கண்ட இயற்கைப் பிரதேசங்களாகப் பிரிக்கலாம்:— **பருவக் காற்றுப் பிரதேசம்; பூமத்திய ரேகைக் காடுகள்; உஷ்ணப் புல் வெளிகள்; பாலைவனங்கள்; மத்யதரைக்கடல் சீதோஷ்ண நாடுகள்; மித உஷ்ணப் புல் வெளிகள்; அகன்ற இலைக் காடுகள்; ஊசியிலைக் காடுகள்; துந்திரப் பிரதேசம்.** இனி இவை ஒவ்வொன்றையும் பற்றிப் படிப்போம்.




படம் 15. உலகம்; இயற்கைப் பிரதேசங்கள்

**பருவக் காற்றுப் பிரதேசம்** :—மே, ஜூன், ஜூலை ஆகிய கோடை மாதங்களில் சூரியனது நேர் கிரணங்கள் கடக ரேகையை யடுத்து விழுகின்றன. ஆகவே அங்கு உஷ்ணம் அதிகமாகக் காண்கிறது. இதனால் அங்கு காற்று இலேசாகி மேலே செல்வதால் அதன் அமுக்கம் குறைவாக இருக்கிறதெனக் கூறுவோம். அப்பொழுது மகர ரேகையை யடுத்த பகுதிகளில் சூரிய கிரணங்கள் சாய்வாக விழுவதால், அங்கு உஷ்ணம் குறைவாகவே தோன்றும். ஆகவே அங்கு காற்றின் அமுக்கம் அதிகமாக இருக்கிறதெனக் கூறுகிறோம். காற்று எப்பொழுதும் அமுக்கம் அதிகமாக உள்ள இடத்திலிருந்து, குறைவாக உள்ள இடத்திற்கு வீசுவது வழக்கம். கோடை காலத்தில் ஆசியாவின் மீது அவ்வாறு வீசும் காற்று, பரந்த இந்திய சமுத்திரத்தின் மீது வீசுகையில் ஏராளமான ஈரத்தைச் சுமந்து வந்து, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் அதிகமான மழையைத் தருகின்றது. அவ்வாறே, ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரையின் வட பகுதி, மத்திய அமெரிக்கா முதலிய இடங்களிலும் இக் காலத்தில் மழை அதிகம் உண்டு. குளிர் காலத்தில் மகர ரேகைக்குச் சமீபத்தில் காற்றின் அமுக்கம் குறைவாகவும், கடக ரேகையை யடுத்து, காற்றின் அமுக்கம் அதிகமாகவும் காணப்படுகின்றது. ஆகவே அப்பொழுதும் வீசும் காற்றினால், மேற்கூறிய பகுதிகளில் சிறிது மழை உண்டு. இவ்வாறு, கோடையிலும், குளிர் காலத்திலும் இக் காற்றுகள் ஆண்டுதோறும் தவராது வீசி மழையைக் கொடுப்பதால், அவற்றைப் பொதுவாக, பருவக் காற்றுகள் என அழைப்பது வழக்கம். இவ்வாறு மழை பெறும் பிரதேசங்களைப் **பருவக் காற்றுப் பிரதேசங்கள்** என அழைப்பது வழக்கம்.

உலகின் பருவக்காற்று நாடுகளாவன; ஆசியாவில் ஜப்பான், சீனு, இந்தோசீனு; தாய்லாந்து, பர்மா, இந்தியா, பாக்கிஸ்தான் ஆகியவை; வடக்கு ஆஸ்திரேலியா: ஆப்பிரிக்வில், அபிஸீனியா, சோமாலிலாந்து; மத்திய அமெரிக்கா ஆகியவை.

இந் நாடுகளில் பெரும்பாலும், அதிக உஷ்ணம், அல்லது மித உஷ்ணமும், கோடையில் கனத்த மழையும் உண்டு. வெப்ப நிலையைப் பொருத்து, ஆங்காங்கு தாவரங்களும் மாறுபடுகின்றன. பர்மா, இமயமலைச் சாரல், மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரல் இவ்விடங்களில் மழையும், வெப்பமும் அதிகமானதால் காடுகள் விசேஷமாக இருக்கின்றன. வட ஆஸ்திரேலியாவிலும், மத்திய அமெரிக்காவின் சில பகுதிகளிலும் கூட, இத்தகைய காடுகள் உண்டு. தேக்கு, மூங்கில், ரப்பர், இவையே இங்கு அதிகமாகக் காணும் மர வகைகள். தென் இந்தியாவில் சந்தன மரங்களும் விசேஷமானவை. பல விடங்களில் காடுகளை அழித்து, தேயிலை, சின்கோனு முதலியவற்றைப் பயிரிடுகின்றனர். சீனு, ஜப்பான் நாடுகளில் மல்பரி மரங்களைப் பயிராக்கி, அவற்றின் இலைகளை உட்கொள்ளும் பட்டுப் பூச்சிகளை வளர்க்கின்றனர். இதுவே அங்கு பட்டு நெசவுத் தொழில் நடைபெறக் காரணமாக இருக்கின்றது. நதிச் சமவெளிகளிலும், இதர விடங்களில் நீர்ப்பாசன வசதியைக் கொண்டும், நெல், கரும்பு, புகையிலை இவற்றைப் பயிரிடுகின்றனர். நீர்வசதி குறைவாயுள்ள விடங்களில் தினைவகை, சோளம், எண்ணெய் வித்துக்கள், கோதுமை, பருத்தி இவை பயிராகின்றன. இந்தியா, பாக்கிஸ்தான் நாடுகளில் சணல் ஏராளமாகப் பயிரிடப்படுகின்றது.

பருவக்காற்று நாடுகள் அதிக ஜன நெருக்கமுள்ள நாடுகள். சீனுவில் உலக மக்களின் நான்கில் ஒரு பகுதியினரும், இந்தியா, பாக்கிஸ்தான் இவை இரண்டிலும் சேர்ந்து, உலக மக்களில் சுமார் ஐந்தில் ஒரு பகுதியினரும் வசிக்கின்றனர். பொதுவாக, பருவக்காற்று நாடுகளில், உலக மக்களில் பாதிப் பெயர்களுக்கு மேல் வசிக்கின்றனர் என்று சொல்லுவது மிகையாகாது. இங்குள்ளவர்களில் மிகப் பெரும்பாலோரின் முக்கிய உணவுப் பொருள் நெல். சிலர் கோதுமை, தினைவகைகள் இவற்றையும் உணவாகக் கொள்கின்றனர். இந் நாடுகளில் வசிக்கும் மக்களின்

முக்கியத் தொழில் விவசாயமே. தவிர, பல்வேறு கைத்தொழில்களும் நடைபெறுகின்றன.

சீனாவை, அதன் மூன்று நதிகளையும் ஒட்டி, மூன்று உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஹோயாங்ஹோ நதியை யடுத்த பகுதிகளில் கோதுமை, சோயாபீன்ஸ், தினைவகை இவையும், யாங்ட்ஸிகியாங் நதியை யடுத்து, கோதுமை, எண்ணெய் வித்துக்கள், தேயிலை, மல்பரி முதலியனவும், சிக்கியாங் நதியை யடுத்து, நெல், பருத்தி, கரும்பு, தேயிலை, மல்பரி ஆகியனவும் பயிரிடப்படுகின்றன. பருத்தி, பட்டு நெசவுகள் குடிசைத் தொழிலாக நடைபெறுகின்றன. தற்போது இரும்பு முதலிய பெரிய தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டுள்ளன. இந் நாட்டின் வட பகுதியிலுள்ள பீகிங் இதன் தலைநகரம். இங்கு மக்கள் அதிகமாக இருப்பதாலும், சமவெளிகள் குறைவாக இருப்பதாலும், எல்லா நிலங்களிலும், மலைச் சரிவுகளிலும் கூட, முன்னேற்ற முறைகளில் பயிர் செய்கின்றனர். நதிகளே போக்கு வரவுக்கு அதிகமாக உதவுகின்றன. இடவசதிக் குறைவினால், சிலர் படகுகளிலே வீடுகளை அமைத்துக் கொண்டு, வசிக்கின்றனர்.

ஜப்பான் தேசம் பல தீவுகளைக் கொண்டது. இவற்றில் மலைகள் அதிகம். மலைச் சரிவுகளில் பைன், கற்பூரம், மல்பரி, மூங்கில் முதலிய மரங்கள் காணகின்றன. தேயிலையும் அதிகமாகப் பயிராகின்றது. சமவெளிகளில் நெல், கரும்பு, கோதுமை, பார்லி முதலியவை பயிராகின்றன. மலைச் சரிவுகளில் ஓடிவரும் நதிகளைக் கொண்டு மின் சக்தி உற்பத்தி செய்தும், இங்கு கிடைக்கும் இரும்பு, நிலக்கரி இவற்றைக் கொண்டும், பல தொழிற்சாலைகளை அமைத்திருக்கின்றனர். இரும்பு, எஃகு சாமான்கள், இயந்திரங்கள், விளையாட்டுக் கருவிகள், பீங்கான், கண்ணாடிச் சாமான்கள், தீப்பெட்டிகள், காகிதம், பருத்தி, பட்டு, கம்பள ஆடைகள் இவற்றை உற்பத்தி செய்து, இவற்றில் பெரும் பகுதியை வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர்.

இந் நாட்டின் தலைநகர் டோக்கியோ; முக்கியத் துறைமுகம் **யோகஹாமா.**

இந்தியா, பாக்கிஸ்தான் நாடுகளில் வசிக்கும் மக்களில் சுமார் 70 சத விகிதத்தினர் பயிர் செய்பவர்களே. இங்கு பயிராகும் முக்கியப் பொருள்கள், நெல், கோதுமை, பார்லி, தினைவகை, எண்ணெய் வித்துக்கள், பருத்தி, புகையிலை, கரும்பு, தேயிலை, காப்பி, சணல், வாசனைப் பொருள்கள் ஆகியவை. இமய மலைச்சாரலிலுள்ள காடுகளில் சால், எபொனி. மஹாகனி முதலிய மரவகைகளும், மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலில் தேக்கு, ரப்பர், சந்தனமரம், மூங்கில் ஆகியவையும் காண்கின்றன. இரும்பு, நிலக்கரி, மாங்கனீசு, அபிரகம் முதலிய தாதுப் பொருள்களும் இங்கு ஏராளமாகக் காண்கின்றன. ஆகையால் சில ஆண்டுகளாக இங்கு பல பெரிய தொழிற்சாலைகளும் ஸ்தாபிக்கப் பட்டு வருகின்றன.

**பூமத்திய ரேகைக் காடுகள் :**—பூமத்ய ரேகைக்கு வடக்கிலும், தெற்கிலும், சுமார் ஐந்து டிகிரி தூரம் வரை ஆண்டு முழுவதும் கனத்த மழை பொழியும். அங்கு எப்பொழுதும் வெப்பமும் வெகு அதிகமாக இருப்பதால் அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன. இக் காடுகளில் மரங்கள் வெகு நெருக்கமாக வளர்கின்றன. மரங்களுக்கு இடையே கீழே புதர்கள் உண்டு. மேலே கொடிகள் படர்ந்திருக்கும். ஆகவே இங்கு எப்பொழுதும் இருட்டாகவே தோன்றும். பெரிய பாம்புகள், பட்சி வகைகள், குரங்குகள், விஷப் பூச்சிகள் இவை அதிகமாகக் காண்கின்றன. நதிகளில் முதலைகள், நீர் யானைகள் இவை ஏராளமாகக் காண்கின்றன.

உலகில் இத்தகைய காடுகள் உள்ள விடங்கள் தென் அமெரிக்காவில் **அமேஸான் நதி தீரம்,** ஆப்பிரிக்காவில் **காங்கோ நதி தீரம்,** **கினி வளைகுடாவை யடுத்த பகுதிகள்,** ஆசியாவை அடுத்த **கிழக்கிந்தியத் தீவுகள்** ஆகியவை.

இக்காடுகளில் பொதுவாக, உறுதியான மர வகைகளாகிய கருங்காலி, மகாகனி ஆகியவையும், பெரிதும்

உபயோகமுள்ள ரப்பர், எண்ணெய்ப் பனை ஆகியவையும் காண்கின்றன. காட்டுப் பொருள்களைச் சேகரிப்பதே அங்கு வசிக்கும் மக்களின் முக்கியத் தொழிலாகும். அமேஸான் காடுகளில் ரப்பர் மரங்கள் ஏராளமாக இருக்கின்றன. முற் காலத்தில் இங்கு மட்டுமே அதிகமாக ரப்பர் சேகரிக்கப்



படம் 16. காங்கோ நாட்டு மக்களின் வீடுகள்

பட்டு, பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு வந்தது. ஆனால் வேறு பல வகை மரங்களுக்கிடையே ரப்பர் மரங்கள் காணப்படுவதால், அதிகப் பிரயாசையுடன் ரப்பரைச் சேகரிக்க வேண்டி வந்தது. ஆனால் இப்பொழுது இந்தியாவின் மேற்குக் கடற்கரை, இலங்கை, கிழக்கிந்தியத்

தீவுகள், மலேயா முதலிய விடங்களில் ரப்பர் தோட்டங்கள் பயிரிடப்படுவதால், அமேஸான் காடுகளில் இத்தொழில் இப்பொழுது குறைந்த அளவிலேயே நடைபெறுகின்றது. அமேஸான் காடுகளில் மேலும் சிங்கோனு, கோகோ முதலிய மரங்களும் உண்டு. சிங்கோனு மரப்பட்டை யினின்றும் கொயினு (Quinine) என்னும் ஜுர மருந்து தயாரிக்கப்படுகின்றது. சில விடங்களில் காடுகளை அழித்து, சோளம், வாழை, கரும்பு, நெல் முதலியவற்றைப் பயிரிடு கின்றனர்.

ஆப்பிரிக்காவிலுள்ள பூமத்யரேகைக் காடுகளிலும் ரப்பர், கொக்கோ மரங்கள் காண்கின்றன. மேலும் இங்கு தென்னை, எண்ணெய்ப் பனை ஆகிய மரங்களும் உண்டு. எண்ணெய்ப் பனை மரத்தில் காணும் கொத்துக் கொத்தான காய்களைக்கொண்டு, ஓர் வகை எண்ணெய் தயாரித்து, அதை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புகின்றனர். சோப், மெழுகுவர்த்தி முதலியவை செய்ய இந்த எண்ணெய் பயன்படுகின்றது. இங்கும் சில விடங்களில் காடுகளை யழிதது, நெல், சோளம், வாழை முதலியவற்றையும் பயிரிடு கின்றனர். கிழக்கிந்தியத் தீவுகளிலும் இவ்வாறே காடுகளை யழித்து விவசாயம் நடத்துகின்றனர். நெல், கரும்பு, ரப்பர், வாழை, தேயிலை, காப்பி ஆகியவை இங்கு முக்கிய விளை பொருள்கள். ஜாவாத் தீவில் கரும்பு ஏராளமாகப் பயிரிடப் பட்டு, சர்க்கரை செய்யப்பட்டு, அதிகமாக ஏற்றுமதியா கின்றது.

பூமத்யரேகைக் காடுகளில் வசிக்கும் மக்கள் பொது வாக, பிற்போக்கானவர்கள். வேட்டையாடுதல், மீன் பிடித்தல், காட்டுப் பொருள்களைச் சேகரித்தல் இவையே இவர்களது முக்கியத் தொழில்களாகும். இறைச்சி, மீன்கள், பழங்கள், கிழங்குகள் இவையே இவர்களது முக்கிய உணவுப் பொருள்கள் ஆகும். இவர்கள் சிறு குடிசைகள் அமைத்துக்கொண்டு வசிக்கின்றனர். காங்கோக் காடுகளில் பிக்மிக்கள் என்ற குள்ள வகுப்பினர் வசிக்கின்றனர்.

**உஷ்ணப் புல்வெளிகள் :—** இப்புல்வெளிகள் பூமத்திய ரேகைக் காடுகளுக்கு இருபுறங்களிலும் வியாபித்திருக்கின்றன. இப்பிரதேசங்களில் கோடையில் சிறிது மழையும், குளிர் காலத்தில் வரட்சியுமே காண்கின்றன. கோடை மழைக்குப்பின், இங்கு புல் உயரமாக வளரும். ஆங்காங்கு சில மரங்களும் காண்கின்றன. இப் புல்வெளிகளைப் பொதுவாக, **சாவன்னஸ்** எனக் கூறுவது வழக்கம். தென் அமெரிக்காவில் மட்டும் கயானப் பீடபூமியிலுள்ள உஷ்ணப் புல்வெளிகளை **லானஸ்** என்றும், பிரேஸில் பீடபூமிப் புல் வெளிகளைக் **காம்போஸ்** என்று சிறப்பாகக் கூறுவது வழக்கம்.

இப் புல்வெளிகள் காணுமிடங்கள், தென் அமெரிக்காவில் மேற்கூறிய **கயானு, பிரேஸில்** பீடபூமிப் பகுதிகள், ஆப்பிரிக்காவில் **சூடான்**, காங்கோ நதி தீரத்திற்குக் கிழக்கு, தெற்கிலுள்ள பகுதிகள், வட ஆஸ்திரேலியாவின் காடுகளுக்குத் தென் பகுதிகள், பருவக்காற்று நாடுகளில் மழை குறைவாயுள்ள பகுதிகள் ஆகியவை.

இப்பிரதேசங்களில் வாழும் மக்களின் முக்கியத் தொழில் மாடு மேய்த்தல் ஆகும். மழை சற்று அதிகமாக உள்ள இடங்களில் நெல், பருத்தி, மக்காச்சோளம், தினை வகை, கரும்பு முதலியவையும், மலைச்சரிவுகளில் காப்பியும் பயிரிடப்படுகின்றன.

ஆப்பிரிக்காவில் இப்புல்வெளிப் பகுதிகளின் வட பாகத்தில் **நீக்ரோக்கள்** என்ற வகுப்பினர், மற்ற பூர்வீகக் குடிகளை விட மேம்பாடடைந்திருக்கின்றனர். ஆப்பிரிக்காவின் கிழக்குப் பாகத்திலுள்ள உஷ்ணப் புல்வெளிகளில், புல்லைத் தின்று வாழும், யானைகள் ஒட்டைச் சிவிங்கிகள், வரிக் குதிரைகள், மான் இனங்கள் இவை அதிகமாகவும், இம்மிருகங்களைக் கொன்று தின்னும் சிங்கம், புலி முதலிய கொடிய விலங்குகளும் வசிக்கின்றன. இம்மிருகங்களை வேட்டையாடவும், இயற்கைச் சூழ்நிலையில் அவற்றை சலனப்படங்கள் பிடிக்கவும், பல நாட்டினர் இங்கு வருவது

வழக்கம். தென் பகுதிகளில் தீப்பறவைகள், அவற்றின் இறகுகளுக்காக, வெகுவாக வளர்க்கப்படுகின்றன.

**பாலைவனங்கள்:**—கண்டங்களின் மேற்குப் பகுதிகளில், கடக, மகரரேகைகள் செல்லுமிடங்களையடுத்து, பெரும்பாலும் பாலைவனங்கள் காண்கின்றன. இவ்விடங்களில் காற்று எப்பொழுதும் நிலத்திலிருந்து கடலை நோக்கியே



படம் 17. பாலை வனச் சோலை

வீசுவதால் மழையே கிடையாது. எங்கும் மணல் வெளிகளும், மணல் மேடுகளுமே இருக்கின்றன. ஆகவே இங்கு தாவரங்கள் கிடையா. சில இடங்களில் சதைப்பற்றுள்ள முட்செடிகள் மட்டும் காண்கின்றன. மற்றும் சில விடங்களில் நீரூற்றுக்கள் காண்கின்றன; அவற்றினருகே சிலர் வீடுகளை அமைத்துக்கொண்டு வசிக்கின்றனர். கோதுமை, மக்காச்சோளம், பேரீச்சை ஆகியவை இங்கு பயிராகின்றன. ஆடுகள், ஒட்டகங்கள் இவை வளர்க்கப்படுகின்றன. இவ்விடங்களுக்குப் **பாலைவனச் சோலைகள்** எனப் பெயர். பாலைவனங்களில் பிரயாணம் செய்ய, ஒட்டகமே ஏற்ற மிருகம். அது பல நாட்களுக்கான உணவு, தண்ணீர் இவற்றை ஒரே தடவையில் உட்கொண்டு, பிரயாணம் செய்ய வல்லது. மேலும் இதன் காலும் மணலில் புதையா

வண்ணம் அமைந்துள்ளது. ஆகவே இதைப் **பாலைவனக் கப்பல்** எனக் கூறுவது வழக்கம்.

உலகில் உள்ள முக்கிய பாலைவனங்கள் ஆசியாவில் கோபி, தார் (இந்தியா) அரேபியா பாலைவனங்கள், ஆப்பிரிக்காவில் ஸஹாரா, கலஹாரி பாலைவனங்கள், வட அமெரிக்காவில் கொலராடோ பாலைவனம், தென் அமெரிக்காவில் அடகாமா, பெடகோனியா பாலைவனங்கள், ஆஸ்திரேலியாவில் மேற்கு ஆஸ்திரேலிய பாலைவனம் ஆகியவை.

இவற்றுள், மேற்கு ஆஸ்திரேலியா பாலைவனத்தில் தங்கச் சுரங்கங்கள், அட்டகாமா பாலைவனத்தில் செம்பு, வயல்களுக்கு உரமாக உபயோகப்படும் நைட்டிரேட் என்னும் உப்பு இவை இருப்பதால் இந்த இரண்டு பாலைவனங்களும் முக்கியமானவை.

மத்ய தரைக்கடல் சீதோஷ்ண நாடுகள் :— ஐரோப்பா, ஆப்பிரிக்கா கண்டங்களுக்கிடையே மத்ய தரைக்கடல் இருப்பதைப் படத்தில் பாருங்கள். அதையடுத்த நாடுகளில் கோடையில் வரட்சியும், குளிர் காலத்தில் மழையும் காண்கின்றன. உலகில் இத்தகைய சீதோஷ்ண நிலை காணும் இடங்கள் அனைத்தும், பொதுவாக மத்திய தரைக்கடல் சீதோஷ்ண நாடுகள் எனக் கூறப்படுகின்றன. நீண்ட கோடை வரட்சியைத் தாங்குவதற்காக, இங்குள்ள தாவரங்களுக்கு நீண்ட வேர்கள், கனத்த பட்டை, தடித்துக் குறுகிய இலைகள் இவை உள்ளன. இப்பிரதேசங்களில் ரசம் மிகுந்த பழங்களாகிய ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை முதலியவை அதிகமாகப் பயிராகின்றன. சிறிது கோதுமையும் ஆங்காங்கு பயிரிடப்படுகின்றது. ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நாடுகளில் மல்பரி, ஆலிவ் முதலிய மர வகைகளும் இருக்கின்றன. மல்பரி இலை பட்டுப் பூச்சிகளுக்கு சிறந்த உணவாக உபயோகிக்கப்படுகின்றது. ஆலிவ் மரத்தில் தோன்றும் பழங்களின் விதைகளைக் கொண்டு எண்ணெய் தயாரித்து அதை சோப், மெழுகுவர்த்தி ஆகியவை செய்யவும், உணவுப் பொருளாகவும் உபயோகிக்கின்றனர்.

கண்டங்களின் மேற்குக் கரைகளில் 30°, 40° அக்ஷ ரேகைகளுக்கு இடையே இத்தகைய சீதோஷ்ண நிலை காண்கின்றது. உலகில் மத்தியதரைக் கடல் சீதோஷ்ண நிலை உள்ள நாடுகள், வட அமெரிக்காவில் காலிபோர்னியா, தென் அமெரிக்காவில் மத்திய சிலி, ஆப்பிரிக்காவில் அட்லாஸ் பிரதேசம், தென் மேற்குக் கோடியில் கேப்டவுனைச் சுற்றியுள்ள பகுதிகள், யூரேஷ்யாவில், போர்ச்சுக்கல், ஸ்பெயின், இத்தாலி, பால்கன் தீபகற்பம், ஆசியா மைனர், பாலஸ்தீனம், சிரியா ஆகியவை; ஆஸ்திரேலியாவில் தென் மேற்கு, தெற்கு பகுதிகள் ஆகியவை.

ஐரோப்பாவிலுள்ள மத்திய தரைக்கடல் நாடுகளில் திராட்சையிலிருந்து மதுபான வகைகள் தயாரித்தல், மல்பரி இலைகளைக் கொண்டு பட்டுப் பூச்சிகளை வளர்த்து, பட்டு உற்பத்தி செய்து, நெசவு செய்தல், ஆலிவ் எண்ணெயை கொண்டு சோப் முதலியவை செய்தல், மக்களின் முக்கியத் தொழில்களாம். போர்ச்சுக்கல் நாட்டில் கார்க் ஓக் என்னும் மரப்பட்டையிலிருந்து சீசாக்களுக்குப் போடுவதற்கான அடைப்பான்கள் (கார்க்) தயாரித்து வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. முற்காலத்தில் கிரீஸ் நாடும், இத்தாலியிலுள்ள ரோமாபுரியும் சிறந்த நாகரிக சாம்ராஜ்யங்களாகத் திகழ்ந்திருந்தன.

வட அமெரிக்காவிலுள்ள காலிபோர்னியாவில் பழங்களை ஏராளமாகப் பயிரிட்டு, அவற்றைப் பக்குவப் படுத்தி, பல்வேறு நாடுகளுக்கும் அனுப்புகின்றனர்.

**மிதஉஷ்ணப் புல்வெளிகள்** :—இவை மித சீதோஷ்ண மண்டலங்களில், கண்டங்களின் உட்பகுதிகளில் காண்கின்றன. இவ்விடங்களில் கோடைகாலம் குறுகியும், சிறிது மழையுள்ளதாயுமிருக்கும். ஆனால் குளிர்காலம் மழையற்றும், நீண்டும், அதிகக் குளிர் உள்ளதாயும் இருக்கும். அக்காலத்தில் வெண்பனிப் பொழிவு அதிகமானதால், தரையெங்கும் பனி மூடியிருக்கும். வசந்த கால ஆரம்பத்தில் இப்பனிஉருகி, புதியபுல் முளைக்க ஆரம்பிக்கும். அப்பொழுது எங்கும் புல்லின் பச்சை வர்ணமும்,

ஆங்காங்கு பல்வேறு புஷ்பங்களின் பலவகை வர்ணங்களும் கண்ணைக் கவரும் காட்சியளிக்கும். உஷ்ண மண்டலப் புல்லைப்போல இங்கு புல் அதிக உயரம் வளராது. இங்கு மரங்களும் கிடையாது.

இப்புல்வெளிகளுக்கு ஒவ்வொரு கண்டத்திலும் வெவ்வேறு பெயர் உண்டு. மத்திய யூரேஷ்யாவில் இவற்றிற்கு **ஸ்டெப்பி** என்றும், வட அமெரிக்காவில் **பிரெய்ரி** என்றும், தென் அமெரிக்காவில் **பாம்பாஸ்** என்றும், தென் ஆப்பிரிக்காவில் **வெல்ட்** என்றும், ஆஸ்திரேலியாவில் **டௌன்ஸ்** **(Downs)** என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

இப்புல்வெளிகளில் ஆடுமாடுகள், குதிரைகள் இவற்றை மேய்ப்பது முக்கியத் தொழிலாக இருக்கின்றது. மேலும், இத்தகைய சீதோஷ்ண நிலை, கோதுமை விளைவதற்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. யூரேஷ்யா, வட, தென் அமெரிக்காக்கள், ஆஸ்திரேலியா இவையே உலகில் மிகப்பெருத்த அளவில் கோதுமை பயிரிடும் நாடுகள். பிரெய்ரிப் புல்வெளியில் கிழக்குப் பகுதியில் கோதுமை, மக்காச்சோளம் இவற்றை அதிகமாகப் பயிரிடுகிறார்கள். மேற்குப் பகுதியில் மாடுகள் விசேஷமாக வளர்க்கப் படுகின்றன. மக்காச்சோளம் பெரும்பாலும் மாடுகள், பன்றிகள் இவற்றிற்கு உணவாக உபயோகமாகின்றது. இம் மிருகங்களின் இறைச்சி வெளிநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதியாகின்றது. **சிக்காகோ** நகரம் இத்தொழிலுக்கு மிகவும் பெயர் பெற்றது. தென் அமெரிக்காவிலுள்ள பாம்பாஸ் புல்வெளிகளிலும் மாடுகளை வளர்த்து, அவற்றின் இறைச்சியையும் ஏற்றுமதி செய்கின்றனர். ஆஸ்திரேலியாவில் ஆடுகள் மேய்த்தல் மிகவும் முக்கியமானது. அங்கிருந்து ஆட்டு உரோமம் மிகப் பெருத்த அளவில் இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகின்றது.

**அகன்ற இலைக்காடுகள் :—** இக்காடுகள், பெரும்பாலும் மிதமண்டல நாடுகளில், மழை சற்று அதிகமாக உள்ள கடற்கரையிலிருந்து உள்நாட்டில் சில மைல்கள் தூரம் வரை வியாபித்திருக்கின்றன. மாரிக்காலத்துக்கு முன் இக்

காடுகளிலுள்ள மரங்களின் இலைகள் உதிர்ந்துவிடும். எனவே இவை, **இலையுதிர் காடுகள்** எனவும் அழைக்கப் படுகின்றன. இக்காடுகளில் உறுதியான மரவகைகளான **ஒக், பர்ச், எல்ம், பீச்** ஆகியவை முக்கியமாகக் காணப்படு கின்றன.

ஆசியாவில், சீனாவிற்கு வடக்கிலுள்ள **மஞ்சூரியா,** மேற்கு ஐரோப்பிய நாடுகளாகிய **இங்கிலாந்து,** வட **பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், டென்மார்க், ஜெர்மனி** ஆகிய நாடுகள், வட அமெரிக்காவில் கனடாவின் மேற்குப் பகுதியாகிய **பிரிட்டிஷ், கொலம்பியா, அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் கிழக்குப்பகுதி** ஆகிய விடங்களில் இத் தகைய காடுகள் இருக்கின்றன.

ஐரோப்பா, வட அமெரிக்காக் கண்டங்களில் இத் தகைய காடுகள் அழிக்கப்பட்டு, அவ்விடங்களை விளை நிலங்களாக மாற்றி யிருக்கின்றனர். கோதுமை, பார்லி, ஓட்ஸ், உருளைக்கிழங்கு, பீட்கிழங்கு, நற்சணல் இவை ஐரோப்பாவிலும், கோதுமை, பார்லி, நற்சணல் இவை வட அமெரிக்காவிலும் பயிரிடப்படுகின்றன. மேலும், இப்பகுதிகளில் இரும்பு, நிலக்கரி முதலிய தாதுப்பொருள் கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. தவிர இங்கு காணும் சீதோஷ்ண நிலையும் மக்கள் நன்கு உழைக்க உதவு கின்றது. இக்காரணங்கள் பற்றி இந்நாடுகள் ஆக்கத் தொழில்களிலும் ஏற்றம் பெற்றுள்ளன. இதனுல் இவற்றின் வாணிபம் பெருகி, செல்வ நிலையும் உயர்ந் துள்ளது.

**ஊசி இலைக் காடுகள்:**—இத்தகைய காடுகள் பெரும் பாலும், குளிர் மிகுந்தும், மழை மிகக் குறைவாயும் உள்ள பகுதிகளில் காணப்படுகின்றன. இப்பிரதேசங்களில் வெண்பனிப் பொழிவு அதிகமாக இருக்கும். இக்காடுகளி லுள்ள மரங்களின் இலைகள் உருவத்தில் ஊசி போன்று இருப்பதால், இக்காடுகளுக்கு ஊசி யிலைக்காடுகள் எனப் பெயர் வந்தது. இங்குள்ள மரங்கள் மிகவும் மிருது

வானவை. பைன், பர், ஸ்ப்ரூஸ் முதலிய மரங்கள் இங்கு காண்கின்றன.

இத்தகைய காடுகள் வட அமெரிக்காவில் கனடாவின் வடபகுதி, ஐரோப்பாவில் ஸ்வீடன், நார்வே, பின்லாந்து, ரஷ்யாவின் வடபகுதி, ஆசியாவில் சைபீரியாவின் வடபகுதி இவற்றில் ஊசியிலைக் காடுகள் இருக்கின்றன.

இக்காடுகளில் வசிக்கும் மக்களின் முக்கியத் தொழில்கள் மிருகங்களைக் கண்ணிவைத்துப் பிடித்தல், மரம் வெட்டுதல் ஆகியவை. இங்கு மிக அழகாகவும், மிருதுவாகவும் உள்ள உரோமங்களையுடைய பீவர், எர்மின், ஸேபில், ஸில்வர் பாக்ஸ் முதலிய மிருகங்கள் வசிக்கின்றன. இவற்றின் உரோமங்களை அமெரிக்கா, ஐரோப்பிய நாட்டினர் பெரிதும் விரும்பி வாங்குவதால், பலர் இம்மிருகங்களைக் கண்ணிவைத்துப் பிடித்து, இவற்றின் தோலை உரித்து, பதன் செய்து, விற்பனைக்கு அனுப்பும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். குளிர்காலத்தில் தான் இம்மிருகங்களின் உடலில் அதிக உரோமம் தோன்றுவதால், அதுவே இம்மிருகங்களைப் பிடிக்க ஏற்ற காலம். ஆனால் அப்பொழுது இம் மக்கள் பல இன்னல்களுக்குள்ளாகின்றனர். பலர் இறப்பதும் உண்டு.

மரம் வெட்டுதல் மற்றொரு முக்கியத் தொழிலாக இங்கு நடை பெறுகின்றதெனக் கூறப்பட்டதன்றோ? குளிர்காலத்தில் மரம் வெட்டிகள் இக்காடுகளுக்குச் சென்று, மரங்களை வெட்டி, உறைந்த ஆறுகளின் மீது அடுக்குகின்றனர். இளவேனிற் காலம் ஆரம்பித்ததும் பனி உருகி, ஆற்றுத் தண்ணீர் ஓட ஆரம்பிக்கின்றது. அப்பொழுது அடுக்கி வைத்துள்ள கட்டைகளும் தண்ணீரில் மிதந்து செல்கின்றன. ஆற்றங்கரைகளில் வாட்சாலைகளை அமைத்திருக்கின்றனர். மரக்கட்டைகள் அவ்விடங்களை அடைந்ததும், அவற்றை இச்சாலைகளுக்கு எடுத்துச் சென்று துண்டுகளாக்கி, அவற்றைப் பல வேலைகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். மேலும் இம்மரங்

களினின்றும் மரக்கூழ் தயாரித்து, அதைக் கொண்டு, காகிதம், செயற்கைப் பட்டு முதலியவற்றைச் செய்கின்றனர். கனடா, பின்லாந்து ஆகிய நாடுகளில் ஏராளமான காகிதம் உற்பத்தி செய்யப்பட்டு, வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றது. தீப்பெட்டி, தீக்குச்சி, ஜன்னல்கள், கதவுகள் இவற்றிற்கான சட்டங்கள், பெட்டிகள் முதலியன செய்யவும் இம்மரங்கள் உதவுகின்றன. ஸைபீரியாவிலுள்ள ஊசியிலைக் காடுகளில் மரம் வெட்டும் தொழில் அதிகமாக நடைபெறவில்லை. இதன் காரணம் இங்கு போக்குவரவு வசதி மிகக் குறைவாக இருப்பதேயாகும்.

இப்பிரதேசங்களில் வாழ்க்கை வசதிகள் குறைவாக இருப்பதாலும், கடுங்குளிர் இருப்பதாலும் இங்கு ஜன நெருக்கம் மிகக் குறைவாயுள்ளது.

**தூந்திரப் பிரதேசம்** :—கனடா, யூரேஷ்யா இவற்றின் வட கோடிப் பகுதிகள் **தூந்திரப் பிரதேசம்** எனப்படும். ஆண்டில் பல மாதங்கள் இங்கு தரை பனி மூடி இருக்கும். சில மாதங்கள் சூரியனே பிரகாசிப்பதில்லை. சூரியன் தோன்றும் மாதங்களிலும், வெப்பம் வெகு குறைவாகவும் இருக்கும். இங்கு தாவர வகைகள் கிடையா. ஓர் வகைப் பாசியும், பனி உருகும் காலங்களில் சிறிது புஷ்பங்களும் மட்டும் தோன்றுகின்றன. இங்குள்ள மக்களின் முக்கியத் தொழில்கள் வேட்டை யாடுதல், மீன் பிடித்தல் ஆகியவை. வேட்டை யாடிய மிருகங்களின் இறைச்சியைப் பச்சையாகவே புசிப்பார்கள். வேட்டைக்கான மிருகங்கள் கிடைக்காவிடின், சில சமயங்களில், பல நாட்கள் இவர்கள் பட்டினியாக இருக்க நேரிடுகின்றது. ஆனால் ஏதேனும் ஓர் மிருகம் கிடைத்தால், அதன் இறைச்சியை எல்லோரும் பகிர்ந்தே புசிப்பார்கள். சீல், வால்ரஸ், வெண்கரடி முதலிய மிருகங்கள் இவர்கள் வேட்டையாடும் முக்கியப் பிராணிகளாகும். குளிர்காலத்தில், இம்மக்கள் பனிக்கட்டிகளால் வீடுகளை அமைத்துக் கொள்கின்றனர். இவற்றிற்கு **இக்ளூக்கள்** எனப்பெயர். கோடை காலத்தில் தோலினாலான கூடாரங்களில் வசிக்கின்றனர்.

வட அமெரிக்காவிலுள்ள தூந்திரப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு **எஸ்கிமோக்கள்** எனப்பெயர். இவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்ல **ஸ்லெட்ஜ்** என்னும் சக்கர மில்லாத வண்டிகளை உபயோகிக்கின்றனர்.



படம் 18. எஸ்கிமோ மக்கள்

இவை பனிக்கட்டியின் மீது வழுக்கிச் செல்கின்றன. இவற்றை, பழக்கப்பட்ட நாய்களும், மான்களும் இழுத்துச் செல்கின்றன. இம்மான்கள் இவர்களது வண்டிகளை இழுப்பதுடன், வேறு வகைகளிலும் பயன்படுகின்றன. இவற்றின் பால், இறைச்சி இவை இவர்களின் ஆகாரம்; இதன் தோலை ஆடைகளாகச் செய்து அணியவும், கோடைகாலங்களில் கூடாரங்கள் அமைக்கவும் உபயோகிக்கின்றனர்.

ஐரோப்பாவிலுள்ள தூந்திரப் பிரதேச மக்களுக்கு **லாப்ஸ், பின்ஸ்** என்றும், ஆசியாவிலுள்ள தூந்திரப்

பிரதேச வாசிகளுக்கு ஸமோயாட்ஸ், ஆஸ்டியாகஸ் என்றும் பெயர்கள். இவர்களது வாழ்க்கையும், பலவகைகளில் எஸ்கிமோக்களின் வாழ்க்கையைப் போன்றதே.

இவ்வாறு, உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்கள் ஆங்காங்குள்ள சூழ்நிலைக்குத் தக்கவாறு, வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர். தூந்திர மக்களைப் போன்றவர்கள் வெகு துன்பமடைகின்றனர். இவர்களது முயற்சிகளைக் காணும் நாம் இவர்கள் மீது இரக்கம் கொண்டு, இவர்களின் தீரத்தைப் பாராட்ட வேண்டும். இவ்வாறு எல்லாப் பகுதி மக்களும் செய்ய முன்வரின், உலகில் எப்பொழுதும் அமைதியும், கூட்டுறவும் நிலவும்.

## பயிற்சி

1. இயற்கைப் பிரதேசம் என்பது என்ன ?
2. உலகின் முக்கிய இயற்கைப் பிரதேசங்கள் எவை ?
3. பருவக் காற்றுப் பிரதேசங்களுக்கு ஏன் அப்பெயர் வந்தது? அவ்விடங்களின் சீதோஷ்ண நிலை, பயிர் வகை இவற்றைக் கூறுக.
4. பூமத்திய ரேகைக் காடுகளில் வசிப்பவர்களின் தொழில்கள் எவை ?
5. கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள உஷ்ணமண்டலப் புல் வெளி எவ்வாறு உபயோகமானது ?
6. மேற்கு ஆஸ்திரேலியப் பாலைவனம், அட்டகாமா பாலை வனம் இவை எவ்வாறு முக்கியமானவை ?
7. மத்தியதரைக்கடல் நாட்டு சீதோஷ்ணம் என்றால் என்ன? அங்கு தாவரங்கள் எவ்வாறு அமைந்துள்ளன ?
8. மித உஷ்ணப் புல்வெளிகளில் வாழும் மக்களின்தொழில் கள் எவை ?
9. ஊசியிலைக் காடுகளில் வசிக்கும் மக்கள் செய்யும் இரண்டு தொழில்களையும் பற்றிக் கூறுக.
10. காங்கோ நாட்டுச் சிறுவன் தன் வாழ்க்கையை விவரிப்பது போன்ற கற்பனைக் கடிதம் ஒன்றை வரைக.

11. உலகப்பட மொன்றில் இயற்கைப் பிரிவுகளை வெவ்வேறு வர்ணங்களில் குறிப்பிட்டுப் பெயர்களை எழுதுக.

12. கீழ்க்கண்டவை அதிகமாகக் காணும் ஒவ்வொரு பகுதியைக் கூறுக.
தேயிலை; தேக்குமரம்; பேரீச்சை; கார்க் ஓக்; எண்ணெய்ப்பனை.

## 13. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க:—

i க்யானாவிலுள்ள உஷ்ணப் புல்வெளியின் பெயர் ——.

ii வட அமெரிக்காவின் மித உஷ்ணப் புல்வெளியின் பெயர் ——.

iii கனடாவிலுள்ள தூந்திர மக்களின் பெயர் ——.

iv பாலைவனப் பிரயாணத்துக்கு ஏற்ற மிருகம் ——.

v தென் ஆப்பிரிக்கப் பாலைவனத்தின் பெயர் ——.

## 14. இணைத்து எழுதுக:—

| | |
|---|---|
| காம்போஸ் | தூந்திர மக்கள் பனிவீடு. |
| பாம்பாஸ் | பிரேஸிலிலுள்ள உஷ்ணப் புல்வெளி |
| வால்ரஸ், மல்பரி | பட்டுப் பூச்சிகளின் உணவு. |
| | தென் அமெரிக்காவின் மித உஷ்ணப் புல்வெளி. |
| இக்லு | தூந்திர மக்களின் உணவுக்கான ஒரு மிருகம். |

## 15. கீழ்க்கண்ட வாக்கியங்கள் சரியா, தப்பா ?

i யுரேஷ்யாவிலுள்ள மித உஷ்ணப் புல்வெளியின் பெயர் ஸ்டெப்பி.

ii லாப்ஸ், ஐரோப்பாவில் வசிக்கும் தூந்திர மக்கள்.

iii மித உஷ்ணப் புல்வெளிகளில் ரப்பர் மரங்கள் இருக்கின்றன.

iv சிங்கோனா மரப்பட்டை மருந்துக்கு உதவுகின்றது.

v தூந்திர மக்கள் வாழ்க்கை வெகு உல்லாசமானது.

# 6. உலக மக்களின் தேவைகள்

உலக மக்கள் அனைவருக்கும் இன்றியமையாத தேவைகள் ஊண், உடை, உறைவிடம் ஆகியவை. இத் தேவைகளை பூமியினின்றுமே, பொதுவாகப் பெருகின்றனர். உணவுக்கான தானியங்கள், பழங்கள், காய்கள் முதலியன பூமியிலேயே பயிராகின்றன. இறைச்சி உணவைக் கொடுக்கும் ஆடு, மாடுகள் முதலியன பூமியில் பயிராகும் தாவரங்களையே உணவாகக் கொள்கின்றன. உடை செய்வதற்கான பருத்தி பூமியிலேயே பயிராகின்றது. உரோமத்தைக் கொடுக்கும் ஆடு, தாவரங்களை உண்கின்றது. பட்டு கொடுக்கும் பட்டுப்பூச்சியின் உணவு மல்பரி இலை. உறைவிடமாகிய வீடுகளை அமைத்துக் கொள்ளத் தேவையான கல், மரம், இரும்பு சாமான்கள், சுண்ணும்பு, சிமெண்ட் ஆகியவையும் பூமியில் கிடைக்கும் பொருள்களே.

மக்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும், எல்லா நாடுகளிலும், அல்லது எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை. ஒவ்வொரு பொருளுக்கும் வெவ்வேறு சூழ்நிலை அவசியமாயிருக்கின்றது. இச்சூழ்நிலைகளைப் பற்றியும், ஒவ்வொரு பொருளும் எந்தெந்த நாடுகளில் கிடைக்கின்றது என்பதைப் பற்றியும் அறிவோம்.

**உணவு தானியங்கள் :—**

நெல் :— உலக மக்களில் சுமார் பாதிப் பெயர்களின் முக்கிய உணவுப் பொருள் அரிசி. இது நெல்லினின்றும் கிடைக்கின்றது. நெல், நன்கு விளைவதற்கு வெப்பம், மண் வளம், ஏராளமான நீர் வசதி இவை வேண்டும். உலகில் நெல் அதிகமாக விளையுமிடங்கள் ஜப்பான், சீனு, இந்தோ-சீனு, தாய்லாந்து, கிழக்கிந்தியத் தீவுகள், பர்மா, இந்தியா, பாக்கிஸ்தான், வட இத்தாலி, பிரேஸில், வட அமெரிக்காவில் மெக்ஸிகோ வளைகுடாவையடுத்த பிரதேசம்




படம் 19. நெல், கோதுமை விளையுமிடங்கள்

ஆகியவை. தாய்லாந்து, இந்தோ சீனு, பர்மா ஆகிய நாடுகளில் ஜனங்கள் குறைவாக இருப்பதால், அங்கிருந்து அரிசி ஏற்றுமதியாகின்றது. இந்தியாவில் நெல் நன்கு விளையுமிடங்கள் அஸ்ஸாம், வங்காளம், பீஹார், உத்திரப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதி, ஒரிஸ்ஸா, கிழக்கு மேற்குக் கடற்கரைச்சமவெளிகள் ஆகியவை.

கோதுமை :— நெல்லுக்கு அடுத்தபடி கோதுமையும் உலக மக்களின் உணவுப் பொருளாகும். இது நன்கு விளைய மித வெப்பம், கரிசல் மண், ஆரம்பத்தில் சிறிது மழை, பிறகு கதிர் முற்ற வரட்சி இவை தேவை. இது ஜப்பான், வட சீனு, இந்தியாவின் மேற்குப்பகுதி, மத்திய ஆசியாவின் ஸ்டெப்பி சமவெளி, ரஷ்யா, பிரான்ஸ், ருமேனியா, இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா ஐக்கிய நாடுகள், தென் அமெரிக்காவில் ஆர்ஜண்டினு, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய விடங்களில் நன்கு பயிரா கின்றது. இவற்றுள் கனடா, அமெரிக்கா ஐக்கிய நாடுகள், ஆர்ஜண்டினு, ரஷ்யா ஆகியவையே கோதுமையை மிகப் பெருத்த அளவில் பயிரிடுகின்றன. இந்நாடுகளில் விவசாய சம்பந்தமான எல்லாத் தொழில்களையும் பல இயந்திரங் களைக் கொண்டே செய்து முடிக்கின்றனர். கனடா, அமெரிக்கா ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா இவையே கோதுமையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன.

பார்லி :— இதை வாற்கோதுமை என்றும் கூறுவதுண்டு. இது ஓரளவு மேல் நாடுகளில் எளிய மக்களது உணவாகும். மேலும் இது ஒரு வகைப் பானம் தயார் செய்யவும் உதவுகின்றது. சில விடங்களில் இது மாடுகள், குதிரைகள் இவற்றிற்கு உணவாகவும் உதவுகின்றது. இதற்கும் கோதுமையைப் போன்ற வசதிகளே தேவையான போதிலும், வெப்பம், மழை இவை சிறிது குறைவாகவே வேண்டும். அமெரிக்கா ஐக்கிய நாடுகள், ரஷ்யா, ஜெர்மனி, ருமேனியா, பிரான்ஸ், இத்தாலி, துருக்கி, இந்தியாவின் வட மேற்குப்பகுதி ஆகியவற்றில் பார்லி அதிகமாக விளைகின்றது.




படம் 20. பார்லி, மக்காச்சோளம் விளையுமிடங்கள்

**தினை வகைகள் :—** கம்பு, சோளம், கேழ்வரகு முதலியவை பொதுவாக, தினை வகைகள் எனக் கூறப்படுகின்றன. நம் நாட்டில் இவை பெரும்பாலும் எளிய மக்களின் உணவாக உபயோகப்படுகின்றன. இவை செழிப்பற்ற மண், சிறிது மழை இவை உள்ள பிரதேசங்களில் நன்கு விளைகின்றன. இவை குறுகிய காலத்திலேயே அறுவடையாகும் பயிர்கள். இவை அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் உட்பகுதிகள், ஆப்பிரிக்காவில் உஷ்ணப் புல்வெளிகள், வட சீனு, இந்தியாவில் தட்சிணப் பீடபூமி ஆகிய விடங்களில் அதிகமாக விளைகின்றன.

**மக்காச் சோளம் :—** இது பெரும் அளவில் கால் நடைகளுக்கு உணவாக உபயோகிக்கப்படுகின்றது. இதற்கு வெப்பமும், ஆரம்பத்தில் சிறிது மழையும், பிறகு வரட்சியும் வேண்டும். உலகில் விளையும் மக்காச் சோளத்தில் சுமார் முக்கால் பங்கு அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலேயே பயிராகின்றது. இதை அங்கு கால் நடைகளுக்கும் பன்றிகளுக்கும் உணவாக உபயோகிக்கின்றனர். ஆர்ஜன்டினு, ருமேனியா, இத்தாலி, ஹங்கேரி, பிரேஸில், தென் ஆப்பிரிக்கா, கிழக்கு ஆஸ்திரேலியா, இந்தியா ஆகியவை மக்காச் சோளத்தைப் பயிரிடும் நாடுகள்.

**கரும்பு :—** இதன் சாற்றிலிருந்து வெல்லம், சர்க்கரை முதலியவற்றைச் செய்கின்றனர். சில விடங்களில் கரும்புச் சக்கையினின்றும் ஓர்வகை மதுசாரம், முரட்டுக் காகிதம் ஆகியவற்றையும் கூடச் செய்கின்றனர். கரும்பு நன்கு பயிராக நிலவளம், நீர்வளம், அதிக வெப்பம் இவை தேவை. உலகில் கரும்பு அதிகமாக விளையும் நாடுகள் இந்தியா, கிழக்கிந்தியத் தீவுகள் (குறிப்பாக ஜாவா), சீனு, எகிப்து, வட ஆஸ்திரேலியா, மொரிஷஸ்தீவு (ஆப்பிரிக்காவுக்கு அருகில்), பிரேஸில், மேற்கிந்தியத் தீவுகள் (குறிப்பாக கியூபா) ஆகியவை. நம் நாட்டில் கரும்பு ஏராளமாகப் பயிரிடப்பட்ட போதிலும், அது நம் தேவைக்கே போதாமலிருக்கின்றது. ஜாவா, கியூபா, மொரிஷஸ் ஆகிய நாடுகள் சர்க்கரையை ஏற்றுமதி செய்கின்றன.




படம் 21 கரும்பு விளையுமிடங்கள்

**பீட் கிழங்கு** :—இக் கிழங்கும் சர்க்கரை செய்ய உப யோகப்படுகின்றது. இது சுமாரான மழையுள்ள மித உஷ்ண நாடுகளிலேயே பயிராகின்றது. ருஷ்யா, போலந்து, ஜெர்மனி, அமெரிக்கா ஐக்கிய நாடுகள், கனடா இவையே பீட் கிழங்கை விளைவிக்கும் நாடுகள்.

**பான வகைகள்** :—மக்களில் பலர் காலை, மாலை வேளை களில் தேயிலை, காப்பி, கோகோ முதலியவற்றை அருந்து கின்றனர் அன்றோ ? இவற்றைப் பொதுவாக, பான வகை கள் எனக் கூறுவது வழக்கம். இவை விளைவதற்கான வசதிகள், அதிகமாக விளையும் நாடுகள், இவற்றைப் பற்றி அறிவோம்.

**காப்பி** :—இதற்கு வெப்பம், வளமுள்ள மண், ஏராள மான மழை இவை வேண்டும். ஆனால் தண்ணீர் வேரடி யில் தேங்கக் கூடாது. எனவே அதிக மழையுள்ள வெப்ப நாடுகளின் மலைச்சாரலே இதற்கு ஏற்றது. இச் செடிக்கு நிழல் தேவையாயிருப்பதால் பக்கத்தில் மரங்களையும் நட்டுப் பயிராக்குகின்றனர். காப்பிச் செடியில் பழங்கள் நன்கு பழுத்ததும், அவற்றைச்சேகரித்து, தண்ணீரில் ஊற வைத்து தோலைப் போக்கி, கொட்டைகளை எடுக்கிறார்கள். பிறகு இக் கொட்டைகளை உலர்த்தி, பல ரகங்களாகப் பிரித்து, கோணிகளில் கட்டி ஏற்றுமதி செய்கின்றனர். காப்பிப்பானம் தயாரிக்கும் வகையை நீங்கள் அறிவீர்களா? காப்பிச் செடி, முதன் முதலில் அபிஸீனியா நாட்டில் தான் பயிராயிற்று. இப்போது அது பிரேஸில், கிழக்கு மேற்கு இந்தியத் தீவுகள், மத்திய அமெரிக்கா, அரேபியா வின் தென் மேற்குப் பகுதி, தென் இந்தியா ஆகிய விடங் களில் பயிராகின்றது. உலகில் விளையும் காப்பியின் மொத்த அளவில் சுமார் முக்கால் பங்கு பிரேஸில் நாட்டில் பயிரா கின்றது. தென் இந்தியாவில் மைசூர், குடகு, திருவாங்கூர், சேர்வராயன் மலை ஆகிய விடங்களில் காப்பி பயிராகின்றது.

**தேயிலை** :—இதற்குத் தேவையான வசதிகள் காப்பிக் குத்தேவையானவை போன்றதே யாயினும், மழை சற்று




படம் 22, காப்பி, தேயிலை, கோகோ விளையுமிடங்கள்

அதிகமாகவும், வெப்பம் குறைவாகவும் வேண்டும். தேயிலைச் செடி அதிக உயரம் வளரக் கூடியதாயினும், இலைகளைச் சுலபமாகச் சேகரிப்பதற்காக, ஐந்து அடிக்குமேல் செடியை வளரவொட்டாமல் கத்தரிக்கிறார்கள். இதனால் செடி புதராக வளர்கின்றது. தளிர் இலைகளைச் சேகரித்து, இயந்திரங்களின் உதவியால் உலர்த்தி, தரவாரியாகப் பிரித்து, காற்றுப்புகா டின்களில் அல்லது பெட்டிகளில் அடக்கம்செய்து அனுப்புகின்றனர். ஜப்பான், சீனா, இந்தியா, இலங்கை, ஜாவா, நேடால் முதலிய நாடுகளில் தேயிலை அதிகமாகப் பயிராகின்றது. நமது நாட்டில் அஸ்ஸாம், டார்ஜிலிங், கங்கரா, டேராடூன், நீலகிரி ஆகிய விடங்களில் தேயிலை பயிராகின்றது. இதில் பெரும்பகுதி இங்கிலாந்துக்கு அனுப்பப் படுகின்றது.

கோகோ:—இதற்குக் காப்பியைக் காட்டிலும் அதிக உஷ்ணமும், மழையும் தேவை. இது சமவெளிகளிலும், பள்ளத் தாக்குகளிலும் தான் பயிராகின்றது. இதன் கொட்டையைப் பொடிசெய்து, பானமாகத் தயாரித்து அருந்துகின்றனர். மேலும் இது சாக்கலெட் செய்யவும் உபயோகப் படுகின்றது. தென் அமெரிக்காவில் பிரேஸிலிலும், மேற்கு ஆப்பிரிக்கா நாடுகளிலும் இது நன்கு பயிராகின்றது. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் இதைப் பெரும் அளவில் வாங்குகின்றன.

பழவகைகள்:—மக்களின் உணவுப் பொருள்களில் பழவகைகளும் முக்கியமானவை. இவை உணவை எளிதில் ஜீரணிக்கச் செய்வதுடன், உடலுக்கும் வலிவைக் கொடுக்கின்றன.

பழங்களை, அவை நன்கு பயிராகும் நிலையைக் கொண்டு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்: அவை, உஷ்ண மண்டலப் பழவகைகள், மித உஷ்ணமண்டலப் பழவகைகள், மத்திய தரைக்கடல் சீதோஷ்ண நிலைப் பழவகைகள் ஆகியவை.

உஷ்ணமண்டலப் பழவகைகள் மா, பலா, அன்னாசி, வாழை, பேரீச்சை முதலியவை. இவற்றுள் மா, இந்தியா

வில்தான் அதிகமாகக் கிடைக்கின்றது. அடுத்தபடி, கிழக்கு இந்தியத் தீவுகள், மலேயா, ஆப்பிரிக்காவில் உஷ்ண மண்டலப் பகுதிகள் இவற்றிலும் மாந்தோப்புகள் விசேஷமாக இருக்கின்றன. சமீப காலமாக, நம் நாட்டினின்றும், உயர்தரமான பழங்கள் இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி யாகின்றன. பலா நம் நாட்டில் மட்டும் தான் விசேஷமாகப் பயிராகின்றது. அன்னாசி மலேயா, மேற்கிந்தியத் தீவுகள், பசிபிக் தீவுகளில், முக்கியமாக ஹவாய் தீவுகள் இவற்றில் விசேஷமாகப் பயிராகின்றது. இங்கிருந்து இது உலக நாடுகள் பலவற்றிற்கும் ஏற்றுமதியாகின்றது. வாழை, இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், கிழக்கிந்தியத் தீவுகள், கிழக்கு ஆப்பிரிக்காவில் சில பகுதிகள் ஆகியவற்றில் பயிராகின்றது. மேற்கு இந்தியத் தீவுகளில் பயிராகும் வாழையைக் கப்பல்களில் குளிரூட்டிய அறைகளில் வைத்து,ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புகின்றனர். பேரீச்சை வறண்ட, உஷ்ணப் பிரதேசங்களில்தான் நன்கு பயிராகின்றது. அரேபியா, ஈராக், ஸஹாராப் பாலைவனத்திலுள்ள பாலைவனச் சோலைகள் இவற்றில் பேரீச்சை நன்கு விளைகின்றது. இது அவ்விடங்களிலுள்ள மக்களின் முக்கிய உணவுப் பொருளாகவும் உபயோகப்படுகின்றது. ஈராக் நாட்டில் பயிராகும் பேரீச்சையின் பெரும்பகுதி, பாரசீக வளைகுடாவிலுள்ள பாஸ்ரா துறைமுகத்தின் வழியே, இதர நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றது.

மித உஷ்ண மண்டலப் பழவகைகள் ஆப்பிள், பிளம், பீச், ஆப்ரிகாட், செர்ரி, முதலியவை. ஆப்பிள் இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா, நியூஸிலாந்து காலிபோர்னியா முதலிய நாடுகளில் பயிரிடப்பட்டு உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றது. ஆப்ரிகாட், காலிபோர்னியா, பிரான்ஸ் நாடுகளிலும், செர்ரி இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம் நாடுகளிலும் பயிராகின்றன.

மத்திய தரைக் கடல் சீதோஷ்ண நிலைப் பழவகைகள் ரசம் நிறம்பியவை. ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை,

அத்தி, வாதுமை முதலியவை இவ்வகுப்பைச் சேர்ந்தவை. இவை மத்தியதரைக் கடல் சீதோஷ்ணநிலை உள்ள எல்லா இடங்களிலும் நன்கு பயிராகின்றன. ஸ்பெயின், பிரான்ஸ், கிரீஸ் முதலிய நாடுகளில் திராட்சைப் பழங்களிலிருந்து திராட்சை ரசமும் தயாரிக்கிறார்கள்.

**எண்ணெய் வித்துகள்:**—மக்களின் உணவுப் பொருள்களில் தாவர எண்ணெயும் சம்பந்தப்பட்டது. தேங்காய், நிலக்கடலை, எள், ஆமணக்கு முதலியவை முக்கிய எண்ணெய் வித்துக்களாகும். தென்னை, உஷ்ணமண்டல நாடுகளில், கடற்கரையோரமான மணற்பாங்கான இடங்களில் நன்கு பயிராகின்றது. **தென் இந்தியா, இலங்கை, பஸிபிக் தீவுகள்** இவற்றில் தென்னை மரங்கள் ஏராளமாக இருக்கின்றன. தேங்காய்க் கொப்பரையிலிருந்து எண்ணெய் எடுத்து, அதை உணவுப் பொருளாகவும், சோப், மெழுகு வர்த்தி முதலியன செய்யவும் உபயோகிக்கின்றனர். நிலக்கடலை அல்லது வேர்க்கடலை **இந்தியா, ஆப்ரிக்கா,** ஆகிய நாடுகளில் பயிரிடப்படுகிறது. இதன் எண்ணெயும் தேங்காய் எண்ணெய் போலவே பயன்படுகிறது. நமது நாட்டினின்றும் நிலக்கடலை ஏராளமாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. எள், ஆமணக்கு இவை நம் நாட்டில் அதிகமாக விளைகின்றன. ஆமணக்கு எண்ணெய் விளக்குகள் எரிக்கவும், மருந்துப் பொருளாகவும் உபயோகப்படுவதுடன், ஆகாய விமானங்களுக்கும் உபயோகமாகின்றது. வங்காளிகள் கடுகினின்றும் எண்ணெய் எடுத்து, அதை உணவுப்பொருளாக உபயோகிக்கின்றனர். **வட சீனு, மஞ்சூரியா** நாடுகளில் மக்கள் சோயாபீனிலிருந்து எண்ணெய் எடுத்து, உணவுப்பொருளாக உபயோகிக்கின்றனர். ஐரோப்பாவிலுள்ள **மத்தியதரைக்கடல் நாடுகளில்** ஆலிவ் எண்ணெய் தயாரித்து, அதை உணவுப் பொருள்களுடன் கலந்து உபயோகிக்கின்றனர்.

ஆளிவிதை எண்ணெய் வர்ணங்கள் குழைக்கவும், பனை எண்ணெய் சோப் முதலியன செய்யவும் உபயோகமாகின்றன.

வாசனைப் பொருள்கள்:—ஏலக்காய், லவங்கம் (கிராம்பு), ஜாதிக்காய், மிளகு, இஞ்சி, இலவங்கப்பட்டை ஆகியவை வாசனைப் பொருள்கள் ஆகும். இவை உணவிற்கு உருசியைக் கொடுக்கவும், மருந்துப் பொருள்களாகவும் உபயோகப்படுகின்றன. இவை அதிக உஷ்ணம், மிகுந்த மழை இவை உள்ள இடங்களில் நன்கு பயிராகின்றன. தென் இந்தியாவின் மேற்குக் கடற்கரை, இலங்கை, கிழக்கு, மேற்கு இந்தியத் தீவுகள், கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய இடங்களில் இவை அதிகமாகப் பயிராகின்றன. இவற்றுள் மிளகு கிழக்கிந்தியத் தீவுகள், இந்தியா ஆகிய விடங்களிலும், லவங்கம் கிழக்கு ஆப்பிரிக்காவையடுத்த ஸான்ஸிபார் தீவிலும், இலவங்கப்பட்டை இலங்கையிலும் விசேஷமாகப் பயிராகின்றன.

புகையிலை பொடியாகவும், சுருட்டு, சிகரெட்டாகவும், வெற்றிலையுடன் போட்டுக் கொள்ளவும் உபயோகப்படுகின்றது, இது மித உஷ்ணப் பிரதேசங்களில், சுண்ணும்பு கலந்த வண்டல் மண்ணில் நன்கு பயிராகின்றது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் தென் பகுதியில்தான், உலகிலேயே அதிகமான அளவில் புகையிலை பயிராகின்றது. மெக்ஸிகோ, தென் அமெரிக்காவின் வடபாகம் பிலிப்பைன் தீவுகள், மேற்கு இந்தியத் தீவுகள் ஆகிய விடங்களிலும் இது பயிராகின்றது. நமது நாட்டில் சென்னை, பிஹார், ஒரிஸ்ஸா, பஞ்சாப் இராஜ்யங்களில் புகையிலை பயிராகின்றது.

இறைச்சி, பால், உணவு முதலியன:— தானியங்கள், பழங்கள்,பானவகைகள் இவையே யன்றி சில மிருகங்களின் இறைச்சி, மீன், பால் இவையும் மக்களின் உணவுப் பொருள்களாகும். மாடுகள், ஆடுகள், மீன்கள் முதலியன அதிகமாகக் காணும் பகுதிகளைப் பற்றி அறிவோம்.

உஷ்ண மண்டலப் புல்வெளிகளில், சற்று வெப்பம் குறைவாயுள்ள பகுதிகள், மித சீதோஷ்ணப் புல்வெளிகளில் சற்று ஈரம் அதிகமாக உள்ள விடங்கள் இவை




படம் 23. ஆடுமாடுகள்

மாடுகள் வளர்க்க ஏற்றவை. வட, தென் அமெரிக்காக்கள் வட ஆஸ்திரேலியா, சூடான் இவ்விடங்களிலுள்ள புல் வெளிகளிகளில் இறைச்சிக்காகவே மாடுகளை வளர்க்கின்றனர். வடஅமெரிக்காவில் கனடா, ஐரோப்பாவில் இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்வீடன், ஹாலந்து, டென்மார்க், ஸ்விட்ஸர்லாந்து ஆசிய நாடுகள், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய விடங்களில் மித உஷ்ணப் புல்வெளிகளில் பாலுக்காகவே மாடுகளை வளர்க்கின்றனர். இவ்விடங்களில், மாடுகளின் பாலைக்கொண்டு, வெண்ணெய், பாலடைக்கட்டி, உறைந்தபால் பொடி ஆகியவைகளை உற்பத்தி செய்து பல நாடுகளுக்கும் அனுப்புகின்றனர்.

ஆடுகளுக்கு, மாடுகளைப் போன்ற அவ்வளவு செழிப்பான புல் வேண்டியதில்லை. ஆகவே, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, அமெரிக்கா ஐக்கிய நாடுகள், தென் அமெரிக்காவில் ஆர்ஜண்டின, தென் ஆப்பிரிக்கா, ஐரோப்பாவில் ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ், ஆசியாவில் ஆசியா மைனர், ஈரான் பீடபூமி ஆகிய விடங்களில் ஆடுகளை அதிகமாக மேய்க்கின்றனர். ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, வட, தென் அமெரிக்காக் கண்டங்கள் இவற்றினின்றும் ஆட்டிறைச்சியை, கப்பல்களில் குளிரூட்டிய அறைகளில் வைத்து, ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புகின்றனர்.

ஐரோப்பியர்கள் பன்றியின் இறைச்சியையும் உணவாகக் கொகின்றனர். சீன, அமெரிக்கா ஐக்கிய நாடுகள், பிரேஸில், ஆர்ஜண்டின, வட மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் பன்றிகளைப் பெரும் அளவில் வளர்க்கின்றனர். அமெரிக்காவில் மக்காச் சோளத்தையும், ஐரோப்பிய நாடுகளில் பீட் கிழங்கு சக்கை, வெண்ணெய் எடுத்த பால் இவற்றையும் பன்றிகளுக்கு ஆகாரமாகக் கொடுக்கின்றனர்.

மீன்:—இது மக்களது முக்கிய உணவுப் பொருள்களுள் ஒன்ருகப் கருதப்படுகிறது. காட், ஷார்க் (சுராமீன்) இவற்றினின்றும் தயாரிக்கப்படும் எண்ணெய் மருந்துப் பொருளாக உபயோகமாகின்றது. மீன் சக்கை வயல்




படம் 24. மீன்கள் அகப்படுமிடங்கள்

களுக்கு எருவாகவும் உபயோகப்படுகின்றது. ஆழமற்ற கண்டத் திட்டுகளில், பெரும்பாலும் மீன்கள் அபரிமிதமாக வசிக்கின்றன. ஏனெனில் அங்குதான் அவற்றிற்குத் தேவையான சிறு தாவர உணவு கிடைக்கும்.

உலகில் மீன்கள் அதிகமாகக் காணும் பகுதிகள், வட அமெரிக்காவில் **நியூபவுண்டுலாந்து** தீவுக் கருகில், **கனடா**வின் **மேற்குக் கடற்கரை**, வடகடல், சீனு, ஜப்பான் நாடுகளையடுத்த கடல்கள் இவையே. நியூபவுண்டுலாந்துக் கருகில் உள்ள **கிராண்ட் பாங்ஸ்** என்னும் கண்டதிட்டில் **காட், ஹாலிபட்** முதலிய மீன் வகைகள் ஏராளமாகக் காண்கின்றன. அவ்வாறே, வட கடலில் உள்ள **டாகர் பாங்ஸ்** என்னும் கண்டத் திட்டில் அபரிமிதமாக மீன்கள் வாழ்கின்றன. அக்கடலைச் சுற்றியுள்ள இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, நார்வே, டென்மார்க், வட பிரான்ஸ் முதலிய நாடுகளில் நடைபெறும் முக்கியத் தொழில்களில் ஒன்று மீன் பிடித்தல் ஆகும். பெரிய கப்பல்களில் நீண்ட வலைகள், அல்லது ஆயிரக்கணக்கான தூண்டில்கள் பொருத்திய நீண்ட கயிறுகள் இவற்றைப் பொருத்தி, அக்கப்பல்கள் கடலில் பல நாட்கள் செல்கின்றன. ஒவ்வொரு நாளும் அன்றன்று பிடித்த மீன்களைப் படகுகளில் போட்டு, கடற்கரை நகரங்களுக்கு அனுப்புகின்றனர். அங்கு அவற்றை விசேஷ இரயில் வண்டிகளில் ஏற்றி, விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

கனடாவின் மேற்குக் கரையில் உள்ள நதிகளில் **சாமன்** என்னும் மீன் வகைகள் அதிகமாக இருக்கின்றன. அவற்றைப் பிடித்து, பக்குவப்படுத்தி, டப்பிகளில் அடைத்து, வெளி நாடுகளுக்கு அனுப்புகின்றனர்.

சீனு, ஜப்பான் நாடுகளின் கடற்கரையிலும் மீன்கள் அதிகமாக வசிக்கின்றன. ஆகவே அந்நாடுகளின் மக்களுக்கு இது ஓர் முக்கிய உணவுப் பொருளாகும்.

நமது நாட்டிலும் கிழக்கு, மேற்குக் கடற்கரையிலும் மீன் பிடிக்கும் தொழில் நடைபெறுகின்றது.

**உடை, உறைவிடம் இவற்றிற்கான பொருள்கள் :—**
ஆடையில்லா மனிதன் அரை மனிதன்,'' என்றபடி ஆடைகளே மக்களுக்கு ஏற்றத்தை அளிக்கின்றன. மேலும் நம் மானத்தைக் காக்கவும், உடலைக் குளிரினின்றும் காக்கவும் ஆடைகள் அவசியமானவை. பருத்தி, ரோமம், பட்டு முதலிய பொருள்கள் பெரும்பாலும் ஆடைகள் செய்ய உதவுகின்றன.

பருத்தி :-பருத்திச்செடி வெப்பம் அல்லது மித உஷ்ண நாடுகளில், கரிசல் மண், சுமார் 40 அங்குலம் மழை இவ் வசதிகள் பெற்ற இடங்களில் நன்கு பயிராகின்றது. உலகிலேயே பருத்தி அதிகமாகப் பயிராகுமிடம் அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் தென் பகுதியாகும். இப்பருத்தி நெட்டிழைச் சிம்புடைய உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது. இப் பருத்தியை அங்கேயேயுள்ள நெசவாலைகளில் உபயோகித்துக்கொண்டது போக, எஞ்சியதை, ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புகின்றனர். எகிப்து, சூடான், கிழக்கு ஆப்பிரிக்கா, இந்தியா, பாக்கிஸ்தான், சீனு, ஜப்பான் ஆகிய நாடுகளில் பருத்தி அதிகமாக விளைகின்றது. நம் நாட்டில் பயிராவது பெரும்பாலும் குட்டை இழைச்சிம்புப் பருத்தியாகும். உஷ்ண நாடுகளில் வசிக்கும் மக்களே பெரும்பாலும் பருத்தி ஆடைகளை அணிகின்றனர். பருத்திக் கொட்டை மாடுகளுக்குச் சிறந்த உணவாகின்றது. அதிலிருந்து ஓர் வகை எண்ணெயும் தயாரிக்கின்றனர்.

உரோமம் :— குளிர் மிகுந்த நாடுகளில் வசிக்கும் மக்கள் உரோமத்தால் நெய்யப்பட்ட கம்பள ஆடைகளையே அணிகின்றனர். ஸ்பெயின், ஆஸ்திரேலியா ஆகிய விடங்களிலுள்ள மெரினே என்னும் ஆடு ஏராளமான உரோமத்தைக் கொடுக்கின்றது. ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென் ஆப்பிரிக்கா, துருக்கி, ஈரான், ஆர்ஜண்டினு, பிரிட்டிஷ் தீவுகள், அமெரிக்கா ஐக்கிய நாடுகள், கனடா ஆகிய விடங்களில் ஆட்டு உரோமம் அதிகமாகக் கிடைக்கின்றது. அமெரிக்கா ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள் இவற்றில் தான் கம்பள நெசவு அதிகமாக நடைபெறுகின்றது. நம் நாடு




படம் 25. ரப்பர், பருத்தி விளையுமிடங்கள்

பண்டைய காலம் முதல், கம்பளங்கள், சால்வைகள் இவற்றிற்குப் பெயர் பெற்றது. இப்பொழுது கான்பூர், பெங்களூர் முதலிய விடங்களில் கம்பள நெசவாலைகள் இருக்கின்றன.

திபேத்தில் யாக் என்னும் எருதின் உரோமம், பாலைவனப் பகுதிகளில் ஒட்டகங்களின் உரோமம், தென் அமெரிக்காவில் ஆண்டிஸ் மலை நாடுகளில் லாமா, ஆல்பாகா ஆகிய மிருகங்களின் உரோமம் இவையும் ஆடைகள் நெய்ய உதவுகின்றன.

பட்டு :--செல்வந்தர்கள் பெரும்பாலும் பட்டாடைகளை அணிகின்றனர். பட்டு, பட்டுப் பூச்சியின் உடலில் தானாகவே உற்பத்தியாகும் நூல். பட்டுப் பூச்சிகளுக்கு மல்பரி இலைகளே ஆகாரமானதால், அம்மரங்கள் வளருமிடங்களிலெல்லாம் பட்டு உற்பத்தியாகின்றது. உலகில் பட்டு அதிகமாக உற்பத்தி செய்யும் நாடுகள் சீனா, ஜப்பான், இந்தோ சீனா, இந்தியா, இத்தாலி, பிரான்ஸ், துருக்கி ஆகியவை. அமெரிக்கா ஐக்கிய நாடுகள், சில ஐரோப்பிய நாடுகள் இவற்றில் மரக்கூழ், பருத்தி முதலிய பொருள்களைக் கொண்டு, செயற்கைப்பட்டு தயாரிக்கின்றனர்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நற்சணல் பயிராகின்றது. அதைக்கொண்டு, அங்கு லினன் என்னும் ஓர் வகைத் துணி நெய்கின்றனர். சணல், ரப்பர் இவையும் ஓரளவு நெசவுப் பொருள்களாக உபயோகப்படுகின்றன.

சணல் :— சணல் நன்கு பயிராவதற்காக, அதிக வெப்பம், மிகுந்த நீர் வசதி, ஆண்டுதோறும் புதுப்பிக்கப் பட்ட மண் இவை தேவையாயிருக்கின்றன. உலகில் இந்தியா, பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளில் வங்காளத்தில் தான் சணல் நன்கு பயிராகின்றது. நாட்டின் பிரிவினைக்குப் பிறகு, பீஹார், ஒரிஸ்ஸா பம்பாய், திருவாங்கூர் ஆகிய விடங்களிலும் சணல் பயிரிடப்படுகின்றது. சணல் நாரைக் கொண்டு கோணிகள், கயிறுகள், கித்தான்கள், ஓர் வகைக் காகிதம் இவற்றைச் செய்கின்றனர். கல்கத்தாவில் நூற்றுக் கணக்கான சணல் ஆலைகள் இருக்கின்றன. ஸ்காத்

லாந்திலுள்ள டண்டி என்னும் நகருக்கும் சிறிது கச்சா சணல் ஏற்றுமதியாகின்றது. சீனு, ஜப்பான், இந்தோ-சீனு, தாய்லாந்து, எகிப்து ஆகிய நாடுகளிலும் சிறிதளவு சணல் பயிராகின்றது.

**ரப்பர்** :— ரப்பர் ஓர் வகை மரத்தின் பால். இம்மரம் வெப்பமும், மழையும் அதிகமாக உள்ள விடங்களில் நன்கு பயிராகின்றது. காங்கோ, அமேஸான் நதிக்காடுகளில் ரப்பர் மரங்கள் இயற்கையாக வளர்கின்றன. தற்போது மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள், இலங்கை, திருவாங்கூர் ஆகிய விடங்களில் ரப்பர்த் தோட்டங்கள் இருக்கின்றன. உலகில் உற்பத்தியாகும் ரப்பரில் மிகப் பெரும் அளவு மலேயாவி லேயே கிடைக்கின்றது. மேற்கூறிய நாடுகளினின்றும் ரப்பர் சேகரிக்கப்பட்டு, ஐரோப்பிய, அமெரிக்கா நாடு களுக்கு அனுப்பப்படுகின்றது. அங்கு அதைக்கொண்டு, மோட்டார், சைகில், ஆகாய விமானங்கள் இவற்றிற்கு சக்கரங்கள் (டயர்கள்), வென்னீர்ப் பை, அடைப்பான்கள், கையுறை, மழைக்காலத்தில் தரித்துக்கொள்ளும் ஓவர் கோட், பூட்ஸ், குழாய்கள், மின்சாரக் கம்பிகளுக்கு உறை முதலிய பல்வேறு பொருள்களைத் தயாரிக்கின்றனர்.

இனி மக்களின் உறைவிடத்திற்கான பொருள்களைப் பற்றி அறிவோம்.

**மரவகைகள்** :— வீடுகள் கட்டுவதற்கு மரவகைகள் வெகு அவசியமானவை. ஊசியிலைக் காடுகளில் காணும் மரவகைகளையும், அவற்றை வெட்டிச் சேகரிக்கும் முறை களையும் பற்றி முன்னொரு பாடத்தில் விவரிக்கப்பட்டன. இம்மரங்களைக்கொண்டு தூலங்கள், கதவுகள், ஜன்னல்கள், அலமாரிகள் முதலியவை செய்யப்படுகின்றன. மித உஷ்ண நாடுகளிலும், பருவக்காற்றுப் பிரதேசங்களிலும் உறுதியுள்ள மரங்கள் கிடைக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை ஐரோப்பிய நாடுகளில் ஓக், ஆசியா நாடுகளில் தேக்கு ஆகியவை. இவையும் வீடு கட்ட உதவுகின்றன. தேக்கு மரத்தைக் கரையான்கள் அரிக்கா. வீடு கட்டுவதற்குத்தவிர

மேஜை, நாற்காலி, பெஞ்சுகள் முதலியவை செய்யவும் இம்மரங்கள் உபயோகப்படுகின்றன. சில விடங்களில் பனை, மூங்கில் முதலிய மரங்களும் கூட வீடு கட்ட உதவுகின்றன.

சிமெண்ட் :— தற்காலத்தில் பெரிய கட்டிடங்கள், பாலங்கள், அணைக்கட்டுகள், சாலைகள் இவை அமைப்பதற்குச் சிமெண்ட் பெரிதும் உபயோகமாகின்றது. களிமண், சுண்ணாம்புக்கல், மற்றும் சில பொருள்கள் இவற்றை உருக்கிக் கலவை செய்த பொருளே சிமெண்ட் ஆகும். இதைக்கொண்டு கட்டப்படும் கட்டிடங்கள் மிகவும் உறுதியானவை. சிமெண்டுடன் சிறிது மணல், சிறு கற்கள் இவை கலந்த கலவைக்குக் கான்கிரீட் எனப் பெயர். உள்ளே இரும்புக் கம்பிகள் செலுத்தப் பெற்ற, கான்கிரீட் (Reinforced Concrete) மேலும் உறுதியானது. ஐரோப்பிய, அமெரிக்கா நாடுகளில் சிமெண்ட் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. தென் இந்தியாவில், கோயம்பத்தூருக்கு அருகிலுள்ள மதுக்கரை, திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள டால்மியாபுரம், திருநெல்வேலிக்கு அருகிலுள்ள தாழையூத்து ஆகிய விடங்களிலும் சிமெண்டு உற்பத்தியாகின்றது.

எஃகு :— இரும்பு, நிலக்கரி, சுண்ணாம்புக்கல், மங்கனீசு, இவற்றைக் கலந்து உருக்கிய பொருளே எஃகு ஆகும். இது மிகவும் உறுதியானது. இயந்திரங்கள், உத்திரங்கள், கவசங்கள், தகடுகள், பெரிய தூலங்கள், பல வகைக் கருவிகள் இவை செய்ய எஃகு உபயோகமாகின்றது. அமெரிக்கா ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, பிரான்ஸ் பெல்ஜியம், ஜெர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளில் பெரிய இரும்பு, எஃகு தொழிற்சாலைகள் இருக்கின்றன. நமது நாட்டில் ஜெம்ஷட்பூர், பத்ராவதி ஆகிய விடங்களில் இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. மேலும் இங்கு மூன்று தொழிற்சாலைகளை அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.




படம் 26. மண்ணெண்ணெய் கிடைக்குமிடங்கள்

**உலோகப் பொருள்கள்:—** பூமியின் உட்பகுதியில் பல வகை உலோகப் பொருள்கள் பொதிந்து கிடக்கின்றன. மக்கள் இவற்றை வெட்டியெடுத்து, பல வேலைகளுக்கு உபயோகிக்கின்றனர். இவற்றுள் முக்கியமானவை நிலக்கரி, இரும்பு, மங்கனீசு, தகரம், மண்ணெண்ணெய், பொன், வெள்ளி, அபிரகம் ஆகியவை.

இனி இவை கிடைக்கு மிடங்கள், இவற்றின் உபயோகங்கள் இவற்றை அறிவோம்.

**நிலக்கரி** :—பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன், உலகில், சில விடங்களில் இருந்த காடுகள் மண்ணில் புதைந்துபோயின. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவற்றின் மீது படிப்படியாகப் படிந்த மண் அழுந்து வதால் மரங்கள் கருப்பாக மாறிவிட்டன. இதுவே நிலக்கரி யாகும். நிலக்கரியில் பல வகைகள் உண்டு. இரயில் வண்டி கள், கப்பல்கள், இயந்திரங்கள் இவற்றை ஓட்டவும், உலோகப் பொருள்களைச் சுத்தம்செய்யவும், சாயவகைகள் செய்யவும், இதினின்றும் தயாரிக்கப்பெற்ற ஓர் வகை வாயு வைக்கொண்டு விளக்குகள் எரிக்கவும், வேறு பல வேலை களுக்கும் நிலக்கரி உபயோகமாகின்றது. மரக்கட்டைகளை விட இது நெடுநேரம் எரிவதுடன், அதிக வெப்பமும் கொடுக்கக் கூடியது. உலகில், **அமெரிக்கா ஐக்கிய நாடுகளி** லேயே மிக அதிகமான நிலக்கரி கிடைக்கின்றது. மேலும், **இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி, ரஷ்யா, இந்தியா, சீனு, ஜப்பான், தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா** ஆகிய விடங்களிலும் நிலக்கரிக்கனிகள் இருக்கின்றன. நம் நாட் டில் **தாமோதர நதிப்பள்ளத்தாக்கு, வார்தாப்பள்ளத்தாக்கு, கோதாவரிப் பள்ளத்தாக்கு,** தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள **நெய்வேலி** ஆகிய விடங்களில் நிலக்கரி கிடைக்கின்றது.

**இரும்பு** :—தற்காலத்தில் ஏறக்குறைய எல்லா வேலை களுக்கும் இரும்பு இன்றியமையாததாக இருப்பதால், இக்காலத்தை **இரும்புக்காலம்** எனக் கூறுவது மிகை யாகாது. இரயில்வே எஞ்ஜின்கள், தண்டவாளங்கள், கப் பல்கள், தூலங்கள் (கர்டர்கள்), கம்பிகள், ஆணிகள், தகடு




படம் 27. இரும்பு அகப்படுமிடங்கள்

கள், மேலும் நூற்றுக்கணக்கான பொருள்கள் இரும்பைக் கொண்டு செய்யப்படுகின்றன. பூமியில் வெட்டி யெடுக்கப் படும் இரும்புத் தாது வேறு பல பொருள்களுடன் கலந்து காணப்படுகின்றது. இதை நிலக்கரியுடன் கலந்து பெரிய உலைக்களங்களில் உருக்க, இரும்பு உருகி வருகின்றது. இரும்பைக் கொண்டு எஃகு செய்யப்படும் வகை முன்பு கூறப்பட்டது. இரும்பு, நிலக்கரி இவை இரண்டும் வெகு கனமுள்ளவை ஆதலால், இவை ஒன்றுக்கொன்று சமீபத் தில் கிடைக்குமிடங்களிலேயே இரும்புத் தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன. இரும்பு அகப்படுவதிலும், அமெரிக்கா ஐக் கிய நாடுகளே முதல் ஸ்தானம் வகிக்கின்றன. இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்வீடன், ஸ்பெயின், இந் தியா, ஜப்பான், சீனு, ரஷ்யா, கனடா ஆகிய விடங்களிலும் இரும்புத்தாது அகப்படுகின்றது.

மங்கனீசு:—இந்த உலோகப் பொருள் இரும்பைக் கொண்டு எஃகுசெய்ய, கண்ணுடிகளுக்குச் சாயமேற்ற, கிருமி நாசினி, சலவைத்தூள் இவை செய்ய உப யோகமாகின்றது. உலகில் மங்கனீசு வெகு அதிக மாகக் கிடைக்கும் நாடு ரஷ்யா. இரண்டாவது ஸ்தானம் வகிப்பது இந்தியா. இங்கிருந்தே இது அமெரிக்க, ஐரோப் பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. பிரேஸில், மேற்கு ஆப்பிரிக்கா ஆகியவிடங்களில் சிறிது மங்கனீசு கிடைக் கின்றது.

தகரம் (வெள்ளீயம்):—இது உலோகங்களுடன் சேர்த்து, கலவை உலோகம் செய்யவும், பாத்திரங்களில் களிம்பு ஏருமலிருக்க, அவற்றிற்குப் பூசவும், மெல்லிய இரும்புத் தகடுகள் மீது பூசி, டப்பாக்கள் செய்யவும் உதவுகின்றது. உலகில் கிடைக்கும் தகரத்தின் மிகப் பெரும்பகுதி மலேயா விலிருந்தே கிடைக்கின்றது. மேலும் சீனு, தாய்லாந்து, தென்பர்மா, கிழக்கிந்தியத்தீவுகள், மேற்கு ஆப்பிரிக்கா, தென் அமெரிக்காவில் பொலிவியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்தின் தென் மேற்குப்பகுதி ஆகிய விடங்களிலும் தகரம் கிடைக் கின்றது.

**மண்ணெண்ணெய்:**—விளக்குகள் எரிக்கவும், மோட்டார், கப்பல், ஆகாயவிமானம் இவற்றை ஓட்டவும் மண்ணெண்ணெய் முக்கியமாக உபயோகப்படுகின்றது. பூமிக்குள் இது ஏற்படும் வகையும் ஏறக்குறைய நிலக்கரியைப் போன்றதே. வெகு ஆழத்தில் இது மணற்பாறைகளில் தேங்கி நிற்கும். இயந்திரங்களின் உதவியால் வெகு நீண்டகுழாய்களைப் பூமிக்குள் செலுத்துகின்றனர். இக்குழாய்கள் எண்ணெய் தேங்கியிருக்கு மிடத்தை அடைந்ததும், அவற்றின் வழியே எண்ணெய் பீறிட்டுவரும். அந்நிலையில் இது கருப்பாகவும்,கனமாயும் இருக்கும். இதற்குப் **பண்படா எண்ணெய்** எனப்பெயர். இதைக் குழாய்களின் மூலம் சுத்தம் செய்யுமிடங்களுக்கு எடுத்துச்சென்று, சுத்தம் செய்து, பெட்ரோல், கிரஸின், பாரபின், மெழுகு, நாப்தா முதலிய பொருள்களைப் பெறுகின்றனர். மண்ணெண்ணெய் அதிகமாகக் கிடைக்கு மிடங்கள் **அமெரிக்கா ஐக்கிய நாடுகள், மெக்ஸிகோ, கனடா, வெனிஸுலா, பெரு, ரஷ்யா, ருமேனியா, காகஸஸ் பிரதேசம், ஈரான், ஈராக், பர்மா, கிழக்கிந்தியத் தீவுகள்** ஆகியவை. பாக்கிஸ்தானில் **மேற்குப்பஞ்சாபி**லும் நம் நாட்டில் **அஸ்ஸாமிலும்** சிறிதளவு மண்ணெண்ணெய் கிடைக்கின்றது.

**பொன்:**—நாணயங்கள், ஆபரணங்கள் இவைசெய்ய, பொன் உபயோகப்படுகின்றது. இது உலகில் சிறிதளவே கிடைப்பதால், விலையுயர்ந்ததாக இருக்கின்றது. உலகிலேயே, தென் ஆப்பிரிக்காவில் **ஜோஹான்ஸ்பர்க்** நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் தான் பொன் அதிகமாகக் கிடைக்கின்றது. **அலாஸ்கா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், மெக்ஸிகோ பிரேஸில், சைபீரியா, ஆஸ்திரேலியா, மேற்கு ஆப்பிரிக்கா** ஆகிய விடங்களிலும் பொன் கிடைக்கின்றது. நமது நாட்டில் இந்த உலோகம் மைசூர் இராஜ்யத்திலுள்ள **கோலாரி**ல் கிடைக்கின்றது.

**வெள்ளி:**—இது பொன்னை விடச் சற்று விலைகுறைவாயுள்ள உலோகம். பாத்திரங்கள், நாணயங்கள், நகைகள் செய்ய இது உதவுகின்றது. மேலும், சில விஞ்ஞானக்




படம் 28. பொன், வெள்ளி, அபிரகம் கிடைக்கு மிடங்கள்

கருவிகள் செய்யவும் இது உதவுகின்றது. **மெக்ஸிகோ, அமெரிக்கா ஐக்கிய நாடுகள், கனடா, பெரு, பொலிவியா, ஜெர்மனி, பர்மா, கிழக்கிந்தியத் தீவுகள், ஜப்பான்** ஆகிய இடங்களில் வெள்ளி கிடைக்கின்றது.

**அபிரகம்:**—இது கண்ணாடியைப்போல ஒளி புகக் கூடியது. ஆனால் எளிதில் உடையாது. அதிக உஷ்ணத்தையும் தாங்கக்கூடியது. ஆகவே இரும்பு உலைக்களங்களுக்கு ஜன்னலாக இதை உபயோகிக்கின்றனர். மேலும் பல மின்சாரக் கருவிகள் செய்யவும் இது பயன்படுகின்றது. உலகிலேயே நம் நாட்டில் **பிஹார், நெல்லூர்** ஆகிய இடங்களில் தான் இது பெரும் அளவில் கிடைக்கின்றது.

**உலகின் முக்கிய செய்தொழில்கள்:**—காலப் போக்கில், நாகரிக வளர்ச்சியின் காரணமாக, மக்களது தேவைகள் அதிகரித்துள்ளன. இத்தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்கான பொருள்களைப் பெருத்த அளவில் செய்ய, தொழிற்சாலைகள் ஏற்பட்டுள்ளன.

தொழிற்சாலைகள் ஓரிடத்தில் அமைய, சில வசதிகள் வேண்டும். முதலாவதாக, மூலப்பொருள் அங்கு இருக்க வேண்டும்; அல்லது வெளியிடத்திலிருந்து அதைச் சுலபமாகக் கொண்டுவர வசதிகள் வேண்டும். இயந்திரங்களை இயக்க, நிலக்கரி, மின்சாரம் போன்ற சக்தி வேண்டும். மேலும், முதலாளிகள், பாட்டாளிகள், சுலபமான போக்கு வரவு வசதிகள், விற்பனை ஸ்தலங்கள், அரசாங்க ஆதரவு இவையும் தேவை. இத்தகைய வசதிகள் அனைத்தும், அல்லது அவற்றில் பெரும்பாலானவை காணுமிடங்களிலேயே தான் தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன.

இனி, உலகில் சில முக்கியத்தொழில்களைப் பற்றி அறிவோம்.

**இரும்பு, எஃகு தொழில்:**—இத்தொழில் உலகில் எல்லாத் தொழில்களுக்கும் அடிப்படையானது. 'ஏனெனில் எத்தொழிலுக்கான இயந்திரங்களும் இரும்பினாலன்றோ செய்யப்படுகின்றன? இரும்புத்தாது கிடைக்குமிடத்துக்குச் சமீபத்திலேயே நிலக்கரி அல்லது ஜலமின்

சக்தி இவை கிடைக்குமிடங்களில் தான் இரும்புத் தொழிற் சாலைகளை நிருவுதல் சாத்தியமாகின்றது. மேலும் எஃகு செய்வதற்கு மாங்கனீசு, சுண்ணும்புக்கல் முதலியனவும் வேண்டும். அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் பிட்ஸ்பர்க், பிலடெல்பியா, சிக்காகோ, செயிண்ட்லூயி ஆகிய நகரங்களிலும், இங்கிலாந்தில், பர்மிங்ஹாம், ஷெப்பீல்டு, கவெண்டரி, நியூகாஸில், டார்லிங்டன் ஆகிய நகரங்களிலும், பிரான்ஸில் லீல், பெல்ஜியத்தில் லீஜ், நாமூர். மான்ஸ் ஜெர்மனியில் எஸ்ஸென், டார்ட்மண்ட், பிரமன், ரஷ்யாவில் டானட்ஸ், பள்ளத்தாக்கு, யூரல்மலைப்பிர தேசம், ஜப்பான் ஆகிய விடங்களிலும், இந்தியாவில் ஜெம்ஷட்பூர், பத்ராவதி ஆகிய விடங்களிலும் இரும்பு, எஃகு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இரும்பு, எஃகு இவற்றைக் கொண்டு செய்யப்படும் பொருள்களில் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.

நெசவுத் தொழில் : பருத்தி :— பருத்தி நெசவுக்கு, மூலப்பொருள், சக்தி, பாட்டாளிகள், முதலாளிகள் போக்கு வரவு வசதிகள், விற்பனை ஸ்தலங்கள், ஈரக்கசிவுள்ள சீதோஷ்ண நிலை இவை இன்றியமையாதவை. ஈரக்கசிவு இல்லையேல், நூல்கள் அறுந்துவிடும். இத்தகைய வசதிகளில் பெரும்பாலானவை அமெரிக்கா ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா, சீனு, ஜப்பான், இந்தியா ஆகிய விடங்களில் காணப்படுகின்றன. எனவே, அங்கெல்லாம் பருத்தி நெசவு பெரிதும் நடைபெறுகின்றது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளில், அட்லாண்டிக் கடற்கரையின் தென் பகுதி, மெக்ஸிகோ வளைகுடாவிற்கு வடக்கிலுள்ள பிரதேசங்கள் ஆகிய விடங்களில் நெட்டிழைப் பருத்தி ஏராளமாக விளைகின்றது. அங்கு பல நீர்வீழ்ச்சிகள் இருப்பதால், மின்சார வசதியும் அதிக அளவில் காண்கின்றது. ஆறுகள், துறைமுகங்கள் இவை வாணிபத்திற்கு உதவியாக இருக்கின்றன. எனவே, பிலடெல்பியா, நியூயார்க் போன்ற நகரங்களில் பருத்தி நெசவு அதிகமாக நடைபெறுகின்றது. இங்கிலாந்து, ஸ்காத்லாந்து நாடுகளில் இதர வசதிகள் ஒருங்கே

அமைந்திருப்பினும், அங்கு பருத்தி விளைவதில்லை. எனினும் அதை அமெரிக்கா ஐக்கிய நாடுகள், எகிப்து, இந்தியா முதலிய நாடுகளினின்றும் வரவழைத்துக் கொள்கிறார்கள். மான்செஸ்டர் (லங்காஷயர்), கிளாஸ்கோ முதலிய நகரங்கள் பருத்தி நெசவுக்குப் பெயர் பெற்றவை. மேற்கூறிய இதர ஐரோப்பிய நாடுகளிலும் இதே வகையான முறையில் பருத்தி நெசவு நடைபெறுகின்றது. சீனா, ஜப்பான் நாடுகள் இந்தியாவிலிருந்தும் ஏரளவு பருத்தியை இறக்குமதி செய்து கொள்கின்றன.

நமது நாட்டில், பம்பாய், ஆமதாபாத், நாகபுரி, ஷோலாப்பூர், கான்பூர், சென்னை, கோயம்பத்தூர், மதுரை, அம்பாசமுத்திரம். தூத்துக்குடி முதலிய இடங்களில் பருத்தி நூல் நூற்றல், நெசவுவேலை இவை நடைபெறுகின்றன.

கம்பள நெசவு :—கம்பள நெசவுக்கும், பருத்தி நெசவுக்கான வசதிகளைத் தவிர, உரோமத்தைச் சுத்தம் செய்ய ஏராளமான தண்ணீர் வேண்டும். இங்கிலாந்தில் யார்க்ஷயர், டுவீட் நதிப் பள்ளத்தாக்கு ஆகிய விடங்களில் கம்பள நெசவு நடைபெறுகின்றது. அவ்விடங்களில் கிடைக்கும் ரோமத்தைத் தவிர, ஆஸ்திரேலியா, நியூஸீலந்து, தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களிலிருந்து உரோமம் இறக்குமதியாகின்றது. மேலும், ஐரோப்பாவில், ரஷ்யா, பிரான்ஸ், பெல்ஜியம்; ஜெர்மனி ஆகிய நாடுகளிலும், அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் பிலடெல்பியா நகரிலும், ஜப்பானிலும், இந்தியாவில் காஷ்மீரம், பஞ்சாபிலுள்ள தாரிவால், மைசூர் இராஜ்யத்திலுள்ள பெங்களூர் ஆகிய விடங்களிலும் கம்பள நெசவு நடைபெறுகின்றது.

பட்டு நெசவு :—மல்பரி மரங்கள் நன்கு வளரும் பகுதிகளில் எல்லாம் பட்டு நெசவு சிறப்பாக நடைபெறுகின்றது. சீனாவில் ஹாங்கோ, காண்டன் நகரங்கள், ஜப்பானில் யோகஹாமா, இத்தாலியில் வெனிஸ், மிலான் நகரங்கள், பிரான்ஸில் லையான்ஸ் ஆகியவையும் பட்டு நெசவுக்குப் பெயர் பெற்றவை. இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா ஐக்கியநாடுகள்,இவை கச்சாப் பட்டை வரவழைத்து,

சிறிதளவு பட்டு நெசவு செய்கின்றன. நமது நாட்டில் மேற்கு வங்காளம், அஸ்ஸாம், காஷ்மீரம், பஞ்சாப், பம்பாய், ஆந்திரம், சென்னை, மைசூர் இராஜ்யங்களில் பட்டு நெசவு நடைபெறுகின்றது.

**சணல் நெசவு** :—இத்தொழில் சிறப்பாக கல்கத்தா, அதன் அருகிலுள்ள ஹௌரா நகரங்களில் நடைபெறுகின்றது. கோணிப் பைகள், கித்தான்கள், கயிறுகள் முதலியன ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. ஸ்காத்லாந்திலுள்ள டண்டி நகரில், இந்தியாவினின்றும் கச்சாச் சணலை இறக்குமதி செய்து,கித்தான்கள், கயிறுகள் முதலியவற்றைச் செய்கின்றனர்.

**லினன் நெசவு** :—அயர்லாந்து, பெல்ஜியம், பிரான்ஸ், போலந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில் நற்சணல் என்ற ஓர் வகைச் செடி வளர்கின்றது. இதன் நாரைக் கொண்டு லினன் என்ற ஒரு வகைத் துணி நெய்கின்றனர்.

**கண்ணாடித் தொழில்**:—இக் காலத்தில் நாம் பலவகைக் கண்ணாடிப் பொருள்களை தினந்தோறும் உபயோகிக்கிறோம் அன்றோ? கண்ணாடி, ஒருவகை மணல், சில இரசாயனப் பொருள்கள் இவை சேர்த்து உருக்கி செய்யப்படுகின்றது. கண்ணாடித் தொழிற்சாலைகள் அமெரிக்கா ஐக்கிய நாடுகள், ஜெர்மனி, இங்கிலாந்து, பெல்ஜியம், ஜப்பான் முதலிய நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. நமது நாட்டில் பம்பாய், சென்னை இராஜ்யங்களில் சில கண்ணாடித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆனால் இவை பெருத்த அளவில் இல்லை.

**காகித உற்பத்தித் தொழில்** :—செய்தித் தாள்கள், புத்தகங்கள், மாணவர்களுக்கும், மற்றும் பலருக்கும் வேண்டிய நோட்டுப் புத்தகங்கள் இவற்றிற்காகக் காகிதங்கள் அவசியமன்றோ? காகிதம் பெரும்பாலும் ஊசியிலைக் காட்டு மரங்கள், மூங்கில் இவற்றினின்றும் தயாரிக்கப்படும் மரக்கூழ் காகிதம் செய்ய உதவுகின்றது. மேலும், ஒருவகைப் புல், துணிக்கந்தை, கழிவுச்சணல் முதலியன

வும் ஓரளவு காகிதம் உற்பத்தி செய்ய உதவுகின்றன. முற் காலங்களில் காகிதம் கையாலேயே செய்யப்பட்டு வந்தது. ஆனால் இப்போது இதன் தேவை வெகுவாக அதிகரித்து விட்டதால், தேவைக்கான அளவு காகிதத்தைக் கையா லேயே உற்பத்தி செய்வது சாத்தியமில்லாமலிருக்கின்றது. ஆகவே, இப்பொழுது, காகித உற்பத்திக்காகப் பெரிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஊசியிலைக் காட்டு மரங்களே காகித உற்பத்திக்குப் பெரும் அளவில் உபயோகமாவதால், அவ்வகை மரங்கள் காணும் கனடா, பின்லாந்து, நார்வே ஆகிய நாடுகளில் பெரும் அளவிலும், ஜப்பான் முதலிய இதர நாடுகளில் ஓர் அளவிலும் காகித உற்பத்தி நடைபெறுகின்றது. நம் நாட்டில், வங்காளத்தி லுள்ள டிட்டாகர், மைசூரிலுள்ள பத்திராவதி, ஆந்திர இராஜ்யத்திலுளள இராஜமகேந்திரபுரம் ஆகிய விடங் களில் காகிதத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவ்விடங் களில் மூங்கில், ஓர் வகைப் புல் இவற்றைக் கொண்டே காகிதம் செய்கின்றனர்.

இரசாயனத் தொழில்கள் :—இரசாயனத் தொழில் களுக்குத் தேவையான முக்கிய வசதிகள் இரும்பு, நிலக்கரி, தொழில் நுட்பம் அறிந்த தொழிலாளிகள், பல்வேறு இர சாயனங்கள் ஆகியவை. இரசாயன எருக்கள், மருந்துப் பொருள்கள், சாயங்கள், பல்வேறு அமிலங்கள், சோப் முதலியன செய்தல் பொதுவாக இரசாயனத் தொழில்கள் என வழங்குகின்றன. அமெரிக்கா ஐக்கிய நாடுகள், ஜெர் மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், ரஷ்யா, போலந்து, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளில் பல்வேறு இரசாயனத் தொழில்கள் நடைபெறுகின்றன. இந்தியாவில் சிந்திரி என்னுமிடத்தில் இரசாயன உரம் தயாரிக்கும் பெரிய தொழிற்சாலை யொன்றை அமைத்திருக்கின்றனர்.

சர்க்கரைத் தொழில் :—கரும்பு, பீட்கிழங்கு இவை இரண்டும், பொதுவாக சர்க்கரை செய்ய உதவுகின்றன. வெளி நாடுகளாகிய கிழக்கு, மேற்கு இந்தியத் தீவுகள், இந்தியா, ஆப்பிரிக்காவின் சமீபத்திலுள்ள மொரிஷஸ்

தீவு, தென் அமெரிக்காவின் வடபகுதி இவற்றில் கரும்பு அதிகமாகப் பயிராகின்றது. ஆகவே இந் நாடுகளில் சர்க்கரை ஆலைகள் அதிகமாக இருக்கின்றன. ஜாவா (கிழக்கிந்தியத் தீவுகள்), கியூபா (மேற்கு இந்தியத் தீவுகள்), மொரிஷஸ், கயானு (தென் அமெரிக்கா) ஆகிய விடங்களிலிருந்து சர்க்கரை அதிக அளவில் இதர நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. நமது நாட்டில் கரும்பு மிகப் பெருத்த அளவில் பயிரிடப்பட்ட போதிலும் அது இங்குள்ளவர்களுக்கே பற்ருதாகையால், வெளி நாடுகளிலிருந்தும் சிறிது சர்க்கரை வரவழைக்கப் படுகின்றது.

மேற்கு ஐரோப்பியநாடுகள், அமெரிக்கா ஐக்கிய நாடுகள், கனடா ஆகிய மித உஷ்ண நாடுகளில் கரும்பு விளைவதில்லை. அங்கெல்லாம் பீட்கிழங்கைப் பயிரிட்டு, அதிலிருந்து சர்க்கரை எடுத்து, உபயோகிக்கின்றனர்.

### உணவு, உடை, மூலப் பொருள்கள் இவற்றிற்காக உலக நாடுகளிடையே சார்பு.

இதுவரை, உலக மக்களுக்கான ஊண், உடை, உறைவிடம் ஆகியவைகளுக்கு வேண்டிய முக்கியப் பொருள்கள் எவை என்றும், அவை எந்தெந்த நாடுகளில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன என்றும் அறிந்தோம். ஆனுல் எந்த நாடும் தனது தேவைக்கான எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்துக் கொள்ள முடிவதில்லை. இதற்குக் காரணம், அவற்றிற்கான வசதிகள் அனைத்தும் அங்கு கிடைக்காமல் இருப்பதேயாம். ஆகவே, ஒவ்வொரு நாடும் அங்கு வசதிகள் உள்ள பொருள்களைப் பெருத்த அளவில் உற்பத்தி செய்து, தனது தேவைக்குப் போக எஞ்சியதை இதர நாடுகளுக்கு அனுப்பி, அவற்றினின்றும், தனக்குத் தேவையான இதரப் பொருள்களை வரவழைத்துக் கொள்கின்றது. இதற்குச் சில உதாரணங்களை ஆராய்வோம்.

இங்கிலாந்தில் செய்தொழில்களே அதிகமாக நடைபெறுகின்றன. இவற்றிற்கான மூலப் பொருள்கள், உணவுப் பொருள்கள் இவற்றை வெளி நாடுகளினின்றும்

வரவழைத்துக் கொண்டு, திரும்ப, இயந்திரங்கள், ரசாயனப் பொருள்கள், ஆடைகள், தோல் சாமான்கள், இரும்பு, எஃகு சாமான்கள் இவற்றை ஏற்றுமதி செய்து விடுகின்றது. இங்கிலாந்துக்கு வேண்டிய சர்க்கரை கியூபாவிலிருந்தும், பழங்கள் காலிபோர்னியாவிலிருந்தும், இறைச்சி அமெரிக்கா ஐக்கிய நாடுகள், ஆர்ஜண்டினு முதலிய நாடுகளிலிருந்தும், கோதுமை, அமெரிக்கா ஐக்கிய நாடுகள், கனடா, ஆர்ஜண்டினு, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளிலிருந்தும் இறக்குமதியாகின்றன. தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களாகிய பருத்தி, அமெரிக்கா ஐக்கிய நாடுகள், எகிப்து முதலியவற்றினின்றும். உரோமம் ஆஸ்திரேலியா, நியூஸீலந்து, தென் ஆப்பிரிக்கா நாடுகளினின்றும், மங்கனீசு, அபிரகம், சணல் முதலியவைகளை இந்தியாவினின்றும் இறக்குமதி செய்து கொள்கின்றது.

இவ்வாறே நாம் பருத்தி, பருத்தி ஆடைகள், சணலும், சணல் பொருள்களும், தேயிலை, தோல், எண்ணெய் வித்துக்கள், வாசனைப் பொருள்கள் இவற்றை ஏற்றுமதி செய்துவிட்டு, ஆடைகள், இயந்திரங்கள் மருந்து வகைகள், காகிதம், கண்ணுடி, சாயவகைகள் போன்ற பல பொருள்களை இறக்குமதி செய்து கொள்ளுகிறோம்.

மேற்கூறியவற்றின் காரணமாக, உலக நாடுகள் ஒவ்வொன்றும் தம் தேவைகளைப் பூர்த்தி செய்ய, இதர நாடுகளை எதிர்பார்க்கின்ற தென்பதை அறிகிறோம். இச் சார்பு, நாடுகளிடையே வாணிபம், நட்பு இவற்றை வளர்க்கின்றது.

## பயிற்சி

1. மக்களின் முக்கியத் தேவைகள் எவை ?
2. பூமியே மக்களின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றது என்பது எவ்வாறு பொருந்தும் ?
3. கீழ்க்கண்ட பொருள்கள் நன்கு விளையத் தேவையான சாதனங்களையும், உலகில் அவை அதிகமாக விளையு

மிடங்களையும் கூறுக:- நெல், கோதுமை, கரும்பு, சணல், ரப்பர்.

4. பான வகைகள் எவை ? அவை எங்கெங்கு அதிகமாகக் கிடைக்கின்றன ?

5. ஆலிவ், ஆமணக்கு, ஆளிவிதை இவற்றின் எண்ணெய்கள் எவ்வாறு உபயோகமானவை ?

6. உலகில் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் இடங்களையும், அவற்றின் உபயோகங்களையும் கூறுக.

7. தென் இந்தியாவில் சிமெண்டு செய்யுமிடங்கள் எவை?

8. நிலக்கரி, மங்கனீசு இவற்றின் உபயோகங்களைக் கூறுக.

9. மண்ணெண்ணெயினின்றும் கிடைக்கும் பொருள்கள் எவை ?

10. ஓரிடத்தில் தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கத் தேவையான வசதிகள் எவை ?

11. கீழ்க்கண்ட விடங்களில், குறிப்பிடப்பட்ட தொழில்கள் நடைபெறக் காரணம் என்ன ? இங்கிலாந்தில் பருத்தி நெசவு; அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் இரும்பு, எஃகுத் தொழில்.

12. ஒவ்வொரு நாட்டுமக்களுக்கும் தேவையான எல்லாப் பொருள்களும் அந்நாட்டிலேயே கிடைப்பதில்லை. இதன் விளைவுகள் யாவை ?

13. கீழ்க்கண்டவற்றை இணைத்து எழுதுக:—

| | |
|---|---|
| சணல் ஆலைகள் | பிட்ஸ்பர்க் |
| பொன் சுரங்கங்கள் | கல்கத்தா |
| காகிதம் செய்தல், | லையான்ஸ் |
| இரும்பு, எஃகு தொழிற்சாலை. | ஜோஹான்ஸ்பர்க் |
| மீன்பிடித்தல் | டிட்டாகர் |
| பட்டு நெசவு | ஸ்விட்சர்லாந்து |
| பாற்பண்ணைப் பொருள்கள் | கான்பூர் |
| சிமெண்டு செய்தல் | பெல்ஜியம் |
| கம்பள நெசவு | மதுக்கரை |
| கண்ணாடி செய்தல் | டாகர்பாங்க் |

14. கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்க:—

i மங்கனீசு உற்பத்தியில் இந்தியா வகிக்கும் ஸ்தானம் ——.

ii இந்தியாவில் தேயிலை அதிகமாகப் பயிராகும் இராஜ்யம் ———.

iii மத்திய ஆசிய மக்களுக்கு உரோமம் கொடுக்கும் மிருகம் ———.

iv இந்தியாவில் ரப்பர் பயிராகுமிடம் ———.

v உலகில் மண்ணெண்ணெய் அதிகமாகக் கிடைக்கும் நாடு ———.

15. உலகப் படமொன்றில், நெல், கோதுமை, கரும்பு, பருத்தி இவை அதிகமாக விளையுமிடங்களைக் குறிப்பிடுக.

16. உங்கள் ஊருக்குச்சமீபத்தில் தொழிற்சாலை, துறைமுகம், சந்தை, அல்லது புகைவண்டி நிலையம் இருப்பின், அங்கு சென்று, நடப்பவற்றைக் கவனித்து, குறிப்பு எழுதுக.

## 7. உலகப் போக்குவரவு சாதனங்களும், மார்க்கங்களும்

உலகின் பல்வேறு நாடுகளும் தமது எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள, பிறநாடுகளின் உதவியைத் தேட வேண்டியிருக்கின்றதென்றும், இதன் காரணமாக, நாடுகளிடையே வாணிபம் நடைபெறுகிறதென்றும், முன் பாடத்தில் அறிந்துக் கொண்டோம். இனி இவ்வாணிபப் பொருள்களை ஓரிடத்திலிருந்து, மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்ல, தேவையான போக்குவரவு வசதிகளையும், மார்க்கங்களையும் பற்றி அறிந்துக் கொள்வோம்.

போக்குவரவு மார்க்கங்களை, தரை மார்க்கங்கள், நீர் மார்க்கங்கள், ஆகாய மார்க்கங்கள் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். தரை மார்க்கங்களை மேலும், சாலைகள், இருப்புப்பாதைகள் என இரு பிரிவுகளாகவும் பிரிக்கலாம். எல்லா நாடுகளிலும், சிறந்த, நீண்ட சாலை களை அமைத்திருக்கின்றனர். இவற்றின் வழியே, மக்கள் சைகிள், வண்டி, மோட்டார் முதலிய வாகனங்களில் பிர யாணம் செய்கின்றனர். பொருள்களை மோட்டார் லாரி களிலும் வண்டிகளிலும் எடுத்துச் செல்லலாம். ஆனால் நெடுந் தூரத்திலுள்ள விடங்களுக்குக் குறைந்த காலம், செலவு இவற்றில் மக்கள் பிரயாணம் செய்யவும், பொருள் களை அனுப்பவும் உபயோகமாக இருப்பவை இருப்புப் பாதைகளே.

இனி, உலகின் முக்கிய இருப்புப் பாதைகளைப் பற்றிக் கவனிப்போம்.

**இருப்புப்பாதைகள் :—** யூரேஷ்யாக் கண்டத்தின் வட சமவெளியிலுள்ள முக்கிய இருப்புப்பாதை **டிரான்ஸ் ஸைபீரிய இருப்புப்பாதை** என்பதாம். இது சுமார் 6000மைல் நீள முள்ளது. இதுவே உலகில் மிக நீண்ட பாதை. இது ரஷ்யாவில், பால்டிக் கடற்கரையிலுள்ள **லெனின் கிராட்** நகரில் புறப்பட்டு, ரஷ்யாவின் தலைநகராகிய **மாஸ்கோ** வழியே சென்று, யூரல்மலையைக் கடந்து, **ஒம்ஸ்க்,** இர்க்குட்ஸ்க் நகரங்களைத் தாண்டி, சைபீரியாவின் கிழக்குக் கடற்கரையிலுள்ள **விளாடிவாஸ்டாக்** நகரை அடைகின்றது. இப் பிரயாணம் சுமார் ஒரு வார காலம் பிடிக்கும். இதிலி ருந்து ஒரு இருப்புப்பாதை பிரிந்து, மத்திய ஆசியாவில் காஸ்பியன் கடலுக்கு அருகேயுள்ள நகரங்களுக்குச் செல் கின்றது. சீனாவில் கடற்கரையோரமாக மட்டும் சில இருப்புப்பாதைகள் இருக்கின்றன. நமது நாட்டில் சுமார் 35,000 மைல் நீளமுள்ள இருப்புப்பாதைகள் இருக்கின் றன. உலகில் ஒவ்வொரு நாடுகளின் இருப்புப்பாதை




படம் 29. உலகப் படம் இருப்புப்பாதைகள்

களின் நீளங்களைக் கணக்கிடுகையில், இந்தியா நான்காவது ஸ்தானம் வகிக்கின்றது. நம் நாட்டின் எல்லா முக்கிய நகரங்களும் இருப்புப்பாதைகளால் இணைக்கப் பட்டுள்ளன.

டிரான்ஸ் சைபீரியா இருப்புப்பாதையைத் தவிர ரஷ்யாவில் மேலும் பல நீண்ட இருப்புப் பாதைகள் இருக்கின்றன. இந்நாடு உலக இருப்புப் பாதைகளின் நீளங்களில் இரண்டாவது ஸ்தானம் வகிக்கின்றது. ஐரோப்பாவிலுள்ள எல்லா நாட்டுத் தலைநகரங்கள், துறைமுகங்கள், தொழிற்சாலை நகரங்கள், ஏனைய முக்கிய நகரங்கள் இவை அனைத்தும் இருப்புப் பாதைகளால் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கியமான பாதை பாரிஸ் நகரிலிருந்து, ஆல்ப்ஸ் கணவாய் வழியே இஸ்தாம்பூலே (கான்ஸ்டாண்டிநோபிலை) அடையும், ஸிம்ப்லின் - ஓரியண்ட் இருப்புப் பாதை என்பதாகும். இஸ்தாம்பூலின் எதிர்க்கரையினின்றும் இதன் தொடர்ச்சி தென் மேற்கு ஆசியா நாடுகளுக்கும் செல்கின்றது.

வட அமெரிக்காவின் வட பகுதியிலுள்ள கனடாவில் கண்டத்தின் குறுக்கே இரண்டு இருப்புப் பாதைகளும், வேறு சில கிளைப் பாதைகளும் இருக்கின்றன. உலக இருப்புப் பாதைகளில் கனடா மூன்றாவது ஸ்தானம் வகிக்கின்றது. கண்டத்தின் குறுக்கே செல்லும் முதல் பாதை கனடியன் பஸிபிக் இருப்புப்பாதை எனப்படும். இது, அட்லாண்டிக் கடற்கரையிலுள்ள ஹாலிபாக்ஸ் நகரிலிருந்து, குவிபெக், மாண்ட்ரீல், ஒட்டாவா, வின்னிபெக் நகரங்கள் வழியே சென்று, இராக்கி மலைகளைக் கடந்து, பஸிபிக் கடற்கரையிலுள்ள, வான்கூவர் நகரை யடைகின்றது. இரண்டாவது பாதையான கனடியன் நாஷனல் இருப்புப் பாதை, குவிபெக் கினின்றும் புறப்பட்டு சுரங்கப் பிரதேசங்கள், வின்னிபெக் இவை வழியே சென்று, இராக்கி மலையைக் கடந்து, பஸிபிக் கடற்கரையிலுள்ள பிரின்ஸ் ருபார்டை அடைகின்றது. இந்த இரண்டு இருப்புப் பாதைகளிலும் மக்களுக்குப் பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வின்னி

பெக்கிலிருந்து ஹட்ஸன்குடாவுக்கு ஒரு பாதையும், தெற்கில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இருப்புப்பாதைகளுடன் இணைக்க மற்றொரு பாதையும் செல்கின்றன.

உலக இருப்புப் பாதைகளில் அமெரிக்கா ஐக்கிய நாடுகள் முதல் ஸ்தானம் வகிக்கின்றன. இங்கு கிழக்கு, மேற்குக் கடற்கரைகளை இணைக்கும் இருப்புப் பாதைகள் பல இருக்கின்றன. இவற்றுள் ஒன்று வட மேற்குக் கடற்கரையிலுள்ள **போர்ட்லாந்திலிருந்து, சிக்காகோ, பிட்ஸ்பர்க்** நகரங்கள் வழியே, கிழக்குக் கடற்கரையிலுள்ள **நியூயார்க்** நகருக்குச் செல்கின்றது. இரண்டாவது, **ஸான்பிரான்ஸிஸ்கோ** வினின்றும், **சிக்காகோ, பிட்ஸ்பர்க்** நகரங்கள் வழியாக நியூயார்க்குக்குச் செல்கின்றது. மற்றுமொன்று, ஸான்பிரான்ஸிஸ்கோவிற்குத் தெற்கிலுள்ள, **லாஸ் ஆஞ்சலிஸிலிருந்து, நியூ ஆர்லியன்ஸ், வாஷிங்டன்** கரங்கள் வழியே **நியூயார்க்**கை அடைகின்றது. வேருெரு பாதை, **லாஸ் ஆஞ்சலிஸிலிருந்து, ஸெயிண்ட் லூயி** வழியே **சிக்காகோ** நகரை யடைகின்றது. இவற்றைத் தவிர, வேறு பல கிளைப் பாதைகளும் உண்டு.

தென் அமெரிக்காவில், ஆர்ஜண்டிஞவிலும், கிழக்குக் கடற்கரை யோரமாகவுமே பல இருப்புப் பாதைகள் இருக்கின்றன. இவற்றுள் முக்கியமானது, கிழக்குக் கடற்கரைத் துறைமுகமும், ஆர்ஜண்டிஞவின் தலைநகரமான **போனஸ் அயர்ஸி**லிருந்து, உஸ்பலாட்டா கணவாய் வழியே ஆண்டிஸ் மலைத் தொடரைக் கடந்து, மேற்குக் கடற்கரையிலுள்ள **வால்பரைஸோ** நகருக்குச் செல்வது ஆகும்.

ஆப்பிரிக்காவில், கடற்கரை நகரங்களை உள்நாட்டு நகரங்களுடன் இணைக்கும் பல சிறு இருப்புப்பாதைகளே இருக்கின்றன. எகிப்தின் தலைநகரமான **கெய்ரோ**வினின்றும், இக் கண்டத்தின் தென் மேற்கு மூலையிலுள்ள **கேப்டவுன்** வரை ஓர் நீண்ட இருப்புப்பாதை போட உத்தேசித்து, மத்தியில் ஓர் சிறு பகுதி தவிர, இதரப் பகுதிகளைப் போட்டுப் பூர்த்தி செய்திருக்கின்றனர்.

ஆஸ்திரேலியாவில் இருப்புப்பாதைகள் பெரும் பாலும், தெற்கு, கிழக்குக் கடற்கரை யோரங்களிலேயே இருக்கின்றன. இதன் காரணம் இவ்விடங்களில் தான் ஜன நெருக்கம் அதிகம். மேற்குக் கடற்கரையிலுள்ள பர்த் நகரிலிருந்து, அடிலெயிட், மெல்போர்ன் நகரங்கள் வழியே, கிழக்குக் கடற்கரையிலுள்ள ஸிட்னிக்கு ஓர் நீண்ட இருப்புப்பாதை இருக்கின்றது. ஸிட்னியிலிருந்து, வடக்கே யுள்ள பிரிஸ்பேனுக்கு ஒரு பாதையும், அடிலெயிடிலிருந்து, கண்டத்தின் குறுக்காக வடக்கிலுள்ள டார்வினுக்கு மற் றொரு பாதையும் உண்டு.

நீர்மார்க்கங்கள் :—மிக பளுவான, அல்லது பெருத்த அளவில் பொருள்களை எடுத்துச் செல்ல, தரை மார்க் கத்தை விட, நீர் மார்க்கமே குறைந்த செலவை யுடையது. இக் காரணம் பற்றி, பெருங்கடல்கள் போக்குவரவுக்குத் தடையாகக் கருதப்படாமல், அனுகூலமாகவே கருதப்படு கின்றன. பெருங்கப்பல்கள், பொருள்களையும், பிரயாணி களையும் ஏற்றிக்கொண்டு, கடல்கள் வழியே ஒவ்வொரு கண்டத்தினின்றும். இதர கண்டங்களுக்குச் செல்கின்றன. ஆங்காங்கு கப்பல்கள் வந்து தங்கவும், ஏற்றுமதி, இறக்கு மதி செய்யவும் துறைமுகங்களும் இருக்கின்றன.

இனி, உலகிலுள்ள முக்கிய நீர் மார்க்கங்களை அறி வோம்.

ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களுக் கிடையே யுள்ள அட்லாண்டிக் சமுத்திரத்தின் வழியாகவே பெருத்த அளவில் கப்பல்கள் செல்கின்றன. ஏனெனில் மேற்கூறிய கண்டங்கள் இரண்டும் தொழில்கள், ஜன நெருக்கம் இவற் றில் ஏற்றம் பெற்றுள்ளன.

ஐரோப்பாவின் முக்கியத் துறைமுகங்களாகிய கிளாஸ்கோ, லிவர்பூல், லண்டன், ஸௌதாம்டன், ஹாம்பர்க், லிஸ்பன், ஆகியவற்றினின்றும், அமெரிக்காக் கண்டங்களின் கிழக்குக் கடற்கரையிலுள்ள போஸ்டன், நியூயார்க், நியூ ஆர்லியன்ஸ், (மெக்ஸிகோ விளைகுடாவில்) ரியோடி




படம் 30. உலகப்படம் உலக கடல் மார்க்கங்கள்

ஜனிரோ, போனஸ் அயர்ஸ் ஆகிய துறைமுகங்களுக்கு, நீர் மார்க்கங்கள் இருக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளினின்றும், இந்தியா, சீனு, ஆஸ்திரேலியா முதலிய விடங்களுக்குச் செல்ல இரண்டு மார்க்கங்கள் இருக்கின்றன. ஒன்று, மத்திய தரைக்கடல், சூயஸ் கால்வாய், செங்கடல், அரபிக்கடல் இவற்றின் வழியே, கராச்சி, பம்பாய், கொழும்பு, ஆஸ்திரேலியாவிலுள்ள பர்த் ஆகிய விடங்களுக்குச் செல்கின்றது. கொழும்பு துறைமுகத்திலிருந்து, ஆஸ்திரேலியாவுக்கும், சென்னை, கல்கத்தா ஆகிய விடங்களுக்கும், இரங்கூனுக்கும், சிங்கப்பூர், வழியே, சீனுவிலுள்ள ஹாங்காங், காண்டன், ஷாங்ஹை, ஜப்பானிலுள்ள யோகஹாமா ஆகிய விடங்களுக்கும் நீர் மார்க்கங்கள் இருக்கின்றன. யோகஹாமாவினின்றும், பஸிபிக் சமுத்திரத்தைக் கடந்து, ஹவாய் தீவுகள் வழியாக, வட அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையிலுள்ள சான்பிரான்ஸிஸ்கோ, லாஸ் ஆஞ்சலிஸ் ஆகிய விடங்களுக்கும் நீர் மார்க்கங்கள் செல்கின்றன.

ஐரோப்பிய நாடுகளினின்றும், ஆப்பிரிக்காவின் தென்கோடியாகிய நன்னம்பிக்கை முனையைச் சுற்றியும், இந்தியா, ஆஸ்திரேலியா முதலிய விடங்களுக்கு நீர் மார்க்கம் இருக்கின்றது. ஆனால் இந்தியாவை யடைய, சூயஸ் கால்வாயை விட, இந்த மார்க்கத்தில் சுமார் 5,000 மைல் அதிகமாகப் பிரயாணம் செய்ய வேண்டும். சூயஸ் கால்வாயில் செல்ல முடியாத மிகப் பெரும் கப்பல்களே, பொதுவாக, இம் மார்க்கமாகச் செல்வது வழக்கம்.

ஐரோப்பிய நாடுகளினின்றும், ஆஸ்திரேலியா, நியூஸீலந்து தீவுகள் ஆகிய விடங்களை அடைய, வேறு இரண்டு மார்க்கங்களும் உண்டு. இவற்றுள், முதல் மார்க்கம் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து, தென் அமெரிக்காவின் தென் கோடியிலுள்ள ஹாரன் முனையைச் சுற்றி, பஸிபிக் சமுத்திரத்தை யடைந்து, அங்கிருந்து நியூஸீலந்து, ஆஸ்திரேலியா ஆகிய விடங்களை யடைகின்றது.

ஹாரன் முனையினின்றும் வடக்காகச் சென்று, தென் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரை நகரங்களையும் அடையக் கூடும். மற்றொரு மார்க்கம் ஐரோப்பிய நாடுகளினின்றும் புறப்பட்டு, வட, தென் அமெரிக்காக் கண்டங்களுக்கு இடையே யுள்ள பனாமா கால்வாய் வழியே சென்று, பஸிபிக் சமுத்திரத்தைக் கடந்து, நியூஸீலந்து, ஆஸ்திரேலியா நாடுகளை யடைகின்றது. நியூஸீலந்தில் வெல்லிங்டனும், ஆஸ்திரேலியாவில் ஸிட்னி, பெர்த், மெல்போர்ன் ஆகியவையும் முக்கியத் துறைமுகங்களும், வாணிப ஸ்தலங்களும் ஆகும்.

**ஆகாய மார்க்கங்கள்** :—தற்காலத்தில் மக்கள் வெகு துரிதமாகப் பிரயாணம் செய்யவும், தபால்கள், சிறு சாமான்கள் இவற்றையும், தொலை தூரத்திலுள்ள இடங்களுக்கும் வெகு விரைவாக அனுப்பவும் ஆகாய விமானங்கள் அனுகூலமாக இருக்கின்றன.

இனி உலகின் முக்கிய ஆகாய மார்க்கங்களை அறிவோம்.

லண்டன் நகருக்கு அருகிலுள்ள கிராய்டன் ஓர் பெரிய விமான நிலையம். அங்கிருந்து உலகின் பல்வேறு நாடுகளுக்கும் குறித்த காலங்களில் விமானங்கள் செல்கின்றன. கிராய்டனிலிருந்து புறப்படும் விமானம், பாரிஸ், மார்ஸேல்ஸ், ஆதென்ஸ், அலெக்ஸாந்திரியா, கெய்ரோ, பாக்தாத் இவற்றின் வழியே கராச்சி, பம்பாய் முதலிய விடங்களை யடைகின்றது. அவ்விடங்களினின்றும், டில்லி, அலஹாபாத், கல்கத்தா, இரங்கூன், பாங்காக், சிங்கப்பூர், ஜகார்தா (இந்தோனேஷியாவின் தலைநகர்) வழியே, ஆஸ்திரேலியாவின் வட கரையிலுள்ள டார்வினை யடையக் கூடும். அங்கிருந்து ஆஸ்திரேலியாவின் பல்வேறு முக்கிய நகரங்களுக்கும், நியூஸீலந்துக்கும் ஆகாய மார்க்கங்கள் இருக்கின்றன. பம்பாயிலிருந்து கல்கத்தா, சென்னை, கொழும்பு முதலிய விடங்களுக்கும் விமானங்கள் செல்கின்றன. கெய்ரோவினின்றும் மற்றோர் ஆகாய மார்க்கம் தெற்கே கார்டூம், புல

வாயோ, கிம்பர்லி நகரங்கள் வழியே கேப்டவுனுக்குச் செல்கின்றது. ஆப்பிரிக்காவின் இதர முக்கிய நகரங்களும் ஆகாய மார்க்கங்களால் இணைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே ஐரோப்பாக் கண்டத்திலுள்ள எல்லா முக்கிய நகரங்களுக்கும், மாஸ்கோவினின்றும், விளாடிவாஸ்டாக்குக்கும் பல ஆகாய மார்க்கங்கள் உண்டு.

இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளினின்றும் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து, குவிபெக், நியூயார்க், வாஷிங்டன், ரியோடி ஜனிரோ, பியூனஸ் அயர்ஸ் ஆகிய விடங்களுக்கும் ஆகாய மார்க்கங்கள் இருக்கின்றன. குவிபெக், நியூயார்க் நகரங்களிலிருந்து, முறையே வான்கூவர், ஸான்பிரான்ஸிஸ்கோ நகரங்களுக்கும், பியூனஸ் அயர்ஸிலிருந்து, வால்பரைஸோவுக்கும் விமானங்கள் செல்கின்றன.

இவற்றைத் தவிர வேறு பல சிறு ஆகாய மார்க்கங்களும், உலகில் எல்லாக் கண்டங்களிலும் இருக்கின்றன.

## பயிற்சி

1. இருப்புப்பாதைகள் எவ்வாறு உபயோகமானவை ?
2. டிரான்ஸ் சைபீரியன் இருப்புப்பாதை, கனடியன் பஸிபிக் இருப்புப்பாதை, கனடியன் நேஷனல் இருப்புப்பாதை இவற்றைப பற்றி சிறு குறிப்பு வரைக.
3. சிம்ப்ளான் - ஓரியண்ட் இருப்புப்பாதை எங்கு உள்ளது ? அது எந்த நகரங்களை இணைக்கின்றது ?
4. எந்த சமுத்திரத்தின் வழியே, அதிகக் கப்பல் போக்கு வரவு நடைபெறுகின்றது ? ஏன் ?
5. சூயஸ் கால்வாய், பனமா கால்வாய் இவை எங்குள்ளன? இவை எவ்வாறு முக்கியமானவை ?
6. எத்தகைய கப்பல்கள் நன்னம்பிக்கை முனை வழியே செல்கின்றன ?
7. லண்டனிலிருந்து சூயஸ் கால்வாய் மூலமாக ஒருவர் நியூஸிலந்துக்குச் செல்ல விரும்பினால், வழியில் காணும்

சமுத்திரங்கள், கடல்கள், முக்கியத் துறைமுகங்கள் இவற்றைக் கூறுக.

8. இங்கிலாந்திலிருந்து சிங்கப்பூர் செல்லும் ஆகாய விமானம், வழியில் காணும் முக்கிய விமான நிலையங்களைக் கூறுக.

9. உலகப் படமொன்றில் முக்கிய இருப்புப்பாதைகள், நீர் மார்க்கங்கள், விமான மார்க்கங்கள் இவற்றை வெவ்வேறு வர்ணங்களில் குறிப்பிடுக.

10. உங்கள் ஊருக்குச் சமீபத்திலுள்ள மோட்டார் நிலையம், இருப்புப்பாதை நிலையம், துறைமுகம் அல்லது விமான நிலையம் ஏதேனு மொன்றுக்குச் சென்று அங்கிருந்து மோட்டார்கள், இரயில்கள், கப்பல்கள் அல்லது ஆகாய விமானங்கள் எங்கெங்கு செல்கின்றன என்பதை அறியவும்.

11. இருப்புப்பாதை அட்டவணை, செய்தித் தாள்களில் பிரசுரிக்கப்படும் ஆகாய விமானங்கள் அல்லது கப்பல்கள் இவற்றின் போக்குவரவைப் பற்றிய செய்திகள் ஆகியவற்றை ஆராயும் வகைகளை அறியவும்.

# 8. பிரிட்டனில் ஜனநாயக ஆட்சியின் வளர்ச்சி

தற்காலத்தில், உலகில் மிகப் பெரும்பாலான நாடுகளில், மக்களின் நன்மைக்காக, மக்களாலேயே நடத்தப்படும் ஆட்சியைக் காண்கிறோம். இத்தகைய ஆட்சி ஜனநாயக ஆட்சி எனப்படும். இத்தகைய ஆட்சி முதன் முதலாகப் பிரிட்டனிலேயே தோன்றி, வளர்ச்சி பெற்றது. அங்கு முடியாட்சி இருப்பினும், மக்களின் பிரதிநிதிகளே உண்மையான அதிகாரங்கள் அனைத்தையும் வகிக்கின்றனர். ஆனால் இந்நிலை மக்கள் பல நூற்றாண்டுகளாக நடத்திய போராட்டத்திற்குப் பின்பே ஏற்பட்டது. இப்பொழுது உலகில் ஜனநாயக ஆட்சியை நடத்தும் நாடுகள்

அனைத்தும், பிரிட்டனிடமிருந்தே இதைக் கற்றுக்கொண்டன எனக் கூறுவது மிகையாகாது.

இனி, பிரிட்டனில் ஜனநாயக ஆட்சி தோன்றி, வளர்ந்த வகையை அறிவோம்.

**பிரிட்டிஷ் பார்லிமென்டின் தோற்றமும், வளர்ச்சியும் :—** கி. பி. பதினோராம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை இங்கிலாந்தில் **ஆங்கிலோ-ஸாக்ஸன்** என்ற வகுப்பைச் சேர்ந்த மன்னர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். அம் மன்னர்கள் ஆட்சிமுறையில் தமக்கு ஆலோசனை கூறுவதற்காக, பெரியோர்களும், அறிஞர்களும் அடங்கிய சபையொன்றை நிருவியிருந்தனர். இச்சபைக்கு **உவிட்டன் சபைக் கூட்டம்** (Witanagemoot) எனப் பெயர். ஆயினும் மன்னர்கள் இச் சபையின் ஆணைக்கு உட்பட்டவர்கள் அல்ல.

பதினோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பிரான்ஸ் நாட்டின் வடபகுதியில் ஆட்சி புரிந்த **நார்மானிய** மன்னரான **முதலாம் வில்லியம்** என்பவர் இங்கிலாந்தின்மீது படையெடுத்து வந்து, அந்நாட்டைக் கைப்பற்றி முடிசூட்டிக் கொண்டார். இவருக்குப் பின் ஆட்சிபுரிந்தவர்கள் பலரையும் **நார்மானிய மன்னர்கள்** என அழைப்பது வழக்கம். அவர்கள் காலத்தில், மன்னருக்கு ஆலோசனை கூறுவதற்காக, உவிட்டன் சபைக் கூட்டத்திற்குப் பதிலாக **மகாசபை** (The Great Council) என்ற ஒரு சபை அமைக்கப்பட்டது.

பதின்மூன்றும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் அரசுபுரிந்த மன்னர் **ஜான்** என்பவர். இவரது கொடுங்கோன்மையைப் பொருத ஆங்கில மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு, 1215-ம் ஆண்டில் மன்னரை, **மகா சாசனம்** (Magna Carta) என்னுமோர் சாசனத்தை ஒப்புக்கொண்டு, அதில் கையெழுத்திடச் செய்தனர். அதன்படி, முக்கியமாக, மன்னர் குடிகளின் சம்மதமின்றி புதிய வரிகளை விதிக்கவோ, வசூலிக்கவோ கூடாது என்றும், விசாரணையின்றி, எவரையும் சிறையிடவோ, நாடு கடத்

தவோ கூடாது என்றும் கூறப்பட்டன. இச் சாசனமே ஆங்கில மக்கள் தமது அரசரையும் பணிய வைத்துப் பெற்ற முதல் உரிமைச் சாசனமும், ஜனநாயக ஆட்சிக்கு அடிப் படையும் ஆகும்.

மறு ஆண்டிலேயே ஜான் இறக்கவே, அவரது புதல் வரான மூன்றாம் ஹென்றி பட்டம் பெற்றார். இவர் மகா சாசனத்தை மீறி ஆட்சி புரிந்ததைக் கண்டு வெகுண்ட ஆங்கிலப் பிரபுக்கள் அனைவரும், சைமன்-டி-மாண்ட்பார்ட் என்பவரைத் தலைவராகக் கொண்டு, மன்னருடன் போரிட்டு அவரைத் தோற்கடித்து, சிறையிட்டனர். அரசியல் அதிகாரம் அனைத்தும் சைமன் கைக்கு மாறின. இவர் பிரான்ஸ் நாட்டினின்றும் இங்கிலாந்துக்கு வந்து குடி யேறியவர்; அரசனின் சுற்றத்தவரும் ஆவார்.

சைமன்-டி-மாண்ட்பார்ட் அரசியல் அதிகாரங்களை ஏற்றுக்கொண்டவுடன், ஆங்கில மக்களையும் ஆட்சியில் பங்கு கொள்ளச் செய்ய விரும்பினார். ஆகவே இவர் 1265-ம் ஆண்டில் ஓர் பெரும் சபையைக் கூட்டினார். இதில் பிரபுக்களும், மத குருமார்களுமே யன்றி பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் கலந்து கொள்ளச் செய்தார். ஆட்சியில் இச் சபையை அடிக்கடி கலந்து ஆலோசித்தார். இச் சபையே பிற்காலத்தில் பார்லி மெண்டு என வழங்கலாயிற்று. பொதுமக்களின் பிரதிநிதி களையும் இதில் கலந்துகொள்ளச் செய்த சைமனுக்கு ஆங்கிலப் பொதுமக்கள் சபையின் தந்தை என்ற சிறப்பான விருது கிடைத்தது.

சைமனின் ஆட்சி இங்கிலாந்தில் குறுகிய காலமே நடைபெற்றது. அவரிடம் பொறாமை கொண்ட சில ஆங்கிலப் பிரபுக்கள், மூன்றாம் ஹென்றியுடன் சிறை செய் யப்பட்டிருந்த அவரது குமாரரான எட்வர்ட்டை சிறையி னின்றும் தப்பச் செய்தார்கள். அவர் சைமனைப் போரில் தோற்கடித்துக் கொன்றுவிட்டு, தன் தந்தையைச் சிறையி னின்றும் மீட்டு, மீண்டும் அவரை மன்னராக்கினார். சில

காலத்துக்குப் பின் மூன்றும் ஹென்றி இறக்கவே, அவரது குமாரர், **முதல் எட்வர்ட்** என முடிசூட்டிக் கொண்டார்.

சைமனைப் போலவே, முதல் எட்வர்டும், பொது மக்களின் ஆதரவைப் பெற விரும்பி, அவர்களுக்கும் ஆட்சியில் பங்களிக்க விரும்பினர். ஆகவே 1295-ம் ஆண்டில் அவர் மக்களின், உண்மையான பிரதிநிதிகளை அழைத்தார். இப் பார்லிமெண்டில், பிரபுக்கள், மத குருமார்கள் இவர்கள் தனியாகவும், மக்களின் பிரதிநிதிகள் தனியாகவும் கூடச் செய்தார். இக்காலத்தில் பார்லிமெண்டு இரு பிரிவுகளைக் கொண்டது. அவை **பிரபுக்கள் சபை ; பொதுமக்கள் சபை** ஆகியவை. வருங்கால பார்லிமெண்டுகளுக்கு எட்வர்டின் பார்லிமெண்டு ஒரு வழிகாட்டியாக அமைந்ததால், அதை **மாதிரிப் பார்லிமெண்டு** எனக் கூறுவது வழக்கம். காலப் போக்கில் பிரபுக்கள் சபையை விட, பொதுமக்கள் சபையே அதிக அதிகாரங்களை வகிக்கலாயிற்று.

முதல் எட்வர்டுக்குப் பிறகு வந்த மன்னர்களுள், **இரண்டாம் ரிச்சர்ட்** என்பவர் கொடுங்கோலாட்சி புரிந்தார். ஆகவே பார்லிமெண்டு அவரை ஆட்சியினின்றும் நீக்கி விட்டு, **லங்காஸ்டிரிய பரம்பரையைச்** சேர்ந்த ஒருவருக்கு அரசபதவியை அளித்தது. அக் காரணம் பற்றி, அப் பரம்பரை மன்னர்கள் பார்லிமெண்டுக்கு ஏராளமான அதிகாரங்களை வழங்கியதுடன், அதன் விருப்பப்படியே ஆட்சி புரியவும் ஆரம்பித்தனர். சில ஆண்டுகளுக்குப் பின் இம் மன்னர்களுக்கும், **யார்க்** பரம்பரை மன்னர்களுக்கும் கொடிய உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. இதனல் நாட்டில் அமைதி குன்றியது. ஆகவே, பதினைந்தாம் நூற்றுண்டின் இறுதியில் பட்டத்துக்கு வந்த **டியூடர் பரம்பரை** மன்னர்களுக்கு, பார்லிமெண்டு அதிக அதிகாரங்களைக் கொடுத்து, அமைதியை நிலைநாட்டச் செய்தது. டியூடர் மன்னர்கள் தம் இச்சைப்படி ஆட்சிபுரிந்தபோதிலும், அவ்வப்பொழுது பார்லிமெண்டையும் கலந்து கொண்டதனல், அச்சபையும் சிறிது சிறிதாக ஆட்சி முறைகளை நன்கு அறியலாயிற்று. பதினறும் நூற்றுண்டின் முடிவில் டியூடர் மன்னர்களின்

ஆட்சியும் முடிவுறும் சமயத்தில் நாட்டில் அமைதி நிலவி யது; வாணிபம் தழைத்தோங்கியது. இங்கிலாந்தும் ஐரோப்பாவில் ஓர் வன்மை மிகுந்த நாடாயிற்று. பார்லி மெண்டும் பெருமளவில் அரசியல் அறிவு பெற்றிருந்தது. இக் காரணங்கள் பற்றி, இங்கிலாந்தில் அப்பொழுது மன்னரின் எதேச்சாதிகாரத்துக்கு தேவையில்லாம லிருந்தது.

**மன்னர்களுக்கும், பார்லிமெண்டுக்குமிடையே போர் :—** இந்நிலையில், டியூடர் மன்னர்களுக்குப் பின் ஸ்டுவர்ட் **பரம்பரையினர்** இங்கிலாந்தில் மன்னர்களானுர்கள். அவர் களும் டியூடர் மன்னர்களைப் போலவே, எதேச்சாதிகாரமாக ஆட்சிபுரிய விரும்பினுர்கள். நாட்டில் அமைதி நிருவப் பட்டு, ஜனநாயக ஆட்சிக்கான சூழ்நிலை வெகுவாகத் தோன்றியிருந்ததால், ஆங்கில மக்களோ, பார்லி மெண்டோ, ஸ்டுவர்ட் மன்னர்களின் எதேச்சாதிகாரத்தை விரும்பவில்லை.

முதல் ஸ்டுவர்ட் மன்னர் **முதலாம் ஜேம்ஸ்** என்பவர். இவர், தான் இறைவனுல் மன்ன ராக்கப்பட்டவர் என்றும், அதனுல் அவருக்கே யன்றி, ஆங்கில மக் களுக்கோ, பார்லிமெண்டுக்கோ தான் கட்டுப்பட்டவர் அல்ல என் றும் கூறினுர்.இது **தெய்வீக உரிமை** (Divine Right) எனப்பெறும். இவ் வுரிமையை அடிப்படையாகக் கொண்டு, இவர்தன் இச்சைப்படி பார்லிமெண்டைக்கூட்டவும்,கலைக் கவும் செய்தார். தன் விருப்பப்படி, புதிய வரிகளை விதித்தார். பொது ஜன நம்பிக்கை பெருதவர்களைத் தனது அமைச்சர் களாக நியமித்துக் கொண்டார். சமய விஷயங்களிலும், பெரும்பாலான மக்களின் விருப்பத்திற்கு மாருக நடந்து



படம் 31 ஜேம்ஸ்

கொண்டார். இக்காரணங்கள் பற்றி, மன்னருக்கும், பார்லி மெண்டுக்குமிடையே தீவிர கருத்து வேறுபாடுகள் தோன்றலாயின.

முதலாம் ஜேம்ஸுக்குப் பின், அவரது குமாரரான **முதலாம் சார்லஸ்** பட்டம் பெற்ருர். இவர் தந்தையைக் காட்டிலும் வெகு தீவிரமாகவே தெய்வீக உரிமையில் நம்பிக்கை கொண்டு ஒழுகினுர். இவர் பல புதிய கடும் வரிகளை விதித்தும், தன் இச்சைப்படி புதிய சட்டங்களை இயற்றியும் மக்களைத் துன் புறுத்தினுர். தன்னை எதிர்த்தவர்களை, விசாரணையின்றி, சிறையிடவும் அவர் தயங்கவில்லை. ஆகவே, 1628-ம் ஆண்டில் பார்லி மெண்டு இவரை வற்புறுத்தி, **உரிமை மனு** (Petition of Rights) ஒன்றை ஏற்கும்படி செய்தது.


படம் 32 சார்லஸ்

இதன்படி அரசர் பார்லிமெண்டின் சம்மதமின்றி, புதிய வரிகளை விதிக்கவோ, சட்டங்களை இயற்றவோ கூடாது என்றும், விசாரணையின்றி எவரையும் சிறைப்படுத்தக் கூடாது என்றும், அமைதி காலத்தில் இராணுவ சட்டத்தை அமுலாக்கக் கூடாது என்றும் கூறப்பட்டது.

அடுத்த ஆண்டிலேயே சார்லஸ் மன்னர் உரிமை மனுவை மீறி, பார்லிமெண்டைக் கலைத்து, பதினோராண்டுகள் எதேச்சையாக ஆட்சிபுரிந்தார். இக்காலத்தில் அவர் மக்களது வெறுப்பைப் பெரிதும் பெற்ருர். ஸ்காட்லாந்து தேசத்தில், அந்நாட்டு மக்களில் பெரும்பாலோரது விருப்பத்திற்கு மாருக பல சமய சீர்திருத்தங்களைப் புகுத்த முயன்ருர். இதன் காரணமாக சார்ல்ஸுக்கும், அந்நாட்டு மக்களுக்கும் போர் மூண்டது. போரில் தோல்வியுற்ற சார்லஸ், ஸ்காத்லாந்து மக்களுக்கு, நஷ்டஈடாகப் பெரும்

தொகை வழங்க வேண்டியிருந்தது. இத் தொகையை இங்கிலாந்து மக்களிடமிருந்து வசூலிக்க வகையறியாத சார்லஸ் 1640-ம் ஆண்டில் மீண்டும் பார்லிமெண்டைக் கூட்டவேண்டியிருந்தது. மன்னருக்குப் பணம் வழங்கு முன் பார்லிமெண்டு அவருடைய கொடுங்கோலாட்சியைக் கண்டித்து, அவரது அதிகாரங்களைக் குறைக்கும் வகையில் தீர்மானங்களை நிறைவேற்றியது. இவற்றிற்கு மன்னர் இணங்காததால், 1642-ம் ஆண்டில், மன்னருக்கும் பார்லி மெண்டுக்குமிடையே உள்நாட்டுப் போர் துவங்கியது. இப் போர் ஏழு ஆண்டுகள் நடைபெற்றது. இறுதியாக மன்னர் தோல்வியுற்று, குற்ற விசாரணை செய்யப்பட்டு, தேசத் துரோகி என, தூக்கிலிடப்பட்டார்.

இந்த உள்நாட்டுப் போரில், பார்லிமெண்டுக் கட்சிக் குத் தலைமை வகித்தவர், **ஆலிவர் கிராம்வெல்** என்ற சிறந்த போர்வீரர். மன்னரைக் கொன்ற பின், இங்கிலாந்தில் முடியரசை ஒழித்து, குடியரசு அமைக்கத் தீர்மானிக்கப் பட்டு, அவ்வாறே செயலாற்றப்பட்டது. அரசியல் அதிகா ரங்கள் அனைத்தும் ஆலிவர் கிராம்வெல்லுக்கு அளிக்கப் பட்டு, இவர் **லார்டு புரொடக்டர்** (Lord Ptotector) என அழைக்கப்பட்டார். இவரது ஆட்சி ஏறக்குறைய இராணுவ ஆட்சியாகவே விளங்கியதால், வெகு சீக்கிரத்தில் மக்கள் இவரது ஆட்சியை வெறுக்கலாயினர். ஆகவே, 1659-ம் ஆண்டில் இவர் இறந்ததும், மக்கள் மீண்டும் இங்கிலாந் தில் முடியர்சை ஸ்தாபிக்கத் தீர்மானித்தனர். அதன்படி முன்பு இங்கிலாந்து மன்னராயிருந்த முதலாம் சார்லஸின் புதல்வரான **சார்லஸை** பிரான்ஸ் நாட்டினின்றும் வர வழைத்து, அவருக்கு **இரண்டாம் சார்லஸ்** என முடிசூட்டி னர்கள். 1660-ஆம் ஆண்டில் நடைபெற்ற இச் சம்பவம் மீட்சி (Restoration) என வழங்கலாயிற்று.

ஆங்கில மக்களாலேயே அழைக்கப்பட்ட இரண்டாம் சார்லஸ் சிலகாலம்வரை பார்லிமெண்டின் இச்சைப்படியே ஆட்சிபுரிந்தார். ஆயினும், சில ஆண்டுகளுக்குப் பின் அவரும் எதேச்சாதிகாரம் செலுத்த ஆரம்பித்தார். 1685-ம்

ஆண்டில் அவர் வாரிசு இன்றி இறந்தமையால், அவரது சகோதரரான இரண்டாம் ஜேம்ஸ் பட்டத்துக்கு வந்தார். அக் காலத்தில் ஆங்கில மக்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவர்களில் பிராடெஸ்டெண்ட் பிரிவைச் சேர்ந்தவர்கள். ஆனால் கத்தோலிக்க பிரிவைச் சேர்ந்த ஜேம்ஸ் மன்னர் பிராடெஸ்டெண்டுகளுக்குப் பல இன்னல்களைப் புரிந்தார். கத்தோலிக்கர்களுக்கு எதிராக இருந்த சட்டங்களில் சிலவற்றை நீக்கினார். சிலவற்றைத் தாற்காலிகமாக நிறுத்தி வைத்தார். பார்லிமெண்டைக் கலந்தாலோசியாமலே புதிய வரிகளை விதித்தார். பல புதிய சட்டங்களையும் இயற்றினார். 1688-ம் ஆண்டில் அவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையும் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றும் படியாகவே வளர்க்கப்படுமென்றும், அதனால் இங்கிலாந்தில் கத்தோலிக்க ஆட்சியே நிலைத்துவிடுமென்றும் மக்கள் அஞ்சினார்கள்.

ஜேம்ஸின் மகளாகிய மேரி என்பவள் ஹாலந்து நாட்டின் மன்னரான வில்லியம் என்பவரை மணந்திருந்தாள். அவர்கள் இருவரும் பிராடெஸ்டெண்ட் மதத்தினர்கள். ஆகவே ஆங்கில மக்கள், அவர்கள் இருவரையும் இங்கிலாந்துக்கு வந்து, கூட்டரசு ஆட்சி புரியும்படி அழைத்தனர். அவ்வாறே அவர்கள் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு, 1688-ம் ஆண்டில் இங்கிலாந்துக்கு வந்தார்கள். தன்னை ஆதரிப்போர் எவருமில்லை என அறிந்த இரண்டாம் ஜேம்ஸ் பிரான்ஸ் நாட்டுக்கு ஓடிவிட்டார். மூன்றும் வில்லியமும், மேரி அரசியும் முடிசூட்டிக்கொண்டனர். சிறிதும் இரத்தம் சிந்தாமல் ஏற்பட்ட இப்புரட்சி மாண்புறு புரட்சி (The Glorious Revolution) எனப் பெயர்பெற்றது. இப் புரட்சியின் விளைவாக, இங்கிலாந்தில் வெகுகாலமாக மன்னர்களுக்கும், பார்லிமெண்டுக்குமிடையே நடைபெற்று வந்த சச்சரவு முடிந்து, பார்லிமெண்டின் கை ஓங்கியது. மன்னர் பார்லிமெண்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு ஆட்சிபுரிய வேண்டுமென்ற நியதியும் ஏற்பட்டது.

1689-ம் ஆண்டில் பார்லிமெண்டு பொது உரிமை மசோதா (Bill of Rights) என்ற அறிக்கையை நிறை

வேற்றி, அதை வில்லியம், மேரி இவர்களை ஒப்புக்கொள்ளச் செய்தது. அதன் முக்கிய ஷரத்துக்களாவன: வில்லியம், மேரி இவர்கள் சேர்ந்து இங்கிலாந்தை ஆள வேண்டும். கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்களும், கத்தோலிக்கர்களை மணம் செய்துகொண்டவர்களும், இங்கிலாந்தை ஆள அருகதையற்றவர்கள். பார்லிமெண்டின் அனுமதியின்றி மன்னர் புதிய வரி எதையும் விதித்தல் கூடாது. குறித்த காலங்களில் பார்லிமெண்டு தேர்தல்கள் நடைபெற வேண்டும். அடிக்கடி பார்லிமெண்டு கூட்டப்படல் வேண்டும்; அதன் அங்கத்தினர்களுக்குப் பேச்சுரிமை வேண்டும். பார்லிமெண்ட், தன் இச்சைப்படி, எவ்வகையான சட்டத்தையும் இயற்றக்கூடும். தங்களது குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு, மன்னருக்கு மனுச் செய்துகொள்ள குடிகளுக்கு உரிமை உண்டு.

ஆங்கில நாட்டின் சரித்திரத்தில் இம் மசோதா மிகச் சிறப்பு வாய்ந்தது. இதன்படி மக்களாட்சி வலுப்பெற்றது.

**கட்சி ஆட்சி முறையும், காபினெட் அரசாங்கமும் :—** இரண்டாம் சார்ல்ஸ் மன்னருக்கு வாரிசு கிடையாதெனக் கூறப்பட்டது. அவருடைய சகோதரரும், வாரிசுமான **யார்க் கோமகன்** ஜேம்ஸ் பட்டம் பெற்ருல், இங்கிலாந்தில் கத்தோலிக்க மதமே நிலைபெற்றுவிடுமெனக் கருதிய பிராடெஸ்டெண்டுகளும் வேறு பலரும், **விலக்கு மசோதா** என்ற ஒரு புதிய மசோதாவைப் பார்லிமெண்டில் சமர்ப்பித்தார்கள். இதன்படி ஜேம்ஸ் பட்டத்துக்கு வரக்கூடாது என்பதேயாகும். இம் மசோதாவை ஆதரிக்கும் கட்சிக்கு **விக்** என்றும், எதிர்த்த கட்சிக்கு **டோரி** என்றும் பெயர் ஏற்பட்டது. காலப்போக்கில், பொதுவாக விக் கட்சியினர் மன்னர்களின் ஆதிக்கத்தை மேலும் குறைத்து, மக்கள் அதிகாரத்தை வளர்க்க வேண்டுமென்றும், மேலும் பல சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்றும் விரும்பினுர்கள். ஆனுல் டோரி கட்சியினர், மன்னர்களின் அதிகாரத்தைக் குறைத்தல் கூடாது என்றும், எவற்றிலும் பழைய முறைகளே நடைபெற வேண்டுமென்றும் விரும்பினுர்கள்.

மூன்றும் வில்லியம், ஆங்கில மக்களின் ஆதரவு பெற்று, வெளி நாட்டிலிருந்து வந்தவராதலால் எல்லாக் கட்சிகளையும் களிப்பிக்க விரும்பினர். ஆகவே, அவர் பட்டத்துக்கு வந்தவுடன், தன் மந்திரிகளை விக், டோரி ஆகிய இரு கட்சிகளினின்றும் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இம்மந்திரிசபை, பார்லிமெண்டுக்கு பொறுப்பற்றதாக இருந்ததுடன், நேர்மாருன கொள்கைகளையுடைய கட்சிகளின் மந்திரிகள் ஒற்றுமையாக செயலாற்றவில்லை. இதன் காரணமாக ஆட்சியில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. இதன் பிறகு, வில்லியம் முதலில், ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களைத் தனது மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டதுடன், காலப்போக்கில், பார்லிமெண்டில் பெரும்பான்மையாக அங்கம் வகிக்கும் கட்சியினரையே மந்திரிகளாக்கிக் கொண்டார். இம்முறைக்கே **கட்சி ஆட்சிமுறை** எனப் பெயர் வழங்கலாயிற்று. பார்லிமெண்டில் பெரும்பான்மை அங்கத்தினர்களைக் கொண்ட கட்சித் தலைவர், முக்கிய மந்திரியாகவும், இதர மந்திரிகளும், அதே கட்சியாளர்களாகவும் இருந்து, கூட்டுப் பொறுப்புடன் ஆட்சி புரியும் மந்திரி சபை முறைக்கு, **காபினெட் அரசாங்கம்** எனப் பெயர் ஏற்பட்டது.

வில்லியம், மேரி இவர்கள் சந்ததியின்றி இறக்கவே மேரியின் இளைய சகோதரியான **ஆன் இராணி**பட்டத்துக்கு வந்தாள். இவள் காலத்திலும், கட்சி ஆட்சி முறையும், காபினெட் அரசாங்கமும் செயலில் இருந்து வந்தன. மந்திரி சபைக் கூட்டங்களுக்கு, வில்லியம், ஆன் இராணி இவர்களே, தங்கள் காலங்களில் தலைமை தாங்கினுர்கள்.

1714-ம் ஆண்டில், ஆன் இராணியும் வாரிசு இன்றி மரணமடைந்தாள். எனவே ஆங்கில மக்கள் ஜெர்மனி நாட்டின் ஓர் பகுதியான ஹனேவர் இராஜ்யத்தின் மன்னரான **முதலாம்ஜார்ஜை** இங்கிலாந்தின் மன்னராக்கினுர்கள். இவருக்குப்பின், இவரது புதல்வரான **இரண்டாம் ஜார்ஜ்** இங்கிலாந்தில் ஆட்சி புரிந்தார். இவர்கள் இருவரும் பிற நாட்டில் பிறந்தவர்களாதலால், இவர்கள் ஆங்கில

மொழியை அறியவில்லை. எனவே இவர்கள் மந்திரி சபைக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க இயலாமல் போயிற்று.



இக்காரணம் பற்றி மந்திரிகளுள் முக்கியமானவரே இக்கூட்டங்களுக்குத் தலைமை தாங்க நேர்ந்தது. காலப் போக்கில்,இவருக்குப் பிரதம மந்திரி என்ற பெயர் வழங்கலாயிற்று. இப்பதவியை முதலில் வகித்தவர் ஸர் ராபர்ட் வால்போல் என்பவர். இவர் விக் கட்சித் தலைவர். இவர் மிகத் திறமை வாய்ந்தவர். ஆதலால் நெடுங்காலம்பதவியிலிருந்தார். இவர் காலத்தில் காபினெட் அரசாங்க முறை மேலும் வலுப்பெற்றது.பிற மந்திரிகள் பிரதம மந்திரியின் ஆணைக்குக் கட்டுப் பட்டவர்கள் என்றும், மந்திரிசபை கூட்டுப் பொறுப்பு வாய்ந்தது என்றும், அவர்கள் பார்லிமெண்டின் நம்பிக்கையை இழந்தால், பதவியினின்றும் விலகிக் கொள்ள வேண்டுமென்றும், நியதிகள் ஏற்பட்டன.

படம் 33 ஸர் ராபர்ட் வால்போல்

## பயிற்சி

1. முடியரசு, குடியரசு, ஜனநாயக ஆட்சி, இவற்றை விளக்குக.
2. மஹாசாசனம் யாரால், எப்பொழுது ஒப்புக்கொள்ளப் பட்டது? அதன் ஷரத்துக்கள் எவை? அது எவ்வாறு முக்கியமானது?
3. 'ஆங்கிலப் பொதுமக்கள் சபையின் தந்தை' என்ற பட்டப்பெயர் எவருக்கு அளிக்கப்பட்டது? அது அவருக்கு எவ்வாறு பொருந்தும்?
4. ஸ்டுவர்ட் மன்னர்களுக்கும், அவர்களது பார்லிமெண்டு சபைகளுக்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றக் காரணங்கள் யாவை? அதன் விளைவு என்ன?
5. 'மீட்சி,' 'மாண்புறு புரட்சி' இவை எப்பொழுது, ஏன், ஏற்பட்டன?

6. இங்கிலாந்தில் அரசியல் கட்சிகள் எவ்வாறு தோன்ற லாயின ?

7. பொது உரிமை மசோதா எப்பொழுது ஏற்பட்டது ? அதன் முக்கிய ஷரத்துக்கள் எவை ?

8. கட்சி ஆட்சிமுறை, காபினெட் அரசாங்கம் இவை என்ன ?

9. இங்கிலாந்தில் பிரதம மந்திரிபதவிஎவ்வாறு ஏற்பட்டது? அப்பதவியை முதலில் வகித்தவர் யார்? அவர் காலத்தில் காபினெட் அரசாங்கம் எவ்வாறு ஏற்றம் பெற்றது?

10. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க:—

i உவிட்டன் சபைக்கூட்டம் என்பது ———.

ii மகாசபை என்பது ——— .

iii இங்கிலாந்தை வென்ற நார்மானிய மன்னர் ——.

iv முதல் பார்லிமெண்டு கூடிய ஆண்டு——.

v மாதிரி பார்லிமெண்டைக் கூட்டிய மன்னர் ——.

vi இரண்டாம் ரிச்சர்டுக்குப்பின் பட்டத்துக்கு வந்த பரம்பரையினர் ——.

vii டியூடர் மன்னர்களுக்குப் பின் இங்கிலாந்தை ஆண்ட மன்னர்கள் ——.

viii இங்கிலாந்து குடியரசாக இருந்த பொழுது, அதன் நிர்வாகத்தை நடத்தியவர் ——.

ix மீட்சிப்படி இங்கிலாந்து மன்னராக வந்தவர் ——

x இங்கிலாந்தை ஆண்ட முதல் ஹனேவர் மன்னர் ——

11. உங்கள் பள்ளிக்கான பார்லிமெண்டு ஒன்றைந் தேர்ந்தெடுத்து, பல்வேறு மந்திரிகள் நியமித்து, பள்ளிக்கான பொதுநல வேலைகள் சிலவற்றை அவர்களுக்கு அளியுங்கள்.

# 9. பார்லிமெண்டு சீர்திருத்தம்

பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில், இங்கிலாந்தில் பல புத்தமைப்புகள் கண்டறியப்பட்டு, அவற்றின் விளைவாகப் பல பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டன. இதனைப் பொதுவாக, **தொழிற் புரட்சி** எனக் கூறுவர். இதைப்பற்றி; பின்னெரு பாடத்தில் விரிவாக அறியலாம்.

இத்தொழிற் புரட்சியின் காரணமாக, தொழிற்சாலைகள் அமைந்த விடங்களில் பெரிய நகரங்கள் ஏற்பட்டன. ஆனால் இந்நகரங்கள் பார்லிமெண்டுக்கு அங்கத்தினர்களை அனுப்பும் உரிமையைப் பெறவில்லை. முன்பு பெரும் நகரங்களாயிருந்து, இப்பொழுது பாழடைந்த சிறு கிராமங்கள் இன்னும் முன்போல் அங்கத்தினர்களைப் பார்லிமெண்டுக்கு அனுப்பி வந்தன. மேலும், பெரு நிலக் காரர்களே வாக்குரிமை பெற்றிருந்தனர். தொழில், வாணிபம் இவற்றின் காரணமாக, செல்வம் படைத்தவர்களுக்கும், பாட்டாளி மக்களுக்கும், வாக்குரிமை இல்லாமலிருந்தது. இந்நிலைகளைச் சீர்படுத்துவதற்காக மக்கள் கிளர்ச்சிகள் செய்ய ஆரம்பித்தனர்.

விக் கட்சியினர் பார்லிமெண்டு சீர்திருத்த இயக்கத்தை வெகுவாக ஆதரித்தனர். பதினெட்டாம் நூற்றுண்டின் முன் பகுதியில், இரண்டாம் ஜார்ஜ் மன்னர் காலத்துக்குப் பின், விக் கட்சியினர் மந்திரி சபை வீழ்ச்சியுற்று, டோரி கட்சியினர் மந்திரி பதவி ஏற்றனர். இவர்கள் பார்லிமெண்டு சீர்திருத்தத்தை ஆதரிக்கவில்லை. ஆனால் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில், விக் கட்சியினர் மீண்டும் மந்திரி சபை அமைத்தனர். அதே சமயத்தில், பார்லிமெண்டு சீர்திருத்தத்துக்காக, மக்களின் கிளர்ச்சியும் அதிகரித்தது. எனவே, அச்சமயம் பிரதம மந்திரியாக இருந்த கிரே பிரபு, 1832-ம் ஆண்டில் முதல் சீர்திருத்தச் சட்டத்தை இயற்றினர். இதற்கு **முதல் பார்லிமெண்டு சீர்திருத்தச் சட்டம்** எனப் பெயர். இதன்படி, அழிவுற்றிருந்த நகரங்கள், மிகக் குறைந்த எண்ணிக்கையரன

மக்களேயுடைய நகரங்கள் இவை பார்லிமெண்டுக்கு அங்கத்தினர்களே அனுப்பும் உரிமையை இழந்தன. இவ்வாறு காலியான ஸ்தானங்கள் புதிய நகரங்களுக்கு அளிக்கப்பட்டன. சிறிது நிலத்தைச் சொந்தமாக உடையவர்கள், பிறர் நிலங்களேக் குத்தகைக்குப் பயிரிடுபவர்கள், ஆண்டுக்குப் பத்து பவுன் வீட்டு வரி செலுத்துபவர்கள் இவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. இச்சட்டத்தின் காரணமாக, நடுத்தர வகுப்பினர்களுக்கும் ஓரளவு அரசியலில் பங்கு ஏற்பட்டது.

இதன் பிறகு, தொழிலாளர்களின் கிளர்ச்சி அதிகரித்தது. அவர்களின் இயக்கத்தினர் **ஜன உரிமைச்சாசன இய**



படம் 34 பார்லிமெண்டு கட்டிடம்

**கத்தார்** (chartists) எனப் பெயர் பெற்றனர். அவர்களது கோரிக்கைகள் ஆறு. அவை: வயது வந்த எல்லோருக்கும் வாக்குரிமை, இரகசிய வாக்குப் பதிவு முறை, ஆண்டு தோறும் புதிய பார்லிமெண்டு தேர்வு, பார்லிமெண்டு அங்கத்தினர்கள் ஆவதற்கு சொத்துரிமை இருக்க வேண்டுமென்ற நியதி விலக்கப்படுதல், பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுதல் வேண்டும், சம ஜன வாக்காளர் தொகுதிகள் ஆகியவை. இந்த இயக்கத்

தினர் முதலில் மிதமாகக் கிளர்ச்சி செய்த போதிலும், காலப் போக்கில் இவர்கள் மிகவும் தீவிரமாகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். ஆகவே அரசாங்கத்தினர் அடக்கு முறைகளைக் கையாள வேண்டியிருந்தது. இதனால் நாளடைவில் இந்த இயக்கம் நசிவுற்றது. எனினும், காலப்போக்கில், இவர்களது கோரிக்கைகளில் ஐந்து சட்ட பூர்வமாக அமையலாயின. ஆண்டுதோறும் புதிய பார்லிமெண்டைத் தேர்ந்தெடுத்தலை, செயலாக்குதல் கடினமாதலால், அது மட்டும் ஒப்புக் கொள்ளப்படவில்லை.

காலப்போக்கில், இங்கிலாந்தின் அரசியல் கட்சிகளின் பெயர்கள் மாறின. விக் கட்சியினர், லிபரல்கள் என்றும், டோரி கட்சியினர் கன்ஸர்வேடிவ்கள் என்றும் அழைக்கப் படலாயினர்.

1867-ம் ஆண்டில் பிரதம மந்திரியாக இருந்த டிஸ்ரேலி பிரபு இரண்டாம் சீர்திருத்தச் சட்டத்தை வெளியிட்டார். இதன்படி மேலும் சில சீரடைந்த நகரங்கள் அங்கத்தினர்களை அனுப்பும் உரிமையை இழந்தன. இந்த ஸ்தானங்கள் மேலும் பல புதிய நகரங்களுக்கு அளிக்கப்பட்டன. நகரத் தொழிலாளர்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. இதன் காரணமாக, இங்கிலாந்தில் வாக்குரிமை பெற்றவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய இரண்டு மடங்காயிற்று.

இன்னும், விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகளுக்கு வாக்குரிமை அளிக்கப்படாமலிருந்ததால், அவர்கள் மேலும் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். இதன் காரணமாக, 1884-ம் ஆண்டில், கிளாட்ஸ்டன் என்னும் பிரதம மந்திரி மூன்றும் பார்லிமெண்டு சீர்திருத்தச் சட்டத்தை இயற்றினர். இதற்கு முன்பு, 1872-ம் ஆண்டிலேயே இரகசிய வாக்குப் பதிவு முறை சட்ட பூர்வமாக அமையலாயிற்று.

மூன்றும் பார்லிமெண்டுச் சீர்திருத்த சட்டப்படி, விவசாயத் தொழிலாளர்களுக்கும் வாக்குரிமை அளிக்கப் பட்டது. இதன் விளைவாக, இங்கிலாந்தில் வயது வந்த

ஆண் மக்கள் அனைவரும் வாக்குரிமை பெற்றனர். மேலும் இச்சட்டப்படி, சம ஜன வாக்காளர் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு தொகுதியும் ஒரு அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றது.

1911-ம் ஆண்டில் ஒரு புதிய சட்டம் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டது. இதன்படி, காமன்ஸ் சபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை நிராகரிக்கும் உரிமையைப் பிரபுக்கள் சபை இழந்தது. இதனால் பொது மக்களின் ஆதிக்கம் அதிகரித்தது. மேலும், இச்சட்டப்படி, காமன்ஸ் சபையில் அங்கத்தினர்கள் ஆவதற்கு சொத்துரிமைத் தகுதி வேண்டும் என்ற நியதி ஒழிக்கப்பட்டதுடன், பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்குச் சம்பளம் வழங்கவும் ஏற்பாடு ஆயிற்று.

முதல் உலகப் பெரும் போரில், பெண் மக்களும் பெரும் பங்கு கொண்டனர். காயமுற்ற அல்லது நோயுற்ற போர் வீரர்களுக்குச் சிகிச்சையளிக்க உதவுவது, தாதிகளாகத் தொழில் புரிவது, போர் வீரர்களின் நலன்களுக்காகப் பொருள்கள் முதலியவற்றைச் சேகரிப்பது போன்ற பெரும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். ஆகவே அவர்களது சேவைக்குக் கைம்மாருக, 1918-ம் வருஷம் ஏற்பட்ட நான்காவது சீர்திருத்தச் சட்டப்படி 30 வயதுக்கு மேற்பட்ட பெண் மக்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. ஆண் மக்களுக்கு மட்டும் வாக்குரிமை பெறத் தகுதியான வயது 21 எனத் தீர்மானிக்கப்பட்டிருந்ததால், அவ்வகையில் தமக்கு ஆண்களுடன் சமத்துவம் இருக்க வேண்டுமென, பெண்மணிகள் கோறினார்கள். இக்கோரிக்கை 1928-ம் வருஷத்தில் நிறைவேற்றப்பட்டது.

இச்சீர்திருத்தச் சட்டங்களின் விளைவாக தொழிலாளிகள் வாக்குரிமை பெற்றார்களென அறிந்தோமன்றோ? இந்நூற்றாண்டில், அவர்கள் ஒன்று கூடித் தமக்காகத் தனி அரசியல் கட்சி ஒன்றை அமைத்துக் கொண்டனர். இதுவே, தொழிற் கட்சி எனப்படும். இக்கட்சியினர் 1924-ம்

ஆண்டு, 1929-ம் ஆண்டு, 1945-ம் ஆண்டு ஆக மும்முறை மந்திரி பதவி வகித்தனர். 1945-ம் ஆண்டில் அக்கட்சியின் தலைவரும், பிரதம மந்திரியுமாயிருந்த கிளெமெண்ட் ஆட்லி என்பவரே, நம் தாய் நாடாகிய இந்தியா சுதந்திரம் பெறச் செய்தார்.

இவ்வாறு, பல்வேறு சீர்திருத்தச் சட்டங்களின் விளைவாக, இங்கிலாந்தில் பூரண ஜன நாயக ஆட்சி ஏற்பட்டது.

## பயிற்சி

1. பார்லிமெண்டு சீர்திருத்தம் எவ்வகைகளில் அவசிய மாயிருந்தது ?
2. முதல் பார்லிமெண்டு சீர்திருத்தச் சட்டம் எப்பொழுது ஏற்பட்டது ? அதன் முக்கிய ஷரத்துக்கள் எவை ?
3. ஜன உரிமைச் சாசன இயக்கத்தாரின் கோரிக்கைகள் எவை? அவற்றின் முடிவு என்ன ?
4. இரண்டாம் பார்லிமெண்டு சீர்திருத்த சட்டத்தால் ஏற்பட்ட மாறுதல்கள் எவை ?
5. மூன்ரும் பார்லிமெண்டு சீர்திருத்தச் சட்டம் எவ்வாறு பயனளித்தது ?
6. 1911-ல் ஏற்பட்ட சட்டம் எவ் வகைகளில் முக்கிய மானது ?
7. இங்கிலாந்தில் பெண்கள் எப்போது, ஏன், முதல் முதலாக வாக்குரிமை பெற்றனர் ?
8. தொழிற் கட்சி எப்பொழுது ஏற்பட்டது ? அது எவ்வெப்பொழுது மந்திரி பதவி வகித்தது ?
9. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க :—

i. முதல் பார்லிமெண்டு சீர்த்திருத்தச் சட்டத்தை இயற்றியவர் ——
ii. விக்கட்சியினரின் புதிய பெயர் ——
iii. டோரி கட்சியினரின் புதிய பெயர் ——
iv. இரண்டாம், மூன்ரும், பார்லிமெண்டு சீர்திருத்தச் சட்டங்களை இயற்றியவர்கள் முறையே ——, ——
v. இந்தியா சுதந்திரம் பெற உதவிய இங்கிலாந்து பிரதம மந்திரி —— அவரது அரசியல் கட்சி ——

# 10. பிரிட்டிஷ் பொது நலக் கூட்டுறவு

பிரிட்டிஷ் தீவுகள் என்பவை பல தீவுகள் அடங்கிய கூட்டமைப்பு ஆகும். இத்தீவுகளில் கிரேட் பிரிட்டன், அயர்லாந்து ஆகியவை பெரியவையாயும் முக்கியமானவை யாயும் இருக்கின்றன. கிரேட் பிரிட்டனில், இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காத்லாந்து ஆகிய மூன்று இராஜ்யங்கள் உள்ளன. இவை மூன்றும், வட அயர்லாந்தும் ஒரே அரசாங்கத்தின் கீழ் திகழ்கின்றன.

பிரிட்டிஷ் தீவுகள் சிறு தீவுக் கூட்டங்களாக இருப் பினும், அவற்றின் சாம்ராஜ்யம் உலகில் மிகப் பெரிய தாகும். பதினாறும் நூற்றாண்டிலிருந்து அங்குள்ள மக்களில் பலர், பல்வேறு காரணங்களுக்காக, உலகின் பல்வேறு பகுதிகளில் சென்று குடியேறலானார்கள். சில விடங்களில் அவர்கள் போர் செய்தும், பிற மக்களிட மிருந்து, சில நாடுகளைப் பெற்றனர்.

முதலில் பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் இக்குடியேற்ற நாடுகளைத் தம் நன்மைக்காகவே பயன்படுத்திக் கொண் டனர். அரசியல், வாணிபம், பொருளாதாரம் ஆகிய எத் துறையிலும் அவர்களுக்கு சுயேச்சை அளிக்கவில்லை. இவற்றின் காரணமாக, அமெரிக்காவில் குடியேறி இருந்த ஆங்கிலேயர்களுக்கும், தாய் நாட்டிற்கும் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போர் மூண்டது. முதலில் குடியேறிகளால் நிலையைச் சமாளிக்க முடியாமலிருந்த போதிலும், இறுதியில் அவர்கள் வெற்றி பெற்று, தாய் நாட்டுடன் இருந்த தொடர்புகள் அனைத்தையும் அகற்றிக் கொண்டு, சுதந்திரம் பெற்றனர். அச்சுதந்திர நாடே அமெரிக்கா ஐக்கிய நாடுகள் என வழங்கப்படுவது. இதைப் பற்றிய விவரங்களை மேலும், அடுத்த பாடத்தில் அறிவோம்.

அமெரிக்காவுடன் ஏற்பட்ட போருக்குப்பின், பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் தமது குடியேற்ற நாட்டுக் கொள்கை களை மாற்றிக் கொண்டனர். முக்கிய குடியேற்ற நாடு

களான கனடா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஸீலந்து ஆகிய விடங்களுக்கு வெவ்வேறு காலங்களில் பொறுப்பாட்சி வழங்கப்பட்டது. அந்தந்த நாட்டை ஆளும் கவர்னர்-ஜெனரல், அந்தந்த நாட்டுப் பிரதம மந்திரியின் சிபார்சின் பேரில்,பிரிட்டிஷ் முடியரசால் நியமிக்கப்பட்ட போதிலும், அவர் அந்தந்த நாட்டு மந்திரி சபையின் ஆலோசனைக் கிணங்கவே, அரசாங்கத்தை நடத்த வேண்டும். அந்நாடுகளின் உள்நாட்டு விவகாரங்கள் அனைத்தும் அவையே கவனித்து வந்தன. அவற்றின் வெளி நாட்டு விவகாரங்கள் மட்டும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கையிலிருந்தன.

முதல் உலகப் பெரும் போருக்குப்பின், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வெளி நாட்டுக்கொள்கை மேலும் மாறுதல் அடைந்தது. 1931-ம் ஆண்டில் நடைபெற்ற ஓர் மகா நாட்டின் தீர்மானப்படி, வெளி நாட்டுக் கொள்கையிலும், இக்குடியேற்ற நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் அவை சம உரிமை பெற்றன; எனினும் அவை ஒரே கூட்டுறவில் அமைந்துள்ள அங்கங்களாக இயங்கின. இக்கூட்டுறவுக்குப் **பிரிட்டிஷ் பொது நல அரசு** (British Common-wealth of Nations) எனப் பெயர்.

வாணிபத்திற்காக இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர்கள் நாளடைவில் இங்கு ஆட்சி புரிய ஆரம்பித்தனர். **பர்மா**, இலங்கை ஆகிய நாடுகளும் கூட அவர்களது ஆதிக்கத்தின் கீழ் வந்தன. நமது மாபெரும் தேசத் தலைவர்களின் ஒப்பற்ற தியாகங்களின் காரணமாக, 1947-ம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், பதினைந்தாம் நாள், நமது நாடு **இந்தியா**, **பாகிஸ்தான்** என இரண்டு பிரிவுகளாக்கப்பட்டு, இரண்டிற்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது. பரந்த நோக்கம் கண்ட நம் தலைவர்கள், பொது நல அரசுக்குள்ளேயே, சுதந்திர நாடாகத் திகழ உறுதி கொண்டனர். 1950-ம் ஆண்டு, ஜனவரித் திங்கள், இருபத்து ஆறும் தேதி இந்தியா ஓர் குடியரசாயிற்று. நம் நாடு சுதந்திரம்

பெற்ற சிறிது காலத்துக்கெல்லாம் பர்மா, இலங்கை இவையும் சுதந்திரம் பெற்றுள்ளன.

காலப் போக்கில், பிரிட்டிஷ் பொது நல அரசு என்ற சொற்றொடரில், பிரிட்டிஷ் என்ற சொல்லும் விடப்பட்டு, இப்பொழுது, பொதுநலக் குடியரசு என்றே வழங்கி வருகின்றது. இதன் அங்க நாட்டுத் தலைவர்கள் அவ்வப் பொழுது கூடி, தம் கூட்டுறவையும், நலன்களையும் வளர்த்துக் கொள்வதுடன், உலக அமைதிக்காகவும் பாடுபட்டு வருகின்றனர்.

### பயிற்சி

1. பிரிட்டிஷ் தீவுகளில் அடங்கிய நாடுகள் எவை ?
2. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குடியேற்ற நாட்டுக் கொள்கை முதலில் என்ன ? அது பிறகு எவ்வகையில், ஏன் மாறியது ?
3. 1931-ம் ஆண்டில் இந்நாடுகளிடையே ஏற்பட்ட மாறுதல்கள் யாவை ?
4. நம் நாடு சுதந்திரம் பெற்றது, குடியரசாக மாறியது ஆகிய ஆண்டுகளைக் கூறுக.
5. பிரிட்டிஷ் பொதுநல அரசு என்றால் என்ன ? தற்போது அது எப்பெயருடன், எவ்வாறு செயலாற்றி வருகிறது?
6. உலகப் படமொன்றில், பொதுநல அரசுக்குப்பட்ட நாடுகளைக் குறிப்பிட்டுப் பெயர்களை எழுதுக.

## 11. அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் தோற்றமும் வளர்ச்சியும்

இந்தியாவிற்குப் புதிய கடல் மார்க்கம் கண்டறிய விரும்பிய கொலம்பஸ் மேற்கிந்தியத் தீவுகளைக் கண்டு பிடித்தார் என்றும், அவரது வழியைப் பின் பற்றிச் சென்ற

அமெரிக்கோ வெஸ்புகி, அமெரிக்காக் கண்டங்களைக் கண்டு பிடித்தார் என்றும், முன்னொரு பாடத்தில் அறிந்து கொண்டோம். இதையடுத்து, இரு அமெரிக்காக் கண்டங்களிலும், ஏராளமான வெள்ளிக் கனிகள் இருப்பதாகக் கண்டறியப் பட்டது. ஆகவே ஸ்பெயின், போர்ச்சுகல் நாட்டினர்கள் அங்கு சென்று குடியேறி, ஏராளமான வெள்ளியைச் சேகரித்து, தம் நாடுகளுக்கு எடுத்துச் சென்றனர்.

பதினேழாம் நூற்றுண்டில் ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் வட அமெரிக்காவில் குடியேற ஆரம்பித்தனர். 1605-ம் ஆண்டில், ஸர் வால்டர் ராலே என்னும் ஆங்கிலேயர் வட அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையருகில் வர்ஜீனியா என்னும் பெயருடைய குடியேற்ற நாடு ஒன்றை ஸ்தாபித்தார்.


படம் 35. ஸர்வால்டர் ராலே

பதினேழாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் முதலாம் ஜேம்ஸ் மன்னர் இங்கிலாந்தில் ஆட்சி புரிந்ததைப் பற்றி முன்பு படித்தோம். அவர் காலத்தில் சிலர் தம் இச்சைப் படி இறைவனை வழிபட அனுமதிக்கப்பட வில்லை. ஆகவே அவர்களில் பலர் 1620-ம் ஆண்டில், **மே பிளவர்** என்னும் கப்பலில் பிரயாணம் செய்து, வட அமெரிக்காவை அடைந்தனர். அவர்களுக்கு **யாத்திரைப் பெரியார்கள்** எனப் பெயர் ஏற்பட்டது. அவர்களும், அவர்களைப் பின்பற்றி வந்த வேறு பலரும், வட அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் குடியேறி, 1750-ம் ஆண்டுக்குள் பதின்மூன்று குடியேற்ற நாடுகளை ஸ்தாபித்தனர்.

ஆங்கிலேயர்கள் குடியேறி இருந்த நாடுகளுக்கு வடக்கிலும், தென் மேற்கிலும பிரஞ்சுக்காரர்கள் குடியேறி இருந்தனர். இவர்களுக்கும், ஆங்கிலக் குடியேறிகளுக்கும்




படம் 36. வடஅமெரிக்காவில் பதின்மூன்று குடியேற்ற நாடுகள்

இடையே அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. அச்சமயங்களி லெல்லாம் ஆங்கிலக் குடியேறிகள் தமது தாய்நாட்டின் உதவியை நாட வேண்டியிருந்தது. 1756-ம் ஆண்டு முதல் 1763-ம் ஆண்டு வரை ஏழாண்டுகள் ஆங்கிலேயர் களுக்கும், பிரஞ்சுக்காரர்களுக்கும் ஐரோப்பாவிலும், அமெ ரிக்காவிலும், வேறு பல இடங்களிலும் ஏற்பட்ட போர் களில், பிரெஞ்சுக்காரர்கள் படுதோல்வி அடைந்தனர். ஆகவே அவர்கள், வட அமெரிக்காவில் ஆங்கிலேயர் களின் குடியேற்ற நாடுகளுக்கு வடக்கில், தங்களுக்குச் சொந்தமாயிருந்த கனடா என்னுமிடத்தை ஆங்கிலேயர் களுக்குக் கொடுக்க நேரிட்டது. இதன் பிறகு, வட அமெரிக்காவிலிருந்த ஆங்கிலேயர்களுக்குப் பிரஞ்சுக்காரர் களால் எவ்வித இடையூறும் நிகழவில்லை.

**அமெரிக்க சுதந்திரப் போர்:—** அமெரிக்காவில் குடி யேறியிருந்த ஆங்கிலேயர்கள் சுதந்திரமாக வாழ முடிய வில்லை. அவர்களுக்காக, கவர்னர்கள், நீதிபதிகள் ஆகி யோர்கள் இங்கிலாந்து அரசாங்கத்தாராலேயே நியமிக்கப் பட்டனர். அவர்களுக்கான சட்டங்களும் ஆங்கில பார்லி மெண்டாலேயே நிறைவேற்றப்பட்டன. மேலும், இங்கி லாந்து, இந்நாடுகளின் வாணிபம், கைத்தொழில்கள் இவை வளரவொட்டாமல் தடுத்து, இவற்றைத் தனது நலன் களுக்காகப் பயன்படுத்தி வந்தது. இக்காரணங்கள் பற்றி, குடியேறிகளுக்குத் தாய் நாட்டினிடம் மனக்கசப்பு ஏற்பட்டு, வளர்ச்சியுற்றது. எனினும், அவர்களுக்கு, பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராக, தாய் நாட்டின் உதவி வேண்டியிருந்ததால், அவர்கள் எல்லா இன்னல்களையும் பொறுத்திருந்தனர். ஆனால் ஏழாண்டுப் போருக்குப்பின், அவர்களுக்கு, பிரெஞ்சுக்காரர்கள் கொடுத்துவந்த தொல்லை நிவர்த்தியாகி விட்டதால், இனி தமக்குத் தாய் நாட்டின் உதவி தேவையில்லை எனக் கருதினார்கள். ஆகவே, அவர் கள் தாய் நாட்டின் ஆதிக்கத்தினின்றும் விடுபட முயற்சி செய்யலாயினர்.

வட அமெரிக்காவில் ஆங்கிலேயர்கள் நடத்திய ஏழாண்டுப் போர், தம் குடியேற்ற நாடுகளின் நலனுக்காகவேயானதால் அதற்கான செலவில் ஓர் பகுதியையாவது குடியேற்ற நாடுகள் ஏற்கவேண்டுமென ஆங்கில அரசாங்கம் கருதியது. இக் கருத்துக்கொண்டு 1765-ம் ஆண்டில் ஆங்கிலப் பார்லிமெண்டு **முத்திரைச் சட்டம்** இயற்றியது. இதன்படி அமெரிக்கர்கள் தங்கள் பத்திரங்களுக்காக, ஆங்கிலேயர்கள் வெளியிட்ட முத்திரைக் காகிதத்தைத் தான் உபயோகிக்க வேண்டுமென உத்தரவிட்டனர். இது தம் சுயமரியாதைக்கு இழுக்கெனக் கருதிய அமெரிக்கர்கள் முத்திரைச் சட்டத்தின்படி நடக்க மறுத்தனர். மேலும், தங்கள் பிரதிநிதிகள் ஆங்கிலப் பார்லிமெண்டில் இல்லாததால், தங்கள்மீது வரி விதிக்க அப் பார்லிமெண்டுக்கு அதிகாரம் இல்லை என அவர்கள் முழக்கம் செய்தனர். இங்கிலாந்திலும் அவர்களுக்கு ஆதரவு இருந்தது. ஆகவே முத்திரைச் சட்டம் நீக்கப்பட்டது. ஆயினும், குடியேற்ற நாடுகளின்மீது வரி விதிக்க, தனக்கு உரிமை உண்டு என ஆங்கிலப் பார்லிமெண்டு மீண்டும் ஒரு சட்டத்தை இயற்றியது,

1773-ம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள **போஸ்டன்** துறைமுகத்துக்கு வந்த தேயிலையை இறக்குமதி செய்கையில் அதன்மீது வரி வசூலிக்க, ஆங்கில அரசாங்கத்தினர் முயற்சித்தனர். இதை அமெரிக்கர்கள் விரும்பவில்லை. ஆகவே அவர்களில் சிலர் அமெரிக்கப் பூர்வீகக் குடிகளாகிய **செவ்விந்தியர்கள்** போல மாறுவேடம் பூண்டு, கப்பல்களுக்குள் சென்று, தேயிலைப் பெட்டிகள் அனைத்தையும் கடலுக்குள் எறிந்தனர். இச் சம்பவத்திற்கு **போஸ்டன் தேநீர் விருந்து** எனப் பெயரிடப்பட்டது. இதனால் மனங்கொதித்த ஆங்கிலேயர்கள் அமெரிக்கர்கள்மீது போர் தொடுத்தனர். இப் போர், **அமெரிக்க சுதந்திரப் போர்** எனப் பெயர் பெற்றது.

இப் போர் 1775-ம் ஆண்டு முதல் 1783-ம் ஆண்டு வரை நடைபெற்றது, 1776-ம் ஆண்டு, ஜூலை மாதம்

4-ந் தேதியன்று, பதின்மூன்று குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகள் பிலடெல்பியா நகரில் ஒன்றுகூடி, தம் சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டனர். இக் கூட்டத்திற்கு ஜார்ஜ் வாஷிங்டன் என்பவர் தலைமை வகித்தார். நாம் ஆகஸ்டு மாதம் 15-ந்தேதி சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது போல, அமெரிக்கர்கள் இன்றும் ஜூலை மாதம் 4-ந் தேதி சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்றனர்.



படம் 37. ஜார்ஜ் வாஷிங்டன்

அமெரிக்க சுதந்திரப் போரின் தொடக்கத்தில், அமெரிக்கர்கள் பலவிடங்களில் தோல்வியுற்றனர். எனினும், வாஷிங்டனின் விடாமுயற்சி, தளரா ஊக்கம், தீரம் இவற்றின் காரணமாகவும், வேறு சில ஐரோப்பிய நாடுகள் செய்த உதவியின்காரணமாகவும், இறுதியில் வெற்றி அமெரிக்கர்களுக்கே கிட்டியது. 1783-ம் ஆண்டில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி பதின்மூன்று குடியேற்ற நாடுகளையும் ஐக்கியப்படுத்தி அவற்றின் சுதந்திரமும் இங்கிலாந்தால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இவ்வாறு அமெரிக்கா ஐக்கிய நாடுகள் உருவாயின.

இவற்றிற்கான ஓர் அரசியல் திட்டம் வகுக்கப்பட்டது. அத் திட்டத்தின்படி ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு கவர்னரும் சட்டசபையும் உண்டு. எல்லாவற்றின் பொது விஷயங்களையும் கவனிக்க, ஒரு ஜனாதிபதியும், இரு சட்ட சபைகளும் உண்டு. ஜனாதிபதி நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்வு பெறுவார். நிர்வாகத்தில் அவருக்கு உதவிபுரிய ஒரு மந்திரி சபையையும் அவரே நியமிப்பார். அமெரிக்கர்களின் வெற்றிக்குக் காரணமாக இருந்த ஜார்ஜ் வாஷிங்டனே முதல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொதுத் தலைநகருக்கும் அவர் பெயரே இடப்பட்டது.

இனி, ஜார்ஜ் வாஷிங்டனின் வாழ்க்கை வரலாற்றை அறிவோம்.

ஜார்ஜ் வாஷிங்டன் 1732-ம் ஆண்டில் வர்ஜீனியா நாட்டில் பிறந்தார். இவரது தந்தை பயிர்த் தொழில் புரிந்தவர். ஆகவே, வாஷிங்டனும், இளமையிலிருந்தே அதே தொழிலில் ஈடுபட்டிருந்தார். சிறு வயது முதல் இவர் அஞ்சா நெஞ்சமும், சீரிய ஒழுக்கங்களும் கொண்டிருந்தார். ஏழாண்டுப் போர் தொடங்கியதும் இவர் நாட்டுப்பற்று காரணமாக, படையில் சேர்ந்து, சிறந்த தொண்டாற்றினர். இக்காலத்தில் இவருக்கு சிறந்த போர்ப் பயிற்சியும் ஏற்பட்டது. பிற்காலத்தில் நடைபெற்ற அமெரிக்க சுதந்திரப் போரில் இவருக்கு இப் பயிற்சி பெரிதும் உதவியது. அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்பட்டவுடன் இவர் அமெரிக்கப் படைகளுக்குத் தலைவராக, ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிலடெல்பியா மகாநாட்டிற்கும் இவரே தலைமை வகித்தார். போர்மூண்டசமயத்தில் அமெரிக்கப் படைகளுக்குப் போதிய பயிற்சி இல்லை. அவர்களிடம் போர்க் கருவிகளும் போதிய அளவு இல்லை. எனினும், வாஷிங்டன் ஊக்கம் குன்ருது, உழைத்தார். அமெரிக்கர்களின் ஆரம்பத் தோல்விகள், இறுதி வெற்றியாகத் திகழ்ந்தன. நன்றியுள்ள அமெரிக்கர்கள் இவரை இருமுறை ஜனதிபதியாகத் தேர்ந்தெடுத்தது மன்றி, தலைநகருக்கும் இவரது பெயரையே சூட்டினர்கள். மூன்ரும் முறையும் மக்கள் இவரைத் தேர்ந்தெடுக்க விரும்பிய பொழுது, இவர் அதற்கு இசையாது, பதவியினின்றும் விலகி, தனது எஞ்சிய நாட்களை, பயிர் செய்வதில் கழித்தார். இவர் ஜனதிபதியாக செயலாற்றுகையில், நாட்டை, விவசாயம், வாணிபம், கைத்தொழில் ஆகிய எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெறச்செய்தார். ஒரு சரித்திர ஆசிரியர் அவரைப் பற்றிக் கூறியதாவது : "அவர் போரில் முதல்வர், சமாதானத்தில் முதல்வர், தம் நாட்டு மக்களின் இதயத்தில் முதல்வர்."

**மன்ரோ கொள்கை** :—அமெரிக்கா ஐக்கிய நாடுகள் 1783-ம் ஆண்டில் உருவாகிய பின், அவை மேற்கு நோக்கி

பஸிபிக் சமுத்திரம் வரை பரவலாயின. ஜனத்தொகை, வாணிபம், கைத்தொழில் ஆகிய பல துறைகளிலும் முன்னேற்றம் காணப்பட்டது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் சாதனையை வழிகாட்டியாகக் கொண்ட தென் அமெரிக்க நாடுகள் தம்மை ஆண்டுவந்த ஸ்பெயின், போர்ச்சுகல் நாடுகளின் ஆதிக்கத்தினின்றும் விடுபட்டு, தம் சுதந்திரத்தை நிலைநாட்டின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சில ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்காவில் சில குடியேற்ற நாடுகளை ஸ்தாபிக்கவும், ஸ்பெயின், போர்ச்சுகல் நாடுகள் மீண்டும் தம் ஆதிக்கத்தைத் தென் அமெரிக்காவில் ஸ்தாபிக்க உதவவும் அவை முன்வந்தன. இதனால் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் சுதந்திரம் பாதிக்கப்படுமென ஐயம் தோன்றியது. எனவே அப்பொழுது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த **மன்ரோ**, தனது பெயர் கொண்ட, **மன்ரோக் கொள்கையை** வெளியிட்டார் (1823). அதன்படி, அமெரிக்கர்கள், ஐரோப்பிய நாடுகளின் விஷயங்களில் தலையிடாததுபோல, ஐரோப்பிய நாட்டினர்களும், அமெரிக்காவின் விஷயங்களில் தலையிடவோ, அங்கு குடியேற்ற நாடுகளை ஸ்தாபிக்கவோ கூடாது என்றும், அவ்வாறு அவர்கள் செய்தால் அது அமெரிக்காவிற்கு விரோதமான செய்கையாகக் கருதப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. இதனால், அமெரிக்காக் கண்டங்கள் வெகுவாக முன்னேற வகை ஏற்பட்டது.

## பயிற்சி

1. ஆங்கிலேயர்கள் வட அமெரிக்காவில் குடியேறியதற்கு முக்கிய காரணம் என்ன ?
2. அமெரிக்க சுதந்திரப் போருக்கான காரணங்கள் என்ன ?
3. அமெரிக்க சுதந்திரப் போரில், அமெரிக்கர்கள் வெற்றி பெறக் காரணமாயிருந்த வீரர் யார் ? அவர் எவ்வாறு அவர்களால் கௌரவிக்கப்பட்டார் ?
4. வாஷிங்டனின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி குறிப்புக் கூறுக.

5. மன்ரோ கொள்கை எப்பொழுது வெளியிடப்பட்டது? அதன் ஷரத்துக்கள் என்ன? அதன் விளைவு யாது?
6. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க :—
   (i) வர்ஜீனியா குடியேற்ற நாட்டை ஏற்படுத்திய ஆங்கிலேயர்————.
   (ii) மே பிளவர் கப்பலில் அமெரிக்காவுக்குச் சென்ற ஆங்கிலேயர்கள்————.
   (iii) முத்திரைச் சட்டம் ஏற்பட்ட ஆண்டு————.

## 12. தென் அமெரிக்கக் குடியரசுகள்

கொலம்பஸ், அமெரிகோ வெஸ்புகி இவர்கள் பிரயாணத்துக்குப் பிறகு, தென் அமெரிக்கா நாடுகளில் ஏராளமான வெள்ளி காணப்பட்டதன் காரணமாக, ஸ்பானியரும், போர்ச்சுக்கீஸியரும் அங்கு சென்று குடியேறி, அவற்றைச் சேகரித்து, தம் நாடுகளுக்கு எடுத்துச் சென்றதாகக் கூறப் பட்டது அன்றோ? இவர்களுள் போர்ச்சுக்கீஸியர்கள், **பிரேஸில்** நாட்டிலும், ஸ்பானியர்கள் **கயானா** தவிர ஏனைய நாடுகளிலும் குடியேறினார்கள், அவர்கள் அந்நாடுகளின் செல்வமனைத்தையும் சுரண்டியதுடன், அவற்றின் நாகரிகத்தையும் குலைத்து, பூர்வீக மக்களின் வாழ்க்கையையும் அவலமாக்கினார்கள்.

வட அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் தாய்நாட்டுடன் போரிட்டு, சுதந்திரம் பெற்றது. தென் அமெரிக்காநாடுகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது. ஆகவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அந்த நாடுகள் சுதந்திரப் போர் முழக்கத்தைத் தொடங்கின. வட அமெரிக்க நாடுகளுக்கு ஜார்ஜ் வாஷிங்டன் உதவியது போல், தென் அமெரிக்க நாடுகளுக்கு **ஸைமன் பொலிவர்** என்பவர் உதவினார்.

ஸைமன் பொலிவர் 1783-ம் ஆண்டில், தென் அமெரிக்காநாடுகளில் ஒன்றாகிய **வெனிசூலா**வில் பிறந்தார். சிறு

வயதில் இவர் ஸ்பெயின் நாட்டுக்குச் சென்று கல்வி கற்று, தேர்ச்சி பெற்ருர். இவர் மீண்டும் தாய் நாட்டுக்குத் திரும்பிய சமயமே அங்கு சுதந்திரப் போர் ஏற்பட்டதால், ஸைமன் அதில் கலந்து கொண்டு, பெரும் பணியாற்றினுர். வெனிசூலாவிலிருந்த ஸ்பானியப் படைகளை முறியடித்துத் துரத்திவிட்டு, இவர் அந்நாட்டு மக்களின் விருப்பப்படி அதன் ஆட்சியை மேற் கொண்டார். ஆனல் மீண்டும் ஓர் பெரும் ஸ்பானியப்படை வெனிஸுலாவைத் தாக்கி வென்றதால், இவர் சில காலம் மேற்கிந்தியத் தீவுகளில் வசிக்க வேண்டி வந்தது. பிறகு இவர் மீண்டும் தென் அமெரிக்காவுக்கு வந்து, கொலம்பியா என்னும் நாடு சுதந்திரம் பெற உதவினுர். இதன் காரணமாக ஸைமன் கொலம்பியாவின் குடியரசுத் தலைவராகத் தேர்வு பெற்ருர். மேலும் பல தென் அமெரிக்க நாடுகள் சுதந்திரம் பெற, இவர் உதவியளித்தார். இவரது சேவையைப் பாராட்டும் வகையில் ஒரு நாட்டிற்கு இவரது பெயரை யொட்டி பொலிவியா எனப் பெயர் கொடுக்கப்பட்டு, அப் பெயர் இன்றும் நிலவி வருகின்றது.

சில ஆண்டுகளுக்குப் பின், ஸ்பெயின், போர்ச்சுகல் நாடுகள் தென் அமெரிக்காவில் தம் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்ட முயற்சித்தன. சில ஐரோப்பிய நாடுகளும் அவற்றிற்கு உதவியளிக்க முன் வந்தன. இதனுலேயே, அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் ஜனுதிபதியான மன்ரோ, தமது மன்ரோக் கொள்கையை விடுத்தார் எனக் கூறப்பட்டது. இதனல் தென் அமெரிக்கா நாடுகள் பெரும் பாடுபட்டுப் பெற்ற சுதந்திரம் காப்பாற்றப்பட்டது.

## பயிற்சி

1. முதன் முதலில் தென் அமெரிக்காவுக்கு வந்து குடியேறிய ஐரோப்பிய நாட்டினர்கள் யார்? அவர்கள் வந்த காரண மென்ன?
2. தென் அமெரிக்கா நாடுகள் ஏன் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தை வெறுத்தன?
3. தென் அமெரிக்கா நாடுகள் சுதந்திரம் பெற உதவியவர் யார்? அவர் எவ்வாறு கௌரவிக்கப்பட்டார்?

# 13. ஐக்கிய நாடுகளின் சில ஜனுதிபதிகளும், அவர்களது சேவையும்

**ஆப்ரஹாம் லிங்கன்** :—காலப் போக்கில், அமெரிக்கா ஐக்கிய நாடுகள் அட்லாண்டிக் சமுத்திரத்திலிருந்து, பஸிபிக் சமுத்திரம் வரை பரவியதுடன், கைத்தொழில், வாணிபம், விவசாயம் இவற்றிலும் ஏற்றம் பெற்றன எனக் கூறப்பட்டது. அந் நாடுகளின் கிழக்குப்பகுதியில், தென் பிரிவிலுள்ள நாடுகள் விவசாயத்திலும், வட பிரிவிலுள்ளவை செய்தொழிலிலும் ஏற்றம் பெற்றிருந்தன. தென் பகுதிகளில் பருத்தி, புகையிலே, முதலியன அதிகமாகப் பயிரிடப் படலாயின. அத் தோட்டங்களில் வேலே செய்ய, ஆப்பிரிக்காவினின்றும்ஆயிரக்கணக்கான நீக்ரோ அடிமைகள் கொண்டுவரப் பட்டிருந்தனர். இதனுல் அவ்விடங்களில் அடிமை வியாபாரமும் அதிகமாக நடைபெற்று வந்தது. இந்த அடிமைகள் கால் நடைகளே விடவும் கேவலமாக நடத்தப்பட்டனர். இவ் வடிமைகளின் இன்னல்களேப் போக்கி, அவர்களுக்கு விடுதலே யளித்தவர், **ஆப்ரஹாம் லிங்கன்** என்ற அமெரிக்க ஜனுதிபதியே.

ஆப்ரஹாம் லிங்கன், 1809 ஆம் ஆண்டில், அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் ஓர் பகுதியாகிய கெண்டகி இராஜ்யத்தில்பிறந்தார். இவரது குடும்பம் மிக எளியதாகையால்,சிறு வயது முதலிலிருந்தே லிங்கன் கையுழைப்பை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இவருக்குக் கல்வியில் இருந்த ஆர்வமும், இவரது கடும் உழைப்பு, விடா முயற்சி ஆகிய சீரிய குணங்களும்இவரது முன்னேற்றத்துக்குக் காரணமாக இருந்தன. தானுகவே சட்டக்கல்வி பயின்று, அதில் தேர்வு



படம் 38. ஆப்ரஹாம் லிங்கன்

பெற்று, இவர் ஓர் வழக்கறிஞரானார். அதே சமயத்தில இவர் செய்த சமூகசேவையைப் பாராட்டிய பொதுமக்கள் இவரைச் சட்ட சபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தனர். ஒரு சமயம், இவர் தொழில் காரணமாக, தென்னாட்டுக்குச் சென்றபோது, அங்கு அடிமைகள் படும் துயரை நேரிடக் கண்டு, மனமுருகினார். எப்பாடுபட்டேனும், அமெரிக்காவில் அடிமை வியாபாரத்தை ஒழித்து, அடிமைகள் சுதந்திரம் பெறச் செய்ய உறுதி பூண்டார்.

1861-ம் ஆண்டில் லிங்கன் அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாகத் தேர்வு பெற்றார். இவர் அடிமை வியாபாரத்தை நிறுத்தி விடுவார் என அஞ்சிய தென் நாட்டவர்கள், தாங்கள் பிரிந்து, ஓர் தனிக்கூட்டரசை அமைத்துக்கொள்ள விரும்பினார்கள். இதனால் அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் பலம் குன்றுவதுடன், அதன் ஏற்றமும் எல்லாத் துறைகளிலும பாதிக்கப்படுமென அஞ்சிய லிங்கன், அவர்களது விபரீதச் செயலைத் தடுப்பதற்காக, அவர்களுடன் ஓர் உள்நாட்டுப் போர் தொடுத்தார். ஆரம்பத்தில் தென்னாட்டவர்களுக்கே வெற்றி கிட்டியது. போர் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே லிங்கன் இரண்டாம் முறையும் ஜனாதிபதியாகத் தேர்வு பெற்றார். இவரது அஞ்சாநெஞ்சமும், கடும் உழைப்பும் இறுதியில் பயனளித்தன. தென்னாட்டவர்கள் பணிந்தனர். அடிமைகளின் சுதந்திரப் பிரகடனமும் வெளியாயிற்று. பல்லாயிரக்கணக்கான அடிமைகள் இவரை வாயார வாழ்த்தினார்கள்.

ஆனால் அந்தோ! ஓர் வெற்றி விழாவில் கலந்து கொள்வதற்காக இவர் ஓர் நாடகக் கொட்டகைக்குச் சென்றிருந்த பொழுது அங்கு ஒரு தென்னாட்டுக் கொடியோனால் சுட்டு வீழ்த்தப்பட்டார். உத்தமர் சேவைக்கு என்னே கைம் மாறு!

**உட்ரோ வில்ஸனும், அமெரிக்கா ஓர் வல்லரசாதலும் :—** வாஷிங்டன், லிங்கன் முதலிய ஒப்பற்ற ஜனாதிபதிகள் போற்றி வளர்த்த அமெரிக்கா ஐக்கிய நாடுகள் இந்நூற்


படம் 39. உட்ரோ வில்ஸன்

ருண்டின் தொடக்கத்தில் பூரண வளர்ச்சி பெற்று, 48 சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மேலும் வட அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியாகிய அலாஸ்காவும், பல பஸிபிக் தீவுகளும் அவற்றின் ஆணைக்குட்பட்டிருந்தன. செல்வநிலையிலும் இவை உலக நாடுகளிடையே மிக உயர்ந்த பதவியை யடைந்திருந்தன. இவற்றை அரசியல் துறையிலும் உலக வல்லரசுகளில் ஒன்றுக்கிய பெருமை ஜனாதிபதி உட்ரோ வில்ஸனைச் சாரும்.

உட்ரோ வில்ஸன், ஜார்ஜ் வாஷிங்டன் பிறந்த வர்ஜீனியா நாட்டிலேயே 1856-ம் ஆண்டில் பிறந்தார். சிறு வயது முதல் இவர் அரசியல் துறையில் ஆர்வம் கொண்டு பொதுக்கல்வியுடன் அரசியல் அறிவும் பெற்றார். 1910-ம் ஆண்டில் இவர் நியூ ஜெர்ஸி என்ற இராஜ்யத்தின் கவர்னராக நியமனம் பெற்றார். அங்கு இவர் ஆற்றிய பணி, நாடெங்கும் இவருக்குப் புகழ் அளித்தது. இதன் காரணமாக, இவர் 1912-ம் ஆண்டில் ஜனாதிபதி பதவியைப் பெற்றார். இரண்டு ஆண்டுகளுக்கெல்லாம், முதல் உலகப் பெரும் போர் தொடங்கியது. முதலில் ஐரோப்பாவின் ஓர் பகுதியில் மூண்ட இப்போர், துரிதமாக, காட்டுத்தீயென, உலகின் பல பகுதிகளிலும், பரவியது. முதலில் வில்ஸன் அமெரிக்காவை இப்போரில் ஈடுபடச் செய்யாமல், நடுநிலைமை வகிக்கச் செய்தார். ஆனால் ஜெர்மானியர்களின் நீர்மூழ்கிக் கப்பல்கள் அமெரிக்கக் கப்பல்களில் சிலவற்றையும் தாக்கி, மூழ்கடித்தன. இனி வாளாக விருத்தல் நலமன்று எனக் கருதிய வில்ஸன், ஜெர்மானியருக்கு நற்புத்தி புகட்ட, அமெரிக்காவையும் போரில் ஈடுபடச் செய்தார். இந்நிகழ்ச்சி 1917-ம் ஆண்டில் ஏற்பட்டது. அமெரிக்காவிலிருந்து போர்த் தளவாடங்கள், ஐரோப்பாவி

லும், போர் நடக்கும் வேறு சில பகுதிகளிலும் வந்து குவிய ஆரம்பித்தன. அமெரிக்கப் போர்வீரர்களும் அனுப்பப்பட்டனர். இப் பெரு முயற்சியின் காரணமாக, அடுத்த ஆண்டே ஜெர்மானியர் அடிபணிந்தனர்.

உலகில் மக்கள் தோன்றிய நாள் முதல் ஏற்பட்ட போர்களுள் இம் முதல் உலகப் பெரும்போர் மிகக் கொடியதாக இருந்தது. இதனால் மானிடவர்க்கமே அழியக் கூடுமென ஐயமும், ஆங்காங்கு தோன்றலாயிற்று. ஆகவே உலகில் இனி இத்தகைய போர்கள் நிகழாவண்ணம் தடுக்க, வில்ஸன், பதினான்கு அம்சங்கள் கொண்ட ஓர் திட்டத்தை வெளியிட்டார். அதன் முக்கிய ஷரத்தாவது, உலக நாடுகளின் பிரதிநிதிகள் கொண்ட ஸ்தாபனம் ஒன்றை அமைத்து, அதன்மூலம், நாடுகளிடையே ஏற்படும் பிணக்குகளை, போரின்றி, அமைதியான முறையிலேயே தீர்த்துக்கொள்வது என்பதாகும். 1919-ம் ஆண்டில், பிரான்ஸ் நாட்டிலுள்ள மார்ஸேல்ஸ் என்னுமிடத்தில் கூடிய சமாதான மகாநாட்டில் வில்ஸன் கலந்து கொண்டு, தன் திட்டங்களை அங்கு ஒப்புக்கொள்ளச் செய்தார். இதன் காரணமாக 1920-ம் ஆண்டில், ஐரோப்பாவில் ஸ்விட்ஸர்லாந்து நாட்டிலுள்ள ஜினிவா நகரில், உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக, **சர்வதேச சங்கம்** தோற்றுவிக்கப்பட்டது. எனினும், அமெரிக்கா இதில் சேர மறுத்ததால், மனமுடைந்த வில்ஸன் 1921-ம் ஆண்டில், ஜனாதிபதி பதவியினின்றும் விலகிக்கொண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பின் காலமானார். அமெரிக்காவை உலக வியவகாரங்களில் கலந்துகொண்டு, ஓர் வல்லரசாகச் செய்த தொண்டு, வில்ஸனின் முக்கியப் பணியாகும்.

**பிராங்க்லின் ரூஸ்வெல்ட்** :—வில்ஸனுக்குப் பின் பதவியேற்ற ஜனாதிபதிகளுள் முக்கியமானவர் **பிராங்க்லின் ரூஸ்வெல்ட்**. இவர் 1882-ம் ஆண்டில் பிறந்தார். தனது கல்வியை முடித்துக்கொண்டு, அரசியல் துறையில் இறங்கினார். நியூயார்க் நாட்டின் கவர்னராக முதலில் செயலாற்றினார். பிறகு 1932-ம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தேர்ந்

தெடுக்கப்பட்டார். வேறு எந்த ஜனாதிபதிக்கும் கிட்டாத வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. அதாவது இவர் நான்கு முறை இப்பதவிக்கு, தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் முதல் தடவை தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது உலகமெல்லாம் பொருளாதார மந்தம் ஏற்பட்டிருந்தது. அமெரிக்காவும் இதற்கு விலக்காக இல்லை. ஆகவே, ரூஸ்வெல்ட் பதவிக்கு வந்தவுடன், தமது நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகப் புதிய திட்டமொன்றை வகுத்து, செயலாக்கினார். இதனால் வெகு துரிதமாக நாடு எல்லாத் துறைகளிலும் முன்னேறியது. இவர் பதவிகாலத்திலேயே, 1939-ம் ஆண்டில் இரண்டாம் உலகப் பெரும்போர் மூண்டது. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் ஒன்று கூடிக் கொண்டு இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, இந்நாடுகளின் நேசநாடுகள் ஆகியவற்றுடன் கோரப்போர் செய்தன. வில்சனைப் போலவே, ரூஸ்வெல்டும் முதலில் இப்போரில் அமெரிக்காவை ஈடுபடுத்தாமல், நடுநிலைமை வகிக்கச் செய்தார். ஆனால் 1941-ம் ஆண்டின் முடிவில், பஸிபிக் சமுத்திரத்தின் மத்தியிலுள்ள ஹவாய் தீவுகளில் பர்ல் துறைமுகத்திலிருந்த அமெரிக்காவின் கப்பற்படையை,ஜப்பானியர்கள் திடீரெனத் தாக்கினார்கள். இதன் காரணமாக அமெரிக்காவும் போரில் இறங்கியது. அமெரிக்கா, நேச நாடுகளுக்கு எராளமான தளவாடங்களையும், பணத்தையும் கொடுத்து உதவியது. அமெரிக்கப் போர் வீரர்களும், ஐரோப்பியப் போர்த்தளங்களுக்கு அனுப்பப்பட்டனர். மேலும் அவ்வப்பொழுது ரூஸ்வெல்ட், இங்கிலாந்து பிரதம மந்திரியாகிய வின்ஸ்டன் சர்ச்சில், ரஷ்யத்-



படம் 40. ரூஸ்வெல்ட்

தலைவராகிய **ஸ்டாலின்** இவர்களைப் பல்வேறு இடங்களில் சந்தித்து, போரை வெற்றிகரமாக நடத்தவும், இனி இத் தகையான போர்கள் நிகழாவண்ணம் தடுக்க ஓர் புதிய ஸ்தாபனத்தைத் தோற்றுவிக்கவும் திட்டமிட்டார். ஆனால் போர் வெற்றிகரமாக முடியவிருக்கும் தருணத்தில் ரூஸ் வெல்ட் 1945-ம் ஆண்டில் திடீரென மரணமடைந்தார்.

**ட்ரூமன்** :—ரூஸ்வெல்ட் நான்காம் முறை ஜனாதிபதி பதவி வகிக்கையில், உப ஜனாதிபதியாக இருந்தவர் **ட்ரூமன்** என்பவர். ரூஸ்வெல்ட் திடீரென பதவிக் காலம் முடிவதற்கு முன் இறந்ததால், அமெரிக்காவின் அரசியல் அமைப்புப்படி ட்ரூமன் ஜனாதிபதியானார். இவர் பதவி ஏற்ற சில மாதங் களுக்குள் இரண்டாம் உலகப் போர் முடிவு பெற்றது. உலக அமைதிக்காக ரூஸ்வெல்ட் செய்துவந்த முயற்சிகளை ட்ரூமன் தொடர்ந்து செய்து, 1945-ம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில் **ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்** உருவாக உதவினார்.



படம் 41. ட்ரூமன்



படம் 42. ஐஸன்ஹோவர்

இரண்டாம் போரில் சீர்குலைந்திருந்த அமெரிக்காவின் பொருளாதார நிலையை இவர் சீரமைத்ததுடன், பொருளா தார ஏற்றம் பெருத இதர நாடுகளுக்கும் உதவிபுரிய இவர் திட்டங்களை வகுத்து, செயலாக்கினார். அமெரிக்காவில் அணுசக்தியைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்ய வகை செய்

தார். இவரது முயற்சிகளின் காரணமாக, அமெரிக்கா பொருளாதார முறையில் மீண்டும் வெகு துரிதமாக எற்றம் பெற்றது. இவர் இருமுறை பதவி வகித்தார். இவருக்குப் பின் ஜனாதிபதியாக வந்தவர் **ஐஸன்ஹோவர்** என்பவர். இவர் ஒரு சிறந்த போர்வீரர். இரண்டாம் உலகப் போரில் பெரும்பணி ஆற்றி, புகழ்பெற்றார். தற்போது இவரே அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருக்கிறார். உலக அமைதியை நிரந்தரமாக நிலைநாட்டப் பெரிதும் பாடுபட்டு வருகின்றார்.

**அமெரிக்க நாடுகளிடையே ஒற்றுமை இயக்கம்** :— அமெரிக்காக் கண்டங்களில் ஐரோப்பிய நாடுகளின் தலையீடோ, குடியேற்றமோ ஏற்படக்கூடும் என்ற ஐயம் **மன்ரோக் கொள்கைக்குப்** பின் மறைந்தது. எனினும், தம்மை வலுப்படுத்திக் கொள்ள, தம்மிடையே நெருங்கிய தொடர்பும், கூட்டுறவும் இருத்தல் அவசியமானது என்பதை, இரு அமெரிக்க நாடுகளும் அறிந்தன. ஆகவே, அவை யாவும் அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் தலைமையில் இயங்க விரும்பின. இவ்விருப்பம் உருப்பெற்று, **அகில அமெரிக்க ஒற்றுமை இயக்கமாகத்** தோன்றியது. அடிக்கடி அமெரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி, தங்களது உள்நாட்டு விஷயங்களில் ஒவ்வொரு நாடும் தலையிட லாகாது என்றும், பொது நலனுக்கான விஷயங்களில் அவை ஒற்றுமையா யிருக்கவேண்டுமென்றும் தீர்மானித்தனர். இக்கூட்டுறவு ஒவ்வொரு நாடும் பல துறைகளிலும் ஏற்றம் பெறவும் உதவியது. இக்கூட்டுறவு காரணமாக அமெரிக்காக் கண்டங்களில்,அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் செல்வாக்கு உயர்ந்ததன்றி, உலக அரங்கிலும் அவற்றின் செல்வாக்கு ஓங்கியது.

## பயிற்சி

1. அமெரிக்கா ஐக்கிய நாடுகளுக்கு ஆப்ரஹாம் லிங்கன் செய்த சேவை என்ன ?
2. முதல் உலகப் போர், இரண்டாம் உலகப் போர் இவற்றில் அமெரிக்கர் ஈடுபடக் காரணமென்ன ?

3. வில்ஸன் உலக மக்களுக்கு ஆற்றிய முக்கியத் தொண்டு யாது ?
4. ரூஸ்வெல்டின் செயல்கள் யாவை ?
5. ட்ரூமனின் இரண்டு தொண்டுகளைக் கூறு.
6. தற்போதைய அமெரிக்கா ஐக்கிய நாட்டு ஜனாதிபதி யார்?
7. அகில அமெரிக்க ஒற்றுமை இயக்கத்தின் நோக்க மென்ன ?

## 14. பிரான்ஸில் அரசியல் புரட்சி

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலம்வரை, பிரான்ஸ் நாடு ஒரு முடியரசாகத் திகழ்ந்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மன்னர்கள் பெரும் பாலோர் அங்கு எதேச்சாதிகாரத்தையே நடத்தினர்கள். பதினான்காம் லூயி என்பவர் பிற நாடுகளுடன் போரிடு வதிலேயே பிரான்ஸ் நாட்டின் செல்வத்தையும், மக்களை யும் அழித்தார். பதினைந்தாம் லூயி வெகு ஆடம்பர வாழ்க் கையை நடத்தினர். இம் மன்னர்கள் தம் பெரும் செலவு களுக்காக, ஏழைக் குடிமக்கள் மீது கடும் வரி விதித்து, வசூலித்தனர். அரசியலில் அவர்களுக்கு எவ்வித பங்கோ, உரிமைகளோ கிடையாது. பிரபுக்களும், மத குருமார்களும் வெகு சில வரிகளே செலுத்தியபோதிலும், அவர்கள் எல்லாவகையான உரிமைகளையும் பெற்றிருந்தனர். பசி யால் வாடிய மக்களுக்கு எவ்வித உதவியும் அளிக்க அரசாங்கம் முன் வரவில்லை. சமூக வாழ்க்கையில் மட்டுமே யன்றி, இறைவனை வழிபடும் ஆலயங்களிலும் கூட, மக்களிடையே ஏற்றத்தாழ்வு நிலவியது. அச்சமயம் வால் டேர், ரூஸோ என்னும் இரு பேரறிஞர்கள், பிரஞ்சு மக்களைத் தட்டி யெழுப்ப முன் வந்தனர். தங்களது சொற் பொழிவுகளாலும், நூல்களாலும், பத்திரிகைகள் வாயிலாக வும், அவர்கள் மக்களிடையே சுதந்திரம், சமத்துவம், சகோ தரத்துவம் ஆகிய கருத்துக்களைப் பரப்பினர்கள். கடவுள்

அமைப்பில் எல்லா மக்களும் சமம் என்றும், மக்களிடையே ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் மனிதனுல் ஏற்பட்டவை



படம் 43. வால்டேர்



படம் 44. ரூஸோ

என்றும், அவற்றைக் களைத்தெரிந்து, எல்லோரும், சுதந்திரமாகவும், சமமாகவும், சகோதரர்கள் போலவும் வாழ வேண்டுமெனக் கூறினார்கள்.

பிரான்ஸ் நாட்டில் இக்கருத்துக்கள் பரவி வருகையில், அமெரிக்காவில் குடியேறி இருந்த ஆங்கிலேயர்கள் தம் தாய் நாட்டை எதிர்த்துப் போரிட்டு, வெற்றி கண்டு, சுதந்திரம் பெற்றது, பிரஞ்சு மக்களுக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்தது.

பதினெட்டாம் நூற்றுண்டு முடியும் சமயத்தில் பிரான்ஸில் ஆட்சி புரிந்த மன்னர் பதினாரும் லூயி என்பவர். அவர் தம் குடிகளுக்கு நன்மை செய்ய விரும்பிய போதிலும், அதற்குத் தேவையான ஆற்றல் அவரிடம் இல்லை. இங்கிலாந்தில் பார்லிமெண்டு சபை இருப்பது போல, பிரான்ஸ் நாட்டில் ஸ்டேட்ஸ் ஜெனரல் என்னும் சபை இருந்தது. ஆனல் சுமார் நூறு ஆண்டுகளாக அது கூட்டப்படாமலிருந்தது. அதை இப்பொழுது கூட்டினுல், மக்களின் இன்னல்களைப் போக்க, அது வகை செய்யும்




படம் 45. ஐரோப்பா புரட்சி நாடுகள்

எனக் கருதிய பதினாறும் லூயி, 1789-ம் ஆண்டில் அதைக் கூட்டினார். இச்சபை உடனே ஓர் தேசீய சபையாக மாறி,



படம் 46. பதினாறும் லூயி

மன்னரின் அதிகாரங்களைக் குறைத்து, மக்களின் உரிமைகளை வளர்க்கவும், திட்டங்களை வகுத்தது. அரசர் இத் திட்டங்களை ஒப்புக்கொண்ட போதிலும், அரசி, பிரபுக்கள் இவர்களது தூண்டுதலின் பேரில், அவர் இத்திட்டங்களைத் தகர்த்தெறிய விரும்பினார். இதற்காகப் பிற நாட்டு மன்னர்களையும் தனக்கு உதவியளிக்கக் கோரினார்.

இதையறிந்த மக்கள் கொதித் தெழுந்தனர். மன்னர்களின் எதேச்சாதிகாரச் சின்னமாக விளங்கிவந்த பாஸ்டீல் சிறையை, பாரிஸ் நகர மக்கள் தகர்த்தெறிந்து, கைதிகள் எல்லோரையும் விடுவித்தனர். நாடெங்கும் புரட்சி ஆரம்பமாயிற்று. இதைக் கண்டு அஞ்சிய அரச குடும்பத்தினர் மாறுவேடம் பூண்டு, பிரான்ஸ் நாட்டினின்றும் தப்பியோட

முயன்றனர். ஆனால் அந்நாட்டு எல்லையில் அவர்கள் கைது செய்யப்பட்டு, பாரிஸுக்குக் கொண்டு வரப்பட்டு, சிறையிடப் பட்டனர். இதன் பிறகு 1792-ம் ஆண்டு, பிரான்ஸ் ஒரு குடியரசு எனப் பிரகடனம் செய்யப்பட்டது. மிகத் தீவிர வாதிகள் புரட்சி இயக்கத்தின் தலைவர்கள் ஆனார்கள். நாள்தோறும், பிரபுக்கள் நூற்றுக்கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் கொல்லப்பட்டனர். இவர்களை விரைவாகக்



படம் 47. கிலடீன்

கொல்வதற்காக, கிலடீன் என்ற ஓர் புதிய இயந்திரத்தையும் கண்டுபிடித்து உபயோகித்தார்கள். தெருக்கள் ரத்த வெள்ளமாய் ஓடின. இதற்கு **பயங்கர ஆட்சி** எனப் பெயர் வந்தது. இறுதியில் அரச குடும்பத்தினரும் தேசத்துரோகிகளெனக் குற்றம் சாட்டப்பட்டு, போலி விசாரணைக்குப் பின் கொல்லப்பட்டனர். இக்கொடுஞ் செயல்களோடு நில்லாது, புரட்சிக்காரர்கள் வேறு எந்த ஐரோப்பிய நாட்டிலும் இவ்வாறு புரட்சியை நிருவ விரும்பினால், அந்நாட்டு மக்களுக்குத் தாம் உதவி புரிவதாகக் கூறினார்கள்.

முதன் முதலில், பிரான்ஸில் புரட்சி ஏற்பட்டபொழுது, இங்கிலாந்தும், வேறு பல ஐரோப்பிய நாடுகளும் இதை வரவேற்றன. ஏனெனில், பிரான்ஸில் ஜனநாயக

ஆட்சி ஏற்படின், அதன் பொருளாதாரமும், பிற நாடு களுடன் வாணிபமும் அபிவிருத்தி அடையக் கூடுமென அவர்கள் கருதினார்கள். ஆனால் அங்கு பயங்கர ஆட்சி ஏற்பட்டு, புரட்சிக்காரர்கள் பிற நாடுகளுக்கும் உதவி செய்ய முன்வந்த போது, இந்நாடுகள் அச்சம் கொண்டு, பிரான்ஸுடன் போர் தொடுக்க ஆயத்தம் செய்யலாயின. அப்பொழுது இங்கிலாந்தில் பிரதம மந்திரியாக இருந்த **இளைய வில்லியம் பிட்** என்பவர் ஆஸ்திரியா, பிரஷ்யா முதலிய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, 1793-ம் ஆண்டில் பிரான்ஸுடன் போர்தொடுத் தார். அடுத்த ஆண்டில், பிரான்ஸில் பயங்கர ஆட்சி முடிவுபெற்றது. அரசாங்க அதிகாரம் அனைத்தும், ஐவர் அடங்கிய சபையாகிய, டைரெக்டரிக்கு மாற்றப்பட்டது. பிரஞ்சுப் படைகள் அதன் எல்லைப் புறங்களைத் தாக்கிய பல நாடுகளின் படைகளை முறியடித்தன. அச் சமயம், பிரான்ஸ் நாட்டை மேலும் வெற்றிபெறச் செய்ய முன் வந்த வீரர் **நெப்போலியன் போனபார்ட்** என்பவர்.

நெப்போலியன் பிரான்ஸின் தெற்கில், மத்தியதரைக் கடலிலுள்ள **கார்ஸிகா** தீவில், 1769-ம் ஆண்டில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தார். இளமை யில் இவர் பிரான்ஸ் நாட்டில்ஒரு இராணுவக் கல்லூரியில் சேர்ந்து பயிற்சி பெற்றார். புரட்சிக் காலத் தில் இவர் படையில் சேர்ந்து, தன் திறமையினால், படிப்படியாக ஏற்றம் பெற்று, இறுதியாகப் பிரஞ்சுப் படைகளின் தலைமைப் பதவியையும் ஏற்றார்.



படம் 48. நெப்போலியன்

பிரான்ஸுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகளில் பல ஒன்று கூடி இருப்பதை இவர் கலைக்க விரும்பினார். எனவே, முதலில் இத்தாலியின்மீது திடீரெனப் படை

யெடுத்துச் சென்று, கடுங் குளிர்காலத்தில் ஆல்ப்ஸ் மலையைக் கடந்து, வட இத்தாலியில் ஆட்சி புரிந்த ஆஸ்திரியர்களை முறியடித்தார். அவர்கள் பணிந்து, பிரான்ஸுடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அவ்வாறே மற்றுஞ் சில ஐரோப்பிய நாடுகளைத் தோல்வியுறச் செய்து, தன்னுடன் உடன்பாடு செய்துகொள்ளச் செய்தார். ஆனால் இங்கிலாந்தைத் தோற்கடிக்க அவர் செய்த முயற்சிகள் அனைத்தும் வீணாயின. இதன் காரணம், இங்கிலாந்து கடலால் சூழப்பட்டு, கடலாதிக்கம் பெற்றிருப்பதுமேயாம். அந் நாட்டைத் தாக்க, நெப்போலியன் கட்டிய கப்பல்கள் அனைத்தையும் ஆங்கிலக் கப்பல் படைகள் நாசமாக்கின.

இனி இங்கிலாந்தை வேறு வகையில் பணியச் செய்ய இவர் முயற்சித்தார். இதற்காக, இங்கிலாந்திற்கு மிகவும் இன்றியமையாததாக இருந்த இந்தியாவைக் கைப்பற்ற விரும்பினார். ஆகவே, இவர் ஓர் பெரும் கப்பற்படையுடன் புறப்பட்டு, மத்தியதரைக்கடலைக் கடந்து, எகிப்து நாட்டையடைந்தார். ஆனால் ஆங்கிலக் கப்பற் படைத் தலைவரும், மிகப் பெயர் பெற்றவருமான நெல்சன், நெப்போலியனைத் தொடர்ந்து சென்று, நைல்நதியின் முகத்துவாரத்தில் நடந்த போரில் பிரஞ்சுப் படையை நாசமாக்கினார். நெப்போலியன் மிகப் பிரயாசையுடன் தப்பி, மீண்டும் பிரான்ஸை அடைந்தார். அங்கு அவர் டைரெக்டரி சபையை வீழ்த்தி விட்டு, தானே எல்லா அதிகாரங்களையும் மேற்கொண்டார். நாட்டின் பொருளாதார நிலை, படைகள், இவற்றைச் சீரமைக்க, இவருக்குச் சிறிது அவகாசம் வேண்டியிருந்தது. எனவே, 1802-ம் - ஆண்டில் இவர் இங்கிலாந்துடன் நடந்த போரை நிறுத்தி, உடன்படிக்கை செய்து கொண்டார். பிறகு பிரான்ஸின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்தார். கல்வியைப் பரப்பினார், நாடெங்கும் போக்குவரவுக்காக, சிறந்த சாலைகளை அமைத்தார். நாட்டின் சட்டதிட்டங்களைத் தொகுத்து, வெளியிட்டார். செய்தொழில்களையும் அபிவிருத்தியடையச் செய்தார். இவ்வாறு, போரில் மட்டுமே யன்றி ஆட்சியிலும் தனது திறமையை உலகோர் அறியச் செய்து, தன் நாட்டிற்கும்

நலனைத் தேடினார். இதன் பிறகு தானே சக்கரவர்த்தியென முடி சூட்டிக்கொண்டார்.

நெப்போலியன், பிரான்ஸின் ஆதிக்கத்தின் கீழ் எல்லா ஐரோப்பிய நாடுகளையும் கொண்டுவர முயன்றார். ஆகவே, மீண்டும், அவர் இங்கிலாந்துடன், போர்தொடுத்தார். மறுபடியும், இங்கிலாந்து, ஆஸ்திரியா, ரஷ்யா முதலிய நாடுகள் பிரான்ஸுக்கு எதிராக ஒப்பந்தம் செய்து கொண்டன. இதற்கும் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகிய **இளைய பிட்** காரணமாயிருந்தார். ஆயினும், வெற்றி வீரரான நெப்போலியன்,இந்நாடுகளின் ஒன்றுபட்ட படையை **ஆஸ்டர்லிட்ஸ்** என்னுமிடத்தில் சின்ன பின்னமாக்கி, வெற்றி கொண்டார். இதனால் கடும் அதிர்ச்சி கொண்ட பிட், சிறிது காலத்தில் இறந்தார். நெப்போலியனின் இப்பெரும் வெற்றிகளின் விளைவாக, ஆஸ்திரியா, ரஷ்யா முதலிய நாடுகள் பிரான்ஸுடன் உடன்பாடு செய்து கொண்டன. மீண்டும் இங்கிலாந்து தனித்து நிற்கவேண்டியதாயிற்று.

இதன்பிறகு நெப்போலியன் தன் முழு பலத்தையும் இங்கிலாந்தின் மீது திருப்ப எண்ணினார். ஆகவே, அவர் ஸ்பெயின் நாட்டின் தென் பகுதியிலுள்ள **டிரபால்கர்** என்னுமிடத்துக் கருகில், ஓர் பெரும் கப்பற் படையைத் திரட்டினார். இதையறிந்த **நெல்சன்** அங்கு சென்று அப்படையை நாசமாக்கினார். வெற்றி ஏற்படும் சமயத்தில், நெல்சன் ஓர் குண்டுபட்டு இறந்தார். எனினும், டிரபால்கர் வெற்றியினால் இங்கிலாந்து காப்பாற்றப்பட்டதுடன், நெப்போலியனும் இங்கிலாந்தை இனி தன் கப்பற் படை கொண்டு தாக்கும் எண்ணத்தை அறவே கைவிட்டார்.

இங்கிலாந்தின் வன்மைக்கு முக்கியக் காரணம் அதன் வாணிபம் தான் என்பதை அறிந்த நெப்போலியன் அவ் வாணிபத்தைக் குலைக்கக் கருதினார். இதற்காக அவர் **ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டம்** (Continental system)

என்னும் ஒரு திட்டத்தை வெளியிட்டார். இதன்படி, ஐரோப்பிய நாடுகள் எவையும் இங்கிலாந்துடன் வாணிபம் செய்யலாகாதென ஆணையிட்டார். ஆயினும், இங்கிலாந்து தன் கடலாதிக்கத்தினால், வேறு நாடுகளினின்றும் ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருள் வருவதைத் தடுத்தது. ஆகவே, ஐரோப்பிய நாடுகள் இரகசியமாக இங்கிலாந்துடன் வாணிபம் செய்து வந்தன. இவ்வாறு இங்கிலாந்தைப் பணியவைக்க நெப்போலியன் செய்த இம்முயற்சியும் பயனளிக்கவில்லை.

இச்சமயம் ஸ்பெயின் நாட்டில், சிங்காதனத்துக்குப் போட்டி ஏற்பட்டது. போட்டியிட்டவர்கள் நெப்போலியனிடம் தீர்ப்புக்கு வந்தனர். அவர் அவர்களை நீக்கிவிட்டு, தன் சகோதரரையே அங்கு மன்னராக்கினார். இதைத் தமக்கு ஓர் பெரும் இழுக்கெனக் கருதிய ஸ்பானியர்கள்



படம் 49. வெல்லிங்டன் கோமகன்

கொதித்தெழுந்து, இங்கிலாந்தின் உதவியை நாடிப் பெற்று, பிரான்ஸுடன் போர் தொடுத்தனர். ஆர்தர் வெல்லெஸ்லி என்ற ஆங்கிலத் தளபதி ஓர் பெரும் படையுடன் ஸ்பெயி

னுக்குச் சென்று, நெப்போலியனது படைகளுடன் போரிட்டு, இறுதியில் அவற்றை ஸ்பெயினினின்றும் விரட்டியடித்தார். இவ்வெற்றிக்காக ஆர்தர் வெல்லெஸ்லி, **வெல்லிங்டன் கோமகன்** எனப் பட்டம் பெற்ருர்.

இதற்கிடையில் நெப்போலியன் ஒரு மாபெரும் படையுடன் ரஷ்யா மீது படையெடுத்துச் சென்ருர். இது அவர் செய்த பெரும் பிழையாகும். ரஷ்யர்கள் தம் வீடுவாசல்களையும், பயிர்களையும் அழித்துக் கொண்டே விரைவாகப் பின் வாங்கினுர்கள். பிரஞ்சுப் படைகள் எதிர்ப்பின்றி முன்னேறிய போதிலும், வழியில் உணவும், தங்குமிடமும் இன்றி அல்லலுற்றன. இறுதியாகப் பிரஞ்சுப்படைகள் ரஷ்யாதலை நகராகிய **மாஸ்கோ**வை அடைந்தபோது, பசியாலும், கடுங் குளிராலும் பலர் இறந்தனர். பிறகு எஞ்சிய படைகள் தாய் நாடு திரும்பிச் செல்ல ஆரம்பித்தபோது, ரஷ்யர்கள் அவற்றைப் பின்புறம் தாக்கி, பலத்த துன்பத்தையும், சேதத்தையும் விளைவித்தனர். பிறகு **லீப்ஸிக்** என்னுமிடத்தில், பல ஐரோப்பிய நாடுகளின் படைகள் ஒன்றுகூடி, பிரஞ்சுப் படையைச் சிதற அடித்தன. பகைவர்கள் கையில் சிக்குண்ட நெப்போலியன், மத்யதரைக் கடலிலுள்ள **எல்பா** என்னும் தீவில் சிறை வைக்கப்பட்டார்.

சில மாதங்களுக்குள் நெப்போலியன் சிறையினின்றும் தப்பி, மீண்டும் பிரான்ஸை அடைந்தார். பிரஞ்சு மக்கள் அவரைப் பேராதரவுடன் வரவேற்றனர். உடனே ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் படைகள் வெல்லிங்டன் கோமகன் தலைமையில் கூடி, 1815-ம் ஆண்டில் **வாட்டர்லூ** என்னுமிடத்தில் நெப்போலியனை இறுதியாகத் தோற்கடித்தன. பிறகு அவர் தெற்கு அட்லாண்டிக் சமுத்திரத்திலுள்ள **ஸெயின்ட் ஹெலினு** தீவில் சிறை வைக்கப்பட்டு, 1821-ம் ஆண்டில் அங்கேயே மரணமடைந்தார்.

**நவீன பிரான்ஸ் :**—நெப்போலியனின் இறுதி வீழ்ச்சிக்குப் பின், 1815-ம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள், ஆஸ்திரியாவின் தலைநகராகிய **வியன்னு**வில் கூடி, தத்தம் நாடுகளின் எல்லைகளைத் தீர்மானிக்கலாயினர். அந்

நாடுகளிலெல்லாம், நெப்போலியனின் எழுச்சிக்கு முன் இருந்த எல்லைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. பிரான்ஸில் மீண்டும் முடியரசு ஏற்பட்டு, பதினெட்டாம் லூயி என்பவர் மன்னராக்கப்பட்டார்.

1830-ம் ஆண்டில் பிரான்ஸில் பத்தாம் சார்லஸ் என்பவர் மன்னராக இருக்கையில், அங்கு மீண்டும் புரட்சி ஏற்பட்டது. சார்லஸ் மன்னர் பதவியினின்றும் நீக்கப்பட்டு லூயி பிலிப் என்பவர் மன்னராக்கப்பட்டார். மீண்டும். 1848-ம் ஆண்டில் ஏற்பட்ட மற்ருெரு புரட்சியின் காரண மாக, பிரான்ஸில் மறுபடி குடியரசு நிருவப்பெற்று, நெப் போலியனின் சுற்றத்தவர்களுள் ஒருவரான லூயி நெப்போ லியன் அக் குடியரசின் தலைவராகத் தேர்வு பெற்ருர். ஆனல் விரைவிலேயே இவர் குடியரசை ஒழித்து, மூன்ரும் நெப்போலியன் என்ற பெயருடன் சக்கரவர்த்தியானர். பிறகு இவர், பிரான்ஸின் மேற்கிலுள்ள பிரஷ்யா நாட்டுடன் போர் தொடுத்தார். இப்போரில் இவர் தோல்வியுற்று, சிறை யிடப்பட்டார். இதன் காரணமாக, மூன்ரும் முறை பிரான்ஸில் முடியரசு ஒழிக்கப்பட்டு, குடியரசு நிருவப்பட் டது (1871). நான்கு ஆண்டுகளுக்குப் பின் பிரான்ஸில் ஓர் அரசியல் திட்டம் வரையப்பட்டது. இதன்படி, நிர்வாகத் தலைவரான ஜனதிபதி ஒருவர் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், சட்டங்களை இயற்ற, இரண்டு சபைகளைக் கொண்ட பார்லிமெண்டு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் கூறப்பட் டது. நிர்வாகத்தின் பொறுப்பை ஏற்க, பார்லிமெண்டுக்குப் பொறுப்பு வாய்ந்த மந்திரி சபையும் அமைக்கப்படவேண்டு மெனவும் கூறப்பட்டது. இந்த அரசியல் திட்டமே ஏறக் குறைய இன்றும் அந்நாட்டில் பின்பற்றப்படுகின்றது.

இரண்டு உலகப் போர்களிலும் பிரான்ஸ் பங்கெடுத் துக் கொண்டு, வெற்றி பெற்றது. இப்பொழுது அந்நாடு பல துறைகளிலும் ஏற்றம் பெற்று, ஓர் வல்லரசாகத் திகழ் கின்றது.

## பயிற்சி

1. பிரஞ்சுப் புரட்சிக்கான காரணங்கள் யாவை ?
2. 1793-ம் ஆண்டில் பல ஐரோப்பிய நாடுகள் ஏன் பிரான்ஸின் மீது போர் தொடுத்தன ?
3. நெப்போலியனின் இறுதி வீழ்ச்சிக்குக் காரணங்கள் எவை ?
4. குறிப்பு வரைக :—பயங்கர ஆட்சி; கிலடீன்; ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டம்.
5. கீழ்க் கண்ட சண்டைகள் எவ்வாறு முக்கியமானவை ? நைல்நதிச் சண்டை ; டிரபால்கர் சண்டை ; ஆஸ்டர் லிட்ஸ் சண்டை; வாட்டர்லூ சண்டை.
6. பிரான்ஸில் இரண்டாவது, மூன்ருவது குடியரசுகள் எப்பொழுது, எவ்வாறு தோன்றின ?

# 15. இத்தாலி ஒற்றுமைப் படுதல்

முற்காலத்தில் இத்தாலி ஒரே இராஜ்யமாக விளங்க வில்லே. அதன் வட பாகத்தை ஆஸ்திரிய மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். ரோமாபுரியைத் தலைநகராகக் கொண்ட மத்திய இத்தாலியை, கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் மதத் தலைவரான போப்பாண்டவர் ஆட்சிபுரிந்தார். தென் பகுதியிலுள்ள நேபில்ஸ்,ஸிஸிலித்தீவு இவற்றை ஸ்பெயின் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஆண்டார். சார்டி னியா தீவு, பீட்மாண்ட் என்னும் பிரதேசம் ஆகியவை ஒரு இத்தாலிய மன்னரின் ஆதிக்கத்தில் இருந்தன.

பிரஞ்சுப் புரட்சிக் காலத்தில் நெப்போலியன் வட இத்தாலியை வென்று, ஆஸ்திரியர்களை அங்கிருந்து விரட்டி யடித்தார் எனக் கூறப்பட்ட தல்லவா ? இதனுல் ஒற்றுமை ஏற்படுமென இத்தாலியர்கள் நம்பினுர்கள். ஆனுல் நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின் அங்கு பழைய நிலையே ஏற்பட்டது, அவர்களுக்குப் பெரிய ஏமாற்றமாக

இருந்தது. ஆகவே, இத்தாலிய ஒற்றுமைக்காகப் பாடு பட, பல இரகசியச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, அவை செயலாற்றி வந்தன.

இத்தாலியை ஒற்றுமைப் படுத்தப் பாடுபட்டவர்களுள் முக்கியமானவர்கள் **மஜினி** என்ற கவிஞர், **கரிபால்டி** என்ற போர்வீரர், **கவூர்** என்ற அரசியல் அறிஞர் ஆகியோர். இனி, இவர்களின் வாழ்க்கை வரலாறுகளை அறிவோம்.

**மஜினி** இத்தாலியின் வடமேற்குப் பகுதியிலுள்ள **ஜினேவா** நகரில் பிறந்தார். சிறந்த தேசீய உணர்ச்சியுள்ள இவர், தன் போன்றவர்களைக் கொண்ட, **இளம் இத்தாலி** என்ற ஓர் இயக்கத்தை ஏற்படுத்தினர். இவ்வியக்கத்தினர் ஆஸ்திரியர்களை இத்தாலியினின்றும் வெளியேற்ற உறுதி பூண்டார். ஆனல் ஆஸ்திரியர்கள் கடும் சட்டங்களை இயற்றி இத்தகைய இயக்கங்களை அடக்க முயற்சித்தனர்.

மஜினியின் போதனைகளில் ஈடுபட்டு, இத்தாலிய ஒற்றுமைக் கனவை நனவாக்கப் பெரிதும் காரணமாக இருந்தவர், **கரிபால்டி** என்ற போர்வீரர். இவரது செயல்களைக் கண்டு மிரண்ட ஆஸ்திரிய அரசாங்கத்தினர் இவருக்கு மரண தண்டனை விதித்து, இவரைச் சிறையிட்டனர். ஆனல் இவர் சிறையினின்றும் தப்பி, தென் அமெரிக்காவிற்குச் சென்று, அங்கு **ஸைமன் பொலிவர்** நடத்தி வந்த, உரிமைப் போர்களில் கலந்து கொண்டார். அங்கு இவருக்குச் சிறந்த போர்ப் பயிற்சி கிடைத்தது. சில ஆண்டுகளுக்குப் பின்னர், கரிபால்டி தாய்நாடு திரும்பினர். அங்கு இவர் **செஞ்சட்டையி**



படம் 50. கரிபால்டி

னர் என்னும் பெயரையுடைய தொண்டர் படையைத் திரட்டி, தனது தென் அமெரிக்க அனுபவத்தைக்கொண்டு இப் படைக்குப்போர்ப் பயிற்சி அளித்தார். இப்படையின் நோக்கம் இத்தாலியை விடுதலை யடையச் செய்வதே யாகும்.

இச்சமயம் சார்டினியாவில் ஆட்சிபுரிந்த இத்தாலிய மன்னர் **விக்டர் இமான்யுவல்** என்பவர். இவரது முக்கிய அமைச்சரே **கவூர்** என்பவர். இவர் நுண்ணறிவு, ஆழ்ந்த தேசப்பற்று, விடாமுயற்சி முதலிய நற்பண்புகளை யுடைய சிறந்த அரசியல் வாதி. விக்டர் இமான்யுவலை, ஐக்கிய இத்தாலியின் மன்னராக்குவதைத் தன் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டார். 1859-ம் ஆண்டில், கவூரின் ஆலோசனைக் கிணங்க, விக்டர் இமான்யுவல் இத்தாலியின் விடுதலைப் போரைத் துவக்கினர். முதன்முதலாக, இவர் வட இத்தாலியிலுள்ள ஆஸ்திரியர்களைத் தோற்கடித்தார். இதன் விளைவாக, வேனிஸ் தவிர இதர வட இத்தாலியப் பகுதிகள் ஆஸ்திரியர்களின் ஆதிக்கத்தினின்றும் விடுபட்டன. இதே சமயத்தில், கரிபால்டி, கவூர் இவர்கள் தென் இத்தாலியைத் தாக்கி, அதன் மன்னரைத் தோற்கடித்து, அப்பிரதேசத்தை சார்டினிய மன்னரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தனர். நாளடைவில், மத்திய இத்தாலியில், ரோம் தவிர இதரப் பகுதிகள் அனைத்தும், விக்டர் இமான்யுவல் ஆதிக்கத்தின் கீழ் வந்தன.

1866-ம் ஆண்டில் ஆஸ்திரியாவுக்கும், பிரஷ்யாவுக்குமிடையே போர் மூண்டது. அப்போரில் இத்தாலி பிரஷ்யாவிற்கு உதவி புரிந்ததன் பயனாக, ஆஸ்திரியா தோல்வியுற்றது. எனவே ஆஸ்திரியா, வேனிஸையும் இத்தாலிய மன்னருக்குக் கொடுக்க நேரிட்டது. 1871-ம் ஆண்டில் விக்டர் இமான்யுவல் ரோமாபுரியைக் கைப்பற்றி, அதைத் தன் தலைநகராக்கிக் கொண்டார். அந் நகரின் ஓர் பகுதியாகிய வாட்டிகன் என்னுமிடத்தில் போப்பாண்டவர் சுதந்திரமாக வாழ வகை செய்யப்பட்டது. இன்றும் அத்திட்டம் அமுலில் இருந்து வருகின்றது. இத்தாலியில்,

இங்கிலாந்தைப் போல, பார்லிமெண்டு ஆட்சி முறை ஏற்படுத்திய போதிலும், அது அங்கு நன்கு நடைபெறவில்லை. ஆயினும், ஒற்றுமைக்குப் பின் இத்தாலியில் கைத்தொழில், வாணிபம் இவை அபிவிருத்தி யடைந்து, அதன் செல்வ நிலையும் உயர்ந்தது.

**நவீன இத்தாலி:**—முதல் உலகப்போரில் இத்தாலி, ஜெர்மனிக்கு எதிராகப் போரில் கலந்து கொண்டது. ஆனால், போருக்குப் பின், நாட்டில் குழப்பமும், பொருளாதார நெருக்கடியும் அதிகரித்தன. இந்நிலையில், இத்தாலியை மீண்டும் எழுச்சிபெறச் செய்ய முன்வந்தவர் **பெனிடோ முஸோலினி** என்பவராவார்.

முஸோலினி 1883-ம் ஆண்டில் ஒரு ஏழைக் குடியில் பிறந்தார். சிறு வயது முதல் அவர் நாட்டுப் பற்றுக் கொண்டவர். இவர் முதலில் ஆசிரியர் தொழிலில் அமர்ந்தார். பிறகு பத்திரிகாசிரியராக நாட்டுக்குத் தொண்டு செய்தார். முதல் உலகப் போர் மூண்டதும், இவர் பத்திரிகைத் தொழிலை விடுத்து, படையில் சேர்ந்து, போர்வீரராகப் பணியாற்றினார். போருக்குப் பின், இத்தாலியின் அவலநிலை இவரை மனமுருகச் செய்தது. ஆகவே, மீண்டும் தாய்நாட்டைச் சீர்ப்படுத்த இவர் ஒரு அரசியல்கட்சியை ஸ்தாபித்தார். இதற்கு **பாஸிஸ்டு கட்சி** எனப்பெயர். அக்கட்சிக்கு முஸோலினி தலைமைவகித்து நாட்டுப்பற்று, வீரம், தியாக உணர்ச்சி இவை மிகுந்த இளைஞர்களை அக்கட்சியில் சேர்த்துக்கொண்டு, அவர்களுக்குப் போர்ப் பயிற்சியும் அளித்தார். சில மாதங்களுக்குள்ளாகவே இவரது கட்சி மிக வலுவடைந்தது. ஆகவே 1921-ம் ஆண்டில் இவர் தம் கட்சியினருடன் ரோமாபுரிக்குச் சென்ற பொழுது இத்தாலிய மன்னர் இவருக்குப் பணிந்து, இவரைத் தனது முதன் மந்



படம் 51. முஸோலினி

திரியாக நியமித்துக் கொண்டார். ஆனால் சீக்கிரத்திலேயே இவர் எல்லா அதிகாரங்களையும் தானே கைப்பற்றி, ஒரு சர்வாதிகாரியாக விளங்கினார். இதர அரசியல் கட்சிகள் அனைத்தையும் கலைத்து, தன் கட்சி ஒன்றையே நாட்டில் இயங்கச் செய்தார். நாட்டில் பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிபம் இவற்றைப் பெரிதும் பெருக்கினார். பல சாலைகளையும், இருப்புப்பாதைகளையும் அமைத்தார். கல்வி பரவ வகைசெய்தார். நாட்டின் படை பலத்தையும் பெருக்கினார். நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏறக்குறைய மறைந்தது.

இதன் பின்னர் முஸோலினி மனத்தில் சாம்ராஜ்ய வெறி வேரூன்றியது. ஆகவே 1935-ம் ஆண்டில் இவர் ஆப்பிரிக்காவில் உள்ள அபிஸீனியா நாட்டைத் திடீரெனத் தாக்கிக் கைப்பற்றினார். நவீனப் போர்க் கருவிகளைக் கொண்டு தாக்குதலைச் சமாளிக்க இயலாது, அந்நாட்டு மக்கள் பணிந்தனர். பிறகு இவர் ஐரோப்பாவிலுள்ள ஆல்பேனியா என்னும் ஒரு சிறு நாட்டையும் கைப்பற்றினார். முதல் உலகப் போருக்குப் பின் ஜெர்மனி நாட்டில் தோன்றிய சர்வாதிகாரியான அடால்ப் ஹிட்லருடன் ஒப்பந்தம் செய்துகொண்ட முஸோலினி இரண்டாம் உலகப் போரில் பங்கு கொண்டார். ஆனால் 1943-ம் ஆண்டில், ஆங்கிலப் படைகள் இத்தாலிக்குள் பிரவேசித்த பொழுது, அந் நாட்டு மக்களில் பலர் முஸோலினிக்கு எதிராகக் கிளம்பினார்கள். முஸோலினி கொல்லப்பட்டார். பாஸிஸ்டு கட்சியும் மறைந்தது.

இப்பொழுது இத்தாலி ஒரு குடியரசு நாடாகத் திகழ்கின்றது.

## பயிற்சி

1. முற்காலத்தில், இத்தாலி நாட்டின் நிலை எவ்வாறு இருந்தது ?
2. இத்தாலிய ஒற்றுமைக்காகப் பாடுபட்ட மூவர் யார் ?
3. கரிபால்டியைப் பற்றிக் குறிப்புக் கூறுக.

4. இத்தாலி ஒற்றுமை யடைந்த வகையைக் கூறுக.

5. முஸோலினி தம் நாட்டை எவ்வாறு ஏற்றம் பெறச் செய் தார் ?

6. முஸோலினியின் வீழ்ச்சிக்கான காரணங்கள் எவை ?

7. கீழ்க்கண்ட கட்சிகளை அமைத்தவர்கள் யார் யார் ? இளம் இத்தாலி, செஞ்சட்டையினர், பாஸிஸ்டு கட்சி.

## 16. ஜெர்மனி ஒற்றுமை யடைதல்

தற்போது ஜெர்மனி எனக் குறிப்பிடப்படும் நாடு முற்காலத்தில் ஒரே தேசமாகக் கருதப்படாமல், பல சிறு இராஜ்யங்களாகத் திகழ்ந்தது. அவற்றுள் முக்கியமானது, பிரஷ்யா எனப் படுவதாகும். இந்த இராஜ்யங்கள் அனைத்தும், பெயரளவில், ஆஸ்திரிய சக்கரவர்த்திக்கு உட்பட்டவை. பிரஷ்யாவே, ஜெர்மனி நாடு உருப்பெறக் காரணமாக இருந்தது. பதினெட்டாம் நூற்றுண்டில் பிரஷ்யாவில் ஆட்சிபுரிந்த மகா பிரெடரிக் என்பவர், அந்நாட்டின் எழுச்சிக்கு அடிகோலி, பல வகைச் சீர்திருத்தங்களைச் செய் தார். பிரஞ்சுப் புரட்சி இத்தாலிய ஒற்றுமைக்கு உதவியாக இருந்தது போல, ஜெர்மானிய நாடுகள் ஒற்றுமைப் படவும் உதவியளித்த நெப்போலியன், பிரஷ்யாவைத் தவிர இதர ஜெர்மன் நாடுகளை வென்று, தம் இராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். அவருடைய வீழ்ச்சிக்குப் பின்னர், அந் நாடுகள் விடுதலை பெற்றன. ஆனுல் பிரஷ்யாவின் அதிகாரம் ஓங்கியது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பிரஷ்யாவை ஆண்ட திறமையான மன்னர் முதலாம் வில்லியம் என்பவர். அவர் கட்டாய இராணுவ சேவையை மக்களிடையே புகுத்தி, நாட்டைப் படைபலம் கொள்ளச் செய்தார். இவருக்கு உற்ற துணையாயிருந்து, செயலாற்றியவர் ஆட்டோ வான் பிஸ்மார்க் என்பவர்

பிஸ்மார்க் 1815-ம் ஆண்டில் பிறந்தார். இவரது தந்தையார் செல்வம் படைத்த, பெரிய நிலச்சுவான்தார். இவர் தன் கல்வியறிவைப் பெருக்கிக் கொண்டபின், பிரஷ்யா தேசத்துப் பார்லிமெண்டு சபையில் அங்கத்தினராகி, வெகு சீக்கிரத்திலேயே புகழ் பெற்ருர். இவரது அஞ்சா நெஞ்சம் படைத்த ஆற்றலேயும், திறமையையும் கண்ட முதலாம் வில்லியம் மன்னர் இவரைத் தன் முதல் மந்திரியாக நியமித்துக் கொண்டார். ஜனநாயக ஆட்சி முறையில் இவருக்கு நம்பிக்கைகிடையாது. ஜெர்மன் நாடுகள் அனேத்தையும், பிரஷ்யாவின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்து பிரஷ்ய மன்னரை எதேச்சையாக ஆளச் செய்வதையே பிஸ்மார்க் தன் குறிக்கோளாகக் கொண்டார்.



படம். 52 பிஸ்மார்க்

முதன் முதலில் பிஸ்மார்க் ஆஸ்திரியா நாட்டின் உதவியைப் பெற்று, டென்மார்க்கில் ஜெர்மானியர்கள் அதிகமாக வசித்து வந்த அதன் தென் பகுதிகளேக் கைப்பற்றினுர். இப் பிரதேசங்களே ஆஸ்திரியா தனதெனக் கூறவே, பிஸ்மார்க் ஆஸ்திரியாவுடன் போர்தொடுத்து, அதைத் தோற்கடித்தார். இதன் விளேவாக, பெயரளவில் ஆஸ்திரியா ஜெர்மானிய நாடுகளின் மீது கொண்டிருந்த ஆதிக்கமும் மறைந்து, பின்னர் வட ஜெர்மன் நாடுகள் அனேத்தும், பிரஷ்யாவின் தலேமையை ஒப்புக் கொண்டன.

தெற்கு ஜெர்மன் நாடுகளும் பிரஷ்யாவின் தலேமையை ஒப்புக்கொள்ளுமாறு செய்ய, பிஸ்மார்க் ஓர் சூழ்ச்சி செய்தார். 1870-ம் ஆண்டில் மூன்ரும் நெப்போலியனுன பிரஞ்சு மன்னரின் தாக்குதல், ஜெர்மனியின் மீது ஏற்படச்

செய்தார். தற்காப்புக்காகத் தெற்கு ஜெர்மன் நாடுகள் பிரஷ்யாவின் தலைமையை ஏற்றுக்கொண்டன. அப்போரில் பிரெஞ்சு மன்னர் தோல்வியுற்று கைது செய்யப்பட்டதைப் பற்றி முன்பு கூறப்பட்டது. பிரான்ஸின் கிழக்கு எல்லை யிலிருக்கும், உலோகப் பொருள்கள் மிகுந்த நாடுகளாகிய அல்ஸேஸ், லோரைன் ஆகிய இரண்டும் பிரஷ்யாவுக்குக் கிடைத்தன. இவ்வாறு ஜெர்மனி முழுவதும், பிஸ்மார்க்கின் பெரு முயற்சியால் ஒற்றுமைப்பட்டது. பிரஷ்யா மன்னரான முதலாம் வில்லியம் 1870-ம் ஆண்டில் ஜெர்மானிய சக்கர வர்த்தியாக ஆனார். அவருக்குக் கெய்ஸர் என்ற சிறப்புப் பெயரும் வழங்கப்பட்டது. சக்கரவர்த்தி எல்லா அரசியல் அதிகாரங்களையும் வகித்த போதிலும், அவருக்கு உதவி புரிய, சான்ஸலர் என்ற முக்கிய மந்திரியும், பெயரளவில் சட்டமியற்றும் அதிகாரம் கொண்ட ரீக்ஸ்டாக் என்னும் பார்லிமெண்டு சபையும் உண்டு. பிஸ்மார்க்கே, ஜெர்மனி யின் முதல் சான்ஸலராக நியமிக்கப்பட்டார்.

ஐக்கிய ஜெர்மனியின் முன்னேற்றத்துக்காக பிஸ்மார்க் பல சீர்திருத்தங்களைச் செய்தார். மக்களுக்குக் கட்டாயக் கல்வி போதிக்க வகை செய்தார். விவசாயம், கைத்தொழில் கள் இவை ஏற்றம் பெற வகை செய்தார். தொழிலாளர் களின் நலன்களுக்காகவும் பல திட்டங்களைக் கையாண்டார். இவ்வாறு ஜெர்மனியின் ஒற்றுமைக்கும், முன்னேற்றத் துக்கும் பிஸ்மார்க் மிகப் பெரும் சேவை செய்தார்.

முதல் வில்லியம் மன்னர் இறந்தவுடன், 1888-ம் ஆண்டில், அவரது குமாரரான இரண்டாம் கெய்ஸர் வில்லியம் ஜெர்மன் சக்கரவர்த்தியானார். சீக்கிரத்திலேயே அவருக்கும், பிஸ்மார்க்குக்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றலாயின. ஆகவே, பிஸ்மார்க், சான்ஸலர் பதவி யினின்றும் விலகிக் கொண்டார் (1890). எட்டு ஆண்டு களுக்குப் பின் பிஸ்மார்க் காலமானார்.

இரண்டாம் கெய்ஸர் வில்லியம் மிகுந்த மண்ணாசை கொண்டவர். ஐரோப்பாவையே கட்டியாளவேண்டு மென் பது அவரது பேரவா. ஆகவே, அவர் தனது நாட்டில்

கட்டாய இராணுவ சேவைத் திட்டத்தைப் புகுத்தினர். இரகசியமாகப் போர்த் தளவாடங்களைச் செய்து குவித்தார். பல வரிகள் விதித்து, நிரம்பவும் பணத்தையும் சேர்த்துக் கொண்டார். இவரது போக்கைக் கண்டு ஐயங்கொண்ட இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் ஜெர்மெனிக்கு எதிராக ஒன்று கூடின. 1914-ம் ஆண்டில், ஐரோப்பாவில் ஒரு மூலையில் மூண்ட போர்த்தீ, சீக்கிரத்திலேயே உலகெங்கும் பரவியது. முதலில் ஜெர்மனியின் கை ஓங்கியிருந்த போதிலும், 1918-ம் ஆண்டில் அந்நாடுபடுதோல்வியடைந்தது. கெய்சர்சக்கரவர்த்திநாட்டை



படம் 53. இரண்டாம் கெய்ஸர்

விட்டு ஓடி, ஹாலந்து தேசத்தில் தஞ்சம் புகுந்தார். 1919-ம் ஆண்டில் வார்ஸேல்ஸ் நகரில் ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தின்படி, ஐரோப்பாவில், ஜெர்மனி தன் ஆதிக்கத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பலவற்றை இழந்ததுடன், கடல்கடந்த அதன் குடியேற்ற நாடு அனைத்தையும் இழந்தது. போரில் வெற்றிகொண்ட நாடுகளுக்கு ஆண்டுதோறும் ஜெர்மனி நஷ்ட ஈடாக ஏராளமான தொகை கொடுக்கவும் வேண்டியிருந்தது. அதன் படைகளும் பெருத்த அளவில் குறைக்கப்பட்டன.

இப்போரின் விளைவாக, ஜெர்மனியில் பெருத்த பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பஞ்சமும், வேலையில்லாத் திண்டாட்டமும் மக்களை வாட்டின. இந்நிலையில் ஜெர்மனியை மீண்டும் எழுச்சி பெறச்செய்ய முன்வந்தவர் **அடால்ப் ஹிட்லர்** என்பவர்.

ஹிட்லர் 1889-ம் ஆண்டில், ஆஸ்திரியாவிலுள்ள **பிரௌனே** நகரில் பிறந்தார். இவரது தந்தை ஒரு எளிய சுங்கவரி வசூலிக்கும் அதிகாரி. இளமையிலேயே


படம் 54. ஹிட்லர்

பெற்றோரை இழந்த ஹிட்லர் வறுமையால் வாடினர். கல்வியறிவு பெறவும்வசதியற்றிருந்தார். முதல் உலகப் பெரும் போர் மூண்டபொழுது இவர் ஜெர்மானியப் படையில் சேர்ந்து, போர்புரிந்தார். வார்ஸேல்ஸ் ஒப்பந்தம்அவருக்கு ஒரு பெரும் அதிர்ச்சியையளித்தது. தன் தாய் நாட்டிற்கே அது ஒரு பெரும் இழுக்கெனக் கருதிய அவர்,அவ்விழுக்கைப் போக்கி, அதற்குக் காரணமாக' இருந்த நாடுகளின் மீது வஞ்சம் தீர்க்க உறுதிகொண்டார்.

தனது உறுதியைச் செயலாக்க, முதலில் ஜெர்மனியை மீண்டும் வன்மை பெறச் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்தார். இதற்காக, ஒரு புதிய அரசியல் கட்சியை நிருவி, அதற்குத் தலைமை பூண்டார். அக்கட்சிக்கு தேசீய தர்மக் கட்சி அல்லது நாஜிக் கட்சி எனப் பெயரிட்டார். 1923-ம் ஆண்டில் இவர் ஜெர்மன் அரசாங்கத்துக்கு விரோதமாகச் செய்த சூழ்ச்சி வெளிப்படவே, இவரைச் சிறையிட்டனர். இவர் சிறையில் மெயின் கெம்ப் அல்லது எனது போராட்டம் என்னும் நூலை எழுதினர். அதில் ஜெர்மனியை மீண்டும் ஒரு வல்லரசாக்கவும், ஐரோப்பாவில் அதன் ஆதிக்கத்தைப் பரப்பவும் தான் வகுத்திருந்த திட்டங்களை வெகுவாக விளக்கினர்.

சிறையினின்றும் வெளி வந்தவுடன், ஹிட்லர் தனது கட்சியை வன்மை மிக்கதாகச் செய்தார். 1933-ம் ஆண்டில் அவர் சான்ஸலர் அல்லது முதன் மந்திரியாக நியமிக்கப் பட்டார். சீக்கிரத்தில் அவர் அரசியல் அதிகாரங்கள் அனைத்தையும் கைப்பற்றினர். அடுத்த ஆண்டில் ஜெர் மானியக் குடியரசுத் தலைவரான வான் ஹிண்டர்பர்க் இறந்த

பொழுது, ஹிட்லர் அப் பதவியையும் கைக்கொண்டு, ஒரு சர்வாதிகாரியாக விளங்கினர்.

இதன் பிறகு, இவர் தன் திட்டங்களைச் செயலாக்க ஆரம்பித்தார். ஜெர்மனியில் நாஜிக்கட்சியைத் தவிர, இதர அரசியல் கட்சிகள் ஒழிக்கப்பட்டன. தனக்கு எதிராக இருப்பவர்களின் இரகசியச் செயல்களை அறிந்து, அவர்களைச் சிறையிட, கெஸ்டாப்போ என்ற இரகசிய போலீஸ் படையை நிருவினர். மக்களின் பெரும்பாலான உரிமைகள் பறிக்கப் பட்டன. ஜெர்மனியில் செல்வம் மிகுந்தவர்களாக இருந்த யூதர்களை, நாட்டின் விரோதிகளெனக் கூறி, நாட்டை விட்டு ஓட்டினர். அவர்களின் திரண்ட செல்வத்தை, தன் படைகளைப் பலப்படுத்தவும், போர்த் தளவாடங்கள் செய்யவும் உபயோகித்தார். பல தொழிற்சாலைகள் நிருவி, வேலையற்றோர்களுக்கு வேலை கிடைக்க வகை செய்தார். நாட்டின் விளை நிலங்களை உழவுத் தொழிலாளிகளுக்குப் பகிர்ந்தளித்தார். வாணிபம் பெருகச் செய்தார்.

கட்டாய இராணுவ சேவை அமுலாக்கப்பட்டது. ஜெர்மனியின் நிலப்படை, தரைப்படை, விமானப் படை ஆகியவை பலப்படுத்தப்பட்டன. பிறகு ஹிட்லர், இத்தாலியின் சர்வாதிகாரியான முஸோலினியுடனும், ஜப்பான் நாட்டுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்த நாடுகளுக்கு அச்சு நாடுகள் எனப் பெயரிடப் பட்டது.

இதன் பிறகு ஹிட்லர் ஜெர்மனியின் அண்மையில் உள்ள நாடுகளை ஒவ்வொன்ருகக் கைப்பற்றினர். இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஜெர்மனிக்கு விரோதமாக ஒப்பந்தம் செய்து கொண்டன. இவை நேச நாடுகள் எனப்படும். இறுதியாக, ஹிட்லர் 1939-ம் ஆண்டில் போலந்தைத் தாக்கியபொழுது, நேச நாடுகள் ஜெர்மனியின்மீது போர் தொடுத்தன. இதுவே இரண்டாம் உலகப் பெரும் போர் ஆகும். முதலில் ஹிட்லர் ஏறக்குறைய ஐரோப்பாவில் பெரும் பகுதியை வென்ருர். ஆனல்

1943-ம் ஆண்டில் இத்தாலி பணிந்தது. ஹிட்லரின் சகாவான முஸோலினி கொல்லப்பட்டார். 1945-ம் ஆண்டில் நேசப்படைகள் ஜெர்மனியில் புகுந்தன. ஹிட்லர் மறைந்தார். 1945-ம் ஆண்டிலேயே அணுகுண்டு வீச்சின் காரணமாக, ஜப்பானும் பணிந்தது.

போர் முடிவுற்றபின், ஜெர்மனி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, கிழக்குப்பகுதி ரஷ்யாவின் ஆதிக்கத்திலும், மற்ற பகுதிகள் முறையே இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா முதலிய நாடுகளின் ஆதிக்கத்திலும் வைக்கப்பட்டன. ஜெர்மனியின் படைகள், ஒழிக்கப்பட்டன. அதன் தொழிற்சாலையின் இயந்திரங்கள் வெற்றி பெற்ற நாடுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. 1949-ம் ஆண்டில், மேற்கு ஜெர்மன் பகுதிகள் மூன்றும் ஒன்று சேர்க்கப்பட்டு, பான் நகரம், அதற்குத் தலைநகரமாக்கப்பட்டது. கிழக்கு ஜெர்மனிக்கு பெர்லின் தலைநகராக விளங்கியது. மீண்டும் ஜெர்மானியப் பகுதிகளை ஒன்று கூட்ட முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

## பயிற்சி

1. ஜெர்மனிக்கு பிஸ்மார்க் செய்த சேவைகள் எவை ?
2. இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனியை ஏற்றம் பெறச் செய்ய எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை ? அவற்றின் இறுதி விளைவு யாது ?
3. ஹிட்லர் ஜெர்மனியை எவ்வாறு வன்மை பெறச் செய்தார் ? அதன் பயன் என்ன ?
4. இரண்டாம் உலகப் பெரும் போருக்குப்பின் ஜெர்மனியின் நிலை யாது ?
5. குறிப்பு வரைக :—

மகா பிரெடரிக்; நாஜிக்கட்சி; மெயின் கெம்ப்; ரீக்ஸ்டாக்; கெஸ்டாப்போ.

# 17. ரஷ்யப் புரட்சி

இந்நூற்றுண்டின் தொடக்கம்வரை, ரஷ்யா முடியரசு நாடாக விளங்கி வந்தது. அதனை ஆட்சி புரிந்த மன்னர்களின் பட்டப் பெயர் ஸார் (Czar) என்பதாகும். பதினேழாம் நூற்றுண்டு வரை ரஷ்யா மிகப் பிற்போக்கான நாடாக விளங்கி வந்தது. ஆனுல் அந்த நூற்றுண்டின் இறுதியில் ஆட்சிபுரிந்த மகாபீடர் என்ற ரஷ்ய மன்னர், அந் நாட்டைப் பல துறைகளிலும் ஏற்றம் பெறச் செய்தார். மேலும் அங்குள்ள மக்களை ஐரோப்பிய நாகரிகப் பண்பாடுகளைப் பின்பற்றச் செய்தார்.

முற்காலத்தில் ரஷ்ய மக்களின் முக்கியத் தொழில் வேளாண்மையே. நிலங்கள் அனைத்தும் சில பிரபுக்களுக்கே சொந்தமாக இருந்தன. அங்கு வேலை செய்யும் தொழிலாளிகள் மிகக் கேவலமாக நடத்தப்பட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தொழிலாளிகளிடையே சமதர்மக் கொள்கைகள் பரவலாயின. அவர்கள் அரசாங்கத்துக்கும், பிரபுக்களுக்கும் எதிராகப் பல இரகசியச் சங்கங்களை அமைத்தனர். ஆங்காங்கு சதிகளும் செய்யப்பட்டன. இதனை யறிந்த அரசாங்கத்தினர் கடுமையான சட்டங்களை இயற்றி, சதிகாரர்களை மிகக் கடுமையாகத் தண்டித்தனர். இதன் விளைவாக, அரசாங்கத்தின் மீதும், பிரபுக்கள் மீதும் மக்களுக்கு வெறுப்பு பன்மடங்கு அதிகமாயிற்று.

முதல் உலகப் பெரும் போரில் ரஷ்யா ஈடுபட்டிருந்தது. ஆனுல் 1917-ம் ஆண்டில் அது பெரும் தோல்வியடைந்தது. நாடெங்கும் கோரப் பஞ்சம் தாண்டவமாடியது. இந்நிலைக்கு அரசாங்கமே காரணமெனக் கருதிய ஏழை மக்கள் ஆங்காங்கு கலகங்களை விளைவித்தனர். கலகக்காரர்களைச் சிறிதும் தாட்சண்யமின்றி சுட்டுக் கொல்லும்படி மன்னர் படைகளுக்கு உத்தரவு பிறப்பித்தார். ஆனுல் அப்படைகள் மக்களுடன் சேர்ந்துகொண்டு, அரசாங்கத்துக்கு விரோதமாகப் புரட்சி செய்யத் தொடங்

கின. மன்னர், அவரது குடும்பத்தினர், பிரபுக்களில் ஆயிரக் கணக்கானோர் ஆகியவர்கள் கொல்லப்பட்டார்கள். முன்பு பிரான்ஸ் நாட்டில் ஏற்பட்டது போல, அப்போது ரஷ்யா வில் இரத்த வெள்ளம் ஓடலாயிற்று.

இனி, இப்புரட்சிக்கு முக்கியக் காரணமாயிருந்த **லெனின்** என்பவரின் வாழ்க்கை வரலாற்றை யறிவோம்.

லெனின் 1870-ம் ஆண்டில், ரஷ்யாவிலுள்ள **ஸிம் பர்ஸ்க்** என்னும் நகரில், பள்ளி ஆசிரியரின் மகனாகப் பிறந்தார். சிறுவயது முதலிலிருந்தே இவர் அஞ்சா நெஞ்



படம் 55. லெனின்

சமும், புத்திகூர்மையும் உடையவர். முதலில் இவர் ஒரு வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார். 1887-ம் ஆண்டில்இவரதுமூத்த சகோதரர் ஸார் மன்னருக்கு விரோதமாகச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, தூக்கிலிடப்பட்டார். இதையும், இதனால் புழுப்போலத் துடித்த தனது அண்ணன் மனைவியையும் கண்ட லெனின், ரஷ்யாவில் ஸார் மன்னர்களின் எதேச்சாதிகாரத்தை ஒழிக்க மன உறுதி கொண்டார். பிறகு வக்கீல் தொழிலை விடுத்து அரசியல் துறையில் ஈடுபட்டார். அக் காலத்தில் ஜெர்மானிய ஆசிரியரான **காரல் மார்க்ஸ்** என்பவர் எழுதிய நூலைஇவர் படிக்க நேர்ந்தது. அதன்படி இவர் சமதர்மக் கொள்கைகளைப் பின்பற்ற நாட்டம் கொண்டார். அக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட **கம்யூனிஸ்ட்** அரசாங்கமே ரஷ்யாவில் அமைக்கப் படவேண்டுமென நினைத்தார்.

இதன்பின்னர் இவர் அரசாங்கத்துக்கு விரோதமான சதிகள் பலவற்றில் கலந்து கொண்டார். ஆகவே, இதை யறிந்து அரசாங்கத்தினர் 1895-ம் ஆண்டில், இவருக்குத்

தண்டனையளிக்கும் வகையில் இவரைச் சைபீரியாவுக்கு அனுப்பினார்கள். சில காலத்துக்குள் அவர் அங்கிருந்து தப்பியோடி, லண்டன் மாநகரில் வசித்து வந்தார்.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் போர் மூண்டது. அப்போரில் ரஷ்யா தோல்வியுற்றது. அரசாங்கம் இப்போரை சரிவர நடத்தாததே இத்தோல்விக்குக் காரணமெனக் கருதிய ரஷ்ய மக்கள், கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யலாயினர். அவர்களைச் சமாதானம் செய்யும் முறையில், தொழிலாளர்கள் சங்கங்களை ஏற் படுத்திக் கொள்ள அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது. இச்சங்கங்களுக்குச் **சோவியத்துகள்** எனப் பெயரளிக்கப் பட்டது. இச்சமயம் லெனின் ரஷ்யாவுக்குத் திரும்பிவந்து, இச்சங்கங்கள் நன்முறையில் இயங்க உதவியதுமன்றி, பயிர்த் தொழிலாளிகளுக்கும் தனிச் சங்கங்கள் ஏற்பட உதவினார். இவருடைய புதிய அரசியல் கட்சி **போல்ஷவிக் கட்சி** என்ற பெயர் பெற்றது. புரட்சிச் செயலில் ஈடுபட்ட இவர் மறுபடியும் சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். இவர் அங்கிருந்து தப்பி, ஸ்விட்சர்லாந்துக்குச் சென்று, அங்கு ஓர் செய்திப் பத்திரிகையைத் துவக்கி, தனது கொள்கைகளை விளக்கி வந்தார்.

1917-ம் ஆண்டில் ரஷ்யாவில் புரட்சி ஏற்பட்ட பொழுது லெனின் ரஷ்யாவுக்குத் திரும்பிவந்து, புரட்சிக்கு தலைமை பூண்டார். அந்த ஆண்டின் இறுதியில் அவர் ரஷ்யாவின் ஆட்சித் தலைவர் ஆனார். இச் செயல்கள் அனைத்திலும் அவருக்கு வலக்கரம் போல உதவி வந்தவர் **ஸ்டாலின்** ஆவார்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் லெனின் செய்த முதல் வேலை, முதல் உலகப் பெரும் போரினின்றும் ரஷ்யாவை விலக்கி, ஜெர்மனியுடன் தனி ஒப்பந்தம்செய்து கொண்டதாகும். பிறகு, ரஷ்யாவிலுள்ள நிலங்களையும், தொழிற்சாலைகளையும் அரசாங்கமே எடுத்துக் கொண்டு, அவற்றின் நிர்வாகத்தைத் தொழிலாளிகளிடம் விட்டது.

கப்பல்கள், இருப்புப்பாதைகள், சுரங்கங்கள், வீடுகள் யாவும் அரசாங்க சொத்தாயின. நாடு முழுவதிலும் பல சிறு சோவியத் குடியரசுகள் ஸ்தாபிக்கப்பட்டன. புதிய ரஷ்ய அரசாங்கத்துக்கு **சோவியத் பொது உடமைக் குடியரசு ஐக்கியம்** (Union of Soviet Socialist Republic - U.S.S.R.) எனப்பெயர் வழங்கப்பட்டது. புதிய அரசாங்கத்தின் தலை நகர் **மாஸ்கோ** ஆயிற்று. லெனினே இக் குடியரசுக்குத் தலைவராக ஆக்கப்பட்டார். இவரது நல்லாட்சியின் கீழ், ரஷ்யா எல்லாத் துறைகளிலும் வெகு துரிதமாக முன்னேறியது. இவ்வாறு தன் நாட்டுக்குச் சேவை செய்த லெனின், **நவீன ருஷ்யாவின் பிதா** எனப் போற்றப் பட்டார்.

1924-ம் ஆண்டில் லெனின் மரணமடைந்தார். அவரது வலக்கரம் போலிருந்த **ஸ்டாலினே** அப்பதவிக்கு வந்தார்.

**ஜோஸப் ஸ்டாலின்**, 1879-ம் ஆண்டில், கருங்கடலுக்கு அருகிலுள்ள **காகஸஸ்** பிரதேசத்தில், ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதிலேயே அவர் தொழிலாளிகளுக்காக உழைக்கக்கருதி, சோவியத்தில் சேர்ந்து, லெனினின் நட்புக்குப் பாத்திரமானுர். இவரைக் கைது செய்ய, அரசாங்கம் பலமுறை முயன்றபோது ஒவ்வொரு முறையும் இவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. லெனின் ரஷ்ய அரசாங்கத் தலைவரானபொழுது, ஸ்டாலின் அவரது முக்கிய உதவியாளராக ஆனுர். ஆகவே, லெனின் இறந்த பின் ஸ்டாலின் அப்பதவிக்கு வந்தார்.



படம் 56. ஸ்டாலின்

ஸ்டாலின் பதவி ஏற்ற சிறிது காலத்துக்கெல்லாம், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்து, நாட்டை

எல்லாத் துறைகளிலும் ஏற்றம்பெறச் செய்தார். நாடெங்கும், மாபெரும் அணைத் திட்டங்கள், ஜலமின் சக்தி நிலையங்கள், தொழிற்சாலைகள், இருப்புப்பாதைகள் இவை அமைக்கப்பட்டன. கல்வி வெகுவாகப் பரவியது. நவீன முறையில் விவசாயம் செய்யப்பட்டு, உற்பத்திப் பொருள்கள் குவிந்தன. இவற்றின் காரணமாக, நாட்டின் செல்வ நிலை உயர்ந்தது.

இரண்டாம் உலகப் பெரும்போர் மூண்டபொழுது, ரஷ்யா நேசநாடுகளுடன் சேர்ந்து கொண்டது. ஹிட்லர் ரஷ்யாவைத் தாக்கி, வெகு வேகமாக முன்னேறியபோது, ஸ்டாலின் மிகுந்த மன உறுதியுடன் போரை நடத்தி, ஹிட்லரின் படைகளைப் பின்வாங்கச் செய்தார்.

1945-ம் ஆண்டில் ரஷ்யப் படைகளே முதலில் ஜெர்மனிக்குள் புகுந்தன. ஹிட்லரின் வீழ்ச்சிக்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் ஸ்டாலின் எனக் கூறுவது மிகையாகாது. அவரிடம் நன்றிகொண்ட ரஷ்யமக்கள், தம் நாட்டில் பல நகரங்களுக்கு அவரது பெயரை யொட்டிப் புதுப் பெயர்கள் வைத்தார்கள். போருக்குப்பின் உருவாகிய ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் ரஷ்யா முக்கிய ஸ்தானத்தை வகித்து, உலக அமைதிக்குப் பாடுபட, ஸ்டாலின் வகை செய்தார். அவரது முயற்சியால், ரஷ்யா உலக வல்லரசுகளில் ஒன்றுயிற்று.

1953-ம் ஆண்டில் ஸ்டாலின் காலமானுர். அவருக்குப் பின் ஜார்ஜ் மாலங்காவ் என்பவர் ரஷ்யாவின் நிர்வாகத் தலைவரானுர். 1955-ம் ஆண்டில் அவர் பதவியினின்றும் விலகிக் கொள்ள, மார்ஷல் புல்கானின் அப்பதவிக்கு வந்து, இப்பொழுது பணியாற்றுகின்றுர். இவரது முயற்சியால், மேற்கு வல்லரசுகளும், அமெரிக்காவும், ரஷ்யா மீது கொண்டிருந்த சந்தேக மனப்பான்மை குறைந்து வருகின்றது.

## பயிற்சி

1. மஹா பீடர் ரஷ்யாவுக்குச் செய்த சேவை என்ன ?
2. 1917-ம் ஆண்டில் ரஷ்யாவில் புரட்சி ஏற்படக் காரணமென்ன ?

3. ரஷ்யாவின் முன்னேற்றத்துக்காக லெனின் செய்த சாதனைகள் எவை ?

4. ஸ்டாலின் எவ்வாறு ரஷ்யாவை ஒரு வல்லரசாகச் செய்தார் ?

5. ' நவீன ரஷ்யாவின் பிதா என்ற சிறப்புப் பெயர் எவருக்கு அளிக்கப்பட்டது ? அது அவருக்கு எவ்வாறு பொருந்தும் ?

6. தற்போது ரஷ்யாவின் நிர்வாகத் தலைவர் யார் ? அவர் எவ்வாறு சேவை புரிந்து வருகிறார் ?

# 18. துருக்கியின் எழுச்சி

பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில், துருக்கியர்கள் ஐரோப்பாவின் தென் கிழக்கிலுள்ள கான்ஸ்டாண்டிநோபிலை தலைநகராகக் கொண்டு தமது சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தனர். தென் மேற்கு ஆசியாவைத் தவிர, தென் கிழக்கு ஐரோப்பா, வட ஆப்பிரிக்காவில் எகிப்து ஆகிய பகுதிகள் இவர்களது ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. துருக்கி சக்கரவர்த்தி சுல்தான் என அழைக்கப்பட்டார். அவர் முஸ்லீம்களின் மதத் தலைவராகவும் ஒருவகையில் கருதப்பட்டார். இந்த சுல்தான்கள் தமது இச்சைப்படி ஆட்சி புரியலாயினர்.

பதினெட்டாம் நூற்றாண்டு முதல் துருக்கி சாம்ராஜ்யத்தின் வன்மை குறையலாயிற்று. எகிப்துச் சிற்றரசர், சுதந்திரமாக ஆட்சி புரிய ஆரம்பித்தார். கருங்கடலுக்கு வடக்கில் துருக்கிக்குச் சொந்தமான பகுதிகள் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டன. வன்மையை இழந்து வரும் துருக்கியை, ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பாவின் நோயாளி என ஏளனமாக அழைத்தனர். துருக்கியின் ஆதிக்கத்திலிருந்த பால்கன் நாட்டுமக்கள் கிறிஸ்தவர்கள். ஆகவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, அவை ஒவ்வொன்றாக, துருக்கியுடன் போரிட்டு, விடுதலை பெற்றன.

இந்நிலையில், அழிந்துவரும் துருக்கியை மீண்டும் ஏற்றம் பெறச் செய்ய **இளந் துருக்கியர் இயக்கம்** என்ற புதிய இயக்கமொன்று நிருவப்பட்டது. மேனாடுகளில் கல்வி பெற்றுத் திரும்பிய துருக்கி இளைஞர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்துகொண்டு, துருக்கியில் சுல்தானின் அதிகாரத்தைக் குறைத்து ஜனநாயக ஆட்சியை அமைக்கவும்; மேநாட்டு நாகரிகத்தைப் பரப்பவும் விரும்பினார்கள். 1908-ம் ஆண்டில், இந்த இயக்கம் செய்ய முயன்ற புரட்சி பயன்படவில்லை.

முதல் உலகப் போரில், துருக்கி, ஜெர்மனியுடன் சேர்ந்து கொண்டு தோல்வியுற்றது. இதன் விளைவாக ஆசியாவில் அதன் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த நாடுகளில் பல சுயேச்சை பெற்றன. ஐரோப்பாவில் கான்ஸ்டாண்டிநோபிலைச் சுற்றியுள்ள ஒரு சிறு பகுதி தவிர, இதரப் பகுதிகளையும் துருக்கி இழந்தது.

முதல் உலகப் போருக்குப்பின் சீரடைந்த இத்தாலியை ஏற்றம்பெறச் செய்ய முஸோலினியும், ஜெர்மனியை ஏற்றம் பெறச் செய்ய ஹிட்லரும் தோன்றியது போல, துருக்கியை ஏற்றம்பெறச் செய்ய முன் வந்தவர் **முஸ்தபா கெமால் பாஷா.**



படம் 57 கெமால் பாஷா

கெமால் பாஷா 1881-ம்ஆண்டில் **சாலோனிகா** என்னுமிடத்தில் பிறந்தார். இவர் சிறு வயதினராக இருக்கையிலேயே இவரது தந்தையார் இறந்தார். ஆகவே இவரது தாயே,இவருக்குத்தாயும் தந்தையுமாக இருந்து இவரைப் போற்றி வளர்த்தார்.இவர் நுண்ணறிவு, தேசப்பற்று, வீரம், மனவுறுதி, முதலிய நற் பண்புகளைப் பெற்றிருந்தார். இராணுவப் பயிற்சி பெற்று, துருக்கிப் படையில் சேர்ந்தார். முதல்உல

ளப் பெரும் போரில் இவர் துருக்கிப்படையின் ஒரு பகுதிக்குத் தலைவராகச் செயலாற்றினர். போருக்குப்பின் சுல்தான் ஒப்புக்கொண்ட உடன்படிக்கைதுருக்கிக்கு மிக அவமானத்தைக் கொடுக்கக் கூடியதெனக் கருதிய கெமால் பாஷா அதைத் தகர்த்தெறிய உறுதி பூண்டார்.

தன் உறுதியைச் செயலாக்க கெமால் பாஷா புதிய தேசியக் கட்சி ஒன்றை அமைத்தார். இதன் உதவியைக் கொண்டு ஆசியா மைனரிலுள்ள அங்காரா என்னுமிடத்தில் ஒரு புதிய தேசீய அரசாங்கத்தை அமைத்தார். ஆனல் சுல்தான் இந்த அரசாங்கத்தை ஒப்புக்கொள்ள மறுத்தார்.

பின்னர் கெமால் ஒரு பெரும் படையைத் திரட்டி, துருக்கியின் ஓர் பகுதியில் ஆட்சி புரிந்து வந்த கிரேக்கர்களைத் தோற்கடித்துத் துரத்தினர். பிறகு, 1923ம் ஆண்டில் கான்ஸ்டாண்டி நோபிலைக் கைப்பற்றி, சுல்தானைப் பதவியினின்றும் நீக்கிவிட்டு, துருக்கியை ஒரு குடியரசெனப் பிரகடனம் செய்தார். அங்காராவையே தலைநகராகக் கொண்ட புதிய குடியரசுக்குக் கெமாலே முதல் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கெமால் பாஷா நேசநாடுகளுடன் செய்துகொண்ட புதிய ஒப்பந்தப்படி, துருக்கியின் புதிய எல்லைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. இதன் பின்னர், கெமால் பாஷா துருக்கியை நவீன நாடாகச் செய்ய, பல சீர்திருத்தங்களைச் செய்தார். துருக்கியர்கள் தமது பெஸ் குல்லாய், பழைய முறையான உடைகள் இவற்றை விடுத்து, இதர ஐரோப்பிய நாட்டினரைப் போலத் தொப்பியும் உடையும் அணியச் செய்தார். பெண்கள் முகமூடி அணியும் வழக்கம் ஒழிக்கப்பட்டது. ஆடவர்களைப் போலவே அவர்களுக்கும் எல்லாத் துறைகளிலும் சம உரிமைகள் வழங்கப்பட்டன. ஐரோப்பிய சட்ட முறைகள் பின்பற்றப்பட்டன. பழைய துருக்கி எழுத்துக்குப் பதிலாக லத்தீன் எழுத்துகள் அங்கீகரிக்கப்பட்டன. நாடெங்கிலும் கல்விச் சாலைகள் அமைக்கப்பட்டு, கல்வி பரப்பப்பட்டது. அரசியல் விஷயங்களில் மதம் முக்கியமாகக் கருதப்பட்டு வந்த பழக்கம் கைவிடப்பட்டது.

மேலும், துருக்கியின் விவசாயம், கைத்தொழில்கள், போக்கு வரவு வசதிகள் யாவும் பெருக்கப்பட்டன.

இவ்வாறு தம் நாட்டை ஏற்றம் பெறச் செய்த கெமால் பாஷாவை, துருக்கியர்கள், துருக்கியின் தந்தை எனப் பொருள் படும்படியாக, ஆத்தாதுர்க் (Attaturk) எனப் போற்றினார்கள். 1938 ம் ஆண்டில் இவர் இறந்தார்.

கெமாலுக்குப்பின் இஸ்மத்இனுனு என்பவரும், அவருக்குப்பின், ஸிலால்பேயர் எனபவரும், குடியரசின் தலைவரானார்கள். இரண்டாம் உலகப் பெரும் போரில் துருக்கி எக்கட்சியிலும் சேராமல் நடு நிலைமை வகித்தது.

### பயிற்சி

1. ஐரோப்பாவின் நோயாளி என துருக்கிக்கு ஏன் பெயர் வந்தது ?
2. கெமால் பாஷாவுக்கு ஆத்தாதுர்க் என்றபெயர் எவ்வாறு பொருந்தும்?
3. தற்போது துருக்கியின் குடியரசுத் தலைவர் யார்?

## 19. ஆசிய நாடுகள் ஏற்றம் பெறுதல்

முன்பாடங்களில், அமெரிக்கா, ஆசியாக்கண்டங்களில் பல நாடுகள் ஏற்றம் பெற்ற வகைகளைப் பற்றி யறிந்தோம். இனி நாம் வசிக்கும் கண்டமாகிய ஆசியாவில் முக்கிய நாடுகளாகிய சீனு, ஜப்பான், இந்தியா, இவை ஏற்றம் பெற்ற வகைகளை அறிவோம்.

### I சீனு

ஆசியாக் கண்டத்திலே மிகப் பெரிய நாடு சீனு. உலக மக்களில் சுமார் நான்கில் ஒரு பகுதியினர் இங்கு வசிக்கின்றனர். பண்பாடுகளிலும் இது மிகப் பழமையானது. முற்காலத்தில் சீனுவின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட பகுதிகள்




படம் 58. ஆசியாவின் முக்கிய நாடுகள்

மஞ்சூரியா, மங்கோலியா, துருக்கிஸ்தானம், தீபேத் முதலியவை. அதன் தலைநகர் பீகிங், அங்கு ஆட்சிபுரிந்த மன்னர்கள் மஞ்சு வமிசத்தைச் சேர்ந்தவர்கள். இதர நாட்டு மக்கள் சீனாவிற்கு வர அனுமதிக்கப்படுவதில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் சீனாவில் நிலை சீர்குலையத் தொடங்கியது. ஆங்கிலேயர்கள் சீனாவுடன் அபினி வியாபாரம் செய்து வந்தனர். 1839-ம் ஆண்டில், இந்த வியாபார விஷயமாக ஆங்கிலேயர்களுக்கும் சீனர்களுக்கும் சச்சரவு ஏற்பட்டது. இதன் விளைவாக, சீன அரசாங்கம் ஆங்கிலேயர்களுக்கு ஹாங்காங் தீவைக் கொடுக்க வேண்டி வந்ததன்றி, பல சீனத் துறைமுகங்களில் பல ஐரோப்பிய, அமெரிக்க நாட்டினர் வாணிபம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

இதர நாட்டினர் சீனாவிற்கு வர அனுமதிக்கப்பட்டதன் காரணமாக, அந்நாடுகளின் நாகரிகங்களும், கருத்துக்களும், சீனாவில் பரவலாயின. மேலும் சீன இளைஞர்களில் பலர், ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்குச் சென்று,கல்வி கற்று, திரும்பினார்கள். இவர்கள் மூலமாகவும்,புதிய நாகரிக முறைகள் சீனாவில் பரவலாயின. எனவே சீனாவையும் பிற நாடுகளைப் போல உயர் நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்ற பேரவா சீனமக்களை ஆட்கொண்டது. இதைச் செயலாக்க முன்வந்தவர் டாக்டர் சுன் யாட் ஸென் என்பவர்.

சுன் யாட் ஸென், ஒரு பயிர்த்தொழிலாளியின் குமாரராக, 1866-ம் ஆண்டில் பிறந்தார். இவர் பரந்த நோக்கமும், நாட்டுப் பற்றும் கொண்டவர். இவர் தன் பொதுக் கல்வியை முடித்துக் கொண்டபின், ஹாங்காங் தீவிலுள்ள ஒரு வைத்தியக் கல்லூரியில் பயிற்சி பெற்று, காண்டன் நகரில் ஒரு டாக்டராகப் பணியாற்றினார். எனினும் இவரது மனம் அரசியலையே நாடியது, சீனாவின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருந்தவர்கள் அதன் சக்கரவர்த்திகளே என்பதை இவர் ஐயமற

உணர்ந்து, அப்பதவியையே ஒழிக்க உறுதிகொண்டார் இதனுல் பல முறைஇவரது உயிருக்கே ஆபத்து வருமெனத் தோன்றியது. எனவே, பல ஆண்டுகள் இவர் வெளி நாடுகளில் தஞ்சம் புகவேண்டியிருந்தது. தன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இவர் புதிய அரசியல் கட்சியொன்றை அமைத்தார். இதற்கு கோமின்டாங் எனப் பெயர். வெகு சீக்கிரத்தில், ஆயிரக் கணக்கான சீனர்கள் இக் கட்சியில் சேர்ந்தனர்.



படம் 59 சுன் யாட் ஸென்

1908-ம் ஆண்டில், சுன் யாட் ஸென் எதிர்பார்த்த காலம் வந்தது. அப்பொழுது சீனச் சக்கரவர்த்தி பதவிக்கு வந்தவர் மிக இளைஞர். ஆகவே, நாடெங்கும் குழப்பம் ஏற்பட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்டு, 1911-ம் ஆண்டில் புரட்சிக்காரர்கள் சீனுவில் ஓர் பெரும் புரட்சியை உண்டாக்கினுர்கள். வெளி நாட்டிலிருந்த சுன் யாட் ஸென் இதைக் கேள்வியுற்றவுடன் சீனுவிற்கு விரைந்து வந்து, புரட்சிக்குத் தலைமை பூண்டார். மன்னர் முடிதுறந்து, நாட்டை விட்டு அகன்றுர். 1912-ம் ஆண்டில் அமைக்கப் பெற்ற சீனக் குடியரசுக்கு, சுன் யாட் ஸென்னே முதல் தலைவராகத் தேர்வு பெற்றுர். மத்திய சீனுவிலும், தென் சீனுவிலுமே இவருக்குப் பேராதரவு இருந்ததால், இவர் 1917-ம் ஆண்டில், மத்திய சீனுவிலுள்ள **நான்கிங்கைத்** தலைநகராகக் கொண்டார்.

சுன் யாட் ஸென், சீன இளைஞர்கள் பலரைப் பிற நாடுகளுக்கு அனுப்பி, கல்வி பெறச் செய்தார். இவர்கள் திரும்பியதும், இவர்களின் உதவியைக் கொண்டு, விவசாயம், கைத்தொழில், கல்வி இவற்றை வெகுவாக ஏற்றம்

பெறச் செய்தார். ரஷ்ய நிபுணர்கள் பலரை வரவழைத்து, அவர்களின் உதவியைக் கொண்டு, அரசாங்கம், இராணுவம் இவற்றைச் சிறப்பாக அமைத்தார். ரஷ்ய நிபுணர்கள் மூலமாகச் சீனுவில்பொது உடைமைக் கொள்கைகள் பரவக் கூடுமெனக் கருதிய பலர் சுன் யாட் ஸென்னுக்குப் போதிய ஆதரவு அளிக்கவில்லே. இதனுல் சீனுவில் ஒற்றுமை குறையலாயிற்று.

எனினும், நவசீனுவின் தோற்றத்துக்கு முக்கியக் காரணமாயிருந்த சுன் யாட் ஸென் நவ சீனுவின் தந்தை எனப் பெரிதும் போற்றப்பட்டார். இவர் 1925-ம் ஆண்டில் இறந்தார். இவர் பதவிக்கு, இவரது மனேவியின் சகோதரி புருஷரான சியாங் கெய் ஷேக் வந்தார்.

சியாங் கெய் ஷேக் பதவிக்கு வந்தவுடன், சீனுவில், ஒற்றுமை நிலவச் செய்வதே தன் முதல் கடமை எனக் கருதினுர். நான்கிங்கையே தன் தலே நகராகக் கொண்டு சீனுவில் தோன்றிய குழப்பங்களே அடக்கி அமைதியை நிலேநாட்டினுர். சீனுவில் சமதர்மக்கொள்கை பரவுவதை இவர் விரும்பவில்லே. சீனுவில் அன்னியர்களின் செல்வாக்கை ஒழித்தது இவர் ஆற்றிய பணியில், மிக முக்கியமானதாகும். நாட்டில் கல்வி, விவசாயம் கைத்தொழில் இவைகளே வெகுவாகப் பரவச் செய்தார்.



படம் 60 சியாங் கெய் ஷேக்

சீனர்களுக்கு, 1931-ம் ஆண்டில் ஓர் புதிய ஆபத்து நேரிட்டது. அந்த ஆண்டில் ஜப்பானியர்கள் சீனுவின் வட பகுதியாகிய மஞ்சூரியாவைக் கைப்பற்றி, அதன் பெயரை மஞ்சுகோ என மாற்றி, அதைத் தம் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொண்டனர். அவர்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களேக் கொடுக்கவும், அங்குள்ள செய்

பொருள்களை வாங்கவும் இந்நாடு அவர்களுக்கு அநுகூல மாக இருந்தது. 1935-ம் ஆண்டில் ஜப்பானியர்கள் மீண் டும் சீனுவின் மீது போர் தொடுத்து, அதன் கடற்கரைப் பகுதிகளைக் கைப்பற்றினார்கள். எனவே, இருமுறை சியாங் கெய் ஷேக் தன் தலைநகரை உள் நாட்டில் வெவ்வேறு இடங்களுக்கு மாற்றவேண்டியதாயிற்று. 1939-ம் ஆண் டில் தொடங்கிய இரண்டாம் உலகப் பெரும் போரில் ஜப் பான் அச்சு நாடுகளுடனும், சீனு நேச நாடுகளுடனும் சேர்ந்தன.

1945-ம் ஆண்டில் ஜப்பான் முறியடிக்கப் பட்டதன் பயனுக, சீனக் குடியரசு மீண்டும் வன்மைபெற வகை ஏற் பட்டது. ஆனால் சீனுவில் சமதர்மக் கட்சியினர் வலுப் பெற்று, சீனக் குடியரசுடன் உள்நாட்டுப் போர் துவக்கி னார்கள். அவர்களுக்கு தலைமை தாங்கியவர் மாஸே துங் என்பவர். இறுதியில் சியாங் கெய் ஷேக் தோல்வியுற்று, சீனுவை யடுத்த பார்மோசா தீவுக்கு ஓடினார். இன்றும் இவர் இங்கிருந்தே சீனுவின் புதிய அரசாங்கத்துடன் போரிடுகிறார். சீனுவின் இதரப் பகுதிகள் அனைத்தும் மாஸே துங்கைத் தலைமையாகக் கொண்ட குடியரசின் ஆதிக்கத்திலிருந்து வருகின்றன. இப்புதிய அரசாங்கத்தின் தலைநகர் பீகிங். அதன் பிரதம மந்திரி சு யென் லாய் என் பவர். சியாங்குக்கு அமெரிக்கர்கள் ஆதரவளித்து வருகின் றனர்.

## II. ஜப்பான்

ஜப்பான் தேசம், சீனுவுக்குக் கிழக்கில், பசிபிக் சமுத் திரத்தில் பல தீவுகளைக் கொண்டது. அங்கு வசிக்கும் மக்க ளும் சீனமக்களைப் போல, மங்கோலிய வகுப்பைச் சேர்ந் தவர்கள். அந்நாட்டில் பலர் புத்த மதத்தைப் பின்பற்று பவர்கள். அம்மதம் நம் நாட்டினின்றும் சீனு வழியே அங்கு பரவியது.

ஜப்பான் ஒரு சக்கரவர்த்தியால் ஆளப்படுகிறது. அவரது பட்டப் பெயர் மிக்காடோ. முன்னாளில், ஜப்பானிய மக்கள் தம் சக்கரவர்த்தியைக் கடவுளின் அம்ச மெனக்

கருதி, போற்றி வந்தனர். அரசியல் அதிகாரம் அனைத்தும், பரம்பரையாக, ஷோகன் குடும்பத்தினர் கையில் இருந்து வந்தது. சீனுவைப் போலவே ஜப்பானிலும், முற்காலத்தில் அன்னியர்களை வரவிடுவதில்லை. நாட்டின் நிலங்கள் அனைத்தும் மிகுந்த செல்வம் படைத்த பிரபுக்கள் வசம் இருந்தன. இவர்கள் அடிக்கடி ஒருவரோடொருவர் போரிட்டுக் கொள்வது வழக்கம். அரசாங்கம் இவர்களைக் கண்டிக்கத் தயங்கியது. பொதுமக்கள் பல இன்னல்களுக்கு ஆளானார்கள்.

பதினாரும் நூற்றாண்டின் மத்தியில் போர்ச்சுக்கீஸியர்கள் ஜப்பானுக்கு வந்து, வாணிபம் செய்யத் தொடங்கியதுடன், அந்நாட்டு மக்களில் பலரை, கிறிஸ்தவ மதத்தைப் பின் பற்றும்படியும் தூண்டினார்கள். இதன் காரணமாக, நாட்டில் அடிக்கடி மதப்பூசல்கள் தோன்றலாயின. எனவே அந்நியர்கள் அனைவரும் நாட்டினின்றும் துரத்தப்பட்டனர்.

1854-ம் ஆண்டில் அமெரிக்கக் கப்பல்படை அதிகாரிகளுள் ஒருவரான பெரி என்பவர் திடீரென ஜப்பானுக்கு வந்து, ஜப்பானியர்களை நிர்ப்பந்தித்து, அமெரிக்காவுக்கு ஜப்பானில் சில வாணிப உரிமைகளைப் பெற்றார். இதை அடுத்து, பல ஐரோப்பிய நாட்டினரும் இங்கு வாணிப உரிமைகளைப் பெற்றனர். இத்தொடர்புகளால், ஜப்பானிலும், சீனுவைப் போலவே மேனாட்டு நாகரிக முறைகள் பரவலாயின. அந்நிய நாட்டவர்களினின்றும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள, தம் நாட்டை எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெறச் செய்ய வேண்டியதன் அவசியத்தை ஜப்பானியர்கள் உணரலாயினர்.

1867-ம் ஆண்டில், முட்ஸீ ஹிடோ என்பவர் ஜப்பானிய சக்கரவர்த்தியானார். ஜப்பானை ஒரு சிறந்த, நவீன நாடாகச் செய்வதையே அவர் தன் குறிக்கோளாகக் கொண்டார். இதைச் செயலாக்குவதற்காக, முதன் முதலாக அவர் ஷோகன் பதவியை ஒழித்து விட்டு, எல்லா அதிகாரங்

களையும் தானே மேற்கொண்டார். ஜப்பானிய இளைஞர்களை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி, கல்வி பெறச் செய்து, அவர்கள் திரும்பிவந்ததும் அவர்களின் சேவையைப் பயன்படுத்திக்கொண்டார். ஜப்பானில் நிலவிவந்த பழைய நிலமானிய முறை ஒழிக்கப்பட்டது. கப்பற்படை, தரைப்படை இவை திருத்தி அமைக்கப்பட்டன. பார்லிமெண்டு ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. நாடெங்கும் சாலைகளும், இருப்புப் பாதைகளும், தந்தி, தபால் நிலையங்களும் அமைக்கப் பெற்றன.



படம் 61 முட்ஸிஹிடோ

கல்வியை நன்கு பரப்ப பல, கல்விச்சாலைகளும் நிருவப்பட்டன. ஆங்காங்குபெரிய தொழிற்சாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றின்காரணமாகஜப்பான் எல்லாத் துறைகளிலும்துரிதமாகமுன்னேற்றமடைய ஆரம்பித்தது. வாணிப உதவிக்காக, நிதிகள் (Banks) அமைக்கப்பட்டன. மக்கள் மேனாட்டவர்களைப் போல ஆடைகளை அணிய ஆரம்பித்தனர். ஜப்பானிய அரசாங்கம் இங்கிலாந்து முதலிய வல்லரசுகளுடன் அரசியல் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இதன் பிறகு, தனது வாணிபத்தை அதிக அளவில் பெருக்கிக்கொள்ளவும், அதிகப்படியான மக்கள் சென்று குடியேறவும், ஜப்பானின் ஆலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை விற்கவும், அதன் செய்பொருள்களை வாங்கவும், ஜப்பானுக்குப் பல புதிய குடியேற்ற நாடுகள் தேவையாயிருந்தன. ஆகவே, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, ஜப்பானில் சாம்ராஜ்ய மோகம் ஏற்பட்டது. 1894-ம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் போர் தொடுத்து, அதற்குச் சொந்தமான பார்மோஸாத் தீவு, கோரியா தீபகற்பம் ஆகியவற்றைக் கைப்பற்றியது. பிறகு

1905-ம் ஆண்டில் ஜப்பானுக்கும், ரஷ்யாவுக்கும் போர் மூண்டது. ஜப்பான் மிகச் சிறிய நாடாயினும், அது மிகப் பெரிய நாடாகிய ரஷ்யாவை வென்று, உலகையே ஆச்சரி யத்தில் மூழ்த்தியது. இதை யடுத்து, அமெரிக்காவும், பல ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானுடன் நேச உடன்பாடு செய்து கொண்டன.

முதல் உலகப் பெரும்போரில் ஜப்பான் நேசநாடு களுடன் சேர்ந்து கொண்டது. இதனால் போருக்குப்பின், பசிபிக் சமுத்திரத்தில் ஜெர்மனிக்குச் சொந்தமாயிருந்த பல தீவுகள் ஜப்பானுக்குக் கொடுக்கப்பட்டன.

1931-ம் ஆண்டில் ஜப்பான் சீனாவிடமிருந்து மஞ் சூரியாவைக் கைப்பற்றியதைப் பற்றியும், 1935-ம் ஆண்டில் அதன் கடற்கரைப் பகுதிகள் பலவற்றைக் கைப்பற்றிக் கொண்டதைப் பற்றியும் முன்பு கூறப்பட்டது.

இரண்டாம் உலகப் பெரும் போரில் ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி இவற்றுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதைப் பற்றியும் முன்பு கூறப்பட்டது. ஜப்பான் விரைவாக, சீனாவின் கடற்கரைப்பகுதிகள், இந்தோ-சீனா, தாய்லாந்து, கிழக்கிந்தியத் தீவுகள், பர்மா முதலிய நாடு களைக் கைப்பற்றிக்கொண்டு, இந்தியாவையும் தாக்க ஆயத்தம் செய்து, பிறகு, பசிபிக் சமுத்திரத்தில், ஹவாய் தீவுகளில் அமெரிக்காவுக்குச் சொந்தமான கப்பற்படைத் தளமாகிய பேர்ல் துறைமுகத்தை ஜப்பானியக் கப்பல்கள் தாக்கின. இதனால் அமெரிக்காவும் போரில் இறங்கியது. 1945-ம் ஆண்டில் அமெரிக்கர்கள் ஜப்பானில் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய இரண்டு இடங்களிலும் கொடிய அணு குண்டை வீசி, ஏராளமான சேதத்தை விளைவித்தனர். உடனே ஜப்பான் பணிந்தது. 1951-ம் ஆண்டு வரை ஜப்பான், மாக் ஆர்தர் என்ற அமெரிக்கத் தளபதியின் கீழ் இராணுவ ஆட்சியில் இருந்தது. அவ்வாண்டில், அமெரிக் கப்படைகள் விலகிக்கொண்டன. மீண்டும் சுதந்திரம் பெற்ற ஜப்பான், துரிதமாகப் பல துறைகளிலும் முன்னேறி வருகின்றது.

## III. இந்திய சுதந்திரப் போராட்டம்

ஆதிகாலம் முதல் நம் நாட்டின் இயற்கை வளப்பமும் செல்வமும், பல்வேறு நாட்டு மக்களின் கவனத்தைக் கவர்ந்தன. ஆகவே, அக்காலம் முதல், இங்கு பலர் படையெடுத்து வந்து, குடியேறினர்கள். பல சாம்ராஜ்யங்களும் ஸ்தாபிக்கப்பட்டு, நாளடைவில் அவை ஒவ்வொன்ருக அழிந்தன.

பதினேழாம் நூற்ருண்டு தொடங்கி, ஐரோப்பிய நாட்டினரான போர்ச்சுக்கீஸியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள் ஆகியோர் இங்கு வாணிபம் புரிய வந்தனர். பின்னர் இங்கு தோன்றிய சூழ்நிலை காரணமாக, ஆங்கிலேயர்கள் இங்கு ஆட்சி புரிய ஆரம்பித்தனர். சிறிது சிறிதாக, நம் நாடு முழுவதும், நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, அவர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. ஆங்கில ஆட்சியால் நம் நாட்டில் பல நன்மைகள் ஏற்பட்ட போதிலும், நாட்டு மக்கள் பல உரிமைகளை இழந்தனர். நாட்டின் செல்வம் பெரும் அளவில் பறி போயிற்று. ஆகவே, 1857-ம் ஆண்டில், அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்க, ஒரு பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. இதுவே முன்னளில் சிப்பாய்க்கலகம் என்றும், இப்பொழுது முதல் இந்திய சுதந்திரப்போர் என்றும் வழங்குகின்றது. தம் படை பலத்தைக் கொண்டு, ஆங்கிலேயர்கள் இக்கிளர்ச்சியை அடக்கினர்கள். எனினும், மக்களின் சுதந்திர உணர்ச்சி நாளுக்கு நாள் பெருகலாயிற்று.

1885-ம் ஆண்டில் ஹியூம், வெட்டர் பர்ன் என்ற இரு ஆங்கிலேயர்களும், தாதாபாய் நவரோஜி என்ற இந்திய கனவானும் சேர்ந்து, இந்திய தேசீய காங்கிரஸை ஸ்தாபித்தனர். இதன் முக்கிய நோக்கங்கள், படிப்படியாக இந்தியா பொறுப்பாட்சி பெறச் செய்வது, இந்தியர்கள் அரசாங்கத்தில் பெரும் பதவிகளைப் பெறச் செய்வது, இராணுவச் செலவைக் குறைத்து, மக்களுக்குக் கல்வி போதிக்கவும், இதர வசதிகள் செய்யவும் வகை செய்வது

ஆகியவை. ஆண்டுதோறும் இச் சபை பல்வேறுநகரங்களில் கூடி, மேற்கூறிய விஷயங்களைப்பற்றித் தீர்மானங்களை இயற்றுவது வழக்கம். கோபால கிருஷ்ண கோகலே, பால கங்காதர திலகர், மோதிலால் நேரு, ஸி. ஆர். தாஸ், லாலா லஜபதிராய் போன்ற நம் ஒப்பற்ற தலைவர்கள், இந்திய தேசீய காங்கிரஸில் சேர்ந்து, பெரும் சேவை செய்தனர்.



படம் 62 தாதாபாய் நவரோஜி

காங்கிரஸின் கிளர்ச்சியின் காரணமாக, 1909, 1919 ஆகிய ஆண்டுகளில் சில அரசியல் சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டன. ஆனால், இவை மக்களுக்கு உண்மையான பொறுப்பாட்சி வழங்கவில்லை. எனவே 1921-ம் ஆண்டில் மஹாத்மா காந்தியடிகளின் தலைமையில் விடுதலை இயக்கம் தீவிரமாக நடைபெற்றது.

இனி, காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

**மோகனதாஸ் கரம்சந்த் காந்தி:** கத்தியவாரிலுள்ள போர் பந்தர் என்னுமிடத்தில், 1869-ம் ஆண்டு, அக்டோபர் மாதம், இரண்டாந் தேதி பிறந்தார். இவரது தந்தைஅங்குள்ள ஒரு சிறுசமஸ்தானத்தில்மந்திரி பதவி வகித்து வந்தார். சிறு வயது முதல் காந்தியடிகள் தெய்வ பக்தியுள்ளவர். ஆனால் எல்லா சமயத்தவர்களையும், சம நோக்குடன்கவனிப்பார். சத்யம் அஹிம்ஸை, எளிய வாழ்க்கை இவற்றைப் பெரிதும் விரும்பி வந்தார்.



படம் 64 காந்திஜி

சிறு வயதிலேயே காந்தியடிகள் இங்கிலாந்துக்குச் சென்று, சட்டக் கல்வி பயின்று, பாரிஸ்டர் பட்டம்பெற்று, தாய்நாடு திரும்பினார். அச்சமயம் தென் ஆப்பிரிக்காவில், ஓர் வழக்கை வாதிப்பதற்காகச் சென்றார். அங்கு ஆயிரக் கணக்கான இந்தியர்கள் குடியேறி இருந்தனர். தென் ஆப்பிரிக்காவின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அவர் களே பெரிதும் காரணமாக இருந்த போதிலும், அங்கிருந்த வெள்ளை அரசாங்கத்தினர், அவர்களை மிகக் கேவலமாக நடத்திவந்தார்கள்.இதை அறிந்த காந்தியடிகள் அங்கு பல ஆண்டுகள் தங்கி, அரசாங்கத்துடன் சாத்வீக சத்யாக்ரஹ முறையில் போராடி, இந்தியர்கள் சில உரிமைகளைப் பெற வகை செய்தார். இதற்காக இவர் சிறை செல்லவும் நேர்ந்தது. இதன் பிறகு இவர் இந்தியாவுக்குத் திரும் பினார்.

அச்சமயம் இந்தியாவில் மக்களிடையே, அரசாங்கத் தின் மீது பெருத்த வெறுப்புத் தோன்றலாயிற்று. இதற்கு காரணம், 1919ம் ஆண்டில் ஆங்கில அரசாங்கம் வழங்கிய அரசியல் சீர்திருத்தங்கள் மக்களுக்குப் பெரும் ஏமாற் றத்தை அளித்ததேயாகும். ஆகவே, காந்திஜி இந்திய தேசீய காங்கிரஸுக்குத் தலைமை பூண்டு, சத்யாக்ரஹப் போரை நடத்தினார். அரசாங்கத்துடன் ஒத்துழையாமை, அந்நிய நாட்டு ஆடைகள், நீதி ஸ்தலங்கள், கல்விச் சாலைகள் இவற்றை பஹிஷ்கரித்தல் ஆகியவற்றைச் சத் யாக்கிரஹிகள் கையாளச் செய்தார். வகுப்பு ஒற்றுமை, மதுவிலக்கு, தீண்டாமையை ஒழித்தல், கதர் இயக்கம், கிராம முன்னேற்றம் இவற்றையும் வற்புறுத்தினார். அர சாங்கம் தீவிர அடக்கு முறையைக் கையாண்டது. நூற்றுக் கணக்கான தலைவர்களும், ஆயிரக்கணக்கான தொண்டர் களும் சிறையிடப்பட்டனர். சில ஆண்டுகளுக்குப் பின் இவர்களுக்கு விடுதலை அளிக்கப்பட்டது.

1930-ம்ஆண்டில், மீண்டும் ஒரு முறை தீவிர சத்யாக் கிரஹம் நடைபெற்றது. அப்பொழுதும், ஏராளமானவர்கள் சிறை சென்றனர்

1935-ம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தச் சட்டத்தின்படி இந்தியாவில், மாகாணங்களுக்கு சுயஆட்சி வழங்கப்பட்டது. மாகாண நிர்வாக அதிகாரம் அனைத்தும், மக்களின் தலைவர்களான மந்திரிகளுக்கு அளிக்கப்பட்டது. எனினும், மத்திய அரசாங்கத்திலோ, மாகாணங்களிலோ, உண்மையான பொறுப்பாட்சி ஏற்படவில்லை. 1937-ம் ஆண்டில் எட்டு மாகாணங்களில் காங்கிரஸ் கட்சியினர் மந்திரி பதவி ஏற்று, திறம்பட ஆட்சி புரிந்தனர். 1939-ம் ஆண்டில் இரண்டாம் உலகப் பெரும்போர் ஆரம்பித்த பொழுது, இங்கிலாந்து அரசாங்கத்தினர் இந்தியர்களின் சம்மதத்தைப் பெருமலே, இந்நாட்டையும் போரில் ஈடு படுத்திஞர்கள். இது தங்கள் சுயமரியாதையைப் பாதிக்கக் கூடியது எனக் கருதிய மாகாண மந்திரிகள் தங்கள் பதவி களை இராஜிஞமா செய்தனர். மாகாண ஆட்சி கவர்னர் களாலேயே நடத்தப்பட்டது.

1942-ம் ஆண்டில் மீண்டும் காந்தியடிகளின் தலைமை யில் சுதந்திரப்போர் மூண்டது. அவர் வெள்ளையரே, வெளி யேறுக என்ற கோஷத்தைத் துவக்கிஞர். ஆயிரக் கணக் கான தலைவர்களும், தொண்டர்களும் சிறையிடப்பட்டனர். இதையடுத்து, நாடெங்கும் பெருங்குழப்பம் ஏற்பட்டது. அரசாங்கம் மீண்டும் கடுமையான அடக்கு முறையைக் கையாண்டது.

1945-ம் ஆண்டில் போர் முடிந்தது. அப்பொழுது இங்கிலாந்தில் நடந்த பார்லிமெண்டு தேர்தலில், தொழிற் கட்சியினர் பெருவாரியாகத் தேர்வுபெற்று, அரசாங்கத்தை அமைத்தனர். அவர்கள் இந்தியாவிற்குச் சுதந்திரம் அளிக்க விரும்பிஞர்கள். இதற்காக மூன்று ஆங்கில மந்திரிகள் இந்தியாவிற்கு வந்து, இந்தியத் தலைவர்களுடன் கலந்து, ஆலோசனை செய்தார்கள். இதன் விளைவாக, 1947-ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 15ந் தேதியன்று இந்தியா, இந்தியா, பாகிஸ்தான் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக் கப்பட்டு, இரண்டிற்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது. நம் ஒப்பற்ற தலைவரான ஜவஹர்லால் நேரு தலைமையில், சுதந்

திர இந்தியாவின் முதல் மந்திரி சபை அமைக்கப்பட்டது. இந்தியாவிற்கான புதிய அரசியல் திட்டத்தை இந்தியத் தலைவர்களே அமைத்துக்கொள்ள, 1946-ம் ஆண்டில் ஒரு அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டது. இச்சபை தனது



படம் 64. ஜவஹர்லால் நேரு



படம் 65. இராஜேந்திர பிரஸாத்

அலுவலை 1949-ம் ஆண்டு இறுதியில் பூர்த்தி செய்தது. அதன்படி 1950ம் ஆண்டு, ஜனவரி மாதம் 26-ந் தேதி இந்தியா ஓர் குடியரசாயிற்று. சாந்தமூர்த்தியான பாபு இராஜேந்திர பிரசாத் இந்தியக் குடியரசின் முதல் ஜனாதிபதியாகவும், ஜவஹர்லால் நேரு பிரதம மந்திரியாகவும் தேர்வு பெற்றனர்.

உலகத்திலேயே, அறியாத சாத்வீக முறையில் நம் நாடு விடுதலை பெற உதவிய அண்ணல் காந்தியடிகள் தேசத் தந்தை எனப் போற்றப்படுகிறார். 1948-ம் ஆண்டு, ஜனவரி மாதம் 30ந் தேதியன்று அவர் ஒரு கொடியோனின் துப்பாக்கிக்கு இறையானார்.

சுதந்திர இந்தியா, ஐந்தாண்டு திட்டப்படி பல துறைகளிலும் வெகுவாக ஏற்றம் பெற்று வருகின்றது. இந்தியாவின் சமாதானக் கொள்கை மூலம், அதன் செல்வாக்கு உலக நாடுகளிடையே மிக உயர்ந்திருக்கின்றது.

## பயிற்சி

1. சீனுவில் அந்நிய நாட்டினர் வாணிப உரிமைகளைப் பெறக் காரண மென்ன ?
2. 'நவசீனுவின் தந்தை' என்ற பெயர் யாருக்கு, எவ்வகையில் பொருந்தும்?
3. சியாங்கெய் ஷேக்கின் சாதனைகள் எவை?
4. மூட்ஸி ஹிடோ ஜப்பானை எவ்வாறு ஏற்றம் பெறச் செய்தார்?
5. முதல் உலகப் பெரும் போர், இரண்டாம் உலகப்பெரும் போர் இவற்றில் கலந்து கொண்டதால், ஜப்பானுக்கு ஏற்பட்ட விளைவுகள் யாவை ?
6. இந்திய தேசீய காங்கிரஸ் எப்பொழுது, எதற்காக ஸ்தாபிக்கப்பட்டது?
7. மஹாத்மா காந்தியடிகள் இந்தியாவிற்குச் செய்த சேவைகள் என்ன?
8. நம் தேசத் தலைவர்கள் படங்களைச் சேகரித்து, ஒட்டி வைத்து, ஒவ்வொன்றின் அடியிலும் அத் தலைவரைப் பற்றிய குறிப்பு வரைக.
9. குறிப்புக் கூறுக:—கோமின்டாங்; ஷோகன்; மாஸேதுங்; சூயென்லாய்;ஹிரோஷிமா;பெர்ல் துறைமுகம்;வெள்ளையரே வெளியேறுக.

# 20. உலக சமாதானத்துக்கான முயற்சிகள்

உலகில் மக்கள் தோன்றிய நாள் முதல், நாடுகளிடையே போர்கள் நிகழ்ந்து வந்துள்ளன. போர்களின் விளைவாக, உயிர்ச்சேதமும், பொருள் சேதமும் ஏராளமாக ஏற்படுகின்றன. ஆகவே உலகில் போர்கள் நிகழாவண்ணம் தடுக்க அவ்வப்போது முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

1914-ம் ஆண்டு முதல் 1918-ம் ஆண்டு வரை நடைபெற்ற முதல் உலகப் பெரும் போர் மிகக் கொடியதாக இருந்தது. விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாக

அமைக்கப்பட்ட போர்க் கருவிகளைக்கொண்டு விளைவிக்கப் பெற்ற உயிர்ச் சேதமும், பொருட்சேதமும், கணக்கில டங்கா. ஆகவே, இத்தகைய போர்கள் இனி நிகழா வண் ணம் தடுப்பதற்காக,உலக நாடுகளின் பிரதிநிதிகள் அடங் கியசபை ஒன்றை நிருவ வேண்டுமென, அமெரிக்கா ஐக் கிய நாடுகளின் ஜனாதிபதியான உட்ரோ வில்ஸன் என்பவர் ஆலோசனை கூறினர். இந்தஆலோசனை ஒப்புக் கொள்ளப் பட்டு, 1920-ம் ஆண்டில் **சர்வதேச சங்கம்**நிருவப் பெற்றது. அதன் தலைமை ஸ்தானம் ஸ்விட்சர்லாந்து நாட்டிலுள்ள **ஜினீவா** நகராகும்.

இச்சங்கத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள், தமக்குள் ஏற்படும் பிணக்குகளைச் சமாதான முறையில் தீர்த்துக் கொள்வதாக உறுதியளித்தன. இதன் ஆணையை மீறும் நாடுகளைத் தண்டிக்க, இராணுவநடவடிக்கையோ அல்லது அவற்றுடன் வாணிபத் தொடர்பு கொள்ளாதிருத்தலோ அந்த நாடுகள் மேற்கொண்டன. மேலும் தொழிலாளர் களின் நலன்களைக் கவனித்தல், அடிமை வியாபாரம், மலேரியா முதலிய நோய்கள் ஏற்படுதல் இவற்றைத் தடுக்கவும் இச்சங்கம் வகை செய்தது. மேலும், அந்த நாடு களிடையே, சட்ட சம்பந்தமான கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைக்க, ஹாலந்து நாட்டில் திஹேக் நகரில் நீதி மன்றம் ஒன்று அமைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இச்சங்கம் நன்கு பணியாற்றியது. தென் அமெரிக்க நாடுகள் பலவற்றிடையே ஏற்பட்ட சச்சரவு களைச் சமாதான முறையிலேயே தீர்த்து வைத்தது. தொழி லாளர்களின் நலன்களுக்காகப் பல சர்வதேச சட்டங்களை இயற்றியது. பல கொடிய நோய்கள் உலகில் பரவா வண்ணம் தடை செய்தது.

இச்சங்கம், அமைக்கப்பட்ட பத்தொன்பது ஆண்டு களுக்குள் வீழ்ச்சியுற்றது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. பெரும் வல்லரசுகளாகிய ரஷ்யா, அமெரிக்க ஐக் கிய நாடுகள் ஆகியவை முதலிலிருந்தே இதில் அங்கம் வகிக்கவில்லை. உலக நாடுகள் பரஸ்பர அவநம்பிக்கை

கொண்டு, தம் படைகளைக் குறைத்துக் கொள்ளவில்லை. இச்சங்கத்தின் ஆணையை மீறும் நாடுகளைத் தண்டிக்க, இதனிடம் பொதுப்படை எதுவும் கிடையாது. ஆகவே, ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றிய போதும், இத்தாலி அபிஸீனியாவை ஆக்ரமித்த போதும், ஹிட்லர் ஐரோப் பாவில் பல நாடுகளைக் கைப்பற்றிய போதும், இச்சங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. இறுதியில் 1939-ம் ஆண்டில் இரண்டாம் உலகப் பெரும்போர் மூண்ட போது, இச்சங்கம் கலைக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் பெரும் போர்க் காலத்தில், அதை வெற்றிகரமாக நடத்தத் திட்டமிடுவதற்காக, அமெரிக்க ஜனாதிபதியாகிய ரூஸ்வெல்ட், இங்கிலாந்து பிரதம மந்திரி யாகிய சர்ச்சில், ரஷ்ய சர்வாதிகாரியாகிய ஸ்டாலின் ஆகி யோர் அடிக்கடி சந்தித்தனர். அச்சமயங்களில், உலகில் இத்தகைய போர்கள் இனி நிகழா வண்ணம் தடுப்பதற் காகவும் அவர்கள் திட்டமிட்டார்கள். போர் முடியும் தரு ணத்தில் ரூஸ்வெல்ட் திடீரென மரணமடையவே, அவ ருக்கு அடுத்தபடி ஜனாதிபதியாக வந்த ட்ரூமன் இத் திட் டங்களைச் செயலாக்க முன் வந்தார். 1945-ம் ஆண்டு ஜூன் மாதம், ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில் ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி, சில முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். இவற்றின் விளைவாக, 1945-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ந் தேதியன்று, நியூயார்க் நகரை யடுத்த லேக் ஸக்ஸஸ் என்னுமிடத்தில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நிருவப்பட்டது. இதில் அங்கம் வகிக்கும் நாடு கள் ஓர் சாசனத்தில் கையொப்பமிடவேண்டும். அதன்படி, அந்நாடுகள் தமக்குள் ஏற்படும் சச்சரவுகளை அமைதி யாகத் தீர்த்துக் கொள்வதாகவும், உலக அமைதியைக் காக்க, கூட்டாகப் பாடுபடுவதாகவும், நாடுகளிடையே கூட் டுறவு கலாசாரம், பண்பாடு, நல்லுறவு இவற்றை வளர்க்கப் பாடுபடுவதாகவும் உறுதி கூறின. மேலும், இந்த ஸ்தா பனத்தின் ஆணைகளை மீறும் நாடுகள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க, ஒவ்வொரு அங்க நாடும் படை

கொடுத்து உதவவும் வகை செய்யப்பட்டது. மேலும், பொருளாதாரம் அரசியல் துறைகளில் பிற்போக்கான நாடு களுக்கு உதவி அளிக்கவும், இச் சங்கம் வகை செய்தது.

இந்த ஸ்தாபனத்தின் பல்வேறு அலுவல்களைக் கவ னிக்க, பல கிளைச் சபைகள் உண்டு. அவற்றுள் முக்கிய மானவை, பொது சபை, பந்தோபஸ்து சபை, பொருளாதார, சமூக சபை, தர்மகர்த்தா சபை, சர்வதேச நீதி மன்றம், காரி யாலயம் ஆகியவை.

பொதுசபை :—இது ஆண்டுதோறும், பெரும்பாலும், செப்டம்பர் மாதத்தில் கூடுவது வழக்கம். இதில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாடும் ஐந்து பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும். தற்போது இந்த ஸ்தாபனத்தில் அறுபது நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த ஸ்தாபனத்தின் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டங்களைத் தயாரித்தல், பல கிளைச் சபைகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத் தல், அச்சபைகளின் ஆண்டு அறிக்கைகளை ஆராய்தல், உலகில் கூட்டுறவு வளர்வதற்கான வழிகளை ஆராய்தல் ஆகியவை இதன் முக்கிய அலுவல்கள்.

பந்தோபஸ்து சபை :—இதுவே இந்த ஸ்தாபனத்தின் முக்கிய உறுப்பாகும். இதில் பதினேறு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றுள் அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், சீனு ஆகியவை நிரந்தர அங்க நாடுகள். மற்றவை ஆறும், இதர நாடுகளிடையே இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பொது சபையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. உலகில் எங்கேனும் போர் மூளும் எனத் தோன்றினல், இச்சபை உடனே கூடி, அதைத் தடுக்க, ஆவன செய்யும். இந்த ஸ்தாபனத்தின் ஆணையை மீறும் நாடுகள் மீது பொருளாதார, அல்லது இராணுவ நடவடிக்கை எடுக்க, ஆவன செய்வதும் இச் சபையின் அலுவலே. மேலும், இச்சபை சர்வதேச நீதி மன்றத்தின் தீர்ப்புக்களையும் செயலாக்குகின்றது.

பொருளாதார சமூக சபை:—இதில், பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட பதினெட்டு நாடுகள் அங்கம் வகிக்

கின்றன. அங்க நாடுகளிடையே, பொருளாதார, சமூக பண்பாடுகளை அபிவிருத்தி செய்தல் இதன் முக்கிய அலுவல்.

**தர்ம கர்த்தா சபை**—இதில், பந்தோபஸ்து சபையின் ஐந்து அங்க நாடுகளும், பொது சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு இதர நாடுகளும், ஆக பன்னிரண்டு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. உலகில் அரசியல் துறையில் மிகவும் பிற்போக்கான நாடுகளுக்கு உதவி அளித்து அவற்றைச் சுயாட்சி பெறச் செய்வது இதன் முக்கிய அலுவல்.

**சர்வதேச நீதிமன்றம்** :—அங்க நாடுகளிடையே ஏற்படும் சட்ட சம்பந்தமான கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதே இதன் முக்கிய அலுவல். இது ஹாலந்து நாட்டிலுள்ள, தி ஹேக் நகரில் அமைந்துள்ளது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பதினைந்து நீதிபதிகள் உள்ளனர். அவர்களது பதவிக் காலம் ஒன்பது ஆண்டுகள். இவர்கள் பொதுசபையால் நியமனம் பெறுகின்றனர். இந்த நீதிமன்றத்தின் தீர்மானங்களைச் செயலாக்குவது பந்தோபஸ்து சபை என முன்பே கூறப்பட்டது.

**காரியாலயம்** :—இந்த ஸ்தாபனம், கிளைச் சபைகள் இவை செயலாற்ற உதவுவது காரியாலயம். இதில் அங்க நாடுகள் எல்லாவற்றினின்றும் பதவி வகிப்பவர்கள் இருக்கின்றனர். இக்காரியாலயத்தின் தலைமை அதிகாரி பொதுக் காரியதரிசி செக்ரிடரி-ஜெனரல். இப்போது அப்பதவியை வகிப்பவர் ஹாமர் ஷால்டு என்பவர்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இதுவரை பல முக்கியப் பணிகள் ஆற்றியுள்ளது. தென் மேற்கு ஆசியாவில் பாலஸ்தீனம் என்னும் நாட்டில் யூதர்களுக்கும், அராபியர்களுக்கும் இடையே நடைபெற்று வந்த போரை நிறுத்தி, அங்கு அமைதியை நிலை நாட்டியுள்ளது. கிழக்கு இந்தியத் தீவுகளில் டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தைப் போக்கி, அத் தீவுகள் இந்தோனேஷியா என்ற பெயருடன், சுதந்திரக் குடியரசாக விளங்க வகை செய்தது. கொரியா, இந்தோ-

சீனு ஆகிய இடங்களில் உள்நாட்டுப் போர்களை நிறுத்தி வைத்தது. இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே காஷ்மீரத்தைப் பற்றிய போரை நிறுத்தியது. தென் ஆப்பிரிக்காவில் நிலவிவரும் நிறவெறியை ஒழிக்கவும், பயங்கரப்போர்க் கருவிகளாகிய, அணுகுண்டு, ஜலவாயு குண்டு இவற்றை உற்பத்தி செய்வதைத் தடை செய்யவும், அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன் படுத்தவும், முயன்று வருகின்றது. பொருளாதாரத்தில் பிற்போக்கான நாடுகளுக்குக் கடன் வழங்கியிருக்கின்றது. இதனுல் அவை ஏற்றம் பெற்று வருகின்றன.

மேலும் இது நல்வழியில் இயங்க, உலக வல்லரசுகளிடையே தோன்றியுள்ள சந்தேக மனப்பான்மை பெரிதும் தடையாக இருக்கின்றது.

இரண்டாம் உலகப் பெரும்போர் முடிவடைந்து, சுமார் 10 ஆண்டுகள் கழிந்த பின்னும் உலகில் அமைதி பரிபூரணமாக ஏற்படவில்லை. ரஷ்யாவும் அதைச் சார்ந்த, பொது உடமைக் கொள்கையுடைய நாடுகள் ஒரு புறமும், அமெரிக்கா ஐக்கிய நாடுகள், மேற்கு வல்லரசுகள் இவை ஒரு புறமும் கட்சிகளாக நின்று, பரஸ்பர அவநம்பிக்கை கொண்டுள்ளன. இவ்விரண்டு கட்சிகளும் மேலும் பயங்கரப் போர்க் கருவிகளைச் செய்து, அவற்றைப் பரீக்ஷிப்பதில் போட்டியிடுகின்றன. தென் ஆப்பிரிக்காவில் இனவெறியை அடக்க, தீவிர முயற்சிகளை எடுத்துக் கொள்ளவில்லை. இதற்கு ஓரளவு, வல்லரசுகளின் சுயநலம் காரணமாக இருக்கின்றது. சீனுவின் மிகப்பெரும் பகுதியை ஆட்சி புரிந்து வரும் பொது உடமை சீன அரசாங்கத்திற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் இடம் தராமல், பார்மோஸா தீவை மட்டும் பரிபாலித்து வரும் சியாங் கெய் ஷேக்கின் அரசாங்கத்திற்கு மட்டும் இடம் அளிக்கப்பட்டிருக்கின்றது. மேலும், பல உலக நாடுகள் இந்த ஸ்தாபனத்தில் இடம் பெற வசதியளிக்கப்படவில்லை. பிரான்ஸ், போர்ச்சுகல் போன்ற நாடுகள் இன்னும் ஏகாதிபத்ய மனப்பான்மை

-யைக் கையாண்டு வருகின்றன. அவற்றைக் கண்டிக்கவும் இந்த ஸ்தாபனம் தயங்குகிறது.

உலகில் நிரந்தர அமைதி நிலவ, வல்லரசுகள் மேலும் தாராள மனப்பான்மை கொள்ள வேண்டும். இன, மத வேற்றுமைகளின்றி எல்லா மக்களும் சுகவாழ்வு வாழ வழி செய்யப்படுதல் வேண்டும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உலக அரசாங்கமாக ஒப்புக் கொள்ளப்படுதல் வேண்டும்.

சமீப காலமாக, இந்தியாவின் நடு நிலைமைக் கொள்கை, சர்வதேச அரங்கில் ஆற்றும் பணி இவை ஓரளவு பயனளித்து வருகின்றன. இவ்வாண்டில் (1955) நம் தலைவர் ஜவஹர்லால் நேரு, ரஷ்யா முதலிய நாடுகளுக்கு விஜயம் செய்ததன் காரணமாகவும், அதற்குமுன் சீனாவிற்கு விஜயம் செய்ததன் காரணமாகவும், ரஷ்யா, மேற்கு வல்லரசுகள் இவற்றிற்கிடையேயும், சீனா, அமெரிக்கா ஐக்கிய நாடுகள் இவற்றிற்கிடையேயும் நல்லுறவு ஏற்பட்டுள்ளது. அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தும் வகைகளை ஆராய, இந்திய விஞ்ஞானியின் தலைமையில் அறுபது நாடுகளின் விஞ்ஞானிகள் ஜினீவாவில் கூடி ஆலோசனை செய்தனர். இத்தகைய முயற்சிகளின் மூலமாக, உலகில் நிரந்தர அமைதியும், நாடுகளிடையே நல்லுறவும் வளர்வதாக!

## பயிற்சி

1. சர்வதேச சங்கம், எப்பொழுது, என் தோற்றுவிக்கப் பட்டது?
2. அதன் சாதனைகள் யாவை?
3. அது அழியக் காரணங்களென்ன?
4. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் எப்பொழுது, எக்காரணங்களுக்காகத் தோன்றியது?
5. அதன் சாதனைகள் யாவை?
6. இந்த ஸ்தாபனம் மேலும் நன்கு சேவை செய்ய என்ன தடைகள் குறுக்கிடுகின்றன?

7. உலக அமைதிக்காக இந்தியா என்ன செய்து வருகின்றது ?

8. குறிப்புக் கூறுக :— பந்தோபஸ்து சபை; தர்மகர்த்தா சபை; சர்வதேச நீதி மன்றம்.

**9. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க :—**

i. சர்வதேச சங்கத்தின் தலைமை ஸ்தானம் ——

ii. அச்சங்கம் தோன்றக் காரணமாக இருந்தவர் ——

iii. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் உள்ள இடம் ——

iv. சர்வதேச நீதி மன்றத்தின் அமைப்பிடம் ——

v. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுக் காரியதரிசியாக இப்போது இருப்பவர் ——

vi. இவ்வாண்டில் பொதுசபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர் ——

vii. அவரது சொந்த நாடு ——

viii. அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்துவதை ஆராய, 1955-ல் மகாநாடு நடைபெற்ற இடம் ——

## 21. தொழிற் புரட்சி

பதினெட்டாம் நூற்றுண்டு வரை இங்கிலாந்து மக்களில் மிகப் பெரும்பாலோர் விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். அவர்களின் இதரத் தேவைகள் அனைத்தும் குடிசைத் தொழில்கள் மூலமாகவே பூர்த்தி செய்யப்பட்டுவந்தன. போக்கு வரவு வசதிகளும் மிகக் குறைவாகவே இருந்தன. சாலைகளில் மேடுபள்ளங்கள் அதிகமாக இருந்தன. மழைக் காலங்களில் அவை சேறும் சகதியும் நிறைந்திருந்ததால் அவற்றின் வழியே பிரயாணம் செய்வது மிகக் கடினமாக இருந்தது. ஆனால் பதினெட்டாம் நூற்றுண்டில் பல புத்தமைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக, பெரிய தொழிற்சாலைகள் நிருவப்பட்

டன. போக்கு வரவு வசதிகளும் நவீன முறைகளில் அமைக்கப்பட்டன. இம்மாறுதல்கள் அனைத்தும், பொவாக, **தொழிற்புரட்சி** எனக் கூறப்படுகின்றன.

பருத்தி நெசவுத் தொழிலில் தான் விசேஷமான புத்தமைப்புகள் தோன்றின. இவற்றுள் முக்கியமானவற்றைப் பற்றி அறிவோம். **ஜான்கே** என்பவர் **எறிகுழல்** (Flying Shuttle) என்னும் கருவியைக் கண்டுபிடித்தார். இதன் உதவியால், ஆடைகளை வெகு துரிதமாக நெய்வது சாத்தியமாயிற்று. இதற்காக, துரிதமாக நூல் நூற்றலும் அவசியமன்றோ ? எனவே, **ஹார்கிரீவ்ஸ்** என்பவர் கண்டுபிடித்த, **நூற்கும் ஜென்னி** (Spinning Jenny) இத்தேவையைப் பூர்த்தி செய்தது. அடுத்தபடியாக, **ரிச்சர்ட் ஆர்க்ரைட்** என்பவர் **நீர்ச்சட்டம்** (Water Frame) என்னும் கருவியைக் கண்டுபிடித்தார். இதனால் நீரோட்ட சக்தியின் உதவியைக் கொண்டு, நூற்ற நூலை உறுதியாக்க முடிந்தது. **கிராம்டன்** என்பவர், நூற்கும் ஜென்னி, நீர்ச் சட்டம் இவை இரண்டையும் ஒன்றுபடுத்தி, **மியூல்** (Mule) என்னும் இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். இதனால் வெகு வேகத்தில் உறுதியான நூலை நூற்பது சாத்தியமாயிற்று. **கார்ட்ரைட்** என்பவர், கைத்தறிக்குப் பதிலாக, **விசைத்தறி** (Power Loom) யைக் கண்டுபிடித்தார். இதன் உதவியைக் கொண்டு, வெகு விரைவில் ஆடைகள் நெய்வது சாத்தியமாயிற்று. இப்புதிய இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டதன் விளைவாக, இங்கிலாந்தில் **லங்காஷயர்**, ஸ்காத்லாந்தில் **கிளைட்நதிப் பள்ளத்தாக்கு** முதலிய இடங்களில், நெசவுத் தொழில் பெருமளவில் நடைபெற லாயிற்று. இதற்குத் தேவையான மூலப் பொருள்கள் வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டன.

1769-ம் ஆண்டில் **ஜேம்ஸ் வாட்** என்பவர் நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்தார். இதனால் இயந்திரங்களை ஓட்டுவது சாத்தியமாயிற்று. இயந்திரங்கள் செய்ய இரும்பு மிக அவசியமன்றோ ? இச்சமயத்தில், நிலக்கரியைக் கொண்டு, இரும்புத் தாதுவை உருக்கி சுத்தம் செய்வது, எஃகு

செய்வது ஆகியவை கண்டு பிடிக்கப் பட்டன. இங்கிலாந்தில் பல விடங்களில் இரும்பு, நிலக்கரி இவை இரண்டும் ஒன்றுக்கொன்று சமீபத்தில் இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டது. இதன் காரணமாக, இரும்பு, எஃகு தொழிலும் அங்கு அதிகமாக வளர்ச்சி பெறலாயிற்று.


படம் 66. ஜேம்ஸ் வாட்


படம் 67. ஜார்ஜ் ஸ்டீபன்ஸன்

பதினெட்டாம் நூற்றுண்டில் இங்கிலாந்து, உலகின் பல்வேறு பாகங்களில் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தியது. மேலும் சில இடங்களைப் படைபலம் கொண்டு வென்றது. ஆகவே, அவ்விடங்களுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே வாணிபம் பெருகலாயிற்று. அந்நாடுகளினின்றும் கச்சாப் பொருள்களும், உணவுப் பொருள்களும் இங்கிலாந்துக்கு வந்து குவியலாயின. இங்கிலாந்திலிருந்து செய்பொருள்கள் இந்நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. இப்பொருள்கள் அனைத்தையும் பெரும் அளவிலும், துரிதமாகவும் அனுப்ப, புதிய போக்குவரவு சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஜார்ஜ் ஸ்டீபன்ஸன் என்பவர் நீராவியின் உதவியால் ஓடக்கூடிய இரயில்வே எஞ்சினைக் கண்டு பிடித்தார். இது பல இரயில் வண்டிகளை இழுத்துக் கொண்டு, இரும்புத் தண்டவாளங்கள்மீது அதிவிரைவாக ஓடக்கூடியது, ஸ்டீபன்ஸன் செய்த முதல் எஞ்சின் இராக்கெட் என்பது. டெல் போர்டு,

**மாக்கடம்** ஆகிய இரு எஞ்சினியர்கள், உறுதியான! சாலை களை அமைக்கும் வகைகளைக் கண்டு பிடித்தனர். கனப் பொருள்களை தரைமார்க்கமாக எடுத்துச் செல்வதைவிட, நீர் மார்க்கமாக எடுத்துச் செல்வதால் செலவு வெகுவாகக் குறைகின்றது. எனவே, இங்கிலாந்திலுள்ள பல நதிகள்



படம் 68. இராக்கெட் எஞ்சின்

படகுப் போக்குவரவுக்குப் பெரிதும் உபயோகப் படுத்தப் பட்டன. இந்நதிகளை இணைக்கப் பல கால்வாய்கள் தோண டப்பட்டன. முற்காலத்தில், கடல்களைக் கடக்க, கப்பல்கள் மரத்தினுல் செய்யப்பட்டு, பாய்மரச் சீலைகள் அமைக்கப் பட்டு, காற்றின் உதவியால் ஓட்டப்பட்டன. ஆனுல் பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் கப்பல்கள் எஃகுத் தகடுகளால் கட்டப் பெற்று, நீராவியின் சக்தியைக் கொண்டு ஓட்டப்பட்டன.

தொழிற் புரட்சியால் பல நன்மைகள் விளையலாயின. இங்கிலாந்தில் மாபெரும் தொழிற்சாலைகள் நிருவப்பெற்று, பொருள்கள் பெருத்த அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. இங்கிலாந்து, **உலகின் பட்டறை** எனக் கூறப்பட்டது. பெருமளவில் பொருளுற்பத்தி, வாணிபம் இவற்றின் காரணமாக, இங்கி

லாந்தின் செல்வ நிலை உயர்ந்தது. இதுவரை அங்கு நிலச் சுவான்தார்கள் மட்டும், செல்வம் மிகுந்தவர்களாக இருந்து வந்தது போக, இப்பொழுது தொழிற்சாலை முதலாளிகள், வர்த்தகர்கள் ஆகியோரும் செல்வம் படைத்தவர்கள் ஆனார்கள். தொழிற்சாலைகள் நிருவப்பட்ட இடங்களில் பல பெரிய நகரங்கள் தோன்றலாயின. ஆனால் இந்நகரங்களுக்குப் பார்லிமெண்டுக்கு அங்கத்தினர்களை அனுப்பும் உரிமை வழங்கப்படாததாலும், புதிதாகச் செல்வம் படைத்தோர் முதலியவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப் படாததாலும், பார்லிமெண்டு சீர்திருத்தத்துக்கான கிளர்ச்சிகள் தோன்றலாயின. இவற்றின் விளைவாக, பார்லி மெண்டு சீர்திருத்தச் சட்டங்கள் பல இயற்றப் பெற்று, இங்கிலாந்தில் ஜனநாயக ஆட்சி தோன்றலாயிற்று.

தொழிற் புரட்சியினால் சில தீமைகளும் தோன்றலாயின. பெரிய தொழிற்சாலைகள் அமைக்கப் பட்டதன் காரணமாக, குடிசைத் தொழில்கள் அழியலாயின. இதனால் அத்தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்கள் வேலையின்றி, வறுமையால் வாடலாயினர். மேலும் ஒரு இயந்திரம், பல மக்கள் செய்யக் கூடிய வேலையைச் செய்ய வல்லதாகையால், பல தொழிலாளிகளும் வேலையை இழந்தனர். புதிய தொழிற்சாலை நகரங்களில் தொழிலாளிகள் முதலியோர் மிகப் பெருமளவில் வசிக்க வேண்டியிருந்ததால் அவ் விடங்களில் சுகாதாரம் மிகவும் கேவலமாக இருந்தது. இதனால் நோய்களும் அதிகரிக்கலாயின. இறுதியாக, முதலாளிகள், தொழிலாளிகள் இவர்களுக்கிடையே அடிக் கடி சச்சரவுகள் தோன்றலாயின.

இனி, இந்தியாவிலும், வேறு பல உலக நாடுகளிலும் மக்களது வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்களைப் பற்றி ஆராய்வோம்.

நம் நாட்டின் நாகரிகம் மிகப் பழமையானது. தொன்று தொட்டு, நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் விவசாயத்தையே மேற்கொண்டிருந்தனர். இதுவும் மிகப் பழமையான முறையிலேயே நடைபெற்று வந்தது.

மேலும், விவசாயிகள் தம் ஓய்வு நாட்களில், குடிசைத் தொழில்களைப் புரிந்து, தம் வருவாயைப் பெருக்கிக் கொண்டனர். தவிர, மிகப் பெரும்பாலோர் கிராமங்களிலேயே, மிக எளிய முறையில் வாழ்க்கையை நடத்தி வந்தனர். அவர்களுக்கு வாழ்க்கைத் தேவைகளும் மிகக் குறைவாகவே இருந்தன.

நம் நாட்டில் ஆங்கிலேயர்கள் ஆட்சி புரிய ஆரம்பித்ததும், மக்கள் வாழ்க்கையில் பல மாறுதல்கள் தோன்றலாயின. ஆங்கிலேயர்கள் தம் நாட்டில் இயந்திரங்களால் செய்யப்பட்ட பொருள்களை இங்கு கொண்டுவந்து, விற்பனைக்குக் குவிக்கலாயினர். இந்தியக் குடிசைத் தொழில் பொருள்கள், விலை, தரம் இவற்றில் அப்பொருள்களுடன் போட்டியிட முடியாததால், இந்தியக் குடிசைத் தொழில்கள் அழியலாயின. இவற்றை நம்பி, வாழ்ந்தவர்கள், வேலையின்றி வாடினர். பலர் பிழைப்பைத் தேடி, கிராமங்களை விட்டு, நகரங்களுக்குச் சென்று வசிக்கலாயினர். இதனால் கிராமங்களும் சீர்குலைந்தன. நாட்டின் பொருளாதார நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்நூற்றுண்டின் ஆரம்பத்தில், இந்திய தேசீயக் காங்கிரஸின் முயற்சிகள் காரணமாக, இங்கு சுதேசி இயக்கம் தோன்றி, வலுப் பெறலாயிற்று. வெளி நாட்டுப் பொருள்களை விடுத்து, இங்கு செய்யப்படும் பொருள்களையே மக்கள் வாங்க வேண்டுமென்பதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும். இதனால் இந்தியத் தொழிலாளிகளுக்கும் வேலை கிடைக்க வசதி ஏற்படும். இந்நாட்டின் செல்வச் சீமான்கள் பலர் தமது மூலதனத்தைக் கொண்டு, தொழிற்சாலைகள் நிருவலாயினர்.

ஆங்கிலேயர்கள் இந்தியச் சிறுவர்களுக்கு ஆங்கிலக் கல்வி போதிக்கப் பல கல்விச் சாலைகளை அமைத்தனர். இங்கு ஆங்கிலக் கல்வி பரவியதன் காரணமாக, மேனாட்டு நாகரிகம், பழக்க வழக்கங்கள் இவை பரவலாயின. இவற்றின் விளைவாக, பல சமூக சீர்திருத்தங்களும் செய்யப்பட்டன. சாதி மதக் கட்டுப்பாடுகள் குறையலாயின.

தொழில், வாணிபம், போக்குவரவு, நாட்டுப் பொருளாதாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மாறுதல்கள் தோன்றலாயின.

நாடு சுதந்திரம் பெற்றபின் எல்லாத் துறைகளிலும் வெகு துரிதமாக முன்னேறி வருகின்றது.

தொழிற் புரட்சி காரணமாக, உலகில் இதர நாடுகள் பல வற்றிலும் கூட, பெருத்த மாறுதல்கள் தோன்றியுள்ளன. விஞ்ஞானத்தின் முன்னேற்றம் காரணமாக, பல வேலைகளுக்கு இயந்திரங்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. பொருளுற்பத்தி, போக்குவரவு, வாழ்க்கை வசதிகள் இவை எல்லாவற்றிற்கும் இயந்திரங்களே பெருமளவில் உபயோகமாகி வருகின்றன.

மேலும், நாகரிக வளர்ச்சியின் காரணமாக, மக்களிடையே இருந்துவந்த ஏற்றத்தாழ்வுகள் குறைந்து வருகின்றன. அடிமை வியாபாரம் உலகெங்கும் ஒழிக்கப்பட்டது. தொழிலாளர்களின் நலன்களுக்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. கல்வியைப் பெருக்க, பாடசாலைகளும், நோயுற்றோர்களுக்குச் சிகிச்சை செய்யவும், நோய்கள் பரவுவதைத் தடை செய்யவும், மருத்துவ சாலைகளும், ஆராய்ச்சி நிலையங்களும் நிருவப்பட்டுள்ளன.

அரசியல் துறையிலும் மாறுதல்கள் தோன்றியுள்ளன. மிகப் பெரும்பாலான நாடுகளில் ஜனநாயக ஆட்சி தோன்றியுள்ளது. ஆண், பெண்கள் எல்லோரும் வாக்குரிமை பெற்றுள்ளனர். எல்லாத் துறைகளிலும், ஆண்களைப் போலவே, பெண்களுக்கும் சம உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன.

## பயிற்சி

1. தொழிற் புரட்சி என்றால் என்ன ?
2. நெசவுத் தொழிலில் தோன்றிய புத்தமைப்புகள் எவை? ஒவ்வொன்றும் எவ்வகையில் உபயோகமானது ?

3. போக்குவரவு வசதிகளில் ஏற்பட்ட மாறுதல்கள் எவை ?
4. தொழிற் புரட்சியால் ஏற்பட்ட நன்மை, தீமைகள் எவை ?
5. தொழிற் புரட்சியால் இந்தியாவிலும், இதர நாடுகளிலும் ஏற்பட்ட முக்கிய மாறுதல்கள் எவை ?

## 22. விஞ்ஞானத்தின் சமூக நலத்தொண்டு

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் விஞ்ஞான ஆராய்ச்சி வெகுவாக ஏற்றம் பெற்றுள்ளது. ஆகவே, இக்காலத்தை **விஞ்ஞான காலம்** எனக் கூறுவது மிகையாகாது. விஞ்ஞான அறிவு, நோய்களைத் தடுத்தல், நோய் ஏற்படின் அதைக் குணப்படுத்தல், வாழ்க்கை வசதிகளை அதிகரித்தல், ஆகிய வேலைகளுக்கு உபயோகப்படுத்தப் படுகின்றது. இவற்றைப் பற்றி, இப்பொழுது ஆராய்வோம்.

வைசூரி என்பது ஒரு கொடிய நோய். இதனுல் பலர் உயிரிழக்கின்ருர்கள் ; பலர் அங்கங்களை இழக்கின்ருர்கள். இந்நோய் வராமல் தடுக்க, அம்மை குத்தும் முறையைக் கண்டுபிடித்தவர் **எட்வர்ட் ஜென்னர்** என்ற ஆங்கிலேயர். பசுக்களுக்கு ஒரு வகையான அம்மை நோய் ஏற்படுகின்றது. அந்த அம்மைப் பாலை எடுத்து ஊசி மூலம் மனிதர்களின் உடலில் செலுத்தினுல் அவர்களுக்கு இந்நோய் வருவதில்லை என்று இவர் கண்டுபிடித்தார். இதன் விளைவாக, ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன.

மக்களைப் பிடிக்கும் பல்வேறு வகையான பிணிகளுக்கு மிக நுண்ணிய கிருமிகளே காரணம் என்றும், அவை நம் கண்களுக்குப் புலப்படாமல் எங்கும் நிறைந்துள்ளன என்றும், மேலும் அவை நாம் உண்ணும் உணவு, பருகும் நீர், சுவாசிக்கும் காற்று இவற்ருல் நம் உடலுக்குள் புகுந்து நோய்களை உண்டு பண்ணுகின்றன என்றும், **லூயி பாஸ்டர்**



படம் 69. லூயி பாஸ்டர்

என்ற பிரஞ்சு விஞ்ஞானி கண்டுபிடித்தார். இக்கிருமிகள் நோய் உண்டாக்குவதைத்தடுக்க, அதே கிருமிகளைக் கொண்ட மருந்தைத் தயாரித்து, ஊசி மூலம் உடலுக்குள் செலுத்த வேண்டுமென்பதையும் இவர் கண்டறிந்தார். இம்முறையே இன்று இனுகுலேஷன் என வழங்குகின்றது. பல கொடியகொள்ளை நோய்களாகிய பிளேக், காலரா, க்ஷய ரோகம் ஆகியவை இம்முறையால் தடை செய்யப்படுகின்றன.

வெறி நாயால் கடியுண்டவர்களுக்குக் கொடிய நீர் வெறுப்பைக் கொடுக்கும் ஹைட்ரோ போபியா என்ற நோய் ஏற்பட்டு, அதனுல் பலர் இறக்கவும் செய்கின்றனர். இந் நோயைப் போக்கவும் லூயி பாஸ்டர், இனுகுலேஷன் முறையைக் கண்டுபிடித்துள்ளார். இத்தகையவர்களுக்குச் சிகிச்சை யளிக்க நம் நாட்டில், நீலகிரியிலுள்ள கூனூரில் ஒரு வைத்தியசாலையை அமைத்தார்கள். அது, இவர் பெயரை யொட்டி, பாஸ்டர் இன்ஸ்டிடியூட் என வழங்குகிறது. இப்பொழுது இந்நோய்க்கு எல்லா முக்கிய ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

சிரங்குகள், காயங்கள், மேலும் சில உபாதைகளுக்கு இரண சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இவ்வாறு சிகிச்சை செய்யப்பட்ட இடங்களில், காற்றிலுள்ள விஷக் கிருமிகள் படிந்து, விஷத்தை உண்டு பண்ணுகின்றன என்பதை, ஜோஸப் லிஸ்டர் என்ற ஆங்கில டாக்டர் கண்டறிந்தார். ஆகவே இதைத் தடுக்க இரண சிகிச்சைக் கருவிகளைக் கழுவவும், அவ்விடத்தைத் துடைக்கவும், கார்பாலிக் அமிலம் என்னும் கிருமிநாசினி உபயோகப்படுகின்ற தென்



படம் 70. ஜோசப் லிஸ்டர்

பதையும் லிஸ்டர் கண்டு பிடித்தார். இதன் விளைவாக, இரண சிகிச்சை பெற்ற பலரது உயிர் காப்பாற்றப் படுகின்றது.

இரண சிகிச்சை பெறுபவர்கள் வலி தாங்க முடியாமல் அவதியுறுவதும், அதனால் பலர் அதிர்ச்சி தாங்காமல் இறப்பதும் முற்காலத்தில்அதிகமாக உண்டு. ஆகையால், இரண சிகிச்சை பெறுபவர்கள் வலியை அறியாமல் இருக்க, அவர்களுக்கு மயக்கத்தை உண்டுபண்ணுவதற்காக, ஜேம்ஸ் ஸிம்ஸன் என்ற ஸ்காத்லாந்து டாக்டர் குளோரோபாரம் என்னும் மயக்க மருந்தைக் கண்டுபிடித்தார்.

உடலுக்குள்ளும் ஊடுருவிச் சென்று, அதன் உட்பாகத்திலுள்ள உறுப்புக்களைப் படம் பிடிக்க உதவும் ஒளிக் கதிர்களை (X Ray) ஜெர்மன் விஞ்ஞானியாகிய வில்லியம் ராண்ட்ஜன் என்பவர் கண்டுபிடித்தார். இக்காலத்தில் இத்தகைய படங்களின் உதவியைக் கொண்டு, உடலிலுள்ள நோய், கெட்டுப்போன உறுப்பு இவற்றை அறிந்து சிகிச்சை அளிக்கப்படுகின்றது.



படம் 71. வில்லியம் ராண்ட்ஜன்

மலேரியா என்னும் கொடிய விஷஜுரம் ஒரு வகைக் கொசுவால் ஏற்படுகின்றதென்றும், அதைத் தடுப்பதற்கான முறையும் ஸ்காத்லாந்து டாக்டரான ஸர் ரொனல்டு ராஸ் என்பவர் கண்டுபிடித்தார்.

புற்றுநோய் (Cancer) என்பது மற்ருெரு கொடிய நோய். ரேடியம் என்னும் அரிய பொருளைக் கொண்டு, இந்நோயைத் தீர்க்க முடியும் என்பதை டாக்டர் கியூரியும் அவரது மனைவியான கியூரி அம்மையாரும் கண்டு பிடித்தனர்.

சமீபகாலத்தில், அலெக்ஸாந்தர் பிளெமிங் என்பவர் பெனிஸிலின் என்ற புதிய மருந்து ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். இது பல வகையான நோய்க்களுக்கான சிகிச்சை அளிக்க உதவுகின்றது.

இனி வாழ்க்கை வசதிகளுக்காக கண்டறியப்பட்ட புத்தமைப்புகளைப் பற்றி அறிவோம். இவற்றில் பெரும் பாலானவை பத்தொன்பதாம் நூற்ருண்டிலேயே கண்டு பிடிக்கப் பெற்றன.

மைக்கேல் பாரடே என்ற ஆங்கில விஞ்ஞானி மின்சார சக்தியை உற்பத்தி செய்ய உதவும் டைனமோ என்னும் கருவியைக் கண்டுபிடித்தார். இதைத் தொடர்ந்து,



படம் 72. எடிஸன்



படம் 73. மார்கோனி

மின்சார சக்தியை உபயோகித்து, மின்சார விளக்குகள், மின்சார விசிறிகள், சலனப் படங்கள், பேசும் படங்கள், இன்னும் பலவற்றைத் தாமஸ் ஆல்வா எடிஸன் என்பவர் கண்டுபிடித்தார். இவர் ஒரு அமெரிக்க விஞ்ஞானி.

மேலும் இவர், பாடும் கருவியாகிய போனோகிராப் (கிராமபோன்) கருவியையும், படம் பிடிக்க உதவும் காமிரா என்னும் கருவியையும், மேலும் நூற்றுக் கணக்கானவற்றையும் கண்டுபிடித்தார்.

இத்தாலிய விஞ்ஞானியாகிய மார்கோனி என்பவர் கம்பிகளின் உதவியின்றி செய்திகளை அனுப்பும் முறையைக் கண்டுபிடித்தார். பிறகு, மேலும் பல ஆராய்ச்சிகள் செய்து, ரேடியோவைக் கண்டு பிடித்தார். தற்கால வாழ்க்கையில் ரேடியோ எவ்வளவு அனுகூலமாக உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். அலெக்ஸாந்தர் கிராஹாம் பெல் என்பவர் தொலைபேசியை (Telephone) கண்டுபிடித்தார். இதன் உதவியைக் கொண்டு, தொலைவிலுள்ளவர்களுடனும், நேரில் பேசுவது போலவே, பேசுதல் சாத்தியமாகின்றது. சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் பெய்ர்டு என்பவர் டெலிவிஷன் என்னும் கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார். இதன் உதவியால் வெகு தொலைவில் நடைபெறும் சம்பவங்களையும், வசிக்கும் மனிதர்களையும் கூட நேரே பார்ப்பதுபோலக் காண்பது சாத்தியமாகின்றது.

ஜார்ஜ் ஸ்டீபன்ஸன் இரயில்வே எஞ்சினைக் கண்டுபிடித்ததைப் பற்றி முன்பே கூறப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில், பெட்ரோலின் சக்தியால் இயங்கும் மோட்டார் காரும், இந்நூற்றாண்டின்தொடக்கத்தில் ஆகாய விமானமும் கண்டுபிடிக்கப்பட்டன. ஆகாயவிமானத்தைக் கண்டுபிடித்தவர்கள் ஆர்வில் ரைட், வில்பர் ரைட் என்ற இரண்டு அமெரிக்க சகோதரர்கள். ஆகாய விமானங்களின் உதவியால், வெகு தொலைவிலுள்ள இடங்களுக்கும், மணிக்கு 400 மைல் வேகத்திற்கு மேலாகவும் பிரயாணம் செய்யக் கூடும் என்பதை நாம் அறிவோம்.

இவ்வாறு நோய்களைப் போக்கவும், வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவும், உழைத்துப் பாடுபட்ட விஞ்ஞானிகளுக்கு நாம் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம் அன்றோ !

## பயிற்சி

1. தற்காலத்தை விஞ்ஞான காலம் எனக் கூறுவது எங்ஙனம் பொருந்தும் ?

2. வெறிநாய்க்கடி, மலேரியா ஜுரம், புற்று நோய் இவற்றிற்குச் சிகிச்சை கண்டுபிடித்தவர்கள் யார் ?

3. ஜென்னர், லிஸ்டர், ராண்ட்ஜென், அலெக்ஸாந்தர், பிளெமிங் ஆகியோரின் சேவைகள் எவை ?

4. இணைத்து எழுதுக :—

| | |
|---|---|
| எடிஸன் | ஆகாய விமானம். |
| மார்கொனி | தொலைபேசி. |
| அலெக்ஸாந்தர் கிராஹாம் பெல் | கிராமபோன். |
| பேய்ர்ட் | டைனமோ. |
| ஜார்ஜ் ஸ்டீபன்ஸன் | டெலிவிஷன். |
| மைக்கேல் பாரடே | இரயில்வே எஞ்சின். |
| ரைட் சகோதரர்கள் | ரேடியோ. |

5. விஞ்ஞானிகளின் படங்களைச் சேகரித்து, ஒட்டி, ஒவ்வொன்றின் கீழும், அவரவர்கள் கண்டு பிடித்தவற்றின் பெயர்களை எழுதி வைக்கவும்.

முற்றிற்று

# கலைச்சொற்கள்

அட்சரேகை - Latitude
அம்மைகுத்துதல் - Vaccination
ஆராய்வு - Exploration
இயற்கை அமைப்பு - Physical features
இருண்ட கண்டம் - Dark continent
இலையுதிர்காடு - Deciduous forest
உரிமை மனு - Petition of Rights
ஊசி இலைக்காடுகள் - Coniferous forest
எரிமலை - Volcano
எதேச்சை ஆட்சி - Despotic Rule
களிப்புமண் - Clay soil
கடல் தந்தி - Cable
கருங்காலி - Ebony
கண்டம் - Continent
கட்சி ஆட்சி - Party government
குடியரசு - Republic
குடியேற்றம் - Colonization
கோளம் - Globe
சர்வாதிகாரி - Dictator
சமத்துவம் - Equality
சகோதரத்துவம் - Fraternity
சர்வதேசங்கள் - League of Nations
சர்வதேச நீதி மன்றம் - International court of Justice
சணல் - Jute
சமவெளிகள் - Plains
சுரங்க வேலை - Mining
சுதந்திரம் - Liberty
சீர்திருத்தச் சட்டம் - Reform Act
செய் தொழில்கள் - Manufacturing industries
சோவியத் பொது உடமைக் குடியரசு ஐக்கிய நாடு - Union of Soviet Socialist Republics U. S. S. R.
ஜலமின் சக்தி - Hydro-electricity
ஜன உரிமைச் சாசன இயக்கத்தார் - Chartists
ஜன நாயகம் - Democracy
தாதுப் பொருள்கள் - Minerals
தானியங்கள் - Cereals
தீர்க்க ரேகை - Longitude
தினைவகை - Millets
தேவைகள் - Wants
தெய்வீக உரிமை - Divine Right
தைகா - Taiga forest
தொழிற் புரட்சி - Industrial Revolution
நற்சணல் - Flax
நீர்ப்பாசனம் - Irrigation
,, வெறுப்பு நோய் - Hydrophobia
பயங்கர ஆட்சி - Reign of Terror
படிவுப் பாறை - Sedimentary Rocks
பற்றிடங்கள் - Settlements
பால் பண்ணை - Dairy farming
பாலைவனச் சோலை - Oasis
பியர்டுகள் - Fiords
பிளவு பள்ளத்தாக்கு - Rift Valley

பீடபூமி - Table-land
புத்தமைப்பு - Invention
பொதுநல அரசு - Commonwealths
பொது உரிமை மசோதா - Bill of Rights
பொது உடைமைக் கொள்கை - Communism
பொருளாதார வாழ்க்கை - Economic Life
மஹாசாசனம் - Magna carta
மடிப்பு மலைகள் - Fold Mountains
மாதிரிப் பார்லிமெண்ட் - Model Parliament
மாண்புறு புரட்சி - Glorious Revolution
மின்சார ஜனனி - Dynamo.
மீட்சி - Restoration
முடியரசு - Monarchy
முத்திரைச் சட்டம் - Stamp Act.
வளைகுடா Gulf
வண்டல் மண் - alluvial Soil
வடிநிலம் - Basin
விலக்கு மசோதா - Exclusion Bill
இரகசிய வாக்கு முறை - Secret Ballot